செம்மொழித் தமிழ்
அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி-13

பரத்தையிற்பிரிவு - 1

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்

பரத்தையிற்பிரிவு - 1

தொகுதி -13

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

பழனியப்பா பிரதர்ஸ்

'கோனார் மாளிகை'
25, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
தொலைபேசி : 044-28132863 / 43408000
e-mail: sales@palaniappabrothers.com

கிளைகள்

திருச்சி - 620 002
சேலம் - 636 001
கோயம்புத்தூர் - 641 001
மதுரை - 625 001
ஈரோடு - 638 001

முதல் பதிப்பு : 2017
© உரிமை – ஆசிரியருக்கு

ISBN: 978-81-8379-767-2 (Set of 14)
978-81-8379-780-1 (Vol-13)

தனிப்பிரதி விலை ரூ. 500/–
(தொகுதி–13)

மொத்த விலை ரூ. 7200/–
(14 தொகுதிகள்)

கணினி அச்சு : திருமதி இந்திராகாந்தி ரவி
ரமணா கணினி வரையகம், 97890 65515

ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை – 600 014.

கிளைகள்

திருச்சி
பழனியப்பா பிரதர்ஸ்
அஞ்சல் பெட்டி எண். 312,
தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி – 620 002
தொலைபேசி : 0431–2702160

சேலம்
பழனியப்பா பிரதர்ஸ்
கதவு இலக்கம் 77,
(பழைய எண் 39) செர்ரி சாலை,
சேலம் – 636 001
தொலைபேசி : 0427–2450711

கோவை
பழனியப்பா பிரதர்ஸ்
683, ராஜா தெரு,
கோயமுத்தூர் – 641 001
தொலைபேசி : 0422–2393704

மதுரை
பழனியப்பா பிரதர்ஸ்
23-A, மேற்கு கோபுரத் தெரு,
மதுரை – 625 001
தொலைபேசி : 0452–2346258

ஈரோடு
பழனியப்பா பிரதர்ஸ்
950, ப்ரோக் சாலை,
ஈரோடு – 638 001
தொலைபேசி : 0424–2256261

பொருளடக்கம்

களஞ்சிய வாயில்	xii
மதிப்புரை	xvii
பதிப்புரை	xviii
அகத்திணை	xx

பரத்தையிற்பிரிவு - 1

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 6	அரிபெய்	பரணர்	68
அகநானூறு 16	நாயுடைய	சாகலாசனார்	59
அகநானூறு 36	பகுவாய்	மதுரை நக்கீரர்	52
அகநானூறு 46	சேற்றுநிலை	அள்ளூர் நன்முல்லையார்	245
அகநானூறு 50	கடல்பாடு	கருவூப் பூதஞ்சாத்தனார்	97
அகநானூறு 76	மண்கனை	பரணர்	300
அகநானூறு 86	உழுந்துதலைப்	நல்லாவூர் கிழார்	256
அகநானூறு 96	நறவுஉண்	மருதம் பாடிய இளங்கடுங்கோ	242
அகநானூறு 106	எரிஅகைந்	ஆலங்குடி வங்கனார்	306
அகநானூறு 116	எரிஅகைந்	பரணர்	233
அகநானூறு 146	வலிமிகு	உவர்கண்ணூர்ப் புல்லங்கீரனார்	120
அகநானூறு 166	நல்மரம்	இடையன் நெடுங்கீரனார்	337
அகநானூறு 176	கடல்கண்	மருதம் பாடிய இளங்கடுங்கோ	198
அகநானூறு 196	நெடுங்கொடி	பரணர்	44
அகநானூறு 206	என்எனப்	மதுரை மருதனிளநாகனார்	293
அகநானூறு 216	நாண்கொள்நுண்	ஐயூர் முடவனார்	303
அகநானூறு 226	உணர்குவென்	பரணர்	239
அகநானூறு 246	பிணர்மோட்டு	பரணர்	236
அகநானூறு 256	பிணங்குஅரில்	மதுரைத் தமிழ்க்கூத்தனார் கடுவன் மள்ளனார்	229

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 276	நீள்இரும்	பரணர்	309
அகநானூறு 296	கோதை	மதுரைப் பேராலவாயர்	227
அகநானூறு 306	பெரும்பெயர்	மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்	202
அகநானூறு 326	ஊரல்	பரணர்	186
அகநானூறு 346	நகைநன்று	நக்கீரர்	194
அகநானூறு 366	தாழ்சினை	குடவாயிற்கீரத்தனார்	207
அகநானூறு 386	பொய்கை	பரணர்	189
ஐங்குறுநூறு 13	பரியுடை	ஓரம்போகியார்	277
ஐங்குறுநூறு 15	மணல்ஆடு	ஓரம்போகியார்	15
ஐங்குறுநூறு 16	ஓங்குபூ	ஓரம்போகியார்	265
ஐங்குறுநூறு 17	புதல்மிசை	ஓரம்போகியார்	21
ஐங்குறுநூறு 18	இருஞ்சாய்	ஓரம்போகியார்	272
ஐங்குறுநூறு 19	எக்கர்	ஓரம்போகியார்	29
ஐங்குறுநூறு 22	அள்ளல்	ஓரம்போகியார்	12
ஐங்குறுநூறு 23	முள்ளி	ஓரம்போகியார்	14
ஐங்குறுநூறு 24	தாய்சாப்	ஓரம்போகியார்	270
ஐங்குறுநூறு 27	செந்நெல்அம்	ஓரம்போகியார்	27
ஐங்குறுநூறு 31	அம்ம	ஓரம்போகியார்	75
ஐங்குறுநூறு 32	அம்ம	ஓரம்போகியார்	280
ஐங்குறுநூறு 33	அம்ம	ஓரம்போகியார்	281
ஐங்குறுநூறு 34	அம்ம	ஓரம்போகியார்	283
ஐங்குறுநூறு 35	அம்ம	ஓரம்போகியார்	279
ஐங்குறுநூறு 37	அம்ம	ஓரம்போகியார்	339
ஐங்குறுநூறு 38	அம்ம	ஓரம்போகியார்	327
ஐங்குறுநூறு 39	அம்ம	ஓரம்போகியார்	328
ஐங்குறுநூறு 41	தன்பார்ப்புத்	ஓரம்போகியார்	267

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 43	அம்பணத்	ஓரம்போகியார்	175
ஐங்குறுநூறு 44	தீம்பெரும்	ஓரம்போகியார்	31
ஐங்குறுநூறு 45	கூதிர்	ஓரம்போகியார்	33
ஐங்குறுநூறு 46	நினக்கே	ஓரம்போகியார்	204
ஐங்குறுநூறு 47	முள்ளயிற்றுப்	ஓரம்போகியார்	176
ஐங்குறுநூறு 48	வலைவல்	ஓரம்போகியார்	41
ஐங்குறுநூறு 50	துணையோர்	ஓரம்போகியார்	34
ஐங்குறுநூறு 51	நீர்உறை	ஓரம்போகியார்	220
ஐங்குறுநூறு 53	துறைஎவன்	ஓரம்போகியார்	74
ஐங்குறுநூறு 54	திண்தேர்த்	ஓரம்போகியார்	249
ஐங்குறுநூறு 55	கரும்பின்	ஓரம்போகியார்	251
ஐங்குறுநூறு 56	பகல்கொள்	ஓரம்போகியார்	25
ஐங்குறுநூறு 57	பகலில்	ஓரம்போகியார்	22
ஐங்குறுநூறு 59	கேட்டிசின்	ஓரம்போகியார்	23
ஐங்குறுநூறு 63	பொய்கைப்	ஓரம்போகியார்	42
ஐங்குறுநூறு 64	அமைரல்	ஓரம்போகியார்	73
ஐங்குறுநூறு 66	உடலினேன்	ஓரம்போகியார்	37
ஐங்குறுநூறு 69	கண்டனெம்	ஓரம்போகியார்	62
ஐங்குறுநூறு 70	பழனப்	ஓரம்போகியார்	39
ஐங்குறுநூறு 71	சூதுஆர்	ஓரம்போகியார்	67
ஐங்குறுநூறு 72	வயல்மலர்	ஓரம்போகியார்	80
ஐங்குறுநூறு 73	வண்ண	ஓரம்போகியார்	81
ஐங்குறுநூறு 74	விசும்புஇழி	ஓரம்போகியார்	83
ஐங்குறுநூறு 75	பலர்இவண்	ஓரம்போகியார்	64
ஐங்குறுநூறு 76	பைஞ்சாய்க்	ஓரம்போகியார்	65
ஐங்குறுநூறு 77	அம்ம	ஓரம்போகியார்	76

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 78	கதிர்இலை	ஓரம்போகியார்	78
ஐங்குறுநூறு 79	புதுப்புனல்	ஓரம்போகியார்	79
ஐங்குறுநூறு 80	புலக்குவேம்	ஓரம்போகியார்	71
ஐங்குறுநூறு 81	குருகுஉடைத்து	ஓரம்போகியார்	325
ஐங்குறுநூறு 82	வெகுண்டனள்	ஓரம்போகியார்	174
ஐங்குறுநூறு 83	மணந்தனை	ஓரம்போகியார்	38
ஐங்குறுநூறு 84	செவியின்	ஓரம்போகியார்	222
ஐங்குறுநூறு 85	வெண்நுதல்	ஓரம்போகியார்	35
ஐங்குறுநூறு 86	வெண்தலைக்	ஓரம்போகியார்	329
ஐங்குறுநூறு 87	பகன்றைக்	ஓரம்போகியார்	331
ஐங்குறுநூறு 88	வண்டுறை	ஓரம்போகியார்	332
ஐங்குறுநூறு 89	அம்ம	ஓரம்போகியார்	333
ஐங்குறுநூறு 90	மகிழ்நன்	ஓரம்போகியார்	335
ஐங்குறுநூறு 95	கருங்கோட்டு	ஓரம்போகியார்	273
ஐங்குறுநூறு 98	தண்புனல்	ஓரம்போகியார்	225
ஐங்குறுநூறு 121	கண்டிகும்	அம்மூவனார்	84
ஐங்குறுநூறு 122	கண்டிகும்	அம்மூவனார்	85
ஐங்குறுநூறு 123	கண்டிகும்	. அம்மூவனார்	86
ஐங்குறுநூறு 124	கண்டிகும்	அம்மூவனார்	88
ஐங்குறுநூறு 125	கண்டிகும்	அம்மூவனார்	89
ஐங்குறுநூறு 126	கண்டிகும்	அம்மூவனார்	90
ஐங்குறுநூறு 127	கண்டிகும்	அம்மூவனார்	91
ஐங்குறுநூறு 128	கண்டிகும்	அம்மூவனார்	92
ஐங்குறுநூறு 131	நன்றே.	அம்மூவனார்	172
ஐங்குறுநூறு 132	அம்ம	அம்மூவனார்	171
ஐங்குறுநூறு 133	யான்எவன்	அம்மூவனார்	170
ஐங்குறுநூறு 134	காண்மதி	அம்மூவனார்	268

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 136	நாண்இலை	அம்மூவனார்	169
ஐங்குறுநூறு 153	வெள்ளாங்	அம்மூவனார்	261
ஐங்குறுநூறு 156	வெள்ளாங்	அம்மூவனார்	262
ஐங்குறுநூறு 158	வெள்ளாங்	அம்மூவனார்	254
ஐங்குறுநூறு 159	வெள்ளாங்	அம்மூவனார்	218
ஐங்குறுநூறு 164	பெருங்கடற்	அம்மூவனார்	10
ஐங்குறுநூறு 165	பெருங்கடற்	அம்மூவனார்	11
ஐங்குறுநூறு 170	பெருங்கடற்	அம்மூவனார்	19
ஐங்குறுநூறு 184	நெய்தல்	அம்மூவனார்	284
ஐங்குறுநூறு 240	அறியேம்	கபிலர்	26
ஐங்குறுநூறு 265	புலிகொல்	கபிலர்	276
ஐங்குறுநூறு 369	வளமலர்	ஓதலாந்தையர்	50
ஐங்குறுநூறு 370	வண்சினைக்	ஓதலாந்தையார்	51
ஐந்திணை எழுபது 44	அகன்பனை	மூவாதியார்	4
ஐந்திணை எழுபது 45	போத்தில்	மூவாதியார்	156
ஐந்திணை எழுபது 46	உழலை	மூவாதியார்	143
ஐந்திணை எழுபது 48	பேதை	மூவாதியார்	135
ஐந்திணை எழுபது 49	யாணர்நல்	மூவாதியார்	128
ஐந்திணை எழுபது 50	ஓள்இதழ்த்	மூவாதியார்	3
ஐந்திணை எழுபது 51	பேதையர்	மூவாதியார்	2
ஐந்திணை எழுபது 54	உண்துறைப்	மூவாதியார்	30
ஐந்திணை எழுபது 55	பொய்கைநல்	மூவாதியார்	162
ஐந்திணை ஐம்பது 21	கொண்டுழிப்	மாறன் பொறையனார்	126
ஐந்திணை ஐம்பது 22	போதார்வண்(டு)	மாறன் பொறையனார்	125
ஐந்திணை ஐம்பது 23	யாணர்	மாறன் பொறையனார்	131
ஐந்திணை ஐம்பது 24	கோலச்	மாறன் பொறையனார்	154
ஐந்திணை ஐம்பது 25	அழல்அவிழ்	மாறன் பொறையனார்	147

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐந்திணை ஐம்பது 27	தண்வயல்	மாறன் பொறையனார்	287
குறுந்தொகை 8	கழனி	ஆலங்குடி வங்கனார்	323
குறுந்தொகை 50	ஐயவி	குன்றியனார்	285
குறுந்தொகை 61	தச்சன்	தும்பிசேர்கீரனார்	264
குறுந்தொகை 80	கூந்தல்	ஔவையார்	298
குறுந்தொகை 85	யாரினும்	வடம வண்ணக்கண் தாமோதரன்	105
குறுந்தொகை 127	குருகுகொளக்	ஓரம்போகியார்	252
குறுந்தொகை 139	மனைஉறை	ஒக்கூர் மாசாத்தியார்	183
குறுந்தொகை 164	கணைக்கோட்டு	மாங்குடி மருதனார்	321
குறுந்தொகை 196	வேம்பின்	மிளைக்கந்தனார்	206
குறுந்தொகை 238	பாசவல்	குன்றியனார்	180
குறுந்தொகை 258	வாரல்எம்	பரணர்	185
குறுந்தொகை 295	உடுத்தும்.	தூங்கலோரியார்	223
குறுந்தொகை 354	நீர்நீடு	கயத்தூர் கிழார்	210
குறுந்தொகை 370	பொய்கை	வில்லக விரலினார்	296
குறுந்தொகை 384	உழுந்துடைக்	ஓரம்போகியார்	181
கைந்நிலை 37	கழனி	புல்லங்காடனார்	134
கைந்நிலை 38	கயல்இனம்	புல்லங்காடனார்	56
கைந்நிலை 40	தாரா	புல்லங்காடனார்	109
கைந்நிலை 41	பொய்கைநல்	புல்லங்காடனார்	165
கைந்நிலை 42	நீத்தநீர்	புல்லங்காடனார்	167
கைந்நிலை 43	போதுஅவிழ்	புல்லங்காடனார்	141
கைந்நிலை 45	மூத்தேம்	புல்லங்காடனார்	157
கைந்நிலை 46	கயநீர்	புல்லங்காடனார்	132
கைந்நிலை 47	அரக்காம்பல்	புல்லங்காடனார்	146

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
கைந்நிலை 48	கொக்கார்	புல்லங்காடனார்	158
திணைமாலை நூற்றைம்பது 124	செவ்வழியாழ்ப்	கணிமேதாவியார்	139
திணைமாலை நூற்றைம்பது 125	மாக்கோல்யாழ்ப்	கணிமேதாவியார்	152
திணைமாலை நூற்றைம்பது 126	விளரியாழ்ப்	கணிமேதாவியார்	166
திணைமாலை நூற்றைம்பது 127	மென்கண்	கணிமேதாவியார்	149
திணைமாலை நூற்றைம்பது 128	செந்தா	கணிமேதாவியார்	18
திணைமாலை நூற்றைம்பது 129	வாடாத	கணிமேதாவியார்	17
திணைமாலை நூற்றைம்பது 130	இசைஉரைக்கும்	கணிமேதாவியார்	275
திணைமாலை நூற்றைம்பது 131	மடங்(கு)இறவு	கணிமேதாவியார்	130
திணைமாலை நூற்றைம்பது 132	எங்கை	கணிமேதாவியார்	124
திணைமாலை நூற்றைம்பது 133	பாலையாழ்ப்	கணிமேதாவியார்	122
திணைமாலை நூற்றைம்பது 136	எங்கை	கணிமேதாவியார்	163
திணைமாலை நூற்றைம்பது 137	கருங்கோட்டுச்	கணிமேதாவியார்	6
திணைமாலை நூற்றைம்பது 141	அணிக்குரல்மேல்	கணிமேதாவியார்	114
திணைமாலை நூற்றைம்பது 147	செங்கண்	கணிமேதாவியார்	7

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திணைமாலை நூற்றைம்பது 148	இருள்நடந்த(து)	கணிமேதாவியார்	8
திணைமாலை நூற்றைம்பது 151	சேறுஆடும்	கணிமேதாவியார்	150
திணைமொழி ஐம்பது 31	பழனம்	கண்ணஞ்சேந்தனார்	161
திணைமொழி ஐம்பது 32	கணைக்கால்	கண்ணஞ்சேந்தனார்	160
திணைமொழி ஐம்பது 33	கடையாயார்	கண்ணஞ்சேந்தனார்	248
திணைமொழி ஐம்பது 34	செந்நெல்	கண்ணஞ்சேந்தனார்	142
திணைமொழி ஐம்பது 35	வேனிற்	கண்ணஞ்சேந்தனார்	138
திணைமொழி ஐம்பது 37	பல்காலும்	கண்ணஞ்சேந்தனார்	137
திணைமொழி ஐம்பது 38	நல்வயல்	கண்ணஞ்சேந்தனார்	145
திணைமொழி ஐம்பது 39	கருங்கயத்(து)	கண்ணஞ்சேந்தனார்	153
நற்றிணை 20	ஐய	ஓரம்போகியார்	57
நற்றிணை 30	கண்டனென்	கொற்றனார்	178
நற்றிணை 40	நெடுநா	கோண்மா நெடுங்கோட்டனார்	312
நற்றிணை 50	அறியா	மருதம் பாடிய இளங்கடுங்கோ	110
நற்றிணை 74	வடிக்கதிர்	உலோச்சனார்	117
நற்றிணை 90	ஆடுஇயல்	அஞ்சில் அஞ்சியார்	93
நற்றிணை 100	உள்ளுதொறும்	பரணர்	317

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 127	இருங்கழி	சீத்தலைச் சாத்தனார்	100
நற்றிணை 150	நகைநன்கு	கடுவன் இளமள்ளனார்	343
நற்றிணை 167	கருங்கோட்டுப்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	106
நற்றிணை 170	மடக்கண்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	288
நற்றிணை 176	எம்நயந்து	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	314
நற்றிணை 200	கண்ணி	கூடலூர்ப் பல்கண்ணனார்	112
நற்றிணை 216	துனிதீர்	மதுரை மருதனிளநாகனார்	319
நற்றிணை 230	வயப்பிடிச்	ஆலங்குடி வங்கனார்	214
நற்றிணை 269	குரும்பை	எயினந்தை மகனார் இளங்கீரனார்	216
நற்றிணை 291	நீர்பெயர்ந்து	கபிலர்	95
நற்றிணை 310	விளக்கின்	பரணர்	290
நற்றிணை 320	விழவும்	கபிலர்	346
நற்றிணை 330	தடமருப்பு	ஆலங்குடி வங்கனார்	212
நற்றிணை 340	புல்லேன்	நக்கீரர்	47
நற்றிணை 360	முழவுமுகம்	ஓரம்போகியார்	192
நற்றிணை 380	நெய்யும்	கூடலூர்ப் பல்கண்ணனார்	102
நற்றிணை 390	வாளை	ஔவையார்	341
நாலடியார் 388	கொடியவை	சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை	127
நாலடியார் 390	அரும்(பு)அவிழ்	சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை	116

களஞ்சிய வாயில்

சிலம்பொலி சு. செல்லப்பன்

ஒரு மொழியின் பயன்பாடு உயிர்ப்புடன் இருக்க வேண்டுமெனின் அம்மொழிக்குரிய வேர்களை உயிர்ப்புடன் திகழுமாறு காக்க வேண்டும். மொழிக்கு வேர்கள் என்பவை அதன் இலக்கியங்களே! நூல்களெங்கும் பரந்து கிடக்கும் இலக்கியச்சுவை, ஒரு பூவினடியில் அமைந்திருக்கும் அமிழ்தத்தை ஒத்தது. ஒட்டுமொத்த தமிழ்ச்சமுதாயமும் இலக்கியங்களின் சுவையை அறிந்து மகிழுமாறு செய்ய, ஒவ்வொரு பூவிலும் உறிஞ்சி எடுத்த அமிழ்தத் துளிகளைச் சேகரித்துச் சுவையான தேனடையாக உருவாக்கித் தரும் தேனீயின் உழைப்பினையொத்த அயராத பணி இன்றியமையாததாகிறது. இவ்வாறான பணியை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு தமிழறிஞர்கள் மேற்கொண்டுள்ளனர் என்றாலும், 'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்' என்னும் இந்நூலின் தொகுதிகள் உருவாக மேற்கொள்ளப்பட்ட முயற்சி தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இதுவரை சொல்லப்பட்ட எதையும் தாண்டிச் சொல்லப்படவில்லை என்றாலும், இதுவரை சொல்லப்பட்ட ஒன்றை, இதுவரை யாரும் சொல்லாத முறையில் சொல்ல மேற்கொண்ட முயற்சியால் உருவானதே இக்களஞ்சியமாகும்.

'உரை' என்பதற்கும் 'திரட்டு' என்பதற்கும் உழைப்பு அளவிலேயே வேறுபாடு இருக்கிறது. சிலப்பதிகாரம் உள்ளிட்ட எத்தனையோ நூல்களுக்கு உரை எழுதியிருக்கிறேன். அவை ஒரு நெடுஞ்சாலைப் பயணம்போல் சீராகத் தொடங்கி முடிந்துள்ளன. ஆனால், குறிப்பிட்ட ஒரு பாடுபொருளை, குறித்த ஒரு கால எல்லைக்குள், அது

பாடப்பட்டுள்ள இலக்கிய நூல் ஒன்றுவிடாமல் தேடியெடுத்து, உரிய விளக்கத்துடன் தந்துள்ள இம்முயற்சி, என் வாழ்நாளில், எனக்கு வாழ்க்கை தந்த தமிழுக்கு, என் நன்றிக் கடனைச் செலுத்தக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பாய் எண்ணி மகிழ்கிறேன்.

'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியத்தை' உருவாக்க நான் மேற்கொண்ட முயற்சி ஓர் அகழ்வாராய்ச்சிக்கு இணையானது எனலாம். செம்மொழித் தமிழ் இலக்கிய நூல்களிலுள்ள 2586 அகப்பாடல்கள் பதினான்கு தொகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளன. இக்களஞ்சியம் வெறும் அகத்திரட்டு மட்டுமன்று; ஒரு யுகத்திரட்டு. ஒரு வகையில் இதனைத் தமிழ் அகப்பொருள் கலைக்களஞ்சியம் (Encyclopedia) என்று கூடச் சொல்லலாம்.

நூல் உருவாக்கம்

தமிழ் அகத்திணையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம், குறியிடம், சிறைப்புறம், ஒருவழித்தணத்தல், வரைவு நீட்டிப்பு, வரைவு கடாயது, அறத்தொடு நிற்றல், வரைவிடைப் பிரிவு, வரைவு மலிதல், உடன்போக்கு, ஏறு தழுவுதல், மங்கல மனையறம், பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற்பிரிவு என்பவற்றோடு இன்னும் பல துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறை சார்ந்த பாடல்கள் ஒவ்வொரு நூலினின்றும் முதலில் திரட்டப்பட்டன; பின்னர் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு இக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தையும் ஒரேயிடத்தில், நிகழ்ச்சி நடைபெறும் வரிசை முறையில், தக்க விளக்கத்துடன் இக்களஞ்சியத்தில் காணமுடியும். களவு, கற்பு என்னும் நிலைகளில் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்களைத் தனியே ஓரிடத்தே காண்பதற்கான வாய்ப்பு இக்களஞ்சியத்தில் உள்ளது.

பதிப்பில் பின்பற்றப்பட்டுள்ள நெறிமுறைகள்

மூல பாடம் பலவற்றுள் சிறந்தது என்று கருதப்பட்டது இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

அக்காலப் பாடல் நடையமைப்புச் சற்றுக் கடினமானதுதான். ஆதலின் எளிதில் படித்துப் பொருளறியும் முறையில் சொற்கள் பிரிக்கப்பட்டு அசையும் சீரும் சிதையாவண்ணம் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலும் யாருடைய கூற்று என்பது முதலில் தரப்பட்டுள்ளது. அடுத்த அடியில் அப்பாடல் எந்த நூலில் எத்தனையாவது எண்ணில் அமைந்துள்ளது என்பதும், அதனை இயற்றிய ஆசிரியர் எவர் என்பதும் தரப்பட்டுள்ளன. அடுத்துப் பாடல் எத்திணையைச் சார்ந்தது என்பது கொடுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்துப் பாடலின் கூற்றும், கூற்று விளக்கமும் இடம் பெற்றுள்ளன. இவற்றையடுத்துப் பாடலும், பாடலின் தெளிவுரையும், கருத்துச் சுருக்கமும் உள்ளன.

மேற்கொண்டு விளக்கமும், தேவையான குறிப்புகளும் உள்ளன. சில பாடல்களுக்கு இறைச்சி, உள்ளுறைப் பொருள் ஆகியன தரப்பட்டுள்ளன. இறுதியில் பாடலிலுள்ள இன்றியமையாச் சொற்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. சொல்லுக்கு நேரடிப் பொருளோடு, பாடலைப் புரிந்துகொள்ளும் வகையில் மேலும் தேவைப்படும் சொற்களும் இணைக்கப்பட்டுள்ளன. அதனால், பாடலையும் சொற்பொருளையும் ஒன்றிணைத்துப் படித்தால் பாடலின் பொருள் உரையின்றியே நன்கு விளங்குவதை அறியலாம்.

நன்றி மலர்

களஞ்சியத்தை உருவாக்க எனக்குத் துணை நின்றவர், பலர்.

நான் எழுதியதைச் செப்பனிட்டு வரிசையாக்கி, நூல் முழுவதையும் படித்துத் தக்க திருத்தங்களை வழங்கியவர், என் மருகர் பொறிஞர்

நா. புஷ்பராசு. அவருக்கு வாழ்க்கைத்துணையாக மட்டுமன்றி இப்பணிக்குப் பெரிதும் துணை நின்ற என் மகள் முனைவர் மணிமேகலை, இவர்களுக்கு இனிய ஒத்துழைப்பு நல்கிய பொறிஞர் அ. இரவீந்திரன்,

நூல் முழுமைக்கும் மெய்ப்புப் பார்த்துத் துணை செய்ததோடு 'அகத்திணை அஞ்சிறைத் தும்பி' எனப் பாராட்டுரையையும் தந்துள்ள கவிமாமணி தேனி திருமாவளவன்,

'ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்' எனும் நுண்ணிய ஆய்வுரையை வழங்கியுள்ள பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன்,

உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் அருமையானதோர் அணிந்துரை நல்கியுள்ள பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார்,

எத்தனை திருத்தங்கள், மாற்றங்கள் செய்தாலும் சலிப்பின்றி அத்தனையையும் உடனுக்குடன் கணினிமூலம் செம்மையாய்ச் செய்து வெளிவர உதவிய திருமதி இந்திரா காந்தி ரவி,

தரமான இலக்கிய நூல்களைப் பதிப்பிப்போர் என்றதும் முதலில் நினைவில் நிற்பவர் பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தார் ஆவர். அவர்கள் இக்களஞ்சியத்தைக் காண்பவர் பாராட்டும் வகையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் தந்துள்ள பதிப்புரை என் நெஞ்சில் என்றென்றும் பதிந்திருக்கும். அத்தகைய பதிப்பக உரிமையாளர் திரு. ப. செல்லப்பன், பதிப்பில் எனக்கு எல்லா வகையிலும் துணை நிற்கும் சுப்பு என்கிற திரு. இராம. சுப்பையா, களஞ்சியம் சிறந்த முறையில் உருவாக முன்னின்று முழு மூச்சுடன் பாடுபட்ட முனைவர் ப. முத்துக்குமாரசாமி,

முகப்போவியத்தை அழகுற வடிவமைத்துத் தந்துள்ள ஓவியர் ஜீவா,

கடின உழைப்பில் என் உடல் நலம் கெட்டுவிடாதவாறு பேணி வந்ததோடு, களஞ்சியம் வெளிவருவதில் பெரிதும் ஆர்வம் காட்டிய

என் மகன் செ. கொங்குவேள், மருமகள் மருத்துவர் ஈஸ்வரி மற்றும் குடும்பத்தினர் ஆகிய

அனைவரையும் பாராட்டிப் புகழ ஏற்ற சொற்கள் எனக்குக் கிட்டவில்லை என்பதால், ‘நன்றி’ என்னும் ஒரு சொல்லை என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுத்தி வணங்குகின்றேன்.

களஞ்சியப் பொருளைப் பாதுகாத்தல் மட்டும் போதாது; அதனை நாமும் துய்த்து அனைவர்க்கும் வாரிவாரி வழங்க வேண்டும். களஞ்சியத்தைத் துய்த்தால், தமிழரின் வீரம் செறிந்த, அறஞ்சார்ந்த காதல் வாழ்க்கை முறையினைச் சற்றே வாழ்ந்துவிட்ட நுகர்வும், இவ்வளவு மென்மையும் உயர்வும் அரியதும் ஆனதா தமிழ்க்காதல் என்னும் உள்ளுணர்வும் மேலோங்கி நிற்கும் என்பது உறுதி.

களஞ்சியத்தைப் பயன்படுத்துங்கள்; மேலும் மேலும் விரிவடையச் செய்யுங்கள்.

என்றும் உங்கள்



மதிப்புரை

அகத்திணை அஞ்சிறைத் தும்பி

கவிமாமணி தேனி **திருமாவளவன்**

தனி ஒருவராய், இருபது ஆண்டுகள் இடைவிடாது முயன்று, பல மணி நேர உழைப்பை நல்கி, வெற்றிகரமாய் முடித்துள்ளார், சிலம்பொலி. இந்த இமாலயச் சாதனையை எவ்வாறு போற்றிப் புகழ்வது? சிலம்பொலியின் இந்நூல் தமிழறிவைத் தழைத்திடச் செய்யும். பேச்சாற்றலைப் பெருக்கிடப் பயன்படும். ஆராய்ச்சியாளர்க்கு அருந்துணையாகும். மாணவர்க்கு மாங்கனியாகும். ஆசிரியருக்கு உரை நூல் ஆகும். இந்நூலை ஒவ்வொருவரும் பயின்று, "பெருமை கொள்வாய் தமிழா – தமிழ்நாட்டில் பிறந்ததனால் மிகச் சிறந்தவன் நான் என்று" மகிழ்ந்திட வேண்டுகிறேன்...

ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்

பேராசிரியர் முனைவர் **இராம. குருநாதன்**

அகப்பொருள் சார்ந்த இப்பெருநூலினைத் தமிழுலகம் நன்கறிந்த முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பனார் இலக்கிய இன்பம் தோய இதனைப் படைத்துள்ளார். இந்நூல் செல்லப்பனாரின் சொற்சிற்பச்சிகரம் என்று செப்புவது மிகையான கூற்றன்று. அகப்பொருள் கருத்தாக்கத்தை இவர் போல் சொல்லுவதற்கு இனி ஒருவர் உண்டோ என்று சொல்லும் அளவிற்கு இந்நூல் சிறந்து விளங்குகிறது. இஃது இவரது வாழ்நாள் சாதனை என்று நவின்று, இதற்கு வரவேற்பு வளையம் வைத்துக் கொண்டாடலாம். இந்நூலினை உருவாக்கி உலவ விட்டமைக்குத் தமிழுலகம் நன்றி சொல்லும். கொண்டாடும்...

தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோல்

பேராசிரியர் முனைவர் **மறைமலை இலக்குவனார்**

மிக எளிமையாகவும், இனிய எளிய நடையிலும், பாடல்களில் கருத்துகளையும் சிறப்புகளையும் சுவைபடவும், பயன்பாடு மிக்கதாகவும் சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ள அகப்பொருள் களஞ்சியம் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு ஒரு மகத்தான கொடை என உறுதியாகக் கூறலாம். மிகவும் அரிதின் முயன்று, நீண்ட காலம் அயராது உழைத்து, சங்க இலக்கியம் எனும் கடலில் மூழ்கிச் சிறந்த முத்துகளைத் தேடியெடுத்தது போன்று மிகச் சிறந்த படைப்புகளுள் ஒன்றாகவும், தமிழிலக்கியச் செவ்வியற்கால அகப்பொருள் செய்திகளை நிரல்படக் கூறும் கருத்துப்பெட்டகமாகவும் விளங்குகின்றது. தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோலை இதோ சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ளார். களஞ்சியப் பொருளைக் கைக்கொள்க! பயன் பெறுக!

பதிப்புரை

சொல்வேந்தர் சிலம்பொலிக்குச் சூட்டுகின்றோம் மணிமகுடம்

பழனியப்பா பிரதர்ஸ்

பொன்னொளியே! பூமழையே!
    பூவணியும் காவிரியே!
தண்ணமுதே! தாமரையே!
    தாழம்பூ நறுமணமே!
தென்பொதிகைச் சந்தனமே!
    தேனிழைக்கும் வண்டினமே!
கன்மலையின் நறுஞ்சுனையே!
    கண்ணகலா ஆழ்கடலே!
செண்பகமே! கற்பகமே!
    சிலம்பொலியே! வலம்புரியே!

பண்டையநல் புலவர்களும்
    பாராட்டும் வகையினிலே
கண்டுகண்டு பாடல்களைக்
    காட்சிவழி நீதொகுத்துச்
செண்டெனவே தந்தனையே
    செந்தமிழர் கரங்களிலே!
இன்தமிழும் புதியதொரு
    ஏற்றமுற வழியமைத்தாய்!
குன்றெனவே இமயமலை
    குன்றிடவே நீஉயர்ந்தாய்!

என்னபணி! இரவுபகல்
    எத்தனைநாள் பேருழைப்பு!
என்னுமொரு சிந்தனையில்
    எம்இதயம் கனக்கிறது!
உன்நூல்கள் பலதொகுப்பாய்
    நன்னூலாய் யாம்அளித்தோம்!

உன்கழுத்தில் இன்றணியும்
ஒவ்வொருபூ மாலையிலும்
நன்மலரை ஒன்றிணைக்கும்
நாரெனவே யாம்அமைந்தோம்!

கங்குகரை காணாத
கடல்மூழ்கி எழுவோரே
சங்கொடுநல் முத்துகளைத்
தாம்வாரிக் கொணர்ந்திடுவார்!
பொங்கியெழும் நறுமணத்தைப்
பூங்காவில் நுழையாமல்
எங்ஙனந்தான் பெறக்கூடும்
இயம்பிடுக தோழர்களே!
அங்ஙனமே நீர்விரும்பி
இந்நூலின் தொகுதிகளை

வாங்கிடுக! படித்திடுக!
வரிவரியாய்ப் பொருளறிந்தே
ஓங்கிடுக! உணர்ந்திடுக
உள்ளூறும் கலைநயத்தை!
தேங்கிநின்று மறைபொருளாய்த்
திரட்டுப்பால் போலினிக்கும்
பாங்கான உவமைநலம்
பலர்போற்றும் 'இறைச்சி'யுமே!
வீங்கிடுமே உம்முடலும்
விள்ளரிய பெருமிதத்தால்!

பல்கலையின் கூடமன்றோ
பழனியப்பா பிரதர்ஸும்!
நல்லறிஞர், கவிவல்லார்,
நாடறிந்த பேச்சாளர்,
துள்ளுநடை சிறுவர்க்குச்
சுவைக்கதைகள் படைத்திடுவோர்,
வல்லமையால் எழுத்துலகில்
வந்தமர்ந்தோர் நடுவினிலே
சொல்வேந்தர் சிலம்பொலிக்குச்
சூட்டுகின்றோம் மணிமகுடம்!

அகத்திணை

பொழிலிலோ புனத்திலோ எழிலார்ந்த வேறோர் இடத்திலோ ஆண்மகன் ஒருவன், பெண்மகள் ஒருத்தி, தன் விளையாட்டுத் தோழியர் எவருமின்றித் தனித்து நிற்பதைக் காண்கிறான். எல்லா வகையிலும் தன்னை ஒத்திருக்கும் அவள்பால் அவனையுமறியாமல் ஓர் இயற்கை ஈர்ப்பால் அவள் ஒருத்திமீது மட்டுமே அவன் உள்ளம் செல்லுகிறது. அவளும் அவனை மட்டுமே விரும்புபவளாய் இருக்கிறாள். எதிர்ப்படும் எல்லாரிடமும் ஆண், பெண் உள்ளம் சென்றுவிடாது. அவளது அழகு கண்டு, 'இவள் தெய்வ மகளோ', 'உண்மையிலேயே மானிடப் பெண்தானோ' என ஐயுறுகிறான்; சில செய்கைகளால் அவள் மானிடப் பெண்ணே என்று தெளிவடைகின்றான். தன்னைப்போல அவளும் தன்னை விரும்புகிறாளா என்பதைக் குறிப்புகளால் உணர்கிறான். இருவரும் ஒருவரையொருவர் காண்கின்றனரெனினும், பெண்ணை ஆண் கண்டான் என்று சொல்வதே செய்யுள் வழக்கம். அவ்வாறு காதல் கொள்பவருள் ஆண்மகனைக் 'காதலன்' என்றோ, 'தலைவன்' என்றோ, 'கிழவன்' என்றோ, பெண்மகளைக் 'காதலி' என்றோ, 'தலைவி' என்றோ, 'கிழத்தி' என்றோ இலக்கியங்கள் வழங்குகின்றன.

தலைவனும் தலைவியும் ஒரு நிலத்தைச் சார்ந்தவராகவோ, வெவ்வேறு நிலத்தைச் சார்ந்தவராகவோ இருக்கக்கூடும். ஐவகை

நிலங்களுள் எந்நிலத்தவராயும் இருக்கலாம். எனினும், காதலனும் காதலியும் குறிஞ்சி நிலத்தில் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்கின்றனர் என்று சொல்வதே அக இலக்கிய வழக்கம். எல்லா நிலங்களிலும் காதல் தோன்றத்தான் செய்யும்! 'பின்புலம் இயற்கை யழகு வாய்ந்ததாய் இருந்தால்தான் காதல் காட்சி சிறப்புறும்.' பாலைநிலத்திலும் கடுமையாய் வெயில் வீசும் பசுமையற்ற பின்புலத் திலும் காதல் காட்சியைக் காண எவரும் விரும்பார். எனவேதான், குறிஞ்சி நிலத்தைப் பின்புலமாய்க்கொண்டு, அங்கு ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வதாய் அமைக்கின்றனர். இவ்வாறே காதல் கொள்ளும்போது ஏற்படும் மாறுபட்ட நிலைகளுக் கேற்பப் பின்புலங்களாய் முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன அமையும்.

ஒருவனும் ஒருத்தியும் கண்டுகொள்வதைக் 'காட்சி' என்பர். தான் கண்ட பெண் எவ்விடத்தினளோ, யார் மகளோ, நம் காதலுக்கு இசைவளோ என்றெல்லாம் ஆண்மகன் ஐயுறுவான். இஃது 'ஐயம்' எனப்படும்.

அணிகலன்கள் அணிந்திருத்தல், காமப் பார்வை பார்த்தல், புதிதாய்த் தன்னைக் கண்டதால் உடலில் நடுக்கம் தோன்றுதல், தான் நோக்கும்போது அவள் தன்னைப் பார்க்காது நிலத்தைப் பார்த்தல், தான் காணாதிருக்கும்போது அவள் தன்னை நோக்குதல் போன்ற குறிப்புகளால் ஆண்மகன் ஐயம் நீங்கி அவள் தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிவடைகிறான்.

தலைவி அணிந்துள்ள பூக்களில் வண்டுகள் மொய்த்திருத்தல், சிறந்த அணிகலன்களை அவள் அணிந்திருத்தல், அவள் மார்பு மற்றும் உடலில் ஓவியம் எழுதப்பட்டிருத்தல், அணிந்துள்ள மலர்மாலையில் மலர் வாடியிருத்தல், மருண்ட பார்வை கொண்டிருத்தல், கண்களை இமைத்தல், முகத்தில் அச்சம் தோன்றுதல் போன்றவற்றாலும் இன்ன பிறவற்றாலும் காதலன் தன் ஐயம் நீங்கி அவள் மானிடப் பெண்ணே என முடிவு செய்வான்.

"வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சம் என்(று)
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப" (தொல். கள. 4)

என்பது தொல்காப்பிய நூற்பா.

இயற்கைப் புணர்ச்சி

தலைவி தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிந்த தலைவன், தன் காதலை உணர்த்தத் துணிவான்; தலைவியும் தன் காதற்குறிப்பை உணர்த்துவாள். நாணத்தால் தலைவி, தன் காதலை வெளிப்படையாய் உணர்த்தாது குறிப்பினாலேயே உணர்த்துவாள்.

தன்னை அவள் விரும்புவதுணர்ந்த பின்னரே அவன் அவளைத் தனிமையில் சென்றடைந்து, ஒன்றுகூடி இன்புறுவான். இவ்வாறு தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு முதல்நாளில் கூடியிருத்தலை 'இயற்கைப் புணர்ச்சி' என்பர்.

தலைவிக்கு முதன்மைத்தோழி ஒருத்தியும், உடன் விளையாடும் மகளிரும் (ஆயத்தார்) இருப்பர். ஆண்மகனின் பாங்கறிந்தொழுகும் உயிர்த்தோழன் பாங்கன் என்று வழங்கப்படுவான்.

இடந்தலைப்பாடு

தற்செயலாய்க் கண்ட ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி, முதல் நாள் ஒன்றுபட்டுக் காதலராயினர். இவ்வாறு இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், தன் காதலியை முதல் நாள் கண்ட அதே இடத்தில் மறுநாளும் காணலாம் எனச் செல்கிறான்; காதல் மிக்க தலைவியும் அங்கு வந்து நிற்பாள். தோழியரோடு விளையாடாது, பூப்பறித்து மாலை தொடுத்திடாது தனித்திருக்கும் தலைவியிடம் தலைவன், "தனித்து நிற்கும் நீ யாரோ? உன்னைத் தொழுது கேட்கிறேன்" என்று தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்துவான். அது கேட்டுத் தலைவி நாணி நிற்பாளேயன்றி மறுமொழி எதுவும் கூறமாட்டாள். தலைவன் அவளை நெருங்கித் தன் காதலை உறுதிப்

படுத்திக்கொள்வான். யாருமறியாதவாறு தலைவன் தனியே வந்து, தலைவியை முதல்நாள் கண்ட அதே இடத்திலேயே இரண்டாம் நாளும் கண்டு, கூடிக் களிப்பது 'இடந்தலைப்பாடு' எனப்படும்.

பாங்கற்கூட்டம்

தலைவியைக் கண்டது முதற்கொண்டு தலைவன் மனஞ்சோர்ந்து, உடல் தளர்ந்து உயிர்க்களையற்றிருப்பான். ஆண்மை மிக்க அவன் அவ்வாறு சோர்ந்திருப்பது எதனால் எனப் பாங்கன் கேட்பான். அது பெண் ஒருத்தியால் நிகழ்ந்ததென்பான், தலைவன். பகைவரும் கண்டஞ்சும் வீரமிக்க அவன், பெண் ஒருத்தியால் இடிந்துபோய் இருத்தல் கூடாதெனப் பாங்கன் இடித்துரைப்பான். இதனைப் பாங்கன் கழறுதல் (இடித்துரைத்தல்) என்பர். பாங்கன் இடித்துரைத்ததை மறுத்துத் தலைவன், 'நீ அவளைக் கண்டாயானால் என்னை இவ்வாறு இழிவாய்ப் பேசமாட்டாய்' என்று கூறுவான். தோழனின் கூற்றினைத் தலைவன் மறுத்துப் பேசுவதைக் 'கழற்றெதிர் மறை' என்பர்.

தலைவனின் காதற்பெருக்கையும், அதை அவன் தாங்க இயலாது தவிப்பதையும் கண்டு, "அப்பெண் யார்? எவ்விடத்துள்ளாள்? எத்தன்மையள்?" என்று பாங்கன் கேட்டறிந்து, அவ்விடம் சென்று, தலைவன் குறிப்பிட்ட அவளைக் கண்டு, தலைவன் அவளை விரும்பியது சரியெனத் தெளிவான்; தலைவனுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கவும் உறுதி பூணுவான்; தலைவனைத் தலைவி இருக்கு மிடத்திற்கு அழைத்துச் செல்வான். தலைவி இருக்கும் இடத்தைப் பாங்கன் காட்டத் தலைவனோடு தலைவிக்கு ஒருநாள் கூட்டம் நிகழும். இது 'பாங்கற்கூட்டம்' எனப்படும்.

பாங்கியிற்கூட்டம் (தோழியிற்புணர்ச்சி)

தலைவிக்கு விளையாட்டுத்தோழியர் பலராய் இருப்பர். தலைவி அவர்களை விட்டுப்பிரிந்து எப்பொழுதும் மறைந்து செல்லல் அரிது. அவர்களைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றால் திடீரென்று வந்து தலைவியை அடைவர், தோழியர். இது போன்ற இடையூறுகளை

யெல்லாம் கடந்து, தலைவியைத் தன்னிடம் கொண்டுவந்து விடத் தலைவிக்குத் தோழியராய் உள்ளவருள் முக்கியமான ஒருத்தியை அறியத் தலைவன் முற்படுவான்.

தலைவியைப் பெற்றெடுத்தவள், நற்றாய்; வளர்த்தவள், செவிலித் தாய். நற்றாய், செவிலிக்குத் தலைவியும் தோழியும் ஆவாள். அதே போலவே, செவிலிக்கு மகள், நற்றாய் பெற்ற மகளான தலைவிக்கு உயிர்த்தோழியாய் இருப்பாள். இருவரும் ஈருடலும் ஒருயிருமாயிருப்பர். அத்தகைய தோழியை அறிந்து, அவளிடம் தன் குறையைக் கூறி, அவள் வழிநடத்துதலின்படி தலைவியைக் கூடிடத் தலைவன் விரும்புவான்.

தலைவியைச் சூழ ஒரு படைபோலக் கூட்டமாய்த் தோழியர் வருகின்றனர். அவர்களுள் யார் முதன்மையானவள் என்பதை எவ்வாறு அறிவது? தோழியர் கூட்டத்தை நன்கு கவனித்துப் பார்க்கிறான், தலைவன். அவர்களுள் ஒருத்தி எதைச் சொன்னாலும் தலைவி அதை ஏற்பதையும், அவள் செய்வதுபோலவே தலைவி செய்வதையும் கண்டு, அவள்தான் தலைவிக்கு உயிர்த்தோழி என்றறிகிறான்.

குறையிரத்தல்

அத்தோழியின் தோழமையைப் பெற்றாலன்றித் தலைவியின் நட்பைப் பெறுதல் அரிது என்றுணர்ந்தான், தலைவன். அவன், தான் தலைவி மீது கொண்டுள்ள காதலை அத்தோழியிடம் தெரிவிப்பான். தலைவியைத் தனியே சந்திக்க இயலாதிருப்பதைக் கூறி, அக் குறையை நீக்கித் தான் தலைவியை அடையத் துணை நிற்குமாறு மிகவும் இரங்கிக் கேட்பான். இது ‘குறையிரத்தல்’ எனப்படும்.

தோழியும் தலைவியும் ஒருங்கே இருக்கும்போது சென்று, வெளிப் படையாகவோ குறிப்பாகவோ தன் நிலையைத் தலைவன் நயமாய்ப் புலப்படுத்துவான். முதலில் தோழி தலைவனுக்குத் துணை நிற்க மறுப்பாள்.

மதியுடம்பாடு

தலைவன் தன்னிடம் கூறியவற்றையும், தலைவியின் செயல்களையும் தனித்தனியாகவும், சேர்த்தும் ஆராய்ந்து, அவர்கள் இருவரும் ஒரே வகையான இன்பதுன்பங்களைக் கொண்டிருத்தலையும், இருவர் அறிவும் ஒன்றாய் இருத்தலையும் தோழி உணர்ந்தறிவாள். தலைவன் தலைவியர் உணர்வோடு தோழியின் உணர்வும் ஒத்துச்செல்லும் நிலை உண்டாதலை, 'மதியுடம்பாடு' என்பர்.

மதியுடம்பட்ட தோழி, தலைவியின் குறிப்பறிய முற்படுவாள். தலைவி, தான் ஒருவனைக் கண்டு காதலுற்றிருப்பதை நாண மிகுதியால் தோழியிடம் கூறமாட்டாள். தலைவி ஆயத்தோடு கூடாது தனித்திருத்தல், ஏதோ ஒன்றை நினைந்து வருந்தியிருத்தல் போன்ற நிகழ்வுகளால், அவள் காதலைத் தான் அறிந்திருந்தும் அறியாதவள் போலத் தலைவியிடம் மறைமுகமாய்க் கூறி, தலைவியின் நாணம் ஊறுபடாதவாறு, தோழி அவள் நெஞ்சக்கருத்தை அறிவாள்.

சேட்படை

தோழியைக் குறையிரந்து வரும் தலைவன், காணிக்கை (கையுறை)யாய் அரிய தழை, முத்து முதலியவற்றைக் கொண்டுவந்து அவற்றைத் தலைவியிடம் தந்து, அவளை எவ்வாறாயினும் தன்னுடன் கூட்டி வைத்திடுமாறு தோழியிடம் வேண்டுவான்.

'நாம் விரும்பியபடி இவள் எளிதிலே நமக்குக் கிடைக்கக் கூடியவள் அல்லள்' என்று கருதும் தலைவன், தழையும் கண்ணியும் கொண்டு வந்து தோழிக்குப் பின்னின்று குறையிரப்பான். அவன் உணரும்படியாகத் தோழி அவனைச் சேட்படுத்துவள் – அஃதாவது, தலைவனைத் தலைவியுடன் நெருக்கமாய்ப் பழக விடாது சற்று அகற்றி வைப்பாள் (சேட்படுத்தல் – அகற்றுதல்).

மடலேறுதல்

தலைவன் தலைவியரின் ஆழமான காதலை அறிந்த பின்னும் தோழி, அவர்கள் எளிதில் சந்திக்க இடமளிக்க மாட்டாள்; காதலன் அரிதின்

முயன்று ஆர்வத்தோடு கொண்டுவரும் கையுறையை ஏற்க மறுப்பாள்; பல்வேறு தடைகளை ஏற்படுத்துவாள். தலைவன் தலைவிமீது கொண்டுள்ள காதல் உறுதியானதுதானா என்பதை அறிவதற்கே இத்தகு செயல்களைத் தோழி செய்வதற்கான நோக்கமாகும்.

தோழி வேண்டுமென்றே தன் குறைக்குச் செவிசாய்க்காது காலங் கடத்துவதைக் காணும் தலைவன், தன் எண்ணம் ஈடேறுவதற்காகத் தான் மடலேற உறுதி பூண்டுள்ளதைத் தோழியிடம் தெரிவிப்பான்.

மடல் மா என்பது பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரையைக் குறிக்கும். தான் காதலித்த பெண்ணை எய்தப்பெறாதவன் தன் உடல் முழுவதிலும் திருநீற்றைப் பூசிக்கொண்டு, ஆவிரம் பூ மாலையை மார்பிலும், எருக்கம்பூ மாலையைத் தலையிலும் அணிந்துகொண்டு பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரைமேல் ஏறிக்கொள்வான்; தான் விரும்பும் காதலியின் படத்தைத் துணியில் எழுதிக் கையில் பிடித்திருப்பான். அக்குதிரையைச் சிலர் வீதியில் இழுத்துச் செல்வர். இது மடலேறுதல் எனப்படும். இதனால் அவன் உறுதியான காதல் வெளிப்படும்; மேலும், அரம் போன்ற பனங்கருக்கு உடலினை அறுத்தலால் வெளிப்படும் குருதிப்பெருக்கும் இரக்கத்தை ஏற்படுத்தும். ஊரார், இவ்வளவு காதல் கொண்டுள்ளவனுக்கு மகளைக் கொடுக்க மறுக்கலாமா எனப் பெண்ணைப் பெற்றோரைக் குறை கூறுவர்; அவர்களை அணுகி, எடுத்துரைத்து, அவளை அவனுக்கு மணம் முடித்து வைப்பர். மடல் ஏறுவேன் என வாயளவில் சொல்லுவது ஐந்திணையின்பாற்படும்; சொன்னபடி மடலேறிக் காட்டுவது பெருந்திணையின்பாற்படும். சங்க இலக்கியங்களில் மடலேறுவதாய்ச் சொல்லும் நிலை மட்டுமே உள்ளது; மடல் ஏறியதாய்ப் பாடல் எதுவும் இல்லை.

மடலேறுவேன் என்று தலைவன் சொன்னதும், அவனது காதல் திட்பத்தினைக் கண்ட தோழி, அவனுக்குத் துணை செய்ய முற்படுவாள்.

குறியிடம்

தலைவன் தந்த கையுறையைத் தலைவியிடம் கொடுத்து, அவள் குறிப்பினை உணர்ந்துகொள்வாள், தோழி. தலைவன் குறையைத்

தலைவி நயக்கவே, அவ்விருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கேற்ற வகையில் 'இன்ன இடத்திற்கு வந்தால் தலைவியைக் களவிற் கூடலாம்' என்று தோழி குறியிடங் கூறுவாள்.

தலைவியைத் தலைவன் பகலில் கூடுதற்கு ஓர் இடத்தை வரையறுத்துத் தோழி குறிப்பிடுவாள். இது 'பகற்குறி' எனப்படும்.

அடுக்காய் உள்ள மலைப்பக்கமாகவோ, அழகிய மலர்ச் சோலையாகவோ, காதலுணர்வை மிகுவிக்கும் இன்ன பிற இடங்களாகவோ பகற்குறி அமையும். அவ்விடங்கள் பலவகைப்பட்ட மரங்களால் பொலிவு பெற்றனவாயும், வெளியிலிருப்போர் உள்ளிருப்போரை எளிதில் காண்பதற்கு இயலாதனவாயும், ஆனால், உள்ளே இருப்போர் வெளியிலிருப்பவரை எளிதில் கண்டு கொள்ளத்தக்கனவாயும், ஆசைகளை விட்டொழித்தோரையும் ஆசை கொள்ளத் தூண்டும் தன்மையனவாயும் இருக்கும். பகலில் கூடுமிடம் வீட்டிற்குப் புறத்தே, தலைவி வழியறிந்து வரக்கூடியதாயும், அவளுக்குப் பழக்கமான இடமாயும் அமைந்திருக்கும்.

பகற்குறி நாடி வந்த தலைவன், அக்குறிக்கண் செல்ல இயலாதவாறு தடைகள் சில நேர்வதுமுண்டு. (பகற்குறி இடையீடு)

அந்நிலையில், தலைவன் விருப்பத்தை ஈடேற்றுதலை அறமாய்க் கருதும் தலைவி, அவன் விரும்பியவாறே இரவில் வந்து தன்னைச் சந்திப்பதற்கு வரையறுத்துரைக்குமிடம் 'இரவுக்குறி' எனப்படும். அவ்விடம் தலைவியின் இல்லத்து மதில் எல்லைக்குள் இருக்கும்; இல்லத்தவர் பேசும் பேச்சினை வெளியிலிருந்து கேட்குமளவிற்கு அண்மையில் அகமனைக்கும் புறமனைக்கும் நடுவே அமைந்திருக்கும். அது, தலைவியின் வீட்டு எல்லைக்கு உட்பட்டிருக்கும் செய்குன்று, இளமரக்கா, பூப்பந்தர், விளையாட்டிடம் போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்றாயிருக்கும். தலைவன், தான் இரவுக்குறியிடத்துக்கு வந்திருப் பதைத் தெரிவிக்க அங்குள்ள நீர்நிலையில் கல்லெறிந்து ஒலி எழுப்பல், மரங்களில் தங்கியிருக்கும் பறவைகளை எழுப்பிவிடல் போன்ற

அடையாளக்குறிகளைச் செய்வான். அவ்வொலி கேட்டுத் தலைவி அங்கு வந்து சேர்வாள்.

சில சமயம், தலைவன் செய்ய வேண்டிய குறி காற்றசைவு போன்றவற்றால் இயற்கையாய் நிகழ்ந்துவிடும். அதை அவன் செய்ததாய் எண்ணி வந்து தலைவி ஏமாந்து திரும்புவாள். பிறகு அங்கு வந்த தலைவன் குறி எழுப்ப, அதைக் கேட்கும் தலைவி, அது தலைவன் எழுப்பிய குறியன்று என்று கருதி வாராதிருப்பாள். அதனால் தலைவன் சந்திப்பு நேராமலே திரும்புவான். இஃது 'அல்ல குறிப்படுதல்' ஆகும்.

சிறைப்புறம்

ஒருவரை ஒருவர் கண்ணால் பார்க்க வாய்ப்பு இல்லாததாயும், ஆனால், ஒருவர் கூறியதை மற்றவர் காதால் கேட்கும் தொலைவில் உள்ளதாயும் இருக்கும் பகுதி 'சிறைப்புறம்' எனப்படும். அதை வீட்டருகே உள்ள ஓர் இடம்; பச்சை உயிர்வேலி எனலாம்.

தோழிக்கும் தலைவிக்கும் இடையே நிகழும் உரையாடல்களைத் தலைவன் மறைந்திருந்து கேட்டு அறிதற்கு வசதியாய் மனைக்குப் புறமாய்க் காவலாய் அமைக்கப்பட்டுள்ள வேலி அமைப்பினைச் சிறைப்புறம் எனலாம்.

இற்செறிப்பு

தலைவன் தலைவியரிடையே ஏற்பட்டுள்ள களவுறவை ஊரார் அறிந்து பழிச்சொல் கூற முற்படுவர். இப்பழிச்சொல் 'அலர்' எனப்படும். ஊரெங்கும் பழிச்சொல் ஏற்பட்டிடவே தலைவி வீட்டார் அவளை வீட்டை விட்டு எங்கும் வெளிச் செல்லாதவாறு வீட்டுக்காவலில் வைப்பர். இஃது 'இற்செறிப்பு' எனப்படும்.

தலைவியின் தோற்ற மாறுபாட்டைக் கண்டும், ஊரவர் குறிப்பாய்ப் பேசிக்கொள்வதைக் கேட்டும், விளையாடல் முதலியவற்றிற்குத் தன் இல்லத்தைவிட்டுத் தலைவி வெளியே செல்ல இயலாதவாறு செவிலி அவளை இல்லத்திற்குள்ளேயே தங்கச்செய்வாள்.

ஒருவழித்தணத்தல்

அலர் அடங்குமாறு தலைவன் தலைவியைக் காண வாராது, தன் ஊரிலேயே சில காலம் தங்கி இருப்பான். இதனை 'ஒருவழித்தணத்தல்' என்பர்.

வரைவு கடாயது

தலைவன் சிறைப்புறத்தானாயிருக்க, ஊரார் அலர் கூறுவதையோ, தலைவிக்கு இற்செறிப்பு ஏற்பட்டிருப்பதையோ, அயலவர் மணம் பேசி வருகின்றனர் என்பதை அறிவித்தோ, இனியும் களவொழுக்கம் நீட இடந்தரலாகாது என்றும், உடனே அவன் வரைவு மேற்கொள்ள வேண்டும் என்றும் தலைவியும் தோழியும் வற்புறுத்திக் கூறுவர். தலைவன் சிறைப்புறமிருக்க, தலைவியும் தோழியும் அவன் கேட்குமாறு தம்முள் பேசி, அவனை உடனடியாக வரைந்துகொள்ளவும் தூண்டுவர்.

வெறியாட்டு

தலைவனோடு களவொழுக்கம் மேற்கொண்டுள்ள தலைவி, அவன் பிரிவைப் பொறுக்க இயலாது உடல் மெலிவாள். தன் மகளின் உடல், நாள்தோறும் மெலிவதற்கான காரணத்தை அறியாது அவள் தாய் கலங்குவாள். உடல் மெலிவு முருகனால் ஏற்பட்டது என நம்பி, செவிலி முருக பூசை செய்ய முனைவாள். முருக பூசை செய்வதற்குரிய பூசாரி, வேலன் எனப்படுவான். அவன் முருகனைக் கூவி அழைத்தும், வெறி யாட்டுக் கூத்தாடியும், கழற்சிக்காயிட்டும் தலைவியின் நோய்க்குக் காரணம் முருகனே என்பான்.

தெய்வம் மக்கள்மீது ஏறி ஆடுவதை 'வெறியாட்டு' என்பர். வெறியாடுபவன் தன் கையில் வேலைத் தாங்கி ஆடுவான். ஆதலின், இவன் வேலன் என்று வழங்கப்பட்டான்.

வெறியாடும் இடத்தில் பல்வகை மலர்களையும் பரப்பி, அழகுறச் செய்து முருகனை வழிபட்டு வேலன் வெறியாட்டயர்வான். அவ் விடத்தை 'வெறியாடு களம்' என்பர். அங்கு வேலன், ஆட்டுக்குட்டியை வெட்டிப் பலி கொடுத்துப் பூசை செய்வான்.

கட்டுவிச்சியை அழைத்து மகளின் நோய்க்குக் காரணம் யாது என வினவுவதும் உண்டு. முறத்தில் நெற்களைப் பரப்பி, எண்ணிக் குறி சொல்வது கட்டுவிச்சியின் வழக்கம்.

அறத்தொடு நிற்றல்

வெறியாட்டு நடத்தச் செவிலி முற்படும்போது தலைவி தோழியிடம், தன் காதலைத் தக்கவாறு செவிலியிடம் கூறி வெறியாட்டினை நிறுத்துமாறு வேண்டுவாள். இஃது 'அறத்தொடு நிற்றல்' எனப்படும்.

செவிலித்தாய் தோழியிடம் 'தலைவிக்கு இவ்வேறுபாடு எதனால் ஏற்பட்டது?' என்று கேட்பாள். தோழி மிக்க கவனத்தோடும் விழிப்போடும், எவர்க்கும் கெடுதியும் துன்பமும் நேராதபடி செவிலியிடம் உரைப்பாள். கற்பு அழியாதவாறு, தலைவி தலைவனொடு ஒழுகிவந்த களவொழுக்கத்தைப்பற்றிச் செவிலியிடம் வெளிப் படுத்துவாள். இது, 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' எனப்படும். தலைவி தோழியிடமும், தோழி, தன் தாயாகிய செவிலியிடமும் அறத்தொடு நிற்பர். செவிலி, தன் தோழியும், தலைவியைப் பெற்றெடுத்தவளுமாய நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். நற்றாய் தலைவியின் தமையன்மார்க்கும் தந்தைக்கும் அறத்தொடு நிற்பாள். தலைவியின் ஆழ்ந்த காதலை அறிந்த அவள் பெற்றோர் திருமணத் திற்கு உடன்படுவர்.

வரைவிடைப்பிரிவு

அறத்தொடு நின்ற நிலையில், பெற்றோர் வரைவுக்கு உடன்படு வராயின், மகட்கொடையாகவும் மண நிகழ்வுக்காகவும் தலைவியைப் பெற்றோர்க்குத் தலைவன் பொருள் தரவேண்டும். இவ்வாறு அளிக்கப்படும் பொருள், மகட்கொடை, முலை விலை என்னும் பெயர்களால் வழங்கப்படும். இப்பொருளைத் தேடி வரத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். இது 'வரைவிடைப்பிரிவு' எனப்படும். வரைவிடைப்பிரிவால், தலைவி ஆற்றாது வருந்தத் தோழி அவளைத் தேற்றுவிப்பாள்.

தலைவன் வரைபொருட்காகப் பிரிந்து சென்று, பொருள் திரட்டி மீண்டதும் தன் சுற்றத்தவர்களை முற்கொண்டு, தலைவியில்லம் போந்து, பெண் தருமாறு வேண்டுவான்; சுற்றத்தவர் அல்லாமல் அறநிலை சான்ற வேறு சான்றோர்களை முற்கொண்டும் பெண் தருமாறு வேண்டுதலுமுண்டு; பின்னர், முறைப்படி திருமணம் நிறைவேறும். (வதுவை அயர்தல்)

உடன்போக்கு

பெற்றோர் சிலர் தம் மகளின் களவொழுக்கத்தை அறியாத நிலையிலும் அறிந்த நிலையிலும் தலைவியை வீட்டை விட்டு வெளிப் போகாதவாறு வீட்டினுள் வைத்துக் காத்து வருவர். அந்நிலையில் தலைவியின் வருத்த மிகுதியைக் காணும் தோழி, தலைவி, தலைவன் ஆகிய இருவர் ஒப்புதலையும் பெற்று, எவருமறியாதவாறு தலைவியைத் தலைவனுடன் அவன் ஊர் செல்ல அனுப்பி வைப்பாள். அவ்வாறு தலைவனுடன் தலைவி செல்லுதல் 'உடன்போக்கு' என்றும், 'கொண்டுதலைக் கழிதல்' என்றும் வழங்கப்பெறும். ஏதமிக்க காட்டு வழியில் தன்னுடன் வரும் தலைவிக்குத் துன்பம் எதுவும் தோன்றா வண்ணம் தலைவன் அவளிடம் இன்மொழி பேசியும் நற்செயல்களைச் செய்தும் அழைத்துச் செல்வான்.

உடன்போகும் காதலர்களை வழியிடையே காண்பவர் அவர்கட்கு ஆதரவாய் இருப்பர். 'பொழுது சென்று இருள் வந்தது; வழி துன்பமானது. இந்நேரத்தில் தனியே செல்லுதல் தகாது. இரவு எம்மூரில் தங்கிச் செல்லுங்கள்' என்று அன்போடு வேண்டுவர்.

தலைவி தம் வீட்டை விட்டு வெளியே சென்றதை அறிந்த நற்றாயும் செவிலியும் மிகவும் வருந்துவர். 'காதலனிடம் மகள் கொண்ட அன்பு இவ்வளவினது என யாம் அறிந்திருந்தால் எம் வீட்டிலேயே திருமணத்தை முடித்து வைத்திருப்போமே' என்பர். உடன்போக்குச் சென்ற மகளைச் செவிலித்தாய் தேடியும் செல்வாள். அவளை எதிர்ப் படும் ஆன்றோர், அவள் நிலை கண்டு இரங்கி, "உன் மகள் அறவழி

யினையே மேற்கொண்டுள்ளாள். அவளைத் தடுக்க வேண்டா; அவளை அவள்வழிச் செல்ல விடுங்கள்" என ஆறுதல் கூறி அனுப்பி வைப்பர்.

தலைவன் தலைவியைத் தன்னூர் அழைத்துச் சென்றதும் அங்கு அவளை மணந்துகொள்வான். களவொழுக்கத்தைத் தலைவியைப் பெற்றோர் ஏற்றனரென்றால் திருமணம் அவர்கள் வீட்டிலும், அவ்வாறன்றித் தலைவனுடன் தலைவி உடன்போக்கில் சென்றால் திருமணம் தலைவன் இல்லத்திலும் நடைபெறும். திருமணம் எங்கு நடைபெற்றாலும் திருமணத்திற்குப் பின்பு இருவீட்டாரும் ஒன்று பட்டிருப்பர்.

மங்கல மனையறம்

திருமணத்தின் பயனாய்த் தலைவன் தலைவியர் இல்வாழ்க்கை யினை மேற்கொள்ளத் தலைப்படுவர். இல்வாழ்க்கை மேற்கொள்ளும் தலைவனுக்குத் தன்னைச் சார்ந்த மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார், ஏனை உறவின் முறையினர், ஆன்றோர், விருந்தினர் ஆகியோரை உண்டி, உடை, உறையுள் முதலியவற்றால் பாதுகாக்கும் கடமையும், இவையொழிய இன்னும் ஏனையவாயமைந்துள்ள இல்வாழ்க்கைக் கடமைகளும் உண்டாகின்றன. அவ்வெல்லாக் கடமைகளையும் முறைப்படி அவ்வக் காலங்களில் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாகும்.

பொருள்வயிற் பிரிவு

தலைவன் திருமணம் செய்துகொள்ளுதற்கு முன் வரைதற் பொருட்டுப் பொருள் தேடியது, திருமணக் கடமைகளுக்காக மட்டுமே. திருமணத்திற்குப் பின்னர்த் தனது இல்வாழ்க்கைக்குரிய கடமைகளை நிறைவேற்றும்பொருட்டும் பொருளைத் தேட வேண்டியவனாகிறான்.

முன்னோர் தேடிய பொருள் தன்னிடம் மிகுதியாய் இருக்குமாயினும் தலைவன் தன் முயற்சியால் பெற்ற பொருள் கொண்டு இல்வாழ்க்கை யினை நடத்துவதையே பெருமையாகவும் சிறப்பாகவும் கருதுவான்.

பொருள் தேடி வரச் செல்லக் கருதும் தலைவன், தலைவி தன் பிரிவை ஆற்றியிராள் என்பதுணர்ந்து சில காலம் பயணத்தைத் தவிர்ப்பான். பின்னர்த் தோழியிடம் கூறித் தலைவியிடம் தன் பிரிவை அறிவிக்கச் சொல்வான். முதலில் தோழியே செலவினை மறுப்பாள்; நீண்ட பிரிவாய் இருக்குமென்பதால் தலைவியும் ஒருப்படாள்; ஆயினும், அறங்கருதித் தலைவி இசைவாள். நாடுகளை நீங்கியும் காடுகளைக் கடந்தும் தொலைவில் சென்று, பொருளீட்ட வேண்டும். இச்செயலைச் செய்து முடிக்க வேனிற்காலமே ஏற்றதாகும். வேனிற்பருவத்தே பிரிந்து செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் செல்வான்.

தலைவன் சென்றதும் தலைவி துயர் தாளாது மிகவும் வருந்தி யிருப்பாள்; தோழி அவளை ஆற்றுவிப்பாள். தான் புறப்படும்போது சொல்லிச் சென்றவண்ணம் கார்காலத் தொடக்கத்தே தலைவன் வாராதிருப்பின் தலைவியின் துயரம் மிகுதியாகும். கார்காலத்திற்குரிய அறிகுறிகள் தென்பட்டாலும் அவை கார்காலத்திற்குரியவை அன்று என்று கூறித் தலைவியைத் தோழி தேற்றுவிப்பாள்.

பொருள் தேடப் பிரிந்த தலைவனும், தலைவியைப் பிரிந்திருக்க இயலாதவனாய்த் தவிப்பான்; இடைவழியிலேயே திரும்பிவிடலாமா என்றுகூட எண்ணுவான்; ஆயினும், கடமையில் கருத்தூன்றி, பொருள் தேடி முடித்த பின்னரே திரும்புவான். திரும்புங்கால், விரைந்து சென்று தலைவியை அடைய வேண்டும் என்னும் வேட்கையில் தேரினை விரைவாய்ச் செலுத்துமாறு பாகனிடம் கூறுவான். அவ்வாறே பாகனும் செலுத்தத் தலைவன் தன் இல்லமடைந்து தலைவியைக் கூடி மகிழ்ந்து இனிதே நல்வாழ்க்கை நடத்துவான். இனிய மக்கட்பேறும் வாய்க்க அவர்கள் இல்லறம் மேலும் சிறப்புறும். காதலர் அன்புடையராய், விருந்தோம்பி, நடுவுநிலைமை மேற்கொண்டு, ஒப்புரவறிந்து, ஈகை மேற்கொண்டு புகழ் வாழ்வு வாழ்வர்.

தலைவன் பொருள் தேடுவதற்காக மட்டுமன்றி, உயர்கல்வி கற்பதற்காகவும், அரசனுக்காகப் போர்மேற்செல்வதற்காகவும் பிரிந்து செல்வதுண்டு.

களவுக்காலத்தில் ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் எனத் தலைவன் பிரியும் நிலைகள் உண்டு.

கற்புக்காலத்தில் ஓதல், காவல், தூது, பொருள் தேடல், வேந்தற்கு உற்றுழி உதவல் முதலியன கருதித் தலைவியை விடுத்துப் பிரிதல் உண்டு.

தலைவன் பிரிந்திருக்கும் காலங்களில் தோழி தலைவியைத் தேற்றுவித்துத் துணை நிற்பாள்.

பரத்தையிற்பிரிவு

இல்லற வாழ்வில் தலைவனோடு தொடர்பு கொள்வதைத் தன் வாழ்க்கைநெறியாய்க் கொண்டிருப்பவள் மனைவி. அவ்வாறு அல்லாது ஆடவர் பலரோடு தொடர்பு கொள்ள விரும்பும் மகளிர் பரத்தையர் எனப்படுவர். இவர்கள் திருமணம் என்னும் வரையறைக்கு உட்பட்டவர் அல்லர். தம்மை நாடி வருபவர்க்கு இன்பமளிப்பதே இவர் தொழில். அதனால் இவரை, 'வரைவின் மகளிர்', 'பொருள்விலைப் பெண்டிர்' என்றும் கூறுவர்.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று, பரத்தையர் இல்லத்தில் தங்கி இன்பம் பெறுவதுண்டு.

தலைவன் தன்னைப் பிரிந்து பரத்தையிடம் சென்றதால் தலைவி வெகுண்டு ஊடியிருப்பாள். தலைவனது இல்வாழ்க்கையில் நிகழும் ஊடல் முதலியவற்றைப் போக்கும் வழிகளாய் இருப்பவர் 'வாயில்கள்' எனப்படுவர்.

பரத்தையிற்பிரிவுக்குப்பின் தன் இல்லத்திற்கு வரும் தலைவன், ஊடிய தலைவியை நேர்விக்கத் தோழியை வாயிலாக வேண்டுவான். வாயிலாக வந்தவர்க்கு முகங்கொடுக்க மறுத்தல் 'வாயில்' மறுத்தலாம். தோழியே தலைவனைக் கண்டித்து வாயில் மறுப்பாள். பாணன், விறலியர் முதலியோரையும் தலைவன் வாயிலாக அனுப்புவதுண்டு. தோழியும் தலைவியும் அவர்களைக் கடிந்து திருப்புவர்.

தலைவன் பல முறை பணிந்து வேண்டியதால், தோழி மனமிரங்கித் தலைவியிடம் உரையாடி, தலைவனை ஏற்று ஊடல் தணியுமாறு செய்து வாயில் நேர்விப்பாள்.

வாயிலை ஏற்று, தலைவனுக்கு இடங்கொடுத்து அவனைத் தலைவி சேர்த்துக்கொள்வாள். ஊடலும் கூடலுமாய் அவர்கள் வாழ்க்கை இன்பமாய் அமையும்.

வாழ்க்கை, காதல் ஒழுக்கத்தால் அமைவது. தமிழ் மக்களின் காதல் வாழ்க்கை களவு, கற்பு என இரு வகைப்படும். தலைவன், தலைவியைக் கண்டு காதல் கொண்டது முதல் அவளைத் திருமணம் செய்து கொள்ளும்வரை உள்ள பகுதி களவு எனப்படும். இது களவியல், களவு நெறி, களவொழுக்கம் என்றும் வழங்கப்பெறும்.

திருமணம் முடிந்த பின் தொடங்கும் இல்லற வாழ்க்கை, கற்பொழுக்கம் என்று வழங்கப்படும்.

நாகரிகத்தில் மேம்பட்டிருந்த பண்டைக் காலத்தில் தமிழர் மேற்கொண்டிருந்த இனிய இல்லற நெறிகளே களவும் கற்புமாகும்.

பரத்தையிற்பிரிவு – 1

தொகுதி 13

பக்கம் 1 முதல் 348 வரை

பரத்தையிற் பிரிவு

ஆடவர் பலரோடு தொடர்பு கொள்பவர் பரத்தையர். இவர்கள் திருமணம் என்னும் வரையறைக்கு உட்பட்டவர் அல்லர். இவர்களை வரைவின் மகளிர், பொருட்பெண்டிர் என்றும் கூறுவர்.

தலைவன், தலைவியைப் பிரிந்து சென்று, பரத்தையர் இல்லத்தில் தங்கியிருப்பது பரத்தையிற் பிரிவு எனப்படும்.

ஐந்திணைக் கற்பு நிலைக்கு இஃது ஏற்றதன்று. பின் ஏன் இதனைப் படைத்தனர்? ஊடல், காதல் இன்பத்தை மிகுவிக்கும். தலைவி ஊடல் கொள்வதற்குப் பரத்தையிற் பிரிவு ஒரு காரணமாய் அமைய இப்பிரிவு கற்பனை நிலையில் படைக்கப்பட்டதாய்ச் சொல் வாருமுண்டு.

ஊடலுக்குப் பரத்தையிற் பிரிவை ஒரு காரணமாய்த் திருவள்ளுவர் காட்டியதில்லை. ஆதலால் பரத்தையிற்பிரிவு கற்பனைப் படைப்பு என்பது ஏற்கத்தக்கதாயில்லை.

"அன்பிற் சிறந்த ஐந்திணைக்கண் பரத்தையிற்பிரிவு வருவது பொருந்துமா? அகத்தலைவன் தன் இன்பியைப் பிரிந்து இன்பங்கருதிப் பொருட் பெண்டிர்களை நாடி அலைகின்றான் என்பது இவ்விருவர் தலைமைக்கும் இழுக்காகாதா? இவ்வினாக்கள் தொன்று தொட்டுக் கேட்கப்படுபவை. அறிஞர்கள் காலந்தோறும் விடை காண முயன்ற முயற்சியை வரலாற்றால் அறிகின்றோம். இன்னும் முயற்சி வளர்ந்து வருகின்றது. உலகில் அகத்திணை என்னும் அன்பிலக்கியத்தைக் கண்ட நம் அறிவு மூதாதையர்களே பரத்தையிற் புணர்ச்சியையும் ஒருகூறாக இயைத்திருத்தலின், வேறென் செய்வது? தகும் என்று அமைதி கூறவே நம் மனம் விழைகின்றது. பெரும்புலவர் உ.வே.சா. அவர்கள் தம் குறுந்தொகைப் பதிப்பின் அரிய நூலாராய்ச்சியில், 'இப்பரத்தையிற்பிரிவு உலகியலையே கருதி அமைந்தது போலும்' என ஒருவகைத் தெளிவு செய்வர்"

என மூதறிஞர் வ.சுப. மாணிக்கம் 'தமிழ்க் காதல்' என்னும் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பரத்தையிற்பிரிந்த தலைவனைப் புலத்தல்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 51 **மூவாதியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் பரத்தையிற்பிரியத் தலைமகள் புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து பரத்தையர் வீட்டிற்குச் சென்றதால் தலைவி ஊடலுற்று மொழிந்தது.

பேதையர் என்று தமரைச் செறுபவோர்
போதுஉறழ் தாமரைக்கண் ஊரனை நேர்நோக்கி
வாய்மூடி யிட்டும் இருப்ப,ஏர் மாண்இழாய்!
நோவதென் மார்பறியும் இன்று.

தெளிவுரை

"*அரிய மாட்சிமைப்பட்ட அணிகலன்களை அணிந்துள்ள தோழியே! நம் தலைவனைக் காணாதபோது பரத்தையர் அவனை 'அறிவற்றவன்' எனப் பேசிச் சினங்கொள்வர்; ஒப்பற்ற தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும் நீர்நிலைகளைக் கொண்ட மருதநிலத்தூர்த் தலைவனை நேரில் காணும்போது வாய்மூடி அடங்கியிருப்பர். இவ்வாறு புறங்கூறுகின்ற பரத்தையரை நாடித் தலைவன் சென்றது எனக்கு மிகவும் துன்பம் தருகின்றது. அத் துன்பம் வாய்விட்டுக் கூறத்தக்கது அன்று. என் நெஞ்சமே அதனை அறியும்*" *என்று தலைவி, பரத்தையிற்பிரிந்த தலைவனிடம் வெறுப்புக்கொண்டு தோழியிடம் கூறினாள்.*

கருத்து

'புறம்பேசித் திரியும் பரத்தையரை நாடித் தலைவன் சென்றிருப்பது, எனக்கு மிகவும் துன்பத்தைத் தருகிறது' என்றாள், தலைவி.

சொற்பொருள்

1. பேதையர் - அறிவில்லாதவர்; தமரை - தலைவனை; செறுப - சினம் கொள்வர்; ஓர் - ஒப்பற்ற.
2. போது - மலர்; உறழ் - மிகுந்த; தாமரை - தாமரைகள் (கொண்ட); கண் - இடத்தினைக் கொண்ட.
3. மூடியிட்டு - அடங்கி; ஏர் - அழகு.
4. நோவது - (அவர்கள் பேச்சினை அறிந்து) வருந்துவது; என் மார்பு - என் நெஞ்சமே; அறியும் - அறிந்துகொள்ளும்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 50 **மூவாதியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் பரத்தையிற்பிரியத் தலைமகள் புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து பரத்தையர் வீட்டிற்குச் சென்றதால் தலைவி ஊடலுற்று மொழிந்தது.

ஒள்இதழ்த் தாமரைப் போதுறழும் ஊரனை
உள்ளம்கொண்(டு) உள்ளானென்(று) யார்க்குரைக்கோ – ஒள்ளிழாய்
அச்சுப் பணிமொழி உண்டேனோ மேல்நாள்ஓர்
பொய்ச்சூள் எனஅறியா தேன்.

தெளிவுரை

"ஒளி பொருந்திய அணிகலன்களை அணிந்துள்ள தோழியே! களவுப் புணர்ச்சிக் காலத்தில் தலைவன் சொன்ன உறுதி மொழிகள் அனைத்தும் வஞ்சக மொழிகள் என்று அப்பொழுது நான் அறியவில்லை. அறிந்திருந்தால் அவ்வுறுதிமொழிகளை எழுத்தில் எழுதிப் பெற்றிருப்பேன். (அவ்வாறு செய்யாமல்) இப்பொழுது நிறமிக்க தாமரை மலர்கள் மிகுதியாய்ப் பூத்திருக்கும் ஊருக்குத் தலைவன், 'என்னை முற்றிலுமாய்

நினைத்துப் பார்ப்பதேயில்லை' என்று எவரிடம் குறை சொல்வேன்'' என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

'தலைவன் சொன்ன உறுதிமொழிகளைப் பிறர் அறியார். அங்ஙனமாக அவன் இப்போது என்னை நினைப்பதில்லை என்று யாரிடம் குறை சொல்வது?'

குறிப்பு

அவன் உறுதிமொழிகளை எழுதிப் பெற்றிருந்தால் இப்போது அதனைப் பிறரிடம் காட்டி, அவன் நம்மை மறந்திருப்பதைக் குறை கூறலாம். எழுதிப் பெற்றுக்கொள்ளவில்லையே! இப்போது என்ன செய்வது?

'அச்சு உண்டேனோ' என்னும் தொடர்மூலம், அக்காலத்தில் எழுத்தில் எழுதப்படுவதை 'அச்சு' என்று சொல்லுவர் என அறிகிறோம்.

சொற்பொருள்

1. போது - மலர்; உறழும் - மிகுந்திருக்கும்.
2. உள்ளம் கொண்டு - உள்ளத்தில் கொண்டு; உள்ளான் - எண்ணுவதில்லை; உரைக்கோ - உரைப்பேன்.
3. மேனாள் - களவுப் புணர்ச்சிக் காலத்தில்; பணிமொழி - பணிவுடன் கூறிய உறுதிமொழிகளை; அச்சு உண்டேனோ - எழுத்தில் எழுதிப் பெற்றேனா? (இல்லையே).
4. பொய்ச்சூள் - (அன்று அவன் சொன்னது) பொய்யான உறுதிமொழி.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 44 **மூவாதியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்த தலைமகனைத் தலைமகள் புலந்து காய்ந்து கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து பரத்தையரிடம் சென்றதால் சினம் கொண்டு தலைவி கூறியது.

அகன்பணை ஊரனைத் தாமம் பிணித்த(து)
இகன்மை கருதி இருப்பன் – முகன்அமரா
ஏதில் மகளிரை நோவ தெவன்கொலோ
பேதைமை கண்டொழுகு வார்.

தெளிவுரை

"அகன்ற மருத நில ஊரனான என் தலைவனைப் பரத்தையர் தம் மாலைகளால் கட்டிப் பிணித்துக்கொண்டு போயினர். அதனால் அவர்களோடு மன வேறுபாடு கொண்டுள்ளேன். தவறு தலைவன் மேல் இருக்க, அறியாமை கொண்டவரும், முகம் அறியாதவரும், அயல் மகளிருமான பரத்தையரை நொந்து கொள்வதில் என்ன பயன்? (தலைவனையே நொந்து கொள்ள வேண்டும்)" எனப் பரத்தையிற்பிரிந்த தலைவன்மீது வெறுப் புற்றுத் தலைவி தனக்குத்தானே கூறிக்கொண்டாள்.

கருத்து

தவறு செய்தவன் தலைவன். அவ்வாறிருக்கப் பரத்தையரை நொந்து என்ன பயன்?

சொற்பொருள்

1. அகன் - அகன்ற; பணை - மருத நிலம்; தாமம் - மலர் மாலையி னாலே; பிணித்தது - (பரத்தையர்) கட்டிக்கொண்டு போனதால்.
2. இகன்மை - (அவருடன்) மாறுபாடு; இருப்பன் - இருக்கின்றேன்; முகன் அமரா - முகம் பார்க்கத் தகுதியற்ற.
4. பேதைமை - அறியாமை; கண்டொழுகுவார் - செய்து நடப்பவராகிய.
3. ஏதில் மகளிரை - அயல் மகளிராகிய பரத்தையரை; நோவது - நொந்து கொள்வது; எவன்? - எதற்கு?

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 137 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் புறத்தொழுக்கினைத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையருடன் ஒழுகி வருவதைத் தோழியிடம் தலைவி கூறியது.

(புறத்தொழுக்கம் - பரத்தையரொடு கூடி ஒழுகுதல்.)

கருங்கோட்டுச் செங்கண் எருமை கழனி
இருங்கோட்டு மென்கரும்பு சாடி – அருங்கோட்டால்
ஆம்பல் மயக்கி அணிவளை ஆர்ந்(து)அழகாத்
தாம்பல் அசையினவாய் தாழ்ந்து.

தெளிவுரை

"கருமையான கொம்பினையும் சிவந்த கண்களையும் கொண்ட எருமை, வயல்களில் விளைந்துள்ள மென்மையான கரும்பினை மோதிச் சாய்த்தது; அரிய கொம்புகளால் ஆம்பல் மலர்களைக் கலக்கியது; அழகிய குவளை மலர்களைத் தின்றது; வாயினைத் தாழ வைத்துப் பற்களால் மென்று அசையிட்டுப் படுத்துக் கிடக்கின்றது. அதுபோன்று தலைவன் புறத்தொழுக் கத்தில் வாழ்கின்றான்" எனத் தோழியிடம் தலைவி கூறினாள்.

கருத்து

தலைவனின் புறத்தொழுக்கினைத் தலைவி மருதநிலக் கருப்பொருள் களில் ஏற்றிக் கூறுகின்றாள்.

உள்ளுறை

எருமை, மென்கரும்பைச் சாய்த்து விலக்கியதுபோல் தலைவன் மென்மைமிகு தலைவியை விலக்கினான்; ஆம்பல் மலர்களை அகற்றிக் குவளை மலரை உண்டதுபோலத் தலைவனும்

தோழியரை அகற்றி, பரத்தையினைத் துய்த்து வாழ்கின்றான் என உள்ளுறையால் தலைவி, தன் நிலையை விளக்குகிறாள்.

சொற்பொருள்

1. கருங்கோடு - கரிய கொம்பு; செங்கண் - சிவந்த கண்; கழனி - வயல்.
2. இருங்கோட்டு - பெரிய கழிகளைக் கொண்ட; சாடி - சாய்த்து விலக்கி; கோடு - கொம்பு.
3. ஆம்பல் - ஆம்பல் மலர்; மயக்கி - கலக்கி; அணிவளை - அழகிய குவளை மலர்; ஆர்ந்து - தின்று.
4. பல் அசையினவாய் - பற்களால் மென்று அசையிட்டு; தாழ்ந்து - வாயினைத் தாழ வைத்து.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 147 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் புறத்தொழுக்கினைத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையுடன் கூடி ஒழுகும் புறத்தொழுக்கத்தைத் தலைவி தன் தோழியிடம் சொல்லியது.

செங்கண் கருங்கோட்(டு) எருமை சிறுகனையா
அம்கண் கழனிப் பழனம்பாய்ந்(து) – அம்கண்
குவளையம் பூவொடு செங்கயல்மீன் சூடித்
தவளையும்மேற் கொண்டு வரும்.

தெளிவுரை

“தோழியே! சிவந்த கண்களையும், கரிய கொம்புகளையும் கொண்ட எருமை, கனைத்துக்கொண்டே அழகிய வயல்களில் இறங்கியது; சேற்றினை உழப்பியது; அழகிய கண்களைப் போன்ற குவளை மலர்களையும், செந்நிறக் கயல்மீன்களையும்

கொம்புகளால் குத்தி எடுத்துச் சூடிக்கொண்டது; தவளை களையும் முதுகில் உட்கார வைத்துக்கொண்டு வருகிறது. இஃது என்ன வியப்பு" என்று தலைவி தோழியைப் பார்த்துச் சொன்னாள்.

கருத்து

தலைவன் பரத்தையரோடு சேர்தலை, மருதநிலக் கருப்பொருள்களில் ஏற்றி உள்ளுறை உவமமாய்த் தோழியிடம் தலைவி கூறுகின்றாள்.

உள்ளுறை உவமம்

எருமையாகிய தலைவன் கரும்பாகிய இனிய தலைவியை விலக்கி, குவளை, மீன், தவளை ஆகிய பரத்தையர்களைச் சார்ந்து வாழ்கிறான் என்பதாம்.

சொற்பொருள்

1. கோடு - கொம்பு; சிறுகனையா - சிறிய கனைப்புடன்.
2. அம்கண் - அழகிய இடம்; கழனி - வயல்; பழனம் - மருத நிலம்; பாய்ந்து - விரைந்து சென்று; அம்கண் - அழகிய கண்.
3. குவளை அம் பூ - அழகிய குவளை மலர்; செங்கயல்மீன் – செந்நிறக் கயல் மீன்.
4. மேற்கொண்டு - முதுகின்மேல் உட்கார்ந்திருக்கும்படி.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 148 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் புறத்தொழுக்கினைத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையுடன் கூடி ஒழுகும் புறத்தொழுக்கத்தைத் தலைவி, தோழியிடம் சொல்லியது.

இருள்நடந்த(து) அன்ன இருங்கோட்(டு) எருமை
மருள்நடந்த மாப்பழனம் மாந்திப் – பொருள்நடந்த
கல்பேருங் கோட்டால் கனைத்துத்தம் கன்(று)உள்ளி
நெல்போர்வு சூடி வரும்.

தெளிவுரை

"பெரிய கொம்புகளைக் கொண்ட எருமைகள் இருள் நடந்து செல்கிறது என்று கூறுமாறு வயலில் இறங்கின. கண்டார்க்கு மன மயக்கத்தைத் தோன்றுவிக்கும்படியான சிறந்த மருதநில விளைபொருள்களான குவளை முதலியவற்றை உண்டன. உறுதித்தன்மை நிறைந்த கல்லினைப் பெயர்த்தற்குரிய கொம்புகளைக் கொண்ட அவ்வெருமைகள் தம் கன்றினை நினைந்து கனைத்தனவாய் நெற்கதிர்களைப் போர் போல மிகுதியாய்த் தம் கொம்புகளின்மேல் கொண்டுவருகின்றன. இஃது என்ன வியப்பு" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

'பரத்தையரிடம் சென்ற தலைவன், தன் மகனை நினைந்து திரும்ப வந்தான்' என்பதைத் தலைவி உள்ளுறை உவமம் வாயிலாய்க் கூறுகிறாள்.

குறிப்பு

எருமை இருளில் நடந்து செல்வதுபோலத் தலைவன் இரவில் மறைந்து சென்று பரத்தையருடன் வாழ்கிறான்; குவளை போன்ற பரத்தையரைத் துய்க்கிறான் என்பது குறிப்பு.

உள்ளுறை உவமம்

எருமையாகிய தலைவன், குவளை போல மயக்கத்தைத் தரக் கூடிய பரத்தையரிடம் சென்றவன், தன் மகனை நினைந்தான்; நெற்கதிரைத் தம் கொம்புகளின் மேல் கொண்டு வந்த எருமையைப் போலத் தலைவனும் வீடு திரும்பினான்.

சொற்பொருள்

1. இரு - பெரிய; கோடு - கொம்பு.
2. மருள் நடந்த - கண்டார்க்கு மன மயக்கத்தைத் தரும்படியான; மா - சிறந்த; பழனம் - மருதநில விளைபொருள்கள் (குவளை முதலிய

வற்றை); மாந்தி - உண்டு; பொருள் நடந்த - உறுதித் தன்மை மிகுந்த.

3. கல்பேரும் - கல்லைப் பெயர்க்கும்; உள்ளி - நினைந்து.
4. நெல்போர்வு - நெற்கதிர்ப் போர்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 164 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனுக்குப் புறத்தொழுக்கம் உளதாகியவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தை ஒழுக்கத்தை மேற்கொண்டான். அப்போது தோழியிடம் தலைவி சொல்லியது.

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
இருங்கழி மருங்கின் அயிரை ஆரும்
தண்ணம் துறைவன் தகுதி
நம்மோடு அமையாது, அலர்பயந் தன்றே.

தெளிவுரை

பெரிய கடற்கரையில் சிறிதே வெண்ணிறத்தைக் கழுத்திலே கொண்ட காக்கை, பெரிய கழியிலிருந்து அயிரை மீன்களைப் பிடித்துண்ணும். அத்தகைய குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறைக்கு உரிய நம் தலைவனது ஒழுக்கம் நம்மோடு அமைந்தொழியாது புல்லிய பரத்தையிடமும் சென்று அலர் உண்டாக்கிற்று.

கருத்து

தலைவன் பரத்தையோடு ஒழுகலால் ஊர்ப்பழியும் ஏற்பட்டது.

உள்ளுறை

பெரிய கழியில் இருந்து சிறிய மீனைக் காக்கை உண்ணும் என்பதன்வழி, பெரிய மனையிலிருந்து இல்லறம் புரிய வேண்டிய

தலைவன், புல்லிய பரத்தையரோடு சேர்ந்து திரிவானாயினான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

2. இருங்கழி - கரிய உப்பங்கழி; மருங்கு - பக்கம்; அயிரை - அயிரை மீன்; ஆரும் - உண்ணும்.
3. தகுதி - தன்மை.
4. அலர் - பழிச்சொல்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 165 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனுக்குப் புறத்தொழுக்கம் உளதாகியவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தை ஒழுக்கத்தை மேற்கொண்டான். அப்போது தோழியிடம் தலைவி சொல்லியது.

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
அறுகழிச் சிறுமீன் ஆர மாந்தும்
துறைவன் சொல்லிய சொல்என்
நிறைஏர் எல்வளை கொண்டுநின் றதுவே!

தெளிவுரை

கழுத்தில் சிறிதே வெண்ணிறம் கொண்ட காக்கை, பெரிய கடற்கரையிலுள்ள நீரற்ற கழியில் உள்ள சிறிய மீன்களை மிகுதியாய் உண்ணும் துறையையுடையவன், நம் தலைவன். அவன் (முன்பு நம்மைத் தேற்றுவதற்காகச்) சொல்லிய சூளுரைச்சொல், என் முன்கையில் கிடந்த அழகிய ஒளிமிக்க வளையல்களைக் கவர்ந்து கொண்டது.

கருத்து

அவன் கூறிய சூளுரையை நம்பி நான் மடமை கொண்டவள் ஆனேன்.

குறிப்பு

அவன் செய்த சூளுரை, 'உன்னைப் பிரியேன்; பிரியின் உயிர் வாழேன்' என்பது. அச்சூளுரையைப் பொய்யாக்கி அவன் பிரிந்து சென்றுவிட்டதால் என் உடல் மெலிந்து கை வளைகள் கழன்று விழுந்துவிட்டன.

உள்ளுறை

சிறுவெண் காக்கை, பெரிய மீனைத் தேர்ந்துண்ணாது சிறுமீனை உண்ணும். இதன்வழி, தலைவன் பரத்தையருள்ளும் மிகவும் கீழானவர்களை விரும்பி நுகர்கிறான் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

2. அறு - நீரற்ற; ஆர - நிரம்ப; மாந்தும் - உண்ணும்.
3. துறைவன் - துறையையுடைய தலைவன்; சொல் - சூளுரை.
4. நிறை - மிகுந்த; ஏர் - அழகு; எல்வளை - ஒளி பொருந்திய வளையல்; கொண்டு நின்றது - கவர்ந்துகொண்டது.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 22 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

களவினிற்புணர்ந்து பின்பு வரைந்துகொண்டு ஒழுகாநின்ற தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாயிற்றாக ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் தலைவியோடு கூடிக் களித்த தலைவன், பின்னர் மணந்துகொண்டு இல்லற வாழ்க்கை வாழ்ந்துவந்தபோது அவனுக்குப்

பரத்தையோடு பழக்கம் உண்டாயிற்று. அதனை அறிந்த தலைவி ஆற்றாளாய்த் தோழியிடம் சொல்லியது.

அள்ளல் ஆடிய புள்ளிக் கள்வன்
முள்ளி வேர்அளைச் செல்லும் ஊரன்
நல்ல சொல்லி மணந்து,இனி
நீயேன் என்றது எவன்கொல்? அன்னாய்!

தெளிவுரை

தோழியே! புள்ளிகளைக் கொண்ட நண்டு சேற்றிலே அளைந்தாடி முள்ளிச்செடிகளின் வேர்களுக்கிடையிலே அமைந் துள்ள தன் வளையிலே சென்று தங்குதற்குரிய ஊரினை உடையவன், நம் தலைவன். அவன் களவுக் காலத்தில் நாம் மகிழுமாறு பல நல்ல மொழிகளைக் கூறி மணந்து கொண்டு, 'இனி உம்மை என்றும் பிரியேன்' என்று கூறிய உறுதிமொழி இப்பொழுது என்ன ஆயிற்று?

கருத்து

'தலைவன் தன் உறுதிமொழியை மறந்தது எதனால்?'

உள்ளுறை

தன்மீது சேறு படிந்ததைக் கருதாது நண்டு முள்ளி வேரில் உள்ள வளைக்குள் புகுதற்கு இடனான ஊரினைக் கொண்டவன் என்பதன்வழி, தான் மேற்கொண்ட பரத்தமை ஒழுக்கத்தால் தன்மீது ஊரார் கூறும் பழிக்கு நாணாமல் தலைவன் பரத்தை வீட்டுக்குள் புகுகின்றான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப் படுகிறது.

சொற்பொருள்

1. அள்ளல் - சேறு; புள்ளி - புள்ளிகளைக் கொண்ட; கள்வன் - நண்டு.
2. முள்ளி - நீர்முள்ளிச்செடி; அளை - வளை.
4. நீயேன் - விட்டு நீங்கேன்; எவன்? - என்ன ஆயிற்று?; அன்னாய் - தோழியே!

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 23 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

களவினிற்புணர்ந்து பின்பு வரைந்துகொண்டு ஒழுகாநின்ற தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாயிற்றாக ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் தலைவியோடு கூடிக் களித்த தலைவன், பின்னர் அவளை மணந்துகொண்டு இல்லற வாழ்க்கையை மேற்கொண்டிருந்த போது அவனுக்குப் பரத்தையோடு பழக்கம் உண்டாயிற்று. அதனை அறிந்த தலைவி ஆற்றாளாய்த் தோழியிடம் சொல்லியது.

முள்ளி வேர்அளைக் கள்வன் ஆட்டிப்
பூக்குற்று, எய்திய புனல்அணி ஊரன்
தேற்றம் செய்துநப் புணர்ந்து,இனித்
தாக்கணங்கு ஆவ(து) எவன்கொல்? அன்னாய்!

தெளிவுரை

தோழி! இளமகளிர் முள்ளிச்செடியின் வேர்களிடையே அமைந்த வளைகளில் வாழும் நண்டுகளை ஓட்டியும், பூக்களைப் பறித்து விளையாடியும் இன்பம் எய்துதற்கு இடனானதும், நீரால் அழகெய்தியதுமான ஊருக்குத் தலைவன், நம் காதலன். அவன் களவுக் காலத்தில் நாம் விரும்பும்வண்ணம் நல்லன பலவும் கூறித் தெளிவித்து நம்மைத் திருமணம் செய்துகொண்டான். இப்போது அதற்கு மாறாய் நம்மைத் தாக்கி வருத்தும் அணங்காய் மாறியது ஏனோ?

கருத்து

நன்மொழி கூறி நம்மோடு சேர்ந்தவன் இன்று நம்மை வருத்துமாறு பிரிந்தது ஏன்?

உள்ளுறை

இளமகளிர் நண்டினை ஓட்டியும், பூப்பறித்தும், நீராடியும் விளையாடி இன்பம் பெறுதற்கிடனான ஊரினைக் கொண்டவன் என்னும் உள்ளுறை மூலம், தலைவன் தன் மனைவி வருந்துமாறு பரத்தையர் உறவில் திளைத்து இன்பம் காண்பவன் என்னும் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. அளை - வளை; கள்வன் - நண்டு; ஆட்டி - ஓட்டி.
2. குற்றுதல் - பறித்தல்; எய்திய - இன்பமடைந்த.
3. தேற்றம் செய்து - தெளிவித்து; நப்புணர்ந்து - நம்மைக் கலந்து.
4. தாக்கு அணங்கு - தாக்கி வருத்தும் தெய்வம்; எவன்? - ஏனோ?

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 15 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

சேணிடைப் பிரிந்துவந்து உடன் உறைகின்ற தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாகின்றது என்று குறிப்பினாலுணர்ந்து, தலைமகள் வேறுபட்டாளாக, தோழி அதனை அறியாது, 'அவன் உடன் உறையவும் வேறுபடுகின்றது, என்னை?' என்றாட்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைவிட்டு நெடுநாள் பிரிந்து பரத்தையிடம் தங்கி மீண்டும் தலைவியிடம் வந்தான். அவன் மனம் பரத்தையிடமே செல்வதைக் குறிப்பால் அறிந்த தலைவி மனம் வேறுபட்டாள். தலைவனின் மனநிலை அறியாத தோழி, தலைவியை நோக்கி, 'தலைவன் உன்னுடன் உறையும் போதும் நீ ஏன் மனம் வேறுபட்டு ஊடல் கொள்கின்றாய்?' எனக் கேட்டாள். அவளுக்குத் தலைவி கூறியது.

மணல்ஆடு மலிர்நிறை விரும்பிய, ஒண்தழைப்
புனல்ஆடு மகளிர்க்குப் புணர்துணை உதவும்
வேழம் மூதூர் ஊரன்
ஊரன் ஆயினும், ஊரன்அல் லன்னே.

தெளிவுரை

தலைவன் பழமையான ஊரினை உடையவன். அவனூரில் மணலை அலைத்துச் செல்லும் நீர்ப்பெருக்கிலே மகளிர் தமக்கு விருப்பமான ஒள்ளிய தழையாடைகளை உடுத்துக்கொண்டு நீராடுவர். அம்மகளிர்க்குக் கை கொடுத்துதவும் தெப்பமாய் வேழக்கரும்பு இருக்கும். அவ்வேழக்கரும்புகள் நிறைந்த ஊரினை உடையவன் நம்மோடிருக்கிறான் என்றாலும், புறம்போன நெஞ்சத்தால் அவன் நம்மோடு இல்லாதவனாய் இருக்கின்றான்.

கருத்து

'உடலால் மட்டுமே அவன் இங்குள்ளான்; உள்ளத்தால் அன்று.'

உள்ளுறை

வேழக்கரும்பு மகளிர்க்குத் தெப்பமாய்ப் பயன்படுவது போல, தலைவன் பரத்தையர்க்கு வேண்டியதைக் கொடுக்கிறான் என்பது உள்ளுறைப் பொருளாகும்.

சொற்பொருள்

1. மணல் ஆடு - மணலை அலைத்துச் செல்லும்; மலிர்நிறை - நீர் வெள்ளம்.
2. மகளிர்க்கு - பரத்தையர்க்கு.
3. வேழம் - வேழக்கரும்பு.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 129 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் பரத்தையிற்பிரியத் தலைமகள் புலந்து தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தை இல்லம் சென்றான். அவனோடு பிணக்குக் கொண்டு தலைவி தோழியிடம் கூறியது.

வாடாத தாமரைமேல் செந்நெற் கதிர்வணக்கம்
ஆடா அரங்கினுள் ஆடுவாள் – ஈடாய
புல்லகம் ஏய்க்கும் புகழ்வயல் ஊரன்தன்
நல்லகம் சேராமை நன்று.

தெளிவுரை

“அன்றலர்ந்த தாமரை மலர்மேல் செந்நெற்கதிர்கள் வளைந்து சாய்ந்து கிடக்கும் நலமிக்க மருதநிலத்தூருக்கு உரியவன், நம் தலைவன். ஆடும் அரங்கினுள் ஆடும் பழக்கம் கொண்ட பரத்தை, ஆடுதலில்லாத புனலில் அவனுடன் குதித்து ஆடு கின்றாள். பலரும் தழுவுதற்குரிய பரத்தை மார்பைத் தழுவும் பழக்கமுள்ள தலைவன் மார்பினைத் தழுவாதிருத்தலே நல்லது” என்று, தலைவனைப் பிரிந்த தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

‘அரங்கில் ஆடுகின்ற பரத்தையுடன் நீரில் ஆடுகின்ற தலைவன் மார்பைத் தழுவாதிருத்தலே நன்று.’

சொற்பொருள்

1. கதிர் - நெற்குலை; வணக்கம் - வளைந்து கிடக்கும்.
2. ஆடா அரங்கினுள் - கூத்தியர் ஆடுதலில்லாத அரங்காகிய ஆற்று நீரினுள்; ஆடுவாள் - பாய்ந்தாடுபவளாகிய (பரத்தையினது); ஈடுஆய - சிறந்த.

3. புல் அகம் - பலரும் தழுவுதற்குரிய மார்பினை; ஏய்க்கும் - தழுவும்; புகழ் - நலமிக்க; வயலூரன் - மருதநிலத் தலைவன்.
4. நல்அகம் - நல்ல மார்பினை; சேராமை - தழுவாமை; நன்று - நல்லது.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 128 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் பரத்தையிற்பிரியத் தலைமகள் புலந்து தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தை இல்லம் சென்றான். அவனோடு பிணக்குக் கொண்டு தலைவி தோழியிடம் கூறியது.

செந்தா மரைப்பூ உறநிமிர்ந்த செந்நெல்லின்
பைந்தார்ப் புனல்வாய்ப்பாய்ந்(து) ஆடுவாள் – அம்தார்
வயந்தகம்போல் தோன்றும் வயலூரன் கேண்மை
நயந்தகன்(று) ஆற்றாமை நன்று.

தெளிவுரை

“செந்தாமரை மலருடன் ஒன்றாய்ச் சேர்ந்து வளர்ந்து நிற்கின்ற செந்நெற்பயிரின் பசுமையான கதிர்க்குலைகள் விளங்கும் மருத நில ஊரினை உடையவன், தலைவன். அவன், ஆற்றுநீரில் குதித்து விளையாடும் பரத்தையின் அழகிய மார்பிலே கிடந்தசையும் மாலையில் சிக்குண்டான். அப் பரத்தையின் மனம்போல நடக்கும் தலைவனின் நட்பினை நீக்கி, துன்பத்துடன் வாழ்தலே நன்று” என்று தலைவி, பரத்தையிற் பிரிந்த தலைவனிடம் ஊடல் கொண்டு தோழியிடம் கூறினாள்.

கருத்து

‘பரத்தையை நாடிய தலைவனுடன் சேர்ந்து வாழ்வதைவிட, அவனைப் பிரிந்து வாழ்தலே நல்லது.’

சொற்பொருள்

1. உற - ஒன்றாய்; நிமிர்ந்த - வளர்ந்து நிற்கின்ற.
2. பைந்தார் - பசுமையான கதிர்க்குலைகள் விளங்கும்; புனல்வாய் - நீரிடத்தே; பாய்ந்தாடுவாள் - குதித்து விளையாடும் (பரத்தை யினது); அம்தார் - அழகிய மலர்மாலை.
3. வயந்தகம் போல் - (வயந்து + அகம் + போல்); வயந்து - அகப்பட்டு; அகம் போல் - அவள் மனம் போல; தோன்றும் - வெளிப்பட நடக்கும்; வயலூரன் - மருத நிலமுடைய தலைவன்; கேண்மை - நட்பு.
4. நயந்தகன்று - (நயந்து+அகன்று); நயந்து - விரும்புவதிலிருந்து; அகன்று - விலகி; ஆற்றாமை - துன்புற்று வாழ்தல்; நன்று - நல்லது.

தலைவி கூற்று

ஐங்குறுநாறு 170 — **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாயவழி வேறுபட்ட தலைமகள், 'அவற்கு அவ்வாறு நிகழ்ச்சியில்லை; நம்மேல் அன்புடையன்' என்று தெளிக்கும் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையரோடு பழக்கம் கொண்டவன் என்பதை அறிந்த தலைவி, மனம் வேறுபட்டாள். 'அவன் அத்தகைய பழக்கம் கொண்டவன் அல்லன்; நம்மேல் அன்பு கொண்டவன்' என்றாள், தோழி. அவளிடம் தலைவி சொல்லியது.

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
இருங்கழி நெய்தல் சிதைக்கும் துறைவன்
'நல்லன்' என்றி ஆயின்;
பல்இதழ் உண்கண் பசத்தல்மற்று எவனோ?

தெளிவுரை

சிறிதே வெண்ணிறம் கொண்ட காக்கை பெரிய கடற்கரையில் வாழும். அது கழியில் மலர்ந்துள்ள நெய்தல் மலர்களைச் சிதைக்கும்; அத்தகைய துறையினையுடைய தலைவனை நீ நல்லவன் என்கிறாய்! அவ்வாறானால், பல இதழ்களைக் கொண்ட பூப்போலும் மையுண்ட என் கண்களில் பசலை பாய்வதற்கு என்ன காரணம்?

கருத்து

அவன் பல நாள் நம் மனைக்கு வாராதிருப்பதற்குக் காரணம் என்ன?

குறிப்பு

அவன் நல்லவன் என்றால் என் கண் பசப்புறுவதேன்? அவன் நல்லவன் அல்லன் என்பதை அறிக.

தலைவன் நல்லவனாயிருப்பின் பரத்தமை மேற்கொள்ளான். அங்ஙனம் மேற்கொண்டமையால் பிரிவாற்றாத் துயரால் தலைவியின் உடல் மெலிந்து கண்களில் பசலை பாய்ந்தது.

உள்ளுறை

நெய்தலைக் காக்கை மிதித்துச் சிதைக்கும் துறைவன் என்னும் தொடர், பரத்தையர் பலரது நலன்களையும் நுகர்ந்து அவர் நலனைச் சிதைப்பவன் என்னும் உள்ளுறைப் பொருளைத் தருகிறது.

சொற்பொருள்

2. நெய்தல் - நெய்தல் மலர்; சிதைக்கும் - அழிக்கும்.
3. என்றி - என்று சொல்கிறாய்; ஆயின் - அவ்வாறானால்.
4. பல் இதழ் - பல இதழ்கள்; உண்கண் - மையுண்ட கண்; பசத்தல் - பசப்படைதல்; எவன்? - எதனால்?

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 17 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் பரத்தையிற்பிரிந்தவழி, 'இவ்வாறு ஒழுகுதலும் ஆடவர்க்கு இயல்பன்றே; நீ இதற்கு நெஞ்சழிகின்றது என்னை?' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைப் பிரிந்து பரத்தை வீட்டிற்குச் சென்றான். 'இவ்வாறு நடப்பது ஆடவர் இயல்புதானே! இதற்கு ஏன் வருந்துகின்றாய்?' என்று வினவினாள், தோழி. அவளுக்குத் தலைவி மறுமொழி கூறியது.

புதல்மிசை நுடங்கும் வேழ வெண்பூ
விசும்புஆடு குருகில் தோன்றும் ஊரன்
புதுவோர் மேவலன் ஆகலின்,
வறிது ஆகின்றுஎன் மடம்கெழு நெஞ்சே.

தெளிவுரை

புதரின் மேலே அசைகின்ற வேழக்கரும்பின் வெண்மையான பூக்கள், கருமையான வானத்தின்மீது பறக்கும் வெள்ளைக் கொக்குகள் போலத் தோன்றுகின்ற ஊரினை உடையவன், தலைவன். அவன் நாள்தோறும் புதுப் புதுப் பரத்தையரை விரும்பும் இயல்புள்ளவன் என்பதை அறியாது, மடமைமிக்க என் நெஞ்சம் அவனை நினைந்து மெலிகின்றது.

கருத்து

அவன் மனம் மாறியவன்போலத் தோன்றினாலும் முற்றிலும் பரத்தமையைக் கைவிட்டுத் திருந்தியவன் அல்லன்.

உள்ளுறை

நீராடும் மகளிர்க்குத் தெப்பமாய் வேழம் பயன்படுவது போலத் தலைவன் பரத்தையர்க்கு வேண்டியதைச் செய்து உதவுகிறான் என்பதாம்.

புதரின் மேலிருந்து அசையும் கொறுக்கச்சியின் வெண்பூ வானத்தில் பறக்கும் கொக்கினைப் போலக் காணப்படுகிறது. இத்தொடர்மூலம், பரத்தையர் சேரியிலிருக்கும் புதியராகிய பரத்தையர், சிறந்த தலைவி போல, காமவயப்பட்ட தலைவனுக்குத் தோற்றம் அளிக்கின்றனர் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப் படுகிறது.

சொற்பொருள்

1. புதல் - புதர்; மிசை - மேலே; நுடங்கும் - அசையும்.
2. விசும்பு - வானம்; ஆடும் - பறக்கும்; குருகில் - கொக்கைப் போல.
3. புதுவோர் - புதுப்புதுப் பரத்தையர்; மேவலன் - விருப்பம் கொண்டவன்.
4. வறிது ஆகின்று - மெலிந்துவிடுகின்றது; மடம்கெழு - அறியாமை நிறைந்த.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 57 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாயிற்று என்பது கேட்ட தோழி அவனை வினாயது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையரோடு தொடர்பு கொண்டுள்ளான் என்று கேள்வி யுற்ற தோழி அவனிடமே அதுபற்றிக் கேட்டது.

பகலில் தோன்றும் பல்கதிர்த் தீயின்
ஆம்பலஞ் செறுவின் தேனூர் அன்ன
இவள்நலம் புலம்பப் பிரிய
அனைநலம் உடையளோ மகிழ்நநின் பெண்டே.

தெளிவுரை

பகல் போதினைச் செய்யும் ஞாயிற்றைப் போலப் பல சுடர்களைக் கொண்ட வேள்வித் தீயினையும் ஆம்பல் நிறைந்த

வயல்களையுமுடையது, தேனூர் என்னும் ஊர். அவ்வூர் போன்ற இவளது பெண்மை நலம் கெட்டொழியுமாறு நீ இவளைப் பிரிந்தாய். மகிழ்நனே! அப்படிப் பிரிதற்கு உன்னால் விரும்பப் பட்ட அப்பரத்தை அத்துணைப் பேரழகு வாய்ந்தவளோ? கூறுக.

கருத்து

தலைவியினும் பரத்தை பேரழகியோ?

சொற்பொருள்

1. பகலில் - ஞாயிற்றைப் போல; பல்கதிர் - பல கதிர்களைக் கொண்ட; தீ - நெருப்பு.
2. ஆம்பல் - செவ்வல்லி; செறு - வயல்; தேனூர் - ஓர் ஊர்.
3. நலம் - அழகு; புலம்ப - வருந்த.
4. அனைநலம் - அவ்வளவு அழகு; மகிழ்நன் - தலைவன்; பெண்டு - பரத்தை.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 59 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் ஆற்றாளாம்வண்ணம் மனைக்கண் வரவு சுருங்கிய தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாயவழி ஆற்றாளாகிய தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் வீட்டிற்கு வருவது குறைந்தது; தலைவி பொறுத்துக் கொள்ள இயலாதபடி பெரும்பாலும் பரத்தையர் வீட்டிலேயே தங்கினான். தலைவியின் வருத்தம் கண்டு தோழி மனம் நொந்து தலைவனிடம் கூறியது.

கேட்டிசின் வாழியோ, மகிழ்ந! ஆற்றுற,
மையல் நெஞ்சிற்கு எவ்வம் தீர
நினக்குமருந்து ஆகிய யான்இனி,
இவட்குமருந்து அன்மை நோம்என் நெஞ்சே.

தெளிவுரை

மகிழ்நனே! நான் கூறுவதைச் செவி கொடுத்துக் கேள். நீ நெடுங்காலம் வாழ்க! களவுக் காலத்தில் தலைவியோடு கூடுதற்கு இயலாது நீ வருந்தியபோது, உனக்கு ஆறுதல் உண்டாகுமாறு உன் துயர் தீர்க்கும் மருந்தாய் நான் விளங்கினேன். இன்றோ இவள் உன்னாலுற்ற நோய்க்கு மருந்தாகித் தீர்க்க இயலாதவளாய்விட்டேன். இதனால், என் நெஞ்சு மிகவும் வருந்துகின்றது.

கருத்து

எனக்காகவாவது உன் குறையைத் திருத்திக்கொள்ளலாகாதா?

விளக்கம்

முன்பு களவுக் காலத்தில் தலைவி உன்னோடு கூடி மகிழ்ச்சி தர என் சொல் பயன்பட்டது. இன்று நீயோ அவளை ஒதுக்கியதுடன் நான் கூறுவதையும் கேட்பதாய் இல்லை என்று தோழி குறைப்பட்டுக்கொள்கிறாள்.

முன்பு உன் துயர் போக்க நான் மருந்தாய் இருந்தேன். இன்றோ அவள் துயர் போக்க நான் மருந்தாய் இருக்க இயலவில்லை.

சொற்பொருள்

1. கேட்டிசின் - கேள்; மகிழ்ந - தலைவ; ஆற்றுற - ஆறுதல் அடைய.
2. மையல் - மயக்கம்; எவ்வம் - துன்பம்; தீர - நீங்க.
3. நினக்கு - உனக்கு.
4. இவட்கு - தலைவிக்கு; அன்மை - அல்லாமையால்; நோம் - வருந்தும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 56 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

புறத்தொழுக்கம் உளதாகியதறிந்து தலைமகள் மெலிந்துழி, 'அஃதில்லை' என்று தேற்றும் தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையோடு உறவு கொண்டிருப்பதை அறிந்து தலைவி மெலிந்தாள். அதனை இல்லையென்று மறுத்துத் தேறுதல் கூறினான், தலைவன். அவனிடம் தோழி கூறியது.

பகல்கொள் விளக்கோடு இராநாள் அறியா,
வெல்போர்ச் சோழர், ஆமூர் அன்னஇவள்
நலம்பெறு சுடர்நுதல் தேம்ப,
எவன்பயன் செய்யும்நீ தேற்றிய மொழியே?

தெளிவுரை

பகலைப் போல ஒளிவீசும் பாண்டில் விளக்குகளால் இரவின் இருள் தெரியாது ஒளியோடு விளங்குவது, ஆமூர். அது, வெல்லு கின்ற போராற்றல் மிக்க சோழர்களுக்குரியது. அவ்வாமூர் போன்று ஒளி கொண்ட இவளது அழகுநலம் பெற்ற நெற்றி பசலையால் தன் ஒளி கெட்டது. அவளைத் தேற்றும் பொருட் டாய் நீ சொல்லும் வாய்மையற்ற சொற்கள், இப்போது என்ன பயனைத் தரும்?

கருத்து

பொய்யான தேறுதல் உரைகளால் பயனேதும் இல்லை.

குறிப்பு

இரவில் இருள் இருந்தும் விளக்குகள் தம் ஒளியால் இருளை மறைப்பது போல, தலைவன் தன்னிடத்தில் பரத்தமை ஒழுக்கம் இருந்தும், தன் பொய்யான தேறுதல் சொற்களால் அதனை மறைக்கிறான் என்பது குறிப்பு

சொற்பொருள்

1. பகல் - ஒளி; விளக்கோடு - விளக்கால்; இராநாள் - இரவு.

2. ஆமூர் - சோழர்களின் நகரம்.
3. நலம் - அழகு; சுடர் - ஒளி; தேம்ப - அழகு கெட.
4. தேற்றிய - தேறுதல் சொல்லிய; மொழி - சொற்கள்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 240 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதானமை அறிந்து, தலைமகள் புலந்தவழி, அவன் அதனை 'இல்லை' என்று மறைத்தானாகத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனுக்குப் பரத்தையரோடு உறவு உள்ளதென அறிந்த தலைவி வருந்தி ஊடிய பொழுது, தலைவன் அதனை மறுத்தான். அவனிடம் தோழி சொல்லியது.

அறியேம் அல்லேம்; அறிந்தனம் மாதோ!
பொறிவரிச் சிறைய வண்டினம் மொய்ப்பச்
சாந்தம் நாறும் நறியோள்
கூந்தல் நாறும்நின் மார்பே தெய்யோ!

தெளிவுரை

பெரும! நீ புறப்பெண்டிரோடு கொண்டுள்ள உறவை யாம் அறியாதவர் அல்லர்; அதனை யாம் தெளிவாகவே அறிந்துள் ளோம். எங்ஙனம் எனில், பொறிகளும் வரிகளும் கொண்ட சிறகுகளைப் பெற்றிருக்கும் வண்டினம் மொய்க்கும் நறுமணம் கொண்ட பரத்தையின் கூந்தல்மணம் உன் மார்பிலும் கமழ் கின்றது.

கருத்து

உன் பரத்தமையை யாம் நன்கறிந்துள்ளோம்; ஆதலால், பொய் கூறி நீ எம்மை ஏமாற்ற வேண்டா.

குறிப்பு

'வண்டுகள் மொய்க்கச் சந்தனம் கமழும் மணம் கொண்டவள்' என்று பரத்தையைக் கூறுவதன்மூலம், ஆடவராகிய வண்டினம் சூழ்ந்துவரப் பாணரும் பிறரும் புகழ்ந்து பாடும் நலத்தினைப் பெற்றவள் எனத் தோழி அவளைப் புகழ்ந்து கூறுவதுபோலப் பழித்துரைக்கிறாள்.

சொற்பொருள்

1. அறியேம் அல்லேம் - அறியாதவர் அல்லர்; அறிந்தனம் - அறிவோம்.
2. பொறி - புள்ளி; வரி - கோடு; சிறை - இறகு.
3. சாந்தம் - சந்தனம்; நாறும் - மணக்கும்; நறியோள் - நறிய மணம் கொண்ட பரத்தை.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 27 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் மனைக்கண் வருங்காலத்து வாராது தாழ்த்துழி, 'புறத்தொழுக்கம் உளதாயிற்று' எனக் கருதி வருந்தும் தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் மனைக்குக் குறித்த நேரத்தில் வாராது காலம் தாழ்த்தி வந்துகொண்டிருந்தான். அதனால் தலைவன், 'பரத்தையரோடு பழக்கம் கொண்டுள்ளான்' என்று கருதித் தலைவி வருந்தினாள். அப்போது, அவள் கருதியது தவறென்று கூறித் தோழி, தலைவன் பிழை புரியாதவன் எனத் தெளிவித்துக் கூறியது.

செந்நெல்அம் செறுவில் கதிர்கொண்டு கள்வன்
தண்ணக மண்அளைச் செல்லும் ஊரற்கு
எல்வளை நெகிழச் சாஅய்,
அல்லல் உழப்பது எவன்கொல்? அன்னாய்!

தெளிவுரை

தலைவியே! நன்கு செந்நெல் விளைந்துள்ள அழகிய வயலிடத்தே நண்டு சென்று, முற்றிய கதிரைக் கொய்துகொண்டு குளிர்ச்சி பொருந்திய உள்ளிடத்தைக் கொண்ட தன் மண் வளைக்குள் புகும் ஊரினையுடையவன், நம் தலைவன். அவன் பொருட்டாக, ஒளி பொருந்திய வளை கழலும்படி உடல் மெலிவுற வருந்துவது எதற்கு? (வருந்தாதே).

கருத்து

அவனைக் குறித்துப் பிழைபடக் கருதிக் கவலை கொள்ளாதே!

உள்ளுறை

நண்டு செந்நெற்கதிரைக் கொண்டு சென்று தன் வளைக்குள் புகும் காட்சி கொண்ட ஊரைக் கொண்டவன் என்னும் தொடர், தலைவன் நாள்தோறும் இல்லத்திற்கு வேண்டிய பொருளை ஈட்டி வருதல் காரணமாய்க் காலந்தாழ்த்து வருகின்றானே அன்றி, அவன் பிழையேதும் புரியாதவன் என்னும் உள்ளுறைப் பொருளைத் தருகிறது.

எனவே, நீ அதுபற்றி வருந்த வேண்டா எனத் தோழி ஆற்று வித்தாள்.

சொற்பொருள்

1. செறு - வயல்; கள்வன் - நண்டு.
2. தண் - குளிர்ந்த; அகம் - தன் வீடு (ஆகிய); அளை - வளை.
3. நெகிழ - கழலும்படி; சாஅய் - மெலிந்து.
4. அல்லல் - துன்பம்; உழப்பது - வருந்துவது; எவன்? - ஏன்?

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 19 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

'பன்னாள் அவன் சேணிடைப் பிரியவும் ஆற்றியுளையாகிய நீ, சின்னாள் அவன் புறத்தொழுகுகின்ற இதற்கு ஆற்றாயாகின்றது என்னை?' என்ற தோழிக்கு, 'எதிர்ப்பாடின்றி ஓரூர்க்கண்ணே உறைகையினாலே ஆற்றேனாகின்றேன்' எனத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

'முன்னர் அவன் வெளிநாடுகளுக்குச் சென்றபோது நெடுங்காலம் அவன் பிரிவைப் பொறுத்திருந்தாய். இப்போது நேரும் சிறு பிரிவினைப் பொறுத்துக் கொள்ளாதது ஏன்?' என்று கேட்கிறாள், தோழி. அதற்குத் தலைவி, 'ஒரே ஊரில் இருந்துகொண்டு என்னைப் பாராமல், தலைவன் பரத்தையோடிருக்கும் கொடுமையைப் பொறுத்துக் கொள்ள இயல வில்லையே' என்று தோழியிடம் கூறியது.

எக்கர் மாஅத்துப் புதுப்பூம் பெருஞ்சினை,
புணர்ந்தோர் மெய்ம்மணம் கமழும் தண்பொழில்,
வேழ வெண்பூ வெள்உளை சீக்கும்
ஊரன் ஆகலின் கலங்கி,
மாரி மலரின் கண்பனி உகுமே.

தெளிவுரை

மணல்திட்டிலே உள்ள புதிய மலரைக் கொண்ட மாமரத்தின் பெரிய கிளை, மணம் புரிந்து காதலரோடு இன்பம் துய்த்த மங்கையின் உடல்மணம் போன்று மணக்கும். அத்தகைய குளிர்ச்சி பொருந்திய பொழிலில் வேழ வெண்பூவின் பஞ்சு போன்ற இதழ், மாம் பூக்களைத் தீண்டி மரத்தைவிட்டு உதிரச் செய்யும் காட்சிக்குரிய ஊரினையுடையவன், தலைவன்; ஆகையால், என் கண்கள் கலங்கி, மாரிக்காலத்தே மழையிற் பட்ட மலர் போன்று நீர் சொரிகின்றன.

கருத்து

என் இனிய இல்லற வாழ்வினைத் தலைவனின் புறவொழுக்கம் சிதைக்கிறது.

உள்ளுறை

வேழத்தின் மணமற்ற பூவிதழ் மாம்பூவினை உதிர்த்து அதன் இனிய மணத்தைக் கெடுக்கும். இத்தொடர் தலைவியின் இனிய இல்லற வாழ்வினைத் தலைவனின் புறத்தொழுக்கம் சிதைக்கிறது என்னும் உள்ளுறைப் பொருளை வெளிப்படுத்துகிறது.

சொற்பொருள்

1. எக்கர் - மணல்மேடு; மா - மாமரம்; சினை - கிளை.
2. புணர்ந்தோர் - காதலருடன் கூடியவர்; மெய்ம் மணம் - உடல் மணம்; கமழும் - மணக்கும்.
3. வெள் உளை - வெண்மையான பஞ்சு போன்ற துய் (இதழ்); சீக்கும் - உதிர்க்கும்.
4. மாரி - மழைக்காலம்; பனி - நீர்; உகும் - சொரியும்.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 54 **மூவாதியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையர்பாற்சென்று வந்த தலைமகனைத் தோழி வணங்கிய மொழியால் இணங்குவித்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிடம் சென்று திரும்பிய தலைவனிடம், தோழி தன் வணக்கமான சொற்களால் அவனை இணங்கச்செய்தது.

உண்துறைப் பொய்கை வராஅல் இனம்இரியும்
தண்துறை ஊர! தகுவதோ – ஒண்டொடியைப்
பாராய் மனைதுறந்(து) அச்சேரிச் செல்வதனை
ஊராண்மை ஆக்கிக் கொளல்.

தெளிவுரை

வரால் மீன்கள் திரியும் நீர்நிலை மிகுந்த ஊருக்கு உரியவனே! ஒளிரும் வளையல்கள் அணிந்த தலைவியிடம் அன்பு

கொள்ளாமல், அவளைப் பிரிந்து பரத்தையர் சேரிக்குச் செல்வதை ஆண்மைமிக்க செயலாய்க் கொள்ளுதல் தக்கது அன்று.

கருத்து

தலைவ! தலைவியை விடுத்துப் பரத்தையரிடம் செல்வது தக்கதா?

விளக்கம்

தலைவ! பெருந்தன்மை மிக்கவன் நீ! அதனை எண்ணிப் பாராது பரத்தையர் சேரிக்குச் செல்லும் இழிவான செயலைச் செய்யலாமா? என்று தோழி தலைவனிடம் வினவினாள்.

சொற்பொருள்

1. உண்துறை - நீருண்ணும் துறை; வரால் - வரால் மீன்; இரியும் - திரியும்.
2. தண் - குளிர்ந்து; தகுவதோ - தகுதியுள்ளதுதானா?; ஒண் தொடி - ஒளி வீசும் வளையல்.
3. பாராய் - எண்ணிப்பாராதவனாய்; மனை - வீடு; துறந்து - நீங்கி; அச்சேரி - அப்பரத்தையர் சேரி.
4. ஊர்ஆண்மை - பெரிய செயலாய்; ஆக்கிக் கொளல் - ஏற்படுத்திக் கொள்வது.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 44 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையர் மனைக்கண் பன்னாள் தங்கித் தன் மனைக்கண்ணே வந்த தலைமகற்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையர் வீட்டில் பல நாள் தங்கிவிட்டுத் தன் மனைக்கு வந்தபோது தலைவனை நோக்கித் தோழி கூறியது.

தீம்பெரும் பொய்கை யாமை இளம்பார்ப்புத்
தாய்முகம் நோக்கி வளர்ந்திசி னாஅங்கு,
அதுவே ஐயநின் மார்பே;
அறிந்தனை ஒழுகுமதி; அறனுமார் அதுவே.

தெளிவுரை

தலைவனே! இனிய பெரிய பொய்கையில் வாழும் ஆமையின் இளம் பார்ப்புகள் (தம் தாய் தம்மைப் பாதுகாக்காவிட்டாலும் அவை, அத்) தாயின் முகம் நோக்கியே வளர்கின்றன. அதுபோல (நீ அளிக்காவிடினும்) தலைவி, உன் மார்பினையே நோக்கி வாழும் இயல்பு வாய்ந்தவள். அதனை அறிந்து நீ நடந்துகொள்! உனக்குரிய அறமும் அதுவே!

கருத்து

நீ அறத்தையும் மறந்தாய், அன்பினையும் மறந்தாய்!

குறிப்பு

ஆமை, நீர்நிலையைவிட்டு, அண்மையில் உள்ள நிலப்பகுதிக்கு வந்து, குழி தோண்டி, முட்டையிட்டுக் குழியை மூடிவிட்டு நீர்நிலைக்குச் சென்றுவிடும். முட்டை பொரிக்கப்படும்வரை அது வேறு துணையின்றிக் கிடக்கும். பொரிக்கப்பட்டுக் குஞ்சு வெளிவந்ததும், அதன் கண் திறக்கப் படாதிருந்தாலும், வாயினால் மணலைக் கறித்துக்கொண்டே தன் தாய் இருக்கும் திசையை எவ்வாறோ அறிந்து, அத்திசை நோக்கித் தவழ்ந்து சென்று சேரும்.

(குஞ்சு வெளிப்பட்டதனை நீரிலிருந்தே தாய் பார்க்கும். தாயின் முகத்தைக் கரையிலிருந்து கண்டுகொண்டே குஞ்சு வளரும்).

சொற்பொருள்

1. தீம் - இனிய; பெரும் - பெரிய; பொய்கை - குளம்; யாமை - ஆமை; பார்ப்பு - குஞ்சு.
2. வளர்ந்திசினாஅங்கு - வளர்ந்தாற்போல.
3. ஐய - தலைவ!; நின் மார்பு அதுவே - தலைவிக்கு உன் மார்பு அத்தகையதே!
4. அறனும் அதுவே - அதுவே அறம்; அறிந்தனை - இதனை அறிந்து; ஒழுகு - நடந்துகொள்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 45 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

நெடுநாள் பரத்தையிடத்தானாய் ஒழுகிய தலைமகன் மனைவயிற் சென்றுழித் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் நெடுநாள் பரத்தையரோடு வாழ்ந்தான். பிறகு தன் வீட்டிற்கு வந்தான். அப்போது அவனை நோக்கித் தோழி கூறியது.

கூதிர் ஆயின் தண்கலிழ் தந்து,
வேனில் ஆயின் மணிநிறம் கொள்ளும்
யாறுஅணிந் தன்றுநின் ஊரே;
பசப்புஅணிந் தனவால் மகிழ்ந!என் கண்ணே.

தெளிவுரை

தலைவனே! உன் ஊரில் உள்ள ஆறு, வாடைக்காலத்தில் நீர் பெருகிக் குளிர்ச்சி பெற்றுக் கலங்கியும், கோடைக்காலத்தில் நீர் தெளிவடைந்து நீலமணி போன்று நிறங்கொண்டும் இருக்கும். அத்தகைய ஆற்றினால் உன் ஊர் அழகு பெற்றுள்ளது. அங்ஙனமின்றித் தலைவியின் கண்களோ எல்லாப் பருவத்தும் பசலை நிறமே கொண்டுள்ளன.

கருத்து

'தலைவ! என்றும் பிரிந்திருத்தலே உன் செயலாதலால் இவள் கண்கள் எக்காலத்தும் பசலை நோயுற்று அழகிழந்தன.'

குறிப்பு

உன் ஊரில் உள்ள ஆறு ஒரு பருவத்தில் கலங்கிக் காணப்பட்டாலும் மற்றொரு பருவத்தில் தெளிந்திருக்கும். தலைவியின் கண்களிலோ, எல்லாப் பருவத்திலும் பசலை பரவியே இருக்கின்றது. உன் கூடா ஒழுக்கத்தால் இந்நிலை அவளுக்கு ஏற்பட்டது.

ஆறு, வாடைக்காலத்தில் கலங்கியும் கோடைக்காலத்தில் தெளிந்தும் இருப்பதுபோல, தலைவி உன் பிரிவால் துன்பமும், சேர்ந்திருக்கும்போது இன்பமும் அடைகிறாள் என்பதை நீ அறிதல் வேண்டும்.

சொற்பொருள்

1. கூதிர் - கூதிர்க்காலம்; தண் - குளிர்ச்சி பெற்ற; கலிழ் தந்து - கலங்கிய நீரைத் தந்து.
2. வேனில் - வேனிற்காலம்; மணிநிறம் - நீல நிறம்.
3. நின் - உன்; யாறு - ஆறு; அணிந்தன்று - அழகு பெற்றுள்ளது.
4. என் கண் - தலைவியின் கண்கள்; பசப்பு - பசலை; அணிந்தன - கொண்டுள்ளன; மகிழ்ந! - தலைவ!

தோழி கூற்று

ஐங்குறுநூறு 50 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

மனையின் நீங்கிப் பரத்தையிடத்துப் பன்னாள் தங்கி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தன் வீட்டைவிட்டு நீங்கிப் பரத்தையோடு பல நாள் தங்கியிருந்து விட்டுத் திரும்பிய தலைவனிடம் தோழி கூறியது.

துணையோர் செல்வமும் யாமும் வருந்துதும்
வஞ்சி ஓங்கிய யாணர் ஊர!
தஞ்சம் அருளாய் நீயேநின்
நெஞ்சம் பெற்ற இவளுமார் அழுமே.

தெளிவுரை

வஞ்சி மரங்கள் ஓங்கி வளர்ந்திருக்கும் புது வருவாயினைக் கொண்ட ஊருக்குத் தலைவனே! உன்னையே தன் நெஞ்சில் கொண்டு வாழும் இவளுக்கு அருள் செய்! உன் பிரிவைப் பொறுக்கவியலாமல் இவள் அழுகின்றாள்; நீ பிரிந்ததால் உனக்குத் துணையானவர்களும் நாங்களும் வருந்தியிருக்கிறோம்.

கருத்து

தலைவ! உன் அன்பை இழந்து தலைவி வருந்தி மெலிந்து அழுதவாறே உள்ளாள். நீ இவட்குத் தஞ்சமளித்து அருள் செய்.

குறிப்பு

தலைவி அழுவதால் நானும் தோழியரும் வருந்துகின்றோம்; இல்லறக் கடமையாற்றுதற்பொருட்டு உனக்குத் துணையாயிருப்பவரும், உன்பால் அன்பு கொண்ட பிறரும் உன் அருளைப் பெறவியலாமல் வருந்தியுள்ளனர்.

'அருளாய்' என்று கூறுவதால் அவனது அன்பின்மையையும், 'நாங்கள் வருந்துவோம்' என்பதால் அவன் கொடுமையையும் எடுத்துக் கூறிக் கண்டிக்கிறாள்.

சொற்பொருள்

1. துணையோர் - (உனக்குத்) துணையானவர்; யாமும் - நாங்களும்.
2. வஞ்சி - ஒருவகை மரம்; ஓங்கிய - வளர்ந்துள்ள; யாணர் - புதுவருவாய்; ஊர - ஊருக்குரிய தலைவனே!
3. தஞ்சம் - எளியவள் (ஆன இவளுக்கு); நீயே அருளாய் - நீ அருள் செய்.
4. நின் நெஞ்சம் பெற்ற இவளும் - உன்னையே தன் நெஞ்சில் கொண்டு வாழ்கின்ற இவளும்; அழும் - அழுகிறாள்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 85 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் பரத்தையர்மேல் காதல்கூர்ந்து நெடித்துச் செல்வுழி மனையகம் புகுந்தானாகத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையரை நாடிச் செல்வதற்குப் புறப்பட்டான். பின், சற்றுக் காலம் தாழ்த்திப் போகக் கருதி வீட்டினுள்ளே சென்றான். அவன் ஒப்பனையையும் பிறவற்றையும் அறிந்த தலைவி, வருந்திக் கூறி, அவனை அவன் போக்கினின்றும் விலக்கியது.

வெண்நுதல் கம்புள் அரிக்குரல் பேடை
தண்நறும் பழனத்துக் கிளையோடு ஆலும்
மறுஇல் யாணர் மலிகேழ் ஊரநீ
சிறுவரின் இனைய செய்தி;
நகாரோ பெருமநின் கண்டிசி னோரே.

தெளிவுரை

வெண்மையான தலையைக் கொண்டதும் கரகரத்தெழும் குரலைக் கொண்டதுமான சம்பங்கோழியின் பேடை, தன் சேவல் பிரிந்ததென்று, குளிர்ச்சி பொருந்திய நறுவிய பழனங் களிலுள்ள தன் கிளைகள் அறியும்படி கூவியபடியிருக்கும். இத்தகைய காட்சிக்கு இடனானதும் குற்றமற்ற, புது வருவாயி னைக் கொண்டதுமான ஊருக்குத் தலைவனே! நீ சிறுவரைப் போலப் பின்விளைவைக் கருதாமல், இத்தகைய செயலைச் செய்கின்றாயே! உன்னைக் காண்போர், உன் செயலைப்பற்றிக் கூறி எள்ளி நகையாட மாட்டார்களோ?

கருத்து

'குடிப்பழி மிகுதலை நினைத்தாயினும், பொருந்தா உன் போக்கைக் கைவிடு.'

விளக்கம்

'சேவலைப் பிரிந்த கோழி, தன் துயரைத் தன் இனம் அறியும்படி கூவியபடியிருக்கும் பழனம்' என்று கூறுவதன்மூலம், தானும் அவ்வாறு புலம்ப வேண்டியிருந்தும் தன் குடிப்பெருமை கருதித் தன் துயரை அடக்கியிருப்பதாய்த் தன் கருத்தைத் தலைவி வெளிப்படுத்துகிறாள்.

குறிப்பு

'சிறுவர் செய்த சிறுபிழைகளை ஊரார் பொறுப்பர். நின்னைப் போல வளர்ச்சி பெற்றவர் செய்யும் பிழைகளை யாவரே பொறுப்பர்?' என்று தலைவி வினவினாள்.

சொற்பொருள்

1. நுதல் - தலை; கம்புள் - சம்பங்கோழி; அரிக்குரல் - கரகரத்தெழும் ஒலி; பேடை - பெண்.

2. நறும் - நல்ல; பழனம் - வயல்; கிளை - இனம்; ஆலும் - கூவும்.
3. மறுஇல் - குற்றமில்லாத; யாணர் - புதுவருவாய்; மலி - மிகுந்த.
4. சிறுவரின் - சிறுவரைப் போல; இனைய - இத்தன்மையான செயல்களை; செய்தி - செய்கிறாய்.
5. நகாரோ - சிரிக்க மாட்டாரோ?; கண்டிசினோர் - காண்போர்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 66 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

புதல்வனைப் பிரியாதவன் பிரிந்து, புறத்துத் தங்கி வந்தானாக, அவனோடு புலந்து தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தளர்நடைப்பருவத்தில் உள்ள தன் மகனைத் தழுவி இன்புற்று அம் மகவைப் பிரிந்து அறியாத தலைவன் பிரிந்து சென்று, பரத்தையர் வீட்டில் தங்கினான்; மகன் நினைவு எழத் தன் வீடு திரும்பினான். அவனோடு தலைவி ஊடல் கொண்டு சொல்லியது.

உடலினேன் அல்லேன்; பொய்யாது உரைமோ;
யார்அவள், மகிழ்ந! தானே தேரொடு,
தளர்நடைப் புதல்வனை உள்ளிநின்
வளமனை வருதலும், வெளவி யோளே?

தெளிவுரை

மகிழ்நனே! உருட்டி விளையாடும் சிறு தேருக்குப் பின்னால் தளர் நடையிட்டுச் செல்லும் மகனை நினைத்து, வளம் பொருந்திய உன் வீட்டுக்கு வரவும் விடாமல் உன்னைத் தடுத்துக் கவர்ந்துகொண்டவள் எவள்? நான் உன்மீது சினம் கொண்டு வினவவில்லை; உண்மையை மறைக்காமல் சொல்.

கருத்து

'உன் வீட்டுக்கு நீ வருவதைத் தடுக்கும் அந்தப் பரத்தை யார்? உண்மையைச் சொல்.'

விளக்கம்

பரத்தையர் சேரியில் நீ பெறும் காம இன்பத்தினும் சிறந்தது இள மகவைக் காணும் இன்பமாகும். அவ்வின்பத்தையும் மறந்து தன்னோடு தங்கும்படி உன்னைப் பற்றிக்கொண்டவள் அத்துணை உயர்ந்தவளோ? யார் அவள்?

சொற்பொருள்

1. உடலினேன் - பகைத்தேன், சினந்தேன்; உரைமோ - சொல்.
3. உள்ளி - நினைத்து.
4. வெளவியோள் - உன்னைப் பற்றிக்கொண்டவள்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 83 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வரைந்த அணிமைக்கண்ணே தலைமகற்குப் புறத்தொழுக்கம் உண்டா கியவழி அதனையறிந்த தலைமகள் அவனோடு புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணம் செய்துகொண்ட அண்மைக் காலத்திலேயே தலைவன் பரத்தை ஒழுக்கம் மேற்கொண்டான். அதனை அறிந்த தலைவி அவனோடு ஊடல் கொண்டு கூறியது.

மணந்தனை அருளாய் ஆயினும், பைபயத்
தணந்தனை ஆகி உய்ம்மோ, நும்ஊர்
ஒண்தொடி முன்கை ஆயமும்
தண்துறை ஊரன் பெண்டுஎனப் படற்கே.

தெளிவுரை

தலைவ! நீ எம்மை மணந்துகொண்ட கணவன் என்னும் வகையில் அருள் செய்யவில்லை; ஆதலின், தண்ணிய துறை

களையுடைய உன் ஊரில் வாழும் ஒள்ளிய வளையல்களைப் பூண்ட பரத்தை மகளிரும் உன் பெண்டுகளே என்று கருதுமாறு மெல்ல மெல்ல என்னை விட்டு விலகிச் செல்க!

கருத்து

உன் மனைவிமார் என்னும் பெருமையைப் பரத்தையரே பெற்று மகிழட்டும்.

விளக்கம்

"நீ என்னைப் பிரிந்து நாள்தோறும் புதிய புதிய பரத்தை மகளிரை மணந்து, 'இவன் எண்ணிறந்த பெண்டுகளைக் கொண்டவன்' என்னும் புகழை அடைக; உன் குறிக்கோள் இல்லறம் நிகழ்த்துதலோ அன்பு செய்தலோ அன்று. ஆதலின், இனி நீ இங்கு வரவேண்டா; பரத்தையர் சேரிக்கே செல்க" என இடித்துரைத்துத் தலைவி தலைவனிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. மணந்தனை - மணந்தாய்; பைபய - மெல்ல மெல்ல.
2. தணந்தனை ஆகி - பிரிகின்றவன் ஆகி; உய்ம்மோ - செல்க.
3. ஆயம் - பரத்தையர்.
4. ஊரன் பெண்டு எனப்படற்கு - ஊரனாகிய உன் மனைவியர் என்று சொல்லும்படி.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 70 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையரோடு பொழுதுபோக்கி நெடிது துய்த்துவந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையரோடு நெடுநேரம் கலந்திருந்து களித்தபின், தன் வீடு திரும்பு கிறான், தலைவன். அவனோடு ஊடல் கொண்டு தலைவி சொல்லியது.

பழனப் பல்மீன் அருந்த நாரை
கழனி மருதின் சென்னிச் சேக்கும்
மாநீர்ப் பொய்கை யாணர் ஊர!
தூயர் நறியர்நின் பெண்டிர்;
பேஎய் அனையம்யாம்; சேய்பயந் தனமே.

தெளிவுரை

பொய்கையிலுள்ள பல வகை மீன்களையும் பற்றியுண்ட நாரை, பக்கத்து வயலிலுள்ள மருத மரத்தின் உச்சிக்குச் சென்று தங்குகின்ற நீர் நிறைந்த பொய்கையினையும், புது வருவாய்ப் பெருக்கினையும் கொண்ட ஊரனே! யாம் குழந்தையைப் பெற்றுள்ளோமாதலின், உன் பார்வைக்குப் பேய் போன்றவர் களாயுள்ளோம்! ஆனால், உன் பரத்தையரோ தூய்மையும் நறுமணமும் கொண்டவர். (நீ அவர்களிடமே சென்று சேர்.)

கருத்து

நீ பரத்தையரையே நாடிச் செல்.

விளக்கம்

நான் பேய் போல உனக்குத் தோன்றினும், உன் குடிக்கு விளக்கம் தரும் புதல்வனைப் பெற்ற பெருமையினைக் கொண்டவளாயுள்ளேன். பரத்தையர் உடலால் தூயரானாலும் மனத்தால் தூயர் அல்லர்; புனைவுகளால் நறியரேனும், பண்பால் நறியர் அல்லர்.

குறிப்பு

இழிந்த புலால் உண்ணும் நாரைக்கு மருதமர உச்சி தங்கும் இடம் ஆனாற்போல, இழிந்த பரத்தையரோடு இன்பம் துய்த்து வரும் உனக்கு எம் வீடு தங்கிப்போகும் இடம் ஆனதோ?

சொற்பொருள்

1. பழனம் - வயல்; அருந்த - உண்ட.
2. மருதின் - மருத மரத்தின்; சென்னி - உச்சி; சேக்கும் - தங்கும்.
3. மா - மிகுதியான; பொய்கை - குளம்; யாணர் - புதுவருவாய்.
4. தூயர் - தூய்மையானவர்; நறியர் - நறுமணம் கொண்டவர்; பெண்டிர் - பரத்தையர்.

5. பேய் அனையம் - பேய் போன்றவர்; சேய் - குழந்தை; பயந்தனம் - பெற்றுள்ளோம்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 48 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையர்மாட்டு ஒழுகாநின்று, தன் மனைக்கட் சென்ற தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீட்டிலேயே சில காலம் தங்கியிருந்த தலைவன், ஒரு நாள் தன் இல்லம் சென்றான். அப்போது தலைவி அவனை நோக்கிக் கூறியது.

வலைவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள்
வராஅல் சொரிந்த வட்டியுள், மனையோள்
யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும் ஊர!
வேண்டேம் பெருமநின் பரத்தை
ஆண்டுச்செய் குறியோடு ஈண்டுநீ வரலே.

தெளிவுரை

வலை வீசி மீன் பிடிக்கும் தொழிலில் வல்லவன், பாணன். வெண்மையான பற்களைக்கொண்ட அவன் மகள், வரால்மீனை நிறைத்துக்கொண்டு வந்த வட்டியில், அறுவடை செய்யப்பட்டு ஓர் ஆண்டு ஆனதால் பழையதான வெண்ணெல்லை இல்லக் கிழத்தி நிறைத்துக் கொடுப்பாள். அத்தகைய வளமிகுந்த ஊரைக் கொண்டவனே! பரத்தை தன் வீட்டில் உனக்குச் செய்த குறிகளோடு நீ வருவதை நாங்கள் விரும்ப மாட்டோம்.

கருத்து

பரத்தையிடமே நீ மீண்டும் செல்.

விளக்கம்

அறுத்த நெல்லை உடனே பயன்படுத்துவதைவிடச் சில காலம் கழித்து அது பழைய நெல் ஆனவுடன் உணவுக்குப்

பயன்படுத்துவது சிறப்பு. (பழைய நெல்அரிசி கொண்டு ஆக்கப்படும் உணவு, புதுநெல் அரிசி கொண்டு ஆக்கப்பட்ட உணவைவிட மிகுந்த சுவையானதாய் இருக்கும்). பாணன் மகளிடம் புது நெல்லைத் தந்தால், அதை அவள் கொண்டு சென்று பயன்படுத்த ஓராண்டுக் காத்திருக்க வேண்டும். அவ்வாறு காத்திருக்கக்கூடாது என்பதால், இல்ல மகள் தன்னிடமிருந்து ஓராண்டுக் கழிந்த நெல்லைப் பாணன் மகள் உடனே பயன்படுத்துவதற்கேற்றதாய்க் கொடுக்கிறாள்.

குறிப்பு

நீ பரத்தை செய்த குறிகளுடனேயே வந்திருப்பதால் உன்னை ஏற்க விரும்பேம். அவள் உறவினை முற்றக் கைவிட்டு வருவாயாயின் ஏற்போம் எனக் குறிப்புக் காட்டிக் கூறினள் என்றும் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. வலைவல் - வலை வீசுதலில் வல்ல; வால் - வெண்மை; எயிறு - பற்கள்; மடமகள் - இளம் மகள்.
2. வராஅல் - வரால் மீன்; மனையோள் - இல்லக்கிழத்தி.
3. யாண்டுகழி - ஓர் ஆண்டு கழிந்த (அஃதாவது பழைய நெல்).
4. ஆண்டு - பரத்தை வீடு; ஈண்டு - இங்கு.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 63 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து கூறியது.

கூற்று விளக்கம்

பரத்தையரோடு மகிழ்ந்திருந்து வீடு திரும்புகின்ற தலைவன், ஆர்வத்தோடு தலைவியை அணைப்பதற்கு நெருங்க, அவள் வெறுத்துக் கூறியது.

பொய்கைப் பள்ளிப் புலவுநாறு நீர்நாய்
வாளை நாள்இரை பெறூஉம் ஊர!
எம்நலம் தொலைவது ஆயினும்
துன்னலம் பெரும,பிறர்த் தோய்ந்தநின் மார்பே.

தெளிவுரை

நீர் நிலையில் வாழ்ந்து வரும் புலால் நாற்றம் மிக்க நீர்நாய், வாளைமீனைத் தன் காலை வேளை இரையாகப் பெறும் வளம் கொண்ட ஊருக்குத் தலைவனே! எம் அழகு முற்றும் அழிந் தொழியுமாயினும், பெருமானே! பிறரைத் தழுவி எச்சிலான உன் மார்பினைப் பொருந்தவே மாட்டேன்!

கருத்து

'பிற மகளிரால் எச்சிற்பட்ட உன் மார்பை நான் அணையேன்.'

விளக்கம்

தலைவன் பரத்தையர் மார்பைத் தழுவிய பின் வந்தமையால், அவன் மார்பில் அவர் நாற்றமே வீசுகிறது. எனவே, 'நீ நுகரத் தகுவோர் அவரேயாதலின் அங்கேயே செல்க' எனத் தலைவி கூறுகிறாள்.

உள்ளுறை

நீர்நாய் பொய்கையில் இருந்தாலும், தன் உடலில் உள்ள புலால் நாற்றத்தைக் கழுவிக்கொள்ளாமல், மீண்டும் புலால் நாறும் வாளை மீனையே இரையாய்க் கொள்ளும். அதுபோலத் தலைவனும் உயர் நெறியிலே நில்லாமல், பரத்தையையே நாடி இழிந்த காம நுகர்ச்சியைப் பெறுகின்றான் என்பது உள்ளுறைப் பொருளாம்.

சொற்பொருள்

1. பொய்கை - குளம்; பள்ளி - இடம்; புலவுநாறு - புலால் நாற்றம் வீசும்.
2. வாளை - வாளை மீன்; நாள் இரை - அதிகாலை உணவு; பெறும் - பெறுகின்ற.
3. நலம் - அழகு; தொலைவது ஆயினும் - அழிந்தொழியுமாயினும்.
4. துன்னலம் - பொருந்த மாட்டோம்; பிறர் - பரத்தையர்; தோய்ந்த - தழுவிய.

தலைவி கூற்று

அகநானூறு 196 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்தவந்த தலைமகற்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையர் சேரிக்குச் சென்று திரும்பி வந்தான். அப்போது ஊடல் கொண்ட தலைவி கூறியது.

நெடுங்கொடி நுடங்கும் நறவுமலி பாக்கத்து,
நாள்துறைப் பட்ட மோட்டுஇரு வராஅல்
துடிக்கண் கொழுங்குறை நொடுத்து,உண்டு ஆடி,
வேட்டம்மறந்து, துஞ்சும் கொழுநர்க்குப் பாட்டி
ஆம்பல் அகல்இலை, அமலைவெஞ் சோறு
தீம்புளிப் பிரம்பின் திரள்கனி பெய்து,
விடியல் வைகறை இடூஉம் ஊர!
தொடுகலம் குறுக வாரல் – தந்தை
கண்கவின் அழித்ததன் தப்பல்; தெறுவர,
ஒன்றுமொழிக் கோசர்க் கொன்று,முரண் போகிய,
கடுந்தேர்த் திதியன் அழுந்தை, கொடுங்குழை
அன்னி மிஞிலியின் இயலும்
நின்நலத் தகுவியை முயங்கிய மார்பே.

தெளிவுரை

தலைவனே! உன் ஊர் உயரமான கொடிகள் அசைந்தாடும் கள்ளுக்கடைகளால் நிறைந்தது. அங்குப் பரதவன் ஒருவன் ஒருநாள் விடியற்காலை வேட்டையில் கடல்துறையில் அகப்பட்ட பெரிய வயிற்றைக் கொண்ட வரால்மீனின் உடுக்கையின் கண்போன்ற அகன்ற துண்டங்களை விற்றுக் காசாக்கினான். அக்காசிற்கு மிகுதியாய்க் கள் வாங்கிக் குடித்து, மீண்டும் கடலில் மீன் பிடிக்கச் செல்வதை மறந்து உறங்கினான்.

மறுநாள் வைகறையில் அவனுக்கு, அவன் மனைவியாகிய பரதவ மகள், அகலமான ஆம்பல் இலையில், விரும்பத்தக்க

சோற்றினை, இனிய சுவை கொண்ட திரண்ட பிரப்பங்கனியைத் தொடுகறியாய் வைத்து உண்ணத் தந்தாள். அத்தகைய பாக்கத்தைச் சேர்ந்தவனே!

கோசர்கள் முதியவர் ஒருவரின் கண்களைச் சிதைத்து விட்டனர். வளைந்த குழையணிந்த 'அன்னி மிஞிலி' என்னும் அவர் மகள் விரைந்து செல்லும் தேரினையுடைய திதியனைக் கொண்டு, குற்றமிழைத்த கோசர் மரபினை அழித்துப் பழி தீர்த்துக்கொண்டாள். அப்பெருமிதத்தோடு திதியனின் அழுந்தூர்த் தெருக்களில் நெஞ்சு நிமிர்ந்து நடந்தாள்.

அவளைப் போலச் செருக்கோடு நடக்கிறாள், நீ விரும்பித் தழுவிய உன் தகுதிக்கேற்ற பரத்தை. அவளைத் தழுவிய கையோடு இங்கு வந்துள்ளாய்; உன் மார்பைத் தொடேன். என் அருகில் வாராதே.

கருத்து

'பரத்தையைத் தழுவிய கையோடு இங்கு வந்துள்ளாய். உன் மார்பைத் தொடேன். அருகில் வாராதே.'

விளக்கம்

பரதவர், தாம் கடலில் பிடித்த மீனை விற்றுப் பெற்ற காசைக் கொடுத்துக் கள்ளை உண்டு ஆடித் தம் செயலை மறந்து மறுபடியும் தூங்குவர். அவருக்கு அவர் மனைவியர் சோறும் புளிக்கறியும் அளிப்பர். இத்தகைய ஊரினை உடையவன், தலைவன். அவர் போலத் தலைவன் இரவெல்லாம் பரத்தை யருடன் களித்தாடித் தன்னை மறந்து உறங்கினான். காலையில் வீடு வந்தபோது அவனை நோக்கி, 'உன்னை வரவேற்பேன் என்று எண்ணி இங்கு வந்தாயா?' எனத் தலைவி இடித்துரைக் கிறாள்.

சிறப்புக் குறிப்பு

அன்னி மிஞிலியைப் பெற்ற தந்தையினுடைய பசு, கோசரின் வயலில் புகுந்து மேய்ந்தது. கோசர்கள் அதைப் பிடித்துக் கட்டினர். அது தன் பசு என்னும் உண்மையை ஒத்துக்கொண்ட முதியவர் கண்களைக் கோசர்கள் இரக்கமின்றிப் பிடுங்கினர். அதனால் பொறுக்கவியலாத துயருற்ற அன்னி

மிஞிலி, அக்கோசரைக் கொன்றாலன்றிக் 'கலத்தினும் உண்ணேன்; தூய ஆடையையும் அணியேன்' என்று வஞ்சினம் கூறித் தவக்கோலம் தாங்கி நின்று, திதியன் துணை கொண்டு கோசரைக் கொல்வித்துச் சினம் தணிந்தாள்.

சொற்பொருள்

1. நுடங்கும் - அசையும்; நறவு - கள்; மலி - நிறைந்த.
2. நாள் துறைப்பட்ட - விடியற்காலை வேட்டையில் அகப்பட்ட; மோடு - வயிறு; இரு - பெரிய; வராஅல் - வரால்மீன்.
3. துடி - உடுக்கை; நொடுத்து - விற்று.
4. வேட்டம் - வேட்டை; துஞ்சும் - தூங்கும்; கொழுநர் - கணவர்; பாட்டி - (பரதவ மனைவியாகிய) பரதவ மகள்.
5. அகல் - அகன்ற; அமலை - விரும்பத்தக்க.
6. தீம்புளிப் பிரம்பின் - இனிப்புடன் கூடிய புளிப்புச் சுவை கொண்ட பிரம்பின்.
7. விடியல் வைகறை - இருள் விலகும் விடியற்காலத்தில்.
8. தொடுகலம் - தொடமாட்டோம்; குறுக - அணுக; வாரல் - வாராதே; தந்தை - தன் தந்தையின்.
9. கண்கவின் - கண்ணின் எழிலை; அழித்ததன் - கெடுத்ததன்; தப்பல் - (கண்களைப் பிடுங்கிய) தவற்றிற்காக; தெறுவர - அச்சமுண்டாக.
10. ஒன்று மொழிக் கோசர் - நெடுமொழியினைக் கொண்ட கோசர்களை; கொன்று - கொல்வித்து; முரண் - மாறுபாடு; போகிய - தீர்த்த.
11. திதியன் - குறுநில மன்னருள் ஒருவன்; அழுந்தை - அழுந்தூர்.
12. அன்னிமிஞிலி என்பவள்போல; இயலும் - நெஞ்சு நிமிர்ந்து நடக்கும்.
13. நின் நலம் - உன் இன்பத்திற்கு; தகுவி - தகுந்தவளாகிய (பரத்தையை); முயங்கிய - தழுவிய.

தலைவி கூற்று

நற்றிணை 340 **நக்கீரர்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையின் மறுத்தந்த தலைமகனைத் தலைமகள் நொந்து சொல்லியது. (மறுத்தந்த - மீண்டு வந்த.)

கூற்று விளக்கம்

பரத்தை இல்லம் சென்றிருந்த தலைவன் மீண்டும் தலைவியை நாடி வந்த நிலையில் தலைவி மனம் நொந்து கூறியது.

புல்லேன் மகிழ்ந! புலத்தலும் இல்லேன்
கல்லா யானைக் கடுந்தேர்ச் செழியன்
படைமாண் பெருங்குளம் மடைநீர் விட்டென,
கால்அணைந்து எதிரிய கணைக்கோட்டு வாளை
அள்ளல்அம் கழனி உள்வாய் ஓடிப்
பகடுசேறு உதைத்த புள்ளிவெண் புறத்துச்
செஞ்சால் உழவர் கோல்புடை மதரி,
பைங்கால் செறுவின் அணைமுதல் பிறழும்
வாணன் சிறுகுடி அன்னஎன்
கோள்நேர் எல்வளை நெகிழ்த்த நும்மே!

தெளிவுரை

“மகிழ்நனே! விரைந்து செல்லும் தேரினையுடைய செழியன் என்பவன், பாகன் குறிப்பன்றி வேறு ஒன்றிற்கு இசைந்து நடப்பதற்குக் கற்றறியாத இளங்களிற்றைப் போன்றவன். அவன் படையினைப் போல, பெரும் பரப்பினைக் கொண்ட குளம் ஒன்று உள்ளது. அக்குளம் நிறைந்து பெருகியதனாலே மிகுந்துள்ள நீரினை வெளியேற்ற மடையைத் திறந்துவிட்டனர். அதனால் நீர் வாய்க்கால் வழியாக வெளியேறிச் சென்றது. அவ் வாய்க்காலில் நீரை எதிர்த்து வந்த, திரண்ட கொம்பினைக் கொண்ட வாளை மீன் ஒன்று, சேறு நிறைந்த அழகிய வயலின் உட்புறத்தே பாய்ந்து சென்றது. அவ்வயலை உழும் எருதுகள் சேற்றினை மிதித்தலால் தெறித்து விழும் சேற்றுத்துளிகள் பட்டு

அவை காய்ந்தமையால் வெண்மையான மேற்புறத்துடன் உழவர்கள் விளங்கினர். செவ்விய சாலினை மடக்கி உழுகின்ற அவ்வுழவர்களின் கைக்கோலால் அடிபட்டாலும் அவ் வாளைமீன் அதற்கு அஞ்சாது பசுமை பொருந்திய அவ்வயலின் வரப்படியிலேயே சென்று பிறழும். இத்தகைய வாணன் சிறுகுடி என்னும் ஊரின் வளமை போன்றது, என் இளமை நலம். என் கையை இறுகப் பொருந்தியிருந்த ஒளி பொருந்திய வளையல் களைப் பிரிவுத்துயரால் நெகிழச் செய்துவிட்ட உன்னை நான் தழுவ மாட்டேன். ஆனாலும் உன்னை நான் வெறுப்பவளும் அல்லள்" எனத் தலைவி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவ! உன்னை நான் தழுவ மாட்டேன்; ஆனாலும் உன்னை வெறுப்பவளும் அல்லள்.

விளக்கம்

பரத்தை வீடு சென்ற தலைவன், தலைவியின் ஊடலைத் தீர்க்கப் பாணர் முதலாயினரைத் தன் மனைக்குத் தூதாய் அனுப்பினான். அவர்கள் அனைவருக்கும் வாயில் மறுக்கப் பட்டது. தன் மனைவியைப் பிரிந்திருக்க இயலாத அவன் முடிவில் தன் மனைக்குத் தானே திரும்பினான். தலைவி புலவாதவள் போல அவனை ஏற்றாள். ஆயினும், கணவனிடம், "பெரும! உன்னை நான் தழுவ மாட்டேன். அதனால் உன்னோடு ஊடல் கொண்டு மறுக்கிறேன் என்பது கருத்தன்று" என்றாள்.

தான் தலைவன்மீது கொண்டுள்ள அன்பு மாறாதது என்பதும், ஆனால் அவன் பரத்தை வீடு சென்றமையால் அது தன்னால் பொறுத்திட இயலாது என்பதும் தோன்றுமாறு தலைவியின் பேச்சு அமைந்துள்ளது.

குறிப்பு

'வெறுத்தேனும் அல்லேன்' என்பதால் அவன் முற்பட்டு உவந்து தழுவ, அவளும் இசைந்து தழுவுவாள் என்பதாம்.

உள்ளுறை

குளத்தை விட்டு வெளியே சென்ற கால்வாய்நீருடன் சென்ற வாளைமீன், வயலுள் பாய்ந்தது. சேறு தம் முதுகில் பட்டு, காய்ந்து வெண்மையான (முதுகுடன்) மேற்புறத்துடன் விளங்கும் உழவர்க்கும் அஞ்சாது, வரப்படியில் சென்று தங்கும் என்பது உள்ளுறை. இதன்மூலம் வீட்டிலிருந்து புறப்பட்ட தலைவன், பாணன் சென்ற வழியே சென்று, பரத்தையொருத்தி யின் இல்லம் புகுந்து ஏனையோர் கூறிய பழிமொழியையும் கேட்டுக்கொண்டு அங்குத் தங்கினன் எனவும், பரத்தையர் பலரும் விரும்பியழைக்க அவரிடம் செல்லாது ஒருத்தி இல்லத்தே கிடந்து துயின்று வந்தனன் எனவும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. புல்லேன் - தழுவ மாட்டேன்; மகிழ்நன் - தலைவன்; புலத்தல் - ஊடல்.
2. கடுந்தேர் - விரைந்து ஓடும் தேர்; செழியன் - பாண்டிய மன்னன்.
3. படைமாண் - படையினைப் போன்று பரந்துள்ள; மடை - நீர் செல்லும் மதகு.
4. கால் - கால்வாய்; எதிரிய - எதிர்த்துச் சென்ற; கணைக்கோடு - திரண்ட கொம்பு; வாளை - வாளை மீன்.
5. அள்ளல் - சேறு; உள்வாய் - உட்புறம்.
6. பகடு - எருது, எருமைக்கடா; உதைத்த - உதைத்ததால்; புள்ளி - சேற்றுப்புள்ளி; வெண்புறம் - வெண்ணிற முதுகுடன் (தோன்றும்).
7. செஞ்சால் - செவ்விய உழவுச் சால்; கோல் - உழவர் மாடுகளை ஓட்டப் பயன்படுத்தும் கைக்கோல்; புடைத்தல் - அடித்தல்; மதரி - துள்ளி.
8. பைங்கால் - பசுமையான நீர்வளம்; அணை - வரப்பு; முதல் - அடிப்புறம்; பிறழும் - துள்ளிக் குதிக்கும்.
9. வாணன் - வாணன் மரபினன்; சிறுகுடி - ஓர் ஊர் (வாணனுடைய ஊர்).
10. கோள் நேர் - நன்கு பொருந்திய; எல் - ஒளி; நெகிழ்த்த - கழன்று விழச்செய்த; நும் - உன்னை.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 369 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பரத்தை ஒருத்தியுடன் பொழிலகத்துத் தங்கி வந்த தலைமகன், தலைமகள் வினாவியவழி, 'யாரையும் அறியேன்' என்றானாக அவள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் விரும்பிய பரத்தையோடு சோலையில் விளையாடி விட்டு வீடு வந்தான். அதனை அறிந்த தலைவி ஊடினாள். 'தான் அத்தகைய ஒருத்தியை அறியேன்' என்று கூறிய தலைவனிடம் தலைவி கூறியது.

வளமலர் ததைந்த வண்டுபடு நறும்பொழில்
முளைநிரை முறுவல் ஒருத்தியொடு நெருநல்
குறிநீ செய்தனை என்ப; அலரே,
குரவ நீள்சினை உறையும்
பருவ மாக்குயில் கௌவையிற் பெரிதே!

தெளிவுரை

வளமான மலர்கள் பூத்து நிறைந்துள்ளமையாலே வண்டுகள் மொய்த்திருக்கும் நறிய பொழிலிடத்திலே, மூங்கிலின் முளை போல நிரல்பட அமைந்த பற்களைக் கொண்டவளாய் முறுவல் செய்யும் பரத்தை ஒருத்தியோடு நீ இடங்குறித்துக் கூடி மகிழ்ந்திருந்தாய் என்று சொல்லிக்கொள்கின்றனர். அதனால் எழுந்த அலர், குரவ மரத்தின் நீண்ட கிளையில் தங்கியிருந்து வேனிற்பருவத்தே குரலெடுத்துக் கூவுகின்ற கருங்குயிலின் ஓசையைக் காட்டிலும் பெரிதாய் எங்கும் பரவியுள்ளது.

கருத்து

நீ ஒருத்தியோடு பொழிலில் கூடி மகிழ்ந்திருந்த செய்தியை ஊரெல்லாம் அறியும்; ஆனாலும் நீ இல்லை என்று மறுக்கிறாய்.

சொற்பொருள்

1. ததைந்த - நெருங்கிய; வண்டுபடு - வண்டுகள் மொய்க்கும்.

2. முளை நிரை - முளை போன்று வரிசையாய் அமைந்த பற்கள்; முறுவல் - புன்சிரிப்பு; நெருநல் - நேற்று.
3. குறி - கூடுதற்குக் குறியிடம்; அலர் - பழிச்சொல்.
4. குரவம் - குரவ மரம்; சினை - கிளை; உறையும் - தங்கும்.
5. பருவம் - வேனிற்பருவம்; மா - கரிய; கௌவை - ஒலி.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 370 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பரத்தை ஒருத்திக்குப் பூ அணிந்தான் என்பது கேட்ட தலைமகள், 'அஃது இல்லை' என்று மறைத்த தலைமகற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தை ஒருத்திக்குப் பூச் சூட்டினான் என்று தலைவி கேள்விப்பட்டு அவனிடம் கேட்டாள். அவ்வாறு நிகழவில்லை என்று தலைவன் மறுத்தான். அவனிடம் தலைவி கூறியது.

வண்சினைக் கோங்கின் தண்கமழ் படலை
இருஞ்சிறை வண்டின் பெருங்கிளை மொய்ப்ப,
நீநயந்து உறையப் பட்டோள்
யாவ ளோ?எம் மறையா தீமே.

தெளிவுரை

தலைவனே! வளமான கிளைகளைக் கொண்ட கோங்க மரத்தின் மலர்களைக்கொண்டு தொடுக்கப்பட்ட குளிர்ச்சி பொருந்திய மணம் கமழும் மாலையில் கருஞ்சிறகுகளைக் கொண்ட வண்டுகள் கூட்டமாய் மொய்த்திருந்தன. அம் மாலையை நீ விருப்பத்துடன் அணிவித்தாயே! அவள் யார்? எம்மிடம் மறைக்காதே; உண்மையைச் சொல்.

கருத்து

உன்னால் மாலையணிவிக்கப்பட்ட பரத்தை யார்? சொல்; மறைப்பதால் பயனில்லை.

சொற்பொருள்

1. வண்சினை - வளமான கிளை; கோங்கு - கோங்க மரம்; கமழ் - மணக்கும்; படலை - மாலை.
2. இரு - கரிய; சிறை - சிறகு; பெருங்கிளை - பெரிய கூட்டம்.
3. நயந்து - விரும்பி; உறைதல் - தங்குதல்.
4. யாவள்? - எவள்?; மறையாதீம் - மறைக்க வேண்டா.

தலைவி கூற்று

அகநானூறு 36 **மதுரை நக்கீரர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள், பரத்தையிற்பிரிந்துவந்த தலைமகனொடு புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையைப் பிரிந்த தலைவன் தன் வீட்டுக்கு வந்தபோது அவனுடன் ஊடல் கொண்டு தலைவி கூறியது.

பகுவாய் வராஅல் பல்வரி இரும்போத்துக்
கொடுவாய் இரும்பின் கோள்இரை துற்றி,
ஆம்பல் மெல்அடை கிழிய, குவளைக்
கூம்புவிடு பல்மலர் சிதையப் பாய்ந்து,எழுந்து,
அரில்படு வள்ளை ஆய்கொடி மயக்கி,
தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது,
கயிறுஇடு கதச்சேப் போல, மதம்மிக்கு,
நாள்,கயம் உழக்கும் பூக்கேழ் ஊர!
வருபுனல் வையை வார்மணல் அகன்துறை,
திருமருது ஓங்கிய விரிமலர்க் காவில்,
நறும்பல் கூந்தல் குறுந்தொடி மடந்தையொடு
வதுவை அயர்ந்தனை என்ப அலரே,
கொய்சுவல் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங் கானத்து அகன்தலை சிவப்ப,
சேரல், செம்பியன், சினம்கெழு திதியன்,
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி,

நார்அரி நறவின் எருமை யூரன்,
தேம்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான், இயல்தேர்ப் பொருநன்,என்று
எழுவர் நல்வலம் அடங்க, ஒருபகல்
முரசொடு வெண்குடை அகப்படுத்து, உரைசெல,
கொன்றுகளம் வேட்ட ஞான்றை,
வென்றிகொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே!

தெளிவுரை

குளத்தில் இலைக்குக் கீழிருந்த, பிளந்த வாயும் பல வரிகளும் கொண்ட வரால் மீன், வளைந்த இரும்புத்தூண்டிலில் மீன் பிடிப்போன் குத்திய இரையை விழுங்கியது. அதனால் தூண்டிலிலிருந்து விடுபட இயலாது சிக்கித் தவித்த அம்மீன், துள்ளிக் குதித்து ஆம்பலின் இலையைக் கிழித்து மேலெழுந்தது; அரும்பு மலர்ந்த குவளை மலர்கள் பலவும் சிதையும்படி பாய்ந்தது; பின்னிக் கிடந்த வள்ளைக்கொடியைக் கலக்கியது; தூண்டில் இட்டவன் இழுத்தும் வெளியே வாராது, கயிற்றில் கட்டப்பட்ட சினம் கொண்ட காளையைப் போலச் செருக்குடன் விடியற்காலத்திலே குளத்தைக் கலக்கியது. இத்தகைய நீர்வளம் மிக்க ஊரினையுடையவனே!

என்றும் நீர் வற்றாது ஓடும் வையை ஆற்றின் மணல்துறையில் மருத மரங்கள் ஓங்கிய பரந்த பூஞ்சோலையில், மணமிக்க செறிந்த கூந்தலையும், குறிய வளையல்களையும் கொண்ட பரத்தை ஒருத்தியை நீ மணந்துகொண்டாய் என்று ஊரார் பழிதூற்றுகின்றனர்.

கொய்த பிடரி மயிரினைக் கொண்ட குதிரைகள் பூட்டப் பட்டதும் கொடிகள் பறப்பதுமான தேரினையுடையவன், பாண்டியன் நெடுஞ்செழியன். அவன், தலையாலங்கானம் என்னும் ஊரின் அகன்ற இடமெல்லாம் குருதியால் சிவப் புறுமாறு சேரன், செம்பியன், சினம் நிறைந்த திதியன், போரிற்சிறந்த யானைகளைக் கொண்ட பொன்னணி பூண்ட எழினி, அரித்தெடுக்கப்பட்ட கள்ளினையுடைய எருமையூரன், சந்தன மணங்கமழும் மார்பினைக் கொண்ட இருங்கோ வேண்மான், தேர்ப்படையைக் கொண்ட பொருநன் ஆகிய

எழுவர் சாய்ந்தழியுமாறு வெற்றி கொண்டு அவர்களுடைய முரசுகளையும் வெண்கொற்றக் கொடிகளையும் கைப்பற்றினான். அதனால் ஏற்பட்ட அவன் புகழ், எங்கும் பரவியது. வெற்றிக் களத்தில் அவன் வீரர்கள் செய்த ஆரவாரத்தைவிட, உன்னைப் பற்றிய பழிச்சொல்லால் ஊரில் எழுந்துள்ள ஆரவாரம் மிகுந்ததாய் இருக்கின்றது.

கருத்து

தலைவ! உன் பரத்தமைபற்றி ஊரே பழி தூற்றுகிறது.

விளக்கம்

ஊரனே! வையை ஆற்றின் மணல்மேட்டில் அமைந்த சோலையில் நறுமணம் கமழும் கூந்தலைக் கொண்ட பரத்தை ஒருத்தியை நீ மணந்துகொண்டதாய் ஊரார் பழிதூற்றுகின்றனர். இப்பழிச் சொல், தலையாலங்கானப்போரில் வெற்றி பெற்ற வீரர்கள் எழுப்பிய ஆரவாரத்தினும் பெரிதாய் உள்ளது.

குறிப்பு

பாண்டிய நெடுஞ்செழியன் தலையாலங்கானம் என்னும் இடத்தில் நடந்த போரில் சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்னும் ஏழு அரசர்களை எதிர்த்துத் தான் ஒருவனாய் நின்று போரிட்டு வென்றான். இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் என்று வழங்கப்படுகிறான்.

உள்ளுறை

மீன் பிடிப்பவன் தூண்டிலில் கோத்த இரையை இலைக்குக் கீழ் தங்கியிருந்த வாளைமீன் விழுங்கியது போலத் தலைவன் பாணனின் இனிய சொல்லில் மயங்கிப் பரத்தையைக் கூடினான் எனவும், இலை கிழிய மீன் மேலே எழுந்தாற்போல, அப்பரத்தையர் தாய்மார் வருந்துமாறு தலைவன் அவ்விடத்தை விட்டு வெளியே வந்தான் எனவும், குவளை மலர் சிதையும்படி மீன் பாய்ந்தது போலத் தலைவி வருந்துமாறு தலைவன் வந்தான் எனவும், குவளையைச் சார்ந்த வள்ளையைக் கலக்கியதுபோல, தலைவன் தலைவியைச் சார்ந்த சுற்றத்தார் வருந்துமாறு செயல்பட்டான் எனவும், அதிகாலையில் மீன் குளத்தைக்

கலக்குவதுபோல ஊரவர் காணத் தலைவனும் அனைவரையும் கலக்கமுறுமாறு செய்தான் எனவும் உள்ளுறைப் பொருள் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. பகுவாய் - பிளந்த வாய்; வராஅல் - வரால் மீன்; போத்து - ஆண்.
2. கொடுவாய் - வளைந்த வாய்; இரும்பு - முள்; துற்றல் - உண்டல்.
3. அடை - இலை.
4. கூம்பு விடு - மலர்ந்த அரும்பு.
5. அரில் படு - பின்னிக் கிடந்த.
6. வாங்க - இழுக்க.
7. கதம் - சினம்; சே - காளை; மதம் மிக்கு - செருக்கு மிக்கு.
8. நாள் - விடியற்காலத்தே; கயம் - குளம்; உழக்கும் - கலக்கும்; பூக்கேழ் - பூக்கள் நிறைந்த.
9. வார் - நுண்மை.
10. மருது - மருத மரம்; ஓங்கிய - வளர்ந்த.
11. நறும் பல் கூந்தல் - நல்மணம் கொண்ட மிகுந்த கூந்தல்; மடந்தை - பெண் (பரத்தை).
12. வதுவை அயர்ந்தனை - மணஞ்செய்துகொண்டாய்; அலர் - பழிச்சொல்.
13. கொய்சுவல் - வெட்டி விடப்பட்ட பிடரி மயிர்; செழியன் - பாண்டிய மன்னன்.
14. ஆலங்கானம் - ஒரு போர்க்களம்; சிவப்ப - செந்நிறம் கொள்ள.
15. சேரல், செம்பியன், திதியன் - இவர்கள் அரசர்கள்.
16. போர்வல் யானை - போரில் சிறந்த யானை; எழினி - அரசருள் ஒருவன்.
17. நார் அரி - பன்னாடை கொண்டு வடிக்கப்பெற்ற; நறவு - கள்; எருமை யூரன் - மன்னருள் ஒருவன்.
18. அகலம் - மார்பு; புலர்ந்த - உலர்ந்த; சாந்து - சந்தனம்.
19. இருங்கோ வேண்மான், பொருநன் - இவர்கள் அரசர்கள்.
20. எழுவர் - ஏழு பேர்; வலம் - வெற்றி.
21. அகப்படுத்து - கைக்கொண்டு.
22. வேட்ட ஞான்றை - களவேள்வி செய்த காலத்து.
23. வென்றி - வெற்றி; ஆர்ப்பு - ஆரவாரம்.

தலைவி கூற்று

கைந்நிலை 38 **புல்லங்காடனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள், தலைமகனை நோக்கிச் சொன்னது.

கூற்று விளக்கம்

பரத்தையருடன் பழகி வரும் தலைவனைப் புலந்து தலைவி கூறியது.

கயல்இனம் பாயும் கழனி நல்லூர
நயம்இலேம் எம்மனை இன்றொடு வாரல்
துயில்இன் இளமுலையார் தோள்நயந்து வாழ்,நின்
குயி................................ கொண்டு.

தெளிவுரை

"கயல் மீன்கள் துள்ளிப் பாய்கின்ற வயல்களைக் கொண்ட மருதநிலத் தலைவனே! யாம் எம் இளையர் போன்று ஆடல், பாடல், அழகு ஆகிய நலங்கள் இல்லாதவர்களாய் இருக்கின்றோம். எனவே, எம் வீட்டிற்கு இன்றிலிருந்து வரவேண்டா. இளம் மார்பகங்களைக் கொண்ட எம் இளையர் தோளில் சேரும் இன்பத்தை நன்கு அனுபவித்து அவர்களுடன் உறங்கி வாழுங்கள்" என்று தலைவி கூறினாள்.

கருத்து

தலைவ! நீ இளைய பரத்தையருடனேயே தங்கு; இங்கு வரவேண்டா.

குறிப்பு

ஊடலின் போது தலைவி தன்னை இகழ்வது போலவும், பரத்தையரைப் புகழ்வது போலவும் பேசுகின்ற நயம் அறிந்து இன்புறத்தக்கது.

சொற்பொருள்

1. கயல் இனம் - கயல் மீன் கூட்டம்; கழனி - வயல்.
2. நயம் இலேம் - நலமில்லாதவராய் உள்ளோம்; வாரல் - வர வேண்டா.
3. துயிலின் - துயின்று.

தலைவி கூற்று

நற்றிணை 20 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்துவந்த தலைமகன், 'யாரையும் அறியேன்' என்றாற்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தை வீடு சென்றிருந்த தலைவன், தன் இல்லம் திரும்பினான். தலைவி ஊடல் கொண்டு சினமுற்றிருந்தாள். அவளிடம் தலைவன், 'நான் உன்னைத் தவிர வேறு யாரையும் நினைத்ததில்லை' என்று சொன்னான். அது கேட்டுத் தலைவி சினந்து தலைவன் பொய் சொல்வதாய்க் கூறியது.

ஐய! குறுமகள் கண்டிகும்; வைகி,
மகிழ்நன் மார்பில் துஞ்சி அவிழ்இணர்த்
தேம்பாய் மராஅம் கமழும் கூந்தல்
துளங்குஇயல் அசைவரக் கலிங்கம் துயல்வரச்
செறிதொடி தெளிர்ப்ப வீசி, மறுகில்,
பூப்போல் உண்கண் பெயர்ப்ப நோக்கிச்
சென்றனள் வாழிய, மடந்தை! நுண்பல்
சுணங்குஅணி வுற்ற விளங்கு பூணள்;
மார்புறு முயக்கிடை ஞெமிர்ந்த சோர்குழை,
பழம்பிணி வைகிய தோள்இணைக்
குழைந்த கோதை கொடிமுயங் கலளே.

தெளிவுரை

ஐயனே! உன் காதலுக்குரிய இளைய பரத்தை நேற்று உன்னோடு தங்கி உன் மார்பில் கிடந்து உறங்கினாள்; பின்பு, அவள் உன்னைப் பிரிந்தமையால் தேமல் படர்ந்த மார்புடனும், உன் மார்போடு சேர்ந்த முயக்கத்தால் நெறிப்புண்டு உதிர்ந்த பூந்தளிர்களோடும் இத்தெருவிலேதான் சென்றாள். அவள் சிறந்த அணிகலன்களை அணிந்திருந்தாள். உன்னோடு தங்கிக் கட்டுண்ட இரு தோள்களையும் துவண்ட மாலையையும் கொண்டவளாய் உன் தழுவலிலிருந்து நீங்கி எம் அருகிலேதான்

சென்றாள். வண்டுகள் மொய்க்கும் வெண்கடம்பின் பூங் கொத்துகள் அவள் கூந்தலில் அசைந்தன; இடையில் கட்டிய உடை சரிந்து நெகிழ்ந்தது; கைகளில் நெருக்கமாய் அணிந்திருந்த வளையல்கள் ஒலி எழுப்பின; கண்ணால் அங்குமிங்கும் பார்த்த படி எமது தெருவில் சென்றனள். இளம் பருவத்தினளான இத்தகைய பரத்தையை நான் கண்டேன். அவள் உன்னோடு நீடு வாழ்க!

கருத்து

'உன் மார்பிலே தூங்கி, உன் தழுவலிலிருந்து நீங்கிய பரத்தை எம் தெரு வழியே சென்றதை நான் கண்டேன். நீ வீணாகப் பொய் கூறுகின்றாய்' எனத் தலைவனிடம் தலைவி சினந்து கூறினாள்.

விளக்கம்

"உன் மார்பில் தூங்கிய பரத்தை எம் தெரு வழியேதான் சென்றாள். அவள் கூந்தலில் வெண்கடம்ப மலரின் மணம் வீசியது; இடையில் மெல்லாடை தளர்ந்து அசைந்தது; கைகளில் வளையல்கள் ஒலித்தன. தன் கண்களால் அவள் அங்குமிங்கும் பார்த்தவண்ணம் சென்றாள். அவளை நான் கண்டேன்; ஆனால், நீயோ யாரையும் நினைத்தது இல்லை என்கிறாய்" எனத் தலைவி தலைவனின் பொய் ஒழுக்கினைப் புலப்படுத்திக் கடிந்துகொண்டாள்.

சொற்பொருள்

1. குறுமகள் - இளமையான பெண் (பரத்தை); கண்டிகும் - கண்டேன்; வைகி - தங்கி.
2. மகிழ்நன் - தலைவன்; துஞ்சி - துயின்று; அவிழ்இணர் - பூங் கொத்துகள் மலர்ந்த.
3. தேம்பாய் - வண்டுகள் மொய்க்கும்; மராஅம் - மரவம் பூக்கள்; கமழும் - மணம் வீசும்.
4. துளங்குஇயல் - துவண்ட மேனி மேல்; அசைவர - சரிந்து விளங்க; கலிங்கம் - ஆடை; துயல்வர - புறத்தே அசைய.
5. தொடி - வளையல்; தெளிர்ப்ப - ஒலிப்ப; வீசி - கைகளை வீசி, மறுகு - தெரு.
6. பெயர்ப்ப - அங்கும் இங்கும்; நோக்கி - பார்த்து.
7. மடந்தை - பெண் (பரத்தை); நுண் - நுண்ணிய; பல் - பல.

8. சுணங்கு - தேமல்; அணிவுற்ற - பரவியிருக்க; பூணள் - அணிகலன் களை அணிந்தவள்.
9. முயக்கிடை - தழுவுதலாலே; ஞெமிர்ந்த - நெறிப்புண்டு; சோர்குழை - உதிர்ந்த பூந்தளிர்கள்.
10. பழம்பிணி வைகிய - முன்பு உன்னோடு தங்கிக் கட்டுண்ட; தோள் இணை - இரட்டைத் தோள்கள்.
11. குழைந்த - கசங்கிய; கொடி - பூங்கொடி போன்ற (பரத்தை); முயங் கலள் - தழுவலிலிருந்து நீங்கியவள்.

தலைவி கூற்று

அகநானூறு 16 **சாகலாசனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையர் சேரியினின்றும் வந்த தலைமகன், ‘யாரையும் அறியேன்’ என்றாற்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையர் சேரியிலிருந்து வந்த தலைவன் ஊடல் கொண்டிருந்த தலைவியிடம், ‘யான் பரத்தையர் எவரையும் அறியேன்’ எனக் கூற, அது கேட்ட தலைவி அவனுக்கு உறவாய பரத்தையைத் தான் கண்டதாய்க் கூறியது.

நாயுடைய முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதின் அல்லி அயல்இதழ் புரையும்,
மாசுஇல் அம்கை, மணிமருள் அவ்வாய்,
நாவொடு நவிலா நகைபடு தீம்சொல்,
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனை,
தேர்வழங்கு தெருவில், தமியோன் கண்டே,
கூர்எயிற்று அரிவை குறுகினள், யாவரும்
காணுநர் இன்மையின், செத்தனள் பேணி,
பொலங்கலம் சுமந்த பூண்தாங்கு இளமுலை,
‘வருக மாள,என் உயிர்’எனப் பெரிதுஉவந்து
கொண்டனள் நின்றோள் கண்டு,நிலைச் செல்லேன்.

'மாசுஇல் குறுமகள்! எவன்பே துற்றனை?
நீயும் தாயை இவற்கு?'என யான்தான்,
கரைய, வந்து விரைவனென் கவைஇ,
களவுஉடம் படுநரின் கவிழ்ந்து, நிலம்கிளையா,
நாணி நின்றோள் நிலைகண்டு, யானும்
பேணினென் அல்லனோ– மகிழ்ந!– வானத்து
அணங்குஅருங் கடவுள் அன்னோள்நின்
மகன்தாய் ஆதல் புரைவதுஆங்கு எனவே?

தெளிவுரை

நீர்நாய் விளையாடுகின்ற நீரில் மலர்ந்துள்ள தாமரையின் விரிந்த இதழ் போன்ற குற்றமற்ற உள்ளங்கை, பவளம் போன்ற செவ்விய வாய், நாவினால் சரியாக உச்சரிக்க இயலாத மழலைப் பேச்சு ஆகியவற்றுடன், பொன் அணி தாங்கி, யாவராலும் விரும்பத்தக்க நம் புதல்வன் தெருவில் சிறுதேர் ஓட்டி விளையாடிக்கொண்டிருந்தான். அவன் தனியாய் இருப்பது கண்ட, கூரிய பற்களைக்கொண்ட ஒருத்தி, அவனருகில் சென்றாள். அப்போது அவளைப் பார்ப்பார் எவரும் இலர். அங்கு விளையாடிய குழந்தை, உன் சாயலில் இருப்பது கண்டு அவள், 'என் உயிரே, வருக!' எனக் கூறிப் பெருமகிழ்ச்சியோடு பொன்அணி பூண்ட தன் மார்புறத் தழுவிக்கொண்டு நின்றாள்.

அங்ஙனம் நின்ற அவளைக் கண்ட நான், விரைந்து அவளிடம் சென்று, 'மாசற்ற இளமகளே! நீயும் அவனுக்குத் தாய் ஒருத்தி தானே' என்றேன். அப்போது அவள், களவாட வந்த ஒருவன் களவாடிய பொருளுடன் அகப்பட்டு நிற்பதைப்போல் முகம் கவிழ்ந்து, கால்விரலால் நிலத்தைக் கீறி நாணத்துடன் நின்றாள். அவள் நிலை கண்ட நானும், 'வானத்துத் தெய்வம் ஒத்த நீ, என் மகனுக்குத் தாயாகும் தன்மை கொண்டவளே' என்று அவளைப் போற்றினேன் என்று தலைவி இகழ்ச்சிக் குறிப்புத் தோன்றக் கூறி ஊடினாள்.

கருத்து

'நேற்றுத்தான் உன் பரத்தையை இங்குக் கண்டு பேசினேன்; நீயோ, 'நான் யாரையும் அறியேன்' என்கிறாய்.'

விளக்கம்

பரத்தையிடமிருந்து வந்த தலைவன், தான் பரத்தையர் எவரையும் அறியேன் என்று பொய் கூறினான். வீதியில் விளையாடிய புதல்வன், தலைவனின் சாயலில் இருப்பது கண்ட பரத்தை, அவனை எடுத்து அணைத்து மகிழ்ந்தாள். அதனைக் கண்ட தலைவி, அப்பெண்ணும் தன் புதல்வனுக்கு ஒருவகையில் தாய்தான் என்றாள். அப்போது, கையும் களவுமாய்ப் பிடிபட்ட கள்வனைப் போல் அப்பெண் தலைகவிழ்ந்து நின்றாள். இவ்வாறிருக்கத் தலைவன் தான் யாரையும் அறியேன் என்று கூறியது இகழ்ச்சிக்குரியதெனத் தலைவி புலந்தாள்.

சொற்பொருள்

1. முதுநீர் - பழைய நீர்; கலித்த - தழைத்த.
2. அயல்இதழ் - அடுத்த இதழினை ஒத்த.
3. அம்கை - அகங்கை; மணி - பவளம்; மருள் - போன்ற; அவ்வாய் - அழகிய வாய்.
4. நாவொடு நவிலா - நாவால் நன்கு உச்சரிக்க இயலாத; நகைபடு - மகிழ்ச்சியைத் தரும்.
5. பொலந்தொடி - பொன் தொடி.
6. தமியோன் - தனியன்.
7. அரிவை - பெண் (பரத்தை); குறுகினள் - அருகினில் வந்தாள்.
8. செத்தனள் - (உன்னைப் போன்ற) தோற்றம் இருப்பதைக் கண்டு; செத்து - (உன் ஒப்புமை) கருதி.
9. பூண்தாங்கு - பூண்களை அணிந்த.
10. வருக என் உயிரென - என் உயிரே வருவாயாக என்று.
11. கொண்டனள் நின்றோள் - அணைத்துக்கொண்டு நின்றவளைக் கண்டு; நிலைச் செல்லேன் - நின்ற நிலையினின்று மீளேனாய்.
12. எவன்? - ஏன்?; பேதுற்றனை - மயங்கினை.
13. தாயை - தாயே.
14. கரைய - (நான் அவளிடம்) கூற; விரைவனென் கவைஇ - விரைந்து அவளை அணைத்து.
15. களவு - தாம் செய்த களவை; உடம்படுநரின் - உடன்பட்டு நிற்பார்போல; கவிழ்ந்து - தலைகவிழ்ந்து; நிலம் கிளையா - நிலத்தைக் (கால் விரலால்) கீறிக்கொண்டு.
16. நாணி - நாணத்துடன்.

17. பேணினென் - (அவளை) விரும்பினேன்; மகிழ்நன் - தலைவன்.
18. அணங்கு அருங் கடவுள் - வானத்து அரிய தெய்வம்; அன்னோள் - ஒத்த அவள்.
19. புரைவது எனவே - ஒக்கும் என எண்ணி.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 69 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் பெதும்பைப்பருவத்தாள் ஒரு பரத்தையைக் களவில் மணந்து ஒழுகுகின்றதனை அறிந்த தலைமகள், தனக்கில்லை என்று அவன் மறைத்துழிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பெதும்பைப்பருவத்தினளாகிய பரத்தை ஒருத்தியுடன் தலைவன் கூடி வாழ்வதை அறிந்த தலைவி, அதனை அவனிடம் கேட்ட பொழுது, 'அவ்வொழுக்கம் தன்னிடம் இல்லை' என்று தலைவன் மறுத்தான். அப்போது தலைவனிடம் தலைவி சொல்லியது.

கண்டனெம் அல்லமோ, மகிழ்நநின் பெண்டே?
பலர்ஆடு பெருந்துறை, மலரொடு வந்த
தண்புனல் வண்டல் உய்த்தென
உண்கண் சிவப்ப அழுதுநின் றோளே!

தெளிவுரை

மகிழ்நனே! பலரும் கூடியாடுகின்ற ஆற்றுப்பெருந்துறையில், மலர்களோடு பெருகி வந்த குளிர்ச்சி பொருந்திய நீர், தன் வண்டல் பாவையை அடித்துச் சென்றதென, மை தீட்டிய கண்கள் சிவக்க அழுது நின்றாளே பெதும்பைப்பருவத்துப் பெண் ஒருத்தி, அவள்தான் உன் பெண்டோ? அவளை நானும் அன்று கண்டேன்.

கருத்து

'உன் பெண்டு யாரென்பதை நான் அறிவேன். நீ மறைக்க வேண்டா.'

விளக்கம்

தன் தகா ஒழுக்கத்தை தன் மனைவி அறியாளெனத் தலைவன், 'நான் யாரையும் அறியேன்' என்றான். 'தன் வண்டல் பாவையை வெள்ளம் அடித்துச் செல்லக் கண் சிவப்ப அழுதுகொண்டு நின்ற உன் பெண்டினை நான் பார்த்தேன். ஆதலால், உண்மையை மறைக்க வேண்டா' எனத் தலைவனிடம் தலைவி கூறினாள்.

சொற்பொருள்

1. கண்டனெம் - கண்டோம், பார்த்தோம்; பெண்டு - காதற்பரத்தை.
2. பலர் ஆடு - பலர் நீராடுகின்ற.
3. வண்டல் - விளையாட்டுப்பாவை; உய்த்தென - கொண்டு சென்றதென்று.

புனலாட்டு

பண்டைக்காலத்தில் நிலவிய ஓர் இன்ப விளையாட்டு, புனல் ஆடுதல். குறிஞ்சியில் அருவியிலும், முல்லையில் ஆற்றிலும், நெய்தலில் கடலிலும், மருதத்தில் குளங்களிலும் நீராடுவர். ஆண்களும் பெண்களும் கைகோத்தும், தோளைப் பிடித்தும், புணைகளைப் பயன்படுத்தியும் விளையாடும் இன்ப விளை யாட்டு உடலுக்குத் தூய்மை தந்து உள்ளத்தை மகிழ்விக்கும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 75 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையோடு புனலாடி வந்த தலைமகன் அதனை மறைத்துக் கூறியவழித் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

பரத்தையோடு புனலாடிவிட்டு வீடு திரும்பிய தலைவன், தான் புனலாட வில்லை என்று மறுத்தான். தோழி அவன் குற்றத்தை எடுத்துக் காட்டியது.

பலர்இவண் ஒவ்வாய், மகிழ்ந! அதனால்,
அலர்தொடங் கின்றால் ஊரே மலர
தொல்நிலை மருதத்துப் பெருந்துறை,
நின்னோடு ஆடினள், தண்புனல் அதுவே.

தெளிவுரை

மகிழ்நனே! (மலர்களைக்கொண்ட பழமையான மருத மரங்கள் செறிந்த) பெரிய துறையில் நீ ஒருத்தியொடு நீராடினாய். இல்லை என நீ மறுத்தாலும் அதனைக் கண்டவர் பலர். அதனால் அந்நிகழ்ச்சி ஊர்வாயுள் புகுந்து அம்பலமாயிற்று. நீ மறைத்தலால் என்ன பயன்?

கருத்து

'தலைவ! நீ பரத்தையொடு புனலாடியதைப் பலர் கண்டுள்ளனர்.'

குறிப்பு

தலைவன் பரத்தையோடு நீராடியதை மறுத்தாலும் அவன் ஊர் பேசுவதால் அஃது உண்மையென்றும், அதனால் அவன் அதனை மறுக்க இயலாது என்றும் தோழி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. இவண் - இங்கு; பலர் - (நீ நீராடியதைக் கண்டவர்) பலர்; ஒவ்வாய் - நீ அதை ஒத்துக்கொள்ள மாட்டாய்.
2. ஊரே - ஊரெல்லாம்; அலர் தொடங்கின்று - பழிச்சொல் கூறத் தொடங்கிற்று; மலர - பூக்களைக் கொண்ட.
3. தொல் நிலை மருதம் - பழமையான மருத மரங்கள்; பெருந்துறை - பெரிய துறையில்.
4. தண்புனல் - குளிர்ச்சி பொருந்திய நீரில்; நின்னோடு ஆடினாள் - உன்னோடு ஆடினாள்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 76 — **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையோடு புனலாடி வந்த தலைமகன் அதனை மறைத்துக் கூறியவழித் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

பரத்தையோடு புனலாடிவிட்டு வீடு திரும்பிய தலைவன், தான் அவ்வாறு ஆடவில்லை என்று மறுத்தான். தோழி அவன் குற்றத்தை எடுத்துக் காட்டியது.

> பைஞ்சாய்க் கூந்தல், பசுமலர்ச் சுணங்கின்
> தண்புனல் ஆடித்தன் நலம்மேம் பட்டனள்
> ஒண்தொடி மடவரல், நின்னோடு
> அந்தர மகளிர்க்குத் தெய்வமும் போன்றே.

தெளிவுரை

இளமை வாய்ந்த உன் பரத்தை பைஞ்சாய்க்கோரைபோல் நீண்ட கூந்தலையும், பசிய மலர் போன்ற பொன்னிறத் தேமலையும், ஒளி பொருந்திய வளையல்களையும் கொண்டிருந்தாள். அவள் உன்னோடு குளிர்ச்சி பொருந்திய நீர்நிலையில் நீராடிய மகிழ்ச்சியால் தன் நலம் மேம்பட வானத்து மகளிரும் வணங்கும் உயர்நிலையைப் பெற்றுச் சிறப்பெய்தினாள் என்று பலரும் கூறுவர். அப்படியிருக்க நீ நீராடியதை மறைப்பதேன்?

கருத்து

'ஊரறிந்த செயலைத் தலைவ! நீ மறைக்க முயல்கின்றாய்.'

குறிப்பு

தலைவனோடு புனலாடிய களிப்பால் பேரழகு பெற்றுச் சிறப்புற்றவளின் அழகைக் கண்டு அந்தர மகளிரும் மயங்கி அவள் நீருறை தெய்வமோ என்றெண்ணிப் பாராட்டினர் எனப் பரத்தையைப் புகழ்வதுபோல இகழ்ந்து பேசுகிறாள், தோழி.

பரத்தையோடு தொடர்பு கொண்ட நீ இங்கு எதற்கு வந்தாய் என்று கேட்டு அவனை ஏற்கத் தோழி மறுத்தனள்.

சொற்பொருள்

1. பைஞ்சாய்க் கூந்தல் - பைஞ்சாய்க் கோரைபோல் நீண்ட கூந்தலையும்; பசுமலர் - பசிய மலர்; சுணங்கு - தேமல்.
2. தண்புனல் ஆடி - (உன்னுடன்) குளிர்ச்சி பொருந்திய நீரில் விளையாடி; நலம் - தன் நிலை; மேம்பட்டனள் - உயர்ந்தனள்.
3. ஒண்தொடி - ஒளி பொருந்திய வளையல் அணிந்த; மடவரல் - இளமகள், உன் பரத்தை; நின்னோடு - உன்னோடு விளையாடியதால்.
4. அந்தர மகளிர்க்கு - விண்ணிலுள்ள அர மகளிர்க்கு; தெய்வமும் போன்று - தெய்வம் போன்றவள் ஆனாள். (தெய்வமோ என்று பாராட்டுகின்றனர்.)

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 71 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையரோடு புனலாடினான் எனக் கேட்டுப் புலந்த தலைமகள், தலைமகன் அதனை இல்லை என்று மறைத்தபோது சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையரோடு புனல் விளையாட்டு விளையாடினான். அதனைக் கேள்விப்பட்டுத் தலைவி ஊடல் கொண்டாள். தலைவன் அவ்வாறு ஆடவில்லை என்று மறுத்தபோது தலைவி சொல்லியது.

சூதுஆர் குறுந்தொடிச் சூர்அமை நுடக்கத்து
நின்வெங் காதலி தழீஇ நெருநை
ஆடினை என்ப, புனலே; அலரே
மறைத்தல் ஒல்லுமோ, மகிழ்ந?
புதைத்தல் ஒல்லுமோ, ஞாயிற்றது ஒளியே?

தெளிவுரை

உள் துளை பொருந்திய குறிய வளையல்களையும் அச்சத்தை ஏற்படுத்தும் அசைவினையும் கொண்ட உன் விருப்பத்திற்குரிய காதல் பரத்தையரைத் தழுவியவனாய் நேற்றுத்தான் நீராடினாய் என்று ஊரார் கூறுகின்றனர். சூரிய ஒளியை மறைக்க இயலுமா? இயலாது. அதுபோல நீ பரத்தையரோடு புனலாடியதுபற்றி ஊரார் பேசும் பழிச்சொற்களையும் மறைக்க இயலாது!

கருத்து

'மகிழ்ந! உன் பொய்யுரை வேண்டா. உண்மை அறிவோம்.'

சொற்பொருள்

1. சூதுஆர் - உள்துளை பொருந்திய; குறுந்தொடி - குறிய வளையல்; சூர் - அச்சம்; நுடக்கம் - அசைதல்.
2. நெருநை - நேற்று.
3. அலர் - பழிச்சொல்.
4. ஒல்லுமோ - இயலுமோ?
5. புதைத்தல் - மறைத்தல்.

தலைவி கூற்று

அகநானூறு 6 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வந்த தலைமகற்குக் கிழத்தி கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையுடன் சென்று நீராடிவிட்டுத் திரும்பினான். அவன் தலைவியைப் பலவாறு பாராட்டினான். தலைவியோ அவன் பரத்தையோடு நீராடிய செய்தியை அறிந்தமையால் ஊடல் கொண்டு கூறியது.

அரிபெய் சிலம்பின் ஆம்பல்அம் தொடலை,
அரம்போழ் அவ்வளைப் பொலிந்த முன்கை,
இழைஅணி பணைத்தோள் ஐயை, தந்தை,
மழைவளம் தரூஉம் மாவண் தித்தன்,
பிண்ட நெல்லின் உறந்தை ஆங்கண் –
கழைநிலை பெறாஅக் காவிரி நீத்தம்,
குழைமாண் ஒள்இழை நீவெய் யோளொடு,
வேழ வெண்புணை தழீஇ, பூழியர்
கயம்நாடு யானையின் முகன்அமர்ந் தாஅங்கு,
ஏந்துஎழில் ஆகத்துப் பூந்தார் குழைய,
நெருநல் ஆடினை, புனலே, இன்றுவந்து,
'ஆகம் வனமுலை அரும்பிய சுணங்கின்,
மாசுஇல் கற்பின், புதல்வன், தாய்'என,
மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றி,எம்
முதுமை எள்ளல்,அஃது அமைகும் தில்ல,
சுடர்ப்பூந் தாமரை நீர்முதிர் பழனத்து,
அம்தூம்பு வள்ளை ஆய்கொடி மயக்கி,
வாளை மேய்ந்த வள்எயிற்று நீர்நாய்,
முள்அரைப் பிரம்பின் மூதரில் செறியும்,
பல்வேல் மத்தி, கழாஅர் அன்னஎம்
இளமை சென்று தவத்தொல் லஃதே,
இனிமைஎவன் செய்வது, பொய்ம்மொழி, எமக்கே?

தெளிவுரை

பரல்கள் கொண்ட சிலம்புகள் ஒலிக்க, ஆம்பலால் தொடுக்கப் பட்ட அழகிய மாலை கழுத்தில் அசைய, அரத்தினால் அராவப்பட்டு ஆக்கப்பட்ட அழகிய வளைகள் முன்கையில் பொலிய, அணிகலன்கள் அணிந்த பருத்த தோள்களைக் கொண்ட ஐயை என்பவளுக்குத் தித்தன் என்பான், தந்தை. அவன் மழைபோல வழங்கும் வள்ளல் தன்மை கொண்டவன். அவனுக்குரிய நெல்வளம் மிக்க உறையூரில் ஓடக்கோலும் நிலை பெறாமைக்குக் காரணமான வெள்ளம் மிகுந்த நீரில், குழை முதலாகிய மாண்புறும் ஒளிபொருந்திய அணிகளைக் கொண்ட பரத்தையரோடு, நீ வேழக்கரும்பின் தெப்பத்தைத் தழுவிக்கொண்டு, பூழி நாட்டாரின் குளத்தில் இன்பமாய் விளையாடும் களிறும் பிடியும் போல, மிகவும் முகமலர்ச்சி யுடன், உன் மார்பிலுள்ள மலர்மாலையின் அழகு கெட நேற்றுப் புனலாடினாய்.

இன்று இங்கு வந்து, என்னிடம், "அழகிய முலையில் அரும்பி யுள்ள தேமலையும் குற்றமற்ற கற்பினையும் கொண்டவளே! நல்ல புதல்வனுக்குத் தாயே!" என்று வஞ்சனை பொருந்திய பொய்ம் மொழியினைப் பலமுறை வணங்கிக் கூறுகிறாய்! எம் முதுமையை இவ்வாறு இகழாதே!

ஒளி வீசும் அழகிய தாமரை மலர்ந்துள்ள நீர் நிறைந்த வயலில், அழகிய உள்துளை உள்ள வள்ளையின் மெல்லிய கொடிகளை உழக்கி, வாளை மீன்களைப் பிடித்துத் தின்ற கூரிய பற்களைக் கொண்ட நீர்நாய், முள்கள் பொருந்திய தண்டினைக் கொண்ட பிரம்பினது பழைய தூறுகளில் நிம்மதியாய்த் தூங்கும். அத்தகைய வளமான இடங்கள் பலவற்றை உடையவனும், வேற்படை வீரனுமான மத்தி என்பானது கழார் என்னும் ஊரினைப் போன்று இன்பம் தருகின்ற என் இளமை கழிந்துபோய் மிகப் பழையதாயிற்று.

கருத்து

'நேற்றுப் பரத்தையோடு புனலாடினாய்; இன்று இங்கு வந்து என்னிடம் இன்மொழி பேசுகிறாய். உன் பொய்ம்மொழிகள் எமக்கு இனி இனிமை தாரா.'

விளக்கம்

"தித்தனின் உறையூர் நகரில், காவிரி வெள்ளத்தில் நீ விரும்பியவளோடு நேற்றுப் புனலாடினாய். இன்று என்னிடம் வந்து, 'குற்றமற்ற கற்பினைக் கொண்டவளே! நம் புதல்வனுக்குத் தாயே!' எனப் பொய்ம்மொழி கூறி என் மேல் அன்பு கொண்டவன் போல மொழிகிறாய்; என் முதுமையை இகழாதே! என் இளமை கழிந்து பழமையாயிற்று. இனி உன் பொய்ம்மொழியால் பயனேதுமில்லை" என்று தலைவி சினந்து கூறினாள்.

உள்ளுறை

வாளை மீனுக்குக் காவலாய் இருந்த வள்ளைக் கொடியை நீர்நாய் நெகிழ வைத்து, அங்கிருந்த மீன்களை உண்டு, பிரம்புத் தூரிலே சென்று தங்கியது. அதுபோலத் தலைவன் பரத்தைக்குக் காவலாயிருந்த தாய் முதலியோரை நெகிழ வைத்து, பரத்தையிடம் இன்பத்தைத் துய்த்து, கடைசியில் தங்குதற்கு இல்லத்திற்கு வந்திருக்கிறான் என்பது உள்ளுறைப் பொருளாகும்.

குறிப்பு

1. காவிரி பாயும் நெல்வளம் மிக்க உறையூரைத் தித்தன் என்பவன் ஆண்டான். அவன் ஐயை என்பவளுக்குத் தந்தை.

2. கழார் என்பது வேற்படை வீரனான தித்தனுடைய ஊர். அது மிகவும் நீர்வளம் பெற்று அழகுடன் திகழ்வது.

3. யானைகள் இன்பமாய் விளையாடுமளவிற்கு ஆழமும் பரப்பும் கொண்ட குளங்கள் பூழிநாட்டாரின் ஊர்களில் இருந்தன.

சொற்பொருள்

1. அரி - பரல்; அம் - அழகிய; தொடலை - மாலை.
2. போழ் - அரியப்பெற்ற; பொலிந்த - விளங்கிய.
3. இழையணி - அணிகலன் அணிந்த; பணை - பருத்த.
4. மழை வளம் தரூஉம் - மழை வளம்போலத் தரும்; மாவண் - மிகுந்த வள்ளல் தன்மை கொண்ட.
5. பிண்டம் - குவியல்; உறந்தை - உறையூர்; ஆங்கண் - அவ்விடத்தே.
6. கழை - ஓடக்கோல்; நிலைபெறா - நிலை பெறாத; நீத்தம் - வெள்ளம்.

7. குழை - காதணி; ஒள்இழை - ஒளி பொருந்திய அணிகலன்; வெய்யோள் - விரும்பப்பட்டவள்.
8. வேழம் - வேழக்கரும்பு; வெண்புணை - வெள்ளிய தெப்பம்; தழீஇ - தழுவிக்கொண்டு; பூழியர் - பூழி நாட்டார்.
9. கயம் - குளம்; முகன்அமர்ந்து - முகம் விரும்பி.
10. ஏந்துஎழில் - உயர்ந்த அழகிய; ஆகம் - மார்பு; பூந்தார் - பூமாலை; குழைய - அழகு கெட.
11. நெருநல் - நேற்று.
12. ஆகம் - மார்பு; சுணங்கு - தேமல்.
13. புதல்வன் தாய் - தலைவி.
14. சாயினை - வணங்கி; பயிற்றி - கூறி.
15. எள்ளல் - இகழ்ச்சி.
16. சுடர்ப் பூ - ஒளி வீசும் அழகிய தாமரை; நீர் முதிர் - மிகுந்த நீர்.
17. அம்தூம்பு - அழகிய உள்துளை; மயக்கி - உழக்கி.
18. வாளை - வாளை மீன்; வள்எயிறு - கூரிய பற்கள்.
19. முள்அரை - முள்கள் பொருந்திய; மூது அரில் - பழைய தூறு.
21. தவ - மிகவும்; தொல்அஃதே - பழமை ஆயிற்று.
22. இனி உன் பொய்ம்மொழி எங்கட்கு இனிமை செய்வது எங்ஙனம்?

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 80 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தன்னையொழியப் புதுப்புனலாடித் தாழ்த்து வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை உடனழைத்துப் போய் அவளுடன் நீராடி மகிழாமல், தான் மட்டும் தனியே சென்று, அங்கு நீராடிய பரத்தையருடன் புனலாடிக் காலம் கடந்து வீடு திரும்புகிறான், தலைவன். அதனால் அவனொடு ஊடல் கொண்டு தலைவி சொல்லியது.

புலக்குவேம் அல்லேம்; பொய்யாது உரைமோ;
நலத்தகு மகளிர்க்குத் தோள்துணை ஆகி,
தலைப்பெயற் செம்புனல் ஆடித்
தவநனி சிவந்தன, மகிழ்நநின் கண்ணே.

தெளிவுரை

மகிழ்நனே! என்னைக் காட்டிலும் நலத்தால் சிறந்தவர், உன் பரத்தையர். அவர்கள் நீராடுவதற்கு உன் தோள்கள் துணையாகி யிருக்கின்றன. அவர்களோடு சேர்ந்து முதல்மழையால் திரண்ட சிவந்த வெள்ளத்தில் நீராடி உன் கண்கள் மிகவும் சிவந்துள்ளன. நான் உன்னோடு ஊடல் கொள்ள மாட்டேன்; உண்மையை மறைக்காமல் கூறு!

கருத்து

'தலைவ! நீ பரத்தையரோடு புதுப் புனலாடிக் களித்து வந்திருக்கிறாய் அன்றோ? உண்மையைச் சொல்.'

விளக்கம்

தலைவன் பரத்தையரோடு நீராடவில்லை என்று மறுத் தாலும், செம்புனலாடிச் சிவந்த அவன் கண்கள் அவன் செயலை வெளிப்படுத்திவிடுகின்றன. அவன் கூறும் பொய்யே தலைவி தலைவன்மேல் ஊடல் கொள்ளக் காரணமாகிவிடுகிறது.

சொற்பொருள்

1. புலத்தல் - ஊடல் கொள்ளுதல்.
2. நலத்தகு மகளிர் - பரத்தையர்; தோள் துணை ஆகி - தோளுக்குத் தெப்பமாகி.
3. தலைப்பெயல் - முதல்மழை; செம்புனல் - சிவந்த நீர்.
4. தவநனி - மிக மிக.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 64 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் பரத்தையோடு புனலாடினான் என்பதறிந்த தலைமகள், அவன் மறைத்துழிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையோடு நீர் விளையாட்டு விளையாடினான் என்பதைத் தலைவி அறிந்தாள். தலைவன் அதனை மறைத்தபோது தலைவி சொல்லியது.

அலமரல் ஆயமோடு அமர்துணை தழீஇ
நலமிகு புதுப்புனல் ஆடக் கண்டோர்
ஒருவரும் இருவரும் அல்லர்;
பலரே தெய்யஎம் மறையா தீமே.

தெளிவுரை

தலைவனே! எப்போதும் ஆயமகளிர் சுற்றிச் சூழ்ந்து கொண்டிருக்கும் பரத்தையை நீ விரும்பி அவளைத் தழுவிக் கொண்டு புதுப்புனல் ஆடியுள்ளாய்; அதனைக் கண்டவர் ஓரிருவர் அல்லர்; மிகப்பலர். ஆதலால், அதனை நீ எமக்கு மறைக்காதே!

கருத்து

'பரத்தையோடு நீராடிய நீ அதனை என்னிடம் மறையாதே.'

சொற்பொருள்

1. அலமரல் - மனச்சுழற்சி; ஆயம் - விளையாட்டுத்தோழியர்; அமர் - விருப்பம்; துணை - பரத்தை.
4. எம் மறையாதீம் - எமக்கு மறைக்காதே.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 53 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் தன்னுடன் போய்ப் புனலாடியவழி, 'இது பரத்தையருடன் ஆடிய துறை' என நினைந்து பிறந்த மெலிவை மறைத்தமையை உணர்ந்த தலைமகன், மனைவயிற் புகுந்துழி, 'தெய்வங்கள் உறையும் துறைக் கண்ணே நாம் ஆடியதனால் பிறந்ததுகொல் நினக்கு இவ்வேறுபாடு?' என்று வினாயினாற்கு அவள் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியுடன் சென்று புனலாடினான். அத்துறை, முன்னர்த் தன் கணவன் பரத்தையருடன் ஆடியது என்பதைத் தலைவி நினைவு கூர்ந்தாள்; ஆதலின், உளம் வருந்தினாள்; ஆயின், அதை வெளிக்காட்டாது மறைத்தாள். அதனை உணர்ந்த தலைவன், வீட்டுக்குத் திரும்பியபின், 'நீர்த்துறைக்கண் உறையும் தெய்வம் தீண்டியதால் முக வாட்டமுற்றாயோ?' என்று தலைவியிடம் கேட்டான். அதற்கு விடையாகத் தோழி, 'அவ்வாறன்று; நின் ஒழுக்கத்தினால் முகம் வாடியது' எனக் கூறியது.

துறைஎவன் அணங்கும்யாம் உற்ற நோயே?
சிறைஅழி புதுப்புனல் பாய்ந்தெனக் கலங்கிக்
கழனித் தாமரை மலரும்
பழன ஊர!நீ உற்ற சூளே.

தெளிவுரை

புதுப்புனல் கரையை உடைத்துப் பாய்ந்ததனால் கழனியில் உள்ள தாமரை மலர் கலக்கமுற்று மலரும் பழனங்களைக் கொண்ட ஊரனே! இத்துறையிலுள்ள தெய்வம் எமக்குத் துன்பம் அளிக்கக் காரணம் ஒன்றுமில்லை. நீ எம்மிடம் செய்த சூளுரையே யாம் அடைந்த துன்பத்திற்குக் காரணமாகும்.

கருத்து

'தலைவ! சூள் பொய்க்கும் உன்னைத் தெய்வம் வருத்தாதிருக்க வேண்டும்.'

விளக்கம்

தலைவியை முதலில் கூடிய பொழுது தெய்வத்தைச் சாட்சியாய்க் கூறி 'உன்னை என்றும் பிரியேன்' என்று சூள் உரைத்தாய். இப்போது அவளைப் பிரிந்து பரத்தையுடன் உறைகின்றாய். நீ உரைத்த சூளுரை பொய்த்தமையால் உன்னைத் தெய்வம் வருத்துமோ எனக் கலங்கியே, நான் இத்துயருற்றுள்ளேன் என்று தோழி கூறினாள்.

சொற்பொருள்

1. துறை - துறைத்தெய்வம்; எவன் அணங்கும்? - எவ்வாறு வருத்தும்?
2. சிறை - தடை, அணை.
3. கழனி - வயல்.
4. பழனம் - வயல்; சூள் - உறுதிமொழி.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 31 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

முன்னொரு நாள் தன்னோடு புதுப்புனலாடுழி, 'இனிப் புறத்தொழுக்கம் விரும்பேன்' என ஆயத்தாரோடு சூளுற்ற தலைமகன், பின்பும் பரத்தைய ரோடு புனலாடத் தொடங்குகின்றான் என்பது கேட்ட தலைமகள், அவனுழையர் கேட்பத் தோழியிடம் சொல்லியது.

கூற்று விளக்கம்

முன்பொரு நாள் தலைவன் புதுப்புனலாடினான். அப்போது தலைவன், தலைவியைச் சூழ்ந்து நின்ற தோழியர் முன்னிலையில், 'இனிமேல் உங்களை விட்டுப் பிரிந்து சென்று பரத்தையோடு பழகுவதை விரும்ப மாட்டேன்' எனச் சூளுரைத்தான். ஆனால், மறுபடியும் தலைவன் பரத்தையொடு புனலாடத் தொடங்கிவிட்டான் எனத் தலைவி கேள்விப் பட்டாள். அந்நிலையில் தலைவி, தலைவனுக்கு நெருக்கமானவர்கள் காதில் விழுமாறு தோழியிடம் சொல்லியது.

அம்ம வாழி, தோழி! மகிழ்நன்
கடன்அன்று என்னும் கொல்லோ நம்ஊர்
முடம்முதிர் மருதத்துப் பெருந்துறை
உடன்ஆடு ஆயமோடு உற்ற சூளே?

தெளிவுரை

“தோழியே! நீ வாழ்க! நம் ஊரிலுள்ள நீராடும் பெருந்துறை, வளைந்து முதிர்ந்த மருத மரங்களைக் கொண்டது. மகிழ்நன் ஆகிய நம் தலைவன், அத்துறையில் நம்மோடு புனலாடிய ஆயத்தார் அறியச் செய்த சூளுரையினை மறவாது கடைப் பிடித்தல் தன் கடமையன்று என்று அவன் இப்போது சொல் வானோ?” என்று தலைவனுக்கு நெருக்கமானவர் கேட்குமாறு தலைவி தோழியிடம் சொல்லியது.

கருத்து

தலைவன் தான் செய்த சூளுரையை மறந்து பரத்தையருடன் புனலாடத் தொடங்கிவிட்டான்.

சொற்பொருள்

2. கடன் - கடப்பாடு.
3. முடம் - வளைந்த; முதிர் - முதிர்ந்த; மருதம் - மருத மரம்.
4. சூள் - உறுதிமொழி.

பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 77 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

முன்னொரு ஞான்று தலைமகளோடு புனலாடினான் எனக் கேட்டு, ‘இவனுடன் இனி ஆடேன்’ என்று உட்கொண்ட பரத்தை, ‘புதுப்புனல் ஆடப் போதுக’ என்ற தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

முன்னொரு சமயம் தலைவன் தலைவியோடு புனலாடினான் என்பதைப் பரத்தை கேள்விப்பட்டாள். அதனால் மனம் மாறுபட்டிருந்த அவள், தலைவன் 'புதுப்புனல் ஆட வருக' என்று அவளை அழைத்தபோது, அவள் அவனிடம் சொல்லியது.

அம்ம வாழியோ, மகிழ்ந!நின் மொழிவல்;
பேர்ஊர் அலர்எழ; நீர்அலைக் கலங்கி,
நின்னொடு தண்புனல் ஆடுதும்;
எம்மொடு சென்மோ; செல்லல்நின் மனையே.

தெளிவுரை

மகிழ்நனே! உனக்கு ஒன்று சொல்லுகிறேன், கேள்! இந்தப் பெரிய ஊரில் உள்ள எல்லாரும் அலர் தூற்றட்டும். நீரலைகள் மோதி நம்மைச் சுழற்றட்டும். நாம் இருவருமாய்க் கூடி இக் குளிர்ச்சி பொருந்திய புனலில் நீராடுவோம்; என்னோடு வா; உன் வீட்டிற்குச் செல்ல வேண்டா.

கருத்து

என்னை விரும்பின் உன் வீட்டுக்குச் செல்லுதலை நீ கைவிட வேண்டும்.

குறிப்பு

தான் புனலாட வர ஆயத்தமே என்று கூறுகிறாள், பரத்தை. அதைக் கேட்டுத் தலைவி துடிக்க வேண்டும் என்பதே பரத்தை பேச்சின் உள் நோக்கம்.

சொற்பொருள்

1. மகிழ்ந! - தலைவ!; நின் மொழிவல் - உனக்குச் சொல்வேன்.
2. பேரூர் - பெரிய ஊர்; அலர் - பழிச்சொல்; நீர்அலைக் கலங்கி - அலைத்தலால் நீர் கலங்க.
4. சென்மோ - வருக; செல்லல் - செல்லாதே; நின் மனை - உன் வீடு.

பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 78 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

முன்னொரு ஞான்று தலைமகளோடு புனலாடினான் எனக் கேட்டு, 'இவனுடன் இனி ஆடேன்' என்று உட்கொண்ட பரத்தை, 'புதுப்புனல் ஆடப் போதுக' என்ற தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

முன்னொரு சமயம் தலைவன் தலைவியோடு புனலாடினான் என்பதைப் பரத்தை கேள்விப்பட்டாள். அதனால் மனம் மாறுபட்டிருந்த அவள், தலைவன் 'புதுப்புனல் ஆட வருக' என்று அவளை அழைத்தபோது, அவள் அவனிடம் சொல்லியது.

கதிர்இலை நெடுவேல் கடுமான் கிள்ளி
மதில்கொல் யானையின், கதழ்புநெறி வந்த,
சிறைஅழி புதுப்புனல் ஆடுகம்;
எம்மொடு கொண்மோஎம் தோள்புரை புணையே.

தெளிவுரை

கிள்ளி என்னும் சோழன் ஒளி வீசும் இலை அமைந்த நீண்ட வேலையும், விரைந்து செல்லும் குதிரையையும் கொண்டவன். பகைவரின் மதிலை மோதி அழிக்கும் அவனது போர்க்களிறு போல, அணையை உடைத்தும், இடையிலுள்ள பொருள்களை வாரிக்கொண்டும் ஆற்றில் புகும் புதுவெள்ளத்தில் விளையாடு வோம்! தலைவனே! என்னோடு வருக! என் தோளை ஒத்த தெப்பத்தை என்னோடு சேர்ந்து பற்றிக்கொள்க.

கருத்து

'தலைவ! என்னுடன் புனலாட வருக!' எனப் பரத்தை அழைக்கிறாள்.

சொற்பொருள்

1. கதிர் - ஒளி; கடுமான் - மிகுந்த வேகம் கொண்ட குதிரை; கிள்ளி - சோழ மன்னன்.
2. மதில் - கோட்டை; கொல் - அழிக்கும்; கதழ்பு - விரைவு.

3. சிறை - தடை.
4. தோள் புரை புணை - தோளையொத்த தெப்பம்.

பரத்தை தோழி கூற்று

ஐங்குறுநூறு 79 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தன்னொடு கூடாது தனித்துப் புனலாடுகின்றான் எனக் கேட்டுத் தலைநின்று ஒழுகப்படாநின்ற பரத்தை, தானும் தனியே போய்ப் புனலாடினாளாக, அவளை ஊடல் தீர்த்தற்பொருட்டாகத் தலைமகன் சென்று தான் அறியான் போல நகையாடிக் கூறிக் கைப்பற்றியவழி அவள் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தன்னொடு சேராமல் தலைவன் தனியே நீராடுகிறான் எனத் தலைவனொடு நெருங்கிப் பழகிய பரத்தை கேள்விப்பட்டுத் தானும் தனியே சென்று நீராடினாள். அவள் ஊடலைத் தீர்ப்பதற்காகத் தலைவன் அவள் அருகே சென்றான்; அவளை அறியாதவன்போல், அவள் கையைப் பற்றி மகிழ்ச்சி தோன்றப் பேசினான். அது கேட்ட, பரத்தைக்குத் தோழி தலைவனிடம் சொல்லியது.

புதுப்புனல் ஆடி அமர்த்த கண்ணள்,
யார்மகள் இவள்?எனப் பற்றிய மகிழ்ந!
யார்மகள் ஆயினும் அறியாய்;
நீயார் மகளைஎம் பற்றி யோயே?

தெளிவுரை

மகிழ்நனே! 'புது வெள்ளத்தில் நீராடியதால் கண் சிவக்கப் பெற்றிருக்கிறாளே, இவள் யார்?' என்று கேட்டுக்கொண்டே அவள் கையைப் பற்றினாய். இவள் யார் மகளாகவேனும் இருக்கட்டும். இன்னார் என்று அறியாமல், இவள் கையைப் பற்றிய நீ யார் என்று முதலில் சொல்.

கருத்து

'உன்னை நான் அறியேன்' என்று கூறித் தலைவனை ஒதுக்க முயல்கிறாள், பரத்தைக்குத் தோழி.

விளக்கம்

அறிந்தும் அறியாதவன் போல நடிக்கின்ற தலைவனைப் போலவே, பரத்தைக்குத் தோழியும் அவனை யார் என்று அறிந்தும் அறியாதவள்போல, 'நீ யார்' என்று கேட்டு, பரத்தையின் கையை அவன் பற்றுவதைத் தடுக்கிறாள்.

சொற்பொருள்

1. அமர் - விருப்பம்.
2. பற்றிய - கையைப் பற்றிய; மகிழ்ந! - தலைவ!
3. அறியாய் - இன்னார் என்று அறியாய்.
4. நீ யார் மகனை? - நீ யார் மகன்?

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 72 — **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் புலவி நீக்கித் தன்னோடு புதுப்புனல் ஆட வேண்டிய தலைமகன், களவுக் காலத்துப் புனலாட்டு நிகழ்ந்ததனை, அவள் கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனொடு ஊடல் கொண்டிருந்தாள். அவள் ஊடலை நீக்கி, அவளுடன் புதுப்புனலாட விரும்பிய தலைவன், களவுக்காலத்தில் தானும் தலைவியும் புனலாடியதைத் தலைவி காதில் படுமாறு தோழியிடம் சொல்லியது.

வயல்மலர் ஆம்பல் கயில்அமை நுடங்குதழைத்
திதலை அல்குல், துயல்வரும் கூந்தல்,
குவளை உண்கண், ஏஎர் மெல்லியல்
மலர்ஆர் மலிர்நிறை வந்தெனப்
புனலாடு புணர்துணை ஆயினள், எமக்கே.

தெளிவுரை

"வயலில் மலர்ந்த ஆம்பலால் தொடுக்கப்பெற்ற மூட்டுவாய் கொண்ட தழையுடையினை இடையில் அசையுமாறு தலைவி அணிந்திருந்தாள். திதலை படர்ந்த அல்குலும், அசைந்தாடும் நீண்ட கூந்தலும், குவளை போன்ற மையுண்ட கண்களும் கொண்ட அழகிய மெல்லியலாளாகிய இவள், எங்கள் களவொழுக்கக் காலத்தில், பூக்களைச் சுமந்துகொண்டு புது வெள்ளம் வந்தபோது, நீராடலுக்கு என்னோடு இணைந்து துணையாய் இருந்தனள்" என்று தலைவி கேட்குமாறு, தலைவன் தோழியிடம் சொன்னான்.

கருத்து

'களவுக்காலத்தில் என்னோடு புனலாடிய தலைவி இப்போது புனலாட மறுக்க மாட்டாள்' எனத் தலைவன் தோழியிடம் கூறினான்.

குறிப்பு

ஊடல் கொண்ட தலைவி சினம் நீங்கித் தன்னோடு சேருவதற்காகத் தலைவன் பழைய நிகழ்ச்சியை நினைவூட்டுகின்றான்.

சொற்பொருள்

1. கயில் - மூட்டுவாய்; நுடங்குதல் - அசைதல்; தழை - தழையாடை.
2. திதலை - தேமல்; துயல்வரும் - அசைந்தாடும்.
3. ஏஎர் - அழகு.
4. ஆர் - நிறைவு; மலிர்நிறை - வெள்ளம்.
4. புணர் துணை - இணைந்த துணை.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 73 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் புலவி நீக்கித் தன்னோடு புதுப்புனல் ஆட வேண்டிய தலைமகன், களவுக்காலத்துப் புனலாட்டு நிகழ்ந்ததனை, அவள் கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனொடு ஊடல் கொண்டிருந்தாள். அவள் ஊடலை நீக்கி, அவளுடன் புதுப் புனலாட விரும்பிய தலைவன், களவுக்காலத்தில் தானும் தலைவியும் புனலாடியதைத் தலைவி காதில் படுமாறு தோழியிடம் சொல்லியது.

வண்ண ஒண்தழை நுடங்க, வால்இழை
ஒண்ணுதல் அரிவை பண்ணை பாய்ந்தெனக்
கள்நறும் குவளை நாறித்
தண்ணென்(று) இசினே பெருந்துறைப் புனலே.

தெளிவுரை

"அழகும் நிறமும் அமைந்த தழையாடை அசைந்தாட, தூய அணிகளையும் ஒளிவீசும் நெற்றியையும் கொண்ட தலைவி நீர் விளையாட்டின்போது பெருந்துறைப்புனலில் பாய்ந்தாள். அதனால் அந்த நீர், இவள் கண் போன்ற நறிய குவளைமலரின் மணம் போலக் கமழப் பெற்றுக் குளிர்ச்சியினையும் கொண்டதாயிற்று" என்று தலைவன், தலைவி காதில் விழுமாறு தோழியிடம் கூறினான்.

கருத்து

'தோழி! தலைவி புலவி நீக்கி என்னுடன் புனலாட வருவாள்.'

குறிப்பு

இவள் நீரில் குதித்ததால் நீர் இவள் கண்ணின் சேர்க்கையால் குவளை மணத்தையும், இவள் மேனியின் தொடர்பால் குளிர்ச்சியையும் பெற்றது எனப் புகழ்ந்துரைக்கிறான், தலைவன். இதனால் மனம் பழைய நினைவில் தாவிச் சென்று மகிழ, தலைவியும் ஊடல் நீங்கித் தலைவனோடு புனலாடச் செல்வாள் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. வண்ணம் - நிறம்; ஒண்தழை - ஒள்ளிய தழை; வால்இழை - ஒளி பொருந்திய அணிகலன்.
2. பண்ணை - புனல் விளையாட்டிடம்.
3. குவளை நாறி - குவளைப் பூப்போல மணம் கமழ்ந்து.
4. தண்ணென்று - குளிர்ந்ததாயிற்று.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 74 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் புலவி நீக்கித் தன்னோடு புதுப்புனல் ஆட வேண்டிய தலைமகன், களவுக் காலத்துப் புனலாட்டு நிகழ்ந்ததனை, அவள் கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனொடு ஊடல் கொண்டிருந்தாள். அவள் ஊடலை நீக்கி, அவளுடன் புதுப்புனலாட விரும்பிய தலைவன், களவுக்காலத்தில் தானும் தலைவியும் புனலாடியதைத் தலைவி காதில் படுமாறு தோழியிடம் சொல்லியது.

விசும்புஇழி தோகைச் சீர்போன் றிசினே
பசும்பொன் அவிர்இழை பைய நிழற்ற,
கரைசேர் மருதம் ஏறிப்
பண்ணை பாய்வோள் தண்நறுங் கதுப்பே.

தெளிவுரை

"பொன்நகைகள் விட்டுவிட்டு ஒளி செய்ய, கரையைச் சேர்ந் திருந்த மருத மரத்தில் ஏறி, அங்கிருந்து, தலைவி நீர் விளையாட் டிடத்தில் குதித்தாள். அவ்வாறு குதித்தபோது அவளது குளிர்ச்சி பொருந்திய நறிய கூந்தலானது வானத்திலிருந்து கீழிறங்கும் மயிலின் நீண்டு விளங்கும் தோகைபோலச் சீர் பெற்றுத் தோன்றியது" எனத் தலைவி கேட்குமாறு தலைவன் தோழியிடம் கூறினான்.

கருத்து

'தோழி! களவுக் காலத்துப் புனலாடியபோது அழகிய மயில் போலும் காட்சியளித்த தலைவியை நான் மறப்பேனா?'

குறிப்பு

களவுக் காலத்தில் தலைவன் இன்பம் துய்ப்பதற்குத் தலைவியின் நீர் விளையாட்டுப் பயன்பட்டது. அந்த நிகழ்ச்சியின் நினைவு இப்பொழுதும் பயன்பட வேண்டும் என்று தலைவன் விரும்புகிறான்.

சொற்பொருள்

1. விசும்பு இழி - வானத்திலிருந்து இறங்குகின்ற; தோகை - மயில்; சீர் - அழகு.
2. அவிர் இழை - ஒளிவீசும் அணிகலன்; பைய - விட்டுவிட்டு; நிழற்ற - ஒளியைச் செய்ய.
3. மருதம் - மருத மரம்.
4. பண்ணை - நீர் விளையாட்டிடம்; நறும் - மணமுள்ள; கதுப்பு - கூந்தல்.

பரத்தை தலைமகற்குச் சொல்லியது.

பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 121 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பரத்தை தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன்னைக் கைவிட்டுத் தன் மனைக்குச் செல்ல விரும்புகின்றான் என்பதனைக் குறிப்பால் உணர்ந்த பரத்தை, தலைவனிடம் சொல்லியது.

கண்டிகும் அல்லமோ, கொண்கநின் கேளே?
முண்டகக் கோதை நனைய,
தெண்திரைப் பௌவம் பாய்ந்துநின் றோளே!

தெளிவுரை

கொண்கனே! உனக்கு உறவானவளை நன்கு கண்டுள்ளோம். அவள் கழிமுள்ளிச்செடியின் மலரையணிந்த தன் கூந்தல் நனைவதைப்பற்றியும் கவலைப்படாமல் தெளிந்த அலை கொண்ட கடல்நீரில் பாய்ந்து ஆடியதை நாங்கள் பார்த்தோம்.

கருத்து

'தலைவ! உன் தலைவியோடு நீ நீராடியதை நாங்கள் நேரில் கண்டோம்; நீ உன் மனைக்குச் செல்ல விரும்புகிறாய் என்பதறிந்தோம்' எனப் பரத்தை தலைவனிடம் கூறினாள்.

குறிப்பு

'கேள்' என்னும் சொல் மனைவியைக் குறிக்கிறது. மகளிர் கடலில் படிந்து ஆடும்போது முள்ளி மலரால் தொடுக்கப்பட்ட மாலையணிந்து ஒப்பனை செய்துகொண்டு ஆடுதல் மரபு.

தலைவி தன் கூந்தல் நனையப் பலரும் அறிய நீராடியதால், அவள் யார் என்பதை அறிந்துகொண்டதாய்ப் பரத்தை கூறுகிறாள்.

சொற்பொருள்

1. கண்டிகும் - பார்த்தோம்; கொண்க - தலைவ!; கேள் - தலைவி.
2. முண்டகம் - களிமுள்ளிச்செடிப்பூ; கோதை - மாலை.
3. தெண்திரை - தெளிந்த அலை; பௌவம் - கடல்.

பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 122 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பரத்தை தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன்னைக் கைவிட்டுத் தன் மனைக்குச் செல்ல விரும்புகின்றான் என்பதனைக் குறிப்பால் உணர்ந்த பரத்தை, தலைவனிடம் சொல்லியது.

கண்டிகும் அல்லமோ, கொண்கநின் கேளே?
ஒள்இழை உயர்மணல் வீழ்ந்தென,
வெள்ளாங் குருகை வினவு வோளே!

தெளிவுரை

தலைவ! உன்னோடு உறவு கொண்டவளைப் பார்த்தோம். மணலில் வண்டல் பாவையை வைத்து விளையாடும்போது ஒளி பொருந்திய அவள் அணிகலன்கள் அம்மணல்மேட்டில் வீழ்ந்தன. அவற்றைத் தேடிய அவள், அருகிருந்த வெள்ளாங் குருகுப் பறவையைப் பார்த்து, 'என் அணியைக் கண்டாயோ' என்று வினவியதைக் கேட்டோம்.

கருத்து

'உன் இல்லக்கிழத்தி அறிவு முதிராப் பேதை; அவள் உனக்கு இன்பம் தரத்தக்கவள் அல்லள்.'

குறிப்பு

வெள்ளாங்குருகு அணிகலனைத் தேடித் தாராது. அதுபோல, அவளும் உனக்கு உரிய இன்பம் தரத்தக்கவள் அல்லள் என்பதை அறிந்துகொள்.

சொற்பொருள்

2. ஒள்இழை - ஒளி பொருந்திய அணிகலன்.
3. வெள்ளாங்குருகு - ஒரு வகைப் பறவை.

பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 123 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பரத்தை தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன்னைக் கைவிட்டுத் தன் மனைக்குச் செல்ல விரும்புகின்றான் என்பதனைக் குறிப்பால் உணர்ந்த பரத்தை, தலைவனிடம் சொல்லியது.

கண்டிகும் அல்லமோ, கொண்கநின் கேளே?
ஒண்ணுதல் ஆயம் ஆர்ப்ப,
தண்ணென் பெருங்கடல் திரைபாய் வோளே!

தெளிவுரை

கொண்க! ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்ட தன் தோழியர் மகிழ்ந்து ஆரவாரிக்க, குளிர்ச்சி பொருந்திய பெரிய கடலில் பாய்ந்து நீராடிய உன் அன்புக்குரிய காதலியை நாங்கள் கண்டோம்.

கருத்து

'ஆயத்தார் ஆரவாரிக்கக் கடலாடிய உன் காதலியைக் கண்டோம்; பிள்ளைமைத்தன்மை மாறாத அவளால் உனக்கு இன்பம் தர இயலாது; நீ உன் வீடு செல்வதால் பயனில்லை.'

விளக்கம்

அலையிலே பாய்ந்தாடுவாளை ஊக்கப்படுத்தும் முறையில் கரையிலுள்ள தோழியர் மகிழ்ச்சி ஆரவார ஒலி எழுப்ப, அந்த ஒலி எம் கவனத்தையும் ஈர்க்க நான் அவளைக் காண நேர்ந்தது!

குறிப்பு

தோழியர் கூட்டம் ஆரவாரம் செய்ய நீராடும் தலைவியின் பிள்ளைமைத் தன்மையைச் சுட்டிப் பரத்தை நகையாடுகிறாள்.

சொற்பொருள்

2. ஆயம் - விளையாட்டுத் தோழியர்; ஆர்ப்ப - ஒலிப்ப.
3. திரை - அலை; பாய்வோள் - பாய்ந்து நீராடியவள்.

பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 124 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பரத்தை தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன்னைக் கைவிட்டுத் தன் மனைக்குச் செல்ல விரும்புகின்றான் என்பதனைக் குறிப்பால் உணர்ந்த பரத்தை, தலைவனிடம் சொல்லியது.

கண்டிகும் அல்லமோ, கொண்கநின் கேளே?
வண்டற் பாவை வௌவலின்,
நுண்பொடி அளைஇக் கடல்தூர்ப் போளே!

தெளிவுரை

கொண்கனே! கரையில் தான் உருவாக்கி விளையாடிய வண்டல் பாவையைக் கடல் அலை ஊர்ந்து அடித்துச் சென்று விட்டதால் சினங்கொண்டு, நுண்மையான பொடிமணலை வாரி எறிந்து கடலைத் தூர்க்க முனைந்தவள் உன் தலைவி என்று நாம் கண்டுகொண்டோம்.

கருத்து

'தலைவி உனக்கு இன்பமளிக்கும் தகுதியில்லா இளையவள்; நீ வீடு சென்று என்ன பயன்?'

விளக்கம்

பெரிய கடலைத் தன் சிறிய கையால் அள்ளித் தூவும் மணலால் தூர்க்க இயலாது என்று அறிய இயலாத மிகவும் இளையவள் எனத் தலைவியின் இளமையைப்பற்றிக் கூறி எள்ளி நகையாடுகின்றாள், பரத்தை.

சொற்பொருள்

2. வௌவலின் - கைக்கொள்ளலின்.
3. நுண்பொடி - நுண்ணிய மணல்; அளைஇ - தூவி; தூர்த்தல் - மூடுதல்.

பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 125 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பரத்தை தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன்னைக் கைவிட்டுத் தன் மனைக்குச் செல்ல விரும்புகின்றான் என்பதனைக் குறிப்பால் உணர்ந்த பரத்தை தலைவனிடம் சொல்லியது.

கண்டிகும் அல்லமோ, கொண்கநின் கேளே?
தெண்திரை பாவை வௌவ,
உண்கண் சிவப்ப அழுதுநின் றோளே!

தெளிவுரை

தலைவ! உன் காதலி உருவாக்கிய வண்டல் பாவையைக் கடல் அலைகள் அடித்துச் சென்றன. அதற்காக மையுண்ட கண்கள் சிவக்குமாறு அவள் அழுதாள். அதனை நாங்கள் கண்டோம்.

கருத்து

'தலைவி பேதைமை மிக்கவள்; அவள் உனக்கு ஏற்றவளாகாள்.'

குறிப்பு

தான் உருவாக்கிய வண்டல் பாவையை அலை அழித்துவிட்டால் மீண்டும் ஒன்றனை அமைத்துக்கொள்ளலாம் என்னும் அறிவின்றி அறியாமையால் அழுதுகொண்டிருக்கும் தன்மையளாய்த் தலைவி இருக்கின்றாளே! இவள் எவ்வாறு உனக்கு ஏற்றவளாவாள் எனப் பரத்தை, தலைவியைப் பழித்துக் கூறினாள்.

சொற்பொருள்

3. **உண்கண் - மையுண்ட கண்.**

பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 126 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பரத்தை தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன்னைக் கைவிட்டுத் தன் மனைக்குச் செல்ல விரும்பு கின்றான் என்பதனைக் குறிப்பால் உணர்ந்த பரத்தை, தலைவனிடம் சொல்லியது.

கண்டிகும் அல்லமோ, கொண்கநின் கேளே?
உண்கண் வண்டினம் மொய்ப்பத்
தெண்கடற் பெருந்திரை மூழ்கு வோளே!

தெளிவுரை

தலைவ! மை தீட்டிய தன் கண்களை மலரென மயங்கி வந்து வண்டுகள் மொய்க்க, அதனைப் பொறாது தெளிந்த கடலின் பெரிய அலைகளுக்கிடையே மூழ்குபவளாகிய உன் காதலியை நாங்களும் கண்டோம்!

கருத்து

'தலைவி அறியாப் பருவத்தினளாய் உள்ளாள். அவளிடம் நீ இன்பம் துய்ப்பது எவ்வாறு?'

விளக்கம்

தன் கண்ணில் மொய்க்கும் வண்டுகளைக் கையினால் ஓட்டலாம் என்பதை அறியாது, அவற்றை நீக்குதற்பொருட்டுக் கடலில் மூழ்கினமையால் தலைவி அறியாமை கொண்டவளாய் இருக்கிறாள் என்று பரத்தை எள்ளி நகையாடுகிறாள். இவ்வறி யாமை கொண்டவளிடம் நீ இன்பம் துய்ப்பது எவ்வாறு என்று அவள் தலைவனிடம் கேட்கிறாள்.

சொற்பொருள்

1. கண்டிகும் - கண்டோம்; கேள் - தலைவி.
3. தெண்கடல் - தெளிந்த நீரினைக் கொண்ட கடல்; திரை - அலை.

பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 127 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பரத்தை தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன்னைக் கைவிட்டுத் தன் மனைக்குச் செல்ல விரும்புகின்றான் என்பதனைக் குறிப்பால் உணர்ந்த பரத்தை, தலைவனிடம் சொல்லியது.

கண்டிகும் அல்லமோ, கொண்கநின் கேளே?
தும்பை மாலை இளமுலை
நுண்பூண் ஆகம் விலங்கு வோளே!

தெளிவுரை

தலைவ! தும்பை மாலை அணியப்பட்டிருப்பதும், இளமுலைகள் பொருந்தியிருப்பதும், நுண்ணிய அணிகலன்கள் அணியப்பட்டிருப்பதுமாகிய தலைவியின் மார்பினை நீ தழுவும்போது உடன்படாதவள்போல உன்னை விலக்கிச் சென்றவள்தான் அவள் என்று கண்டுகொண்டோம்!

கருத்து

'நீ இன்பம் துய்க்கும் பருவம் எய்தா இளமைத் தன்மையள், தலைவி. அவ்வாறிருக்க நீ ஏன் உன் இல்லம் செல்கிறாய்?'

விளக்கம்

அணைப்பினால் பெறும் இன்பத்தை அறியாத மிகுந்த இளம் பருவத்தினளாய் உன் தலைவி இருக்கிறாள். அத்தகைய இளையாளோடு நீ எவ்விதம் கூடி வாழ இயலும் எனப் பரத்தை கேட்கிறாள்.

சொற்பொருள்

2. தும்பை - தும்பைப் பூ.
3. நுண்பூண் - நுட்பமான அணிகலன்; ஆகம் - மார்பு; விலங்கு வோள் - விலக்குவோள்.

பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 128 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பரத்தை தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன்னைக் கைவிட்டுத் தன் மனைக்குச் செல்ல விரும்பு கின்றான் என்பதனைக் குறிப்பால் உணர்ந்த பரத்தை, தலைவனிடம் சொல்லியது.

கண்டிகும் அல்லமோ, கொண்கநின் கேளே?
உறாஅ வறுமுலை மடாஅ,
உண்ணாப் பாவையை ஊட்டு வோளே!

தெளிவுரை

தலைவ! உன் காதலி, பால் ஊறும் நிலை எய்தாத தன் வறிய முலையை, உண்ணாத மரப்பாவையின் வாயில் வைத்துப் பாலூட்டி விளையாடுகிறாள். அவளை நாங்கள் கண்டோம்!

கருத்து

'சிறுமியின் இயல்பு மாறாத நிலையினள், உன் மனைவி; அவளிடம் நீ இன்பம் துய்க்க இயலாது; இன்பம் துய்க்க நீ என்னிடமே இரு.'

விளக்கம்

பால் ஊறும் பருவம் எய்தாத தன் முலை கொண்டு, பொம்மைக்குப் பாலூட்ட முயல்வாள் என்றதால், தலைவி விளையாட்டுத்தன்மை நீங்கப்பெறாத பேதைப்பருவத்தாள் என்பது பெறப்பட்டது.

குறிப்பு

உன் மனைவி மிகவும் இளம் பருவத்தினள். ஆதலின், அவளிடம் காம இன்பம் நுகர விரும்புவது அறியாமையே ஆகும். ஆதலால், காமச் செவ்வி முழுமை பெற்றுள்ள என்னிடம் அதனை நுகர விரும்புவதே அறிவுடைமையாகும் எனப் பரத்தை குறிப்பிடுகிறாள்.

சொற்பொருள்

2. உறா - ஊறாத, பால் சுரக்காத; மடாஅ - மடுத்து, வாயை வைத்து.
3. உண்ணா - பால் உண்ணாத; பாவை - விளையாட்டுப்பொம்மை.

தோழி பாணனுக்கு வாயில் மறுத்தது.

தோழி கூற்று

நற்றிணை 90 **அஞ்சில் அஞ்சியார்**

திணை : மருதம்

கூற்று

தோழி தலைமகளுக்கு உரைப்பாளாய்ப் பாணனை நெருங்கி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தை இல்லம் சென்ற தலைவன், தலைவி தன்மீது கொண்டுள்ள சினத்தை நீக்குதற்காகப் பாணன் ஒருவனைத் தூதாய் அனுப்பினான். பாணன் கூறியதைக் கேட்ட தோழி, தலைவியிடம் சொல்லுபவள்போலப் பாணன் கூற்றை மறுத்துக் கூறியது.

ஆடுஇயல் விழவின் அழுங்கல் மூதூர்,
உடையோர் பன்மையின் பெருங்கை தூவா,
வறன்இல் புலத்தி எல்லித் தோய்த்த
புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்கமொடு
வாடா மாலை துயல்வர ஓடிப்
பெருங்கயிறு நாலும் இரும்பனம் பிணையல்
பூங்கண் ஆயம் ஊக்க, ஊங்காள்,
அழுதனள் பெயரும் அம்சில் ஓதி,
நல்கூர் பெண்டின், சில்வளைக் குறுமகள்
ஊசல் உறுதொழில் பூசல் கூட்டா
நயன்இல் மாக்களொடு கெழீஇப்
பயன்இன்று அம்மஇவ் வேந்துடை அவையே.

தெளிவுரை

"கூத்துகள் நடைபெறும் ஆரவாரம் கொண்ட இவ்வூரில் ஆடுபவர்கள் புனையும் ஆடைகளை ஓயாது துவைக்கும் வறுமையுற்ற வண்ணாத்தி, இரவில் தோய்த்துக் கஞ்சியிட்டு உலர்த்தித் தந்த சிறிய பூத்தொழிலைக் கொண்ட ஆடையை அணிந்து, பொன்னரி மாலை அசைந்து ஆடப் பனையின் கயிற்றால் கட்டப்பட்ட ஊஞ்சலில் பெதும்மைப்பருவப்பெண் ஒருத்தி ஏறி அமர்ந்தாள். மனைமாண்பில்லாத அவள் சிலவாகிய கூந்தலைக்கொண்ட இளம் பரத்தை ஆவாள். தோழியர் அவள் ஏறி இருந்த ஊஞ்சலை ஆட்ட, அதனைப் பொறாதவளாய் அழுதவாறே அங்கிருந்து அகன்று சென்றாள். அது வியப்பாய் உள்ளது. தலைவனே ஊசலை ஊக்கியிருந்தால் அவள் தலைவனோடு ஊடியிருக்க மாட்டாள். தலைவனும் அவளை நீங்கியிருக்க மாட்டான். அவள் அங்கே ஊடியமை யால் தலைவன் இங்கே வரத் தூதனுப்பியுள்ளான். அவன் இனி இங்கு வர வேண்டா" என்று தோழி பாணனும் கேட்குமாறு தலைவியிடம் கூறுகிறாள்.

கருத்து

'பாண! பரத்தை ஊடியதால் தலைவன் திரும்ப எண்ணியுள்ளான். அவன் தலைவியிடம் உண்மை அன்பு கொண்டவன் அல்லன். ஆதலின், அவன் பொருட்டு நீ இங்கு வரவேண்டா.

விளக்கம்

"அழகுறப் புனைந்துகொண்ட இளம்பரத்தை ஒருத்தி பனங்கயிற்றினால் கட்டப்பெற்றிருந்த ஊசல் ஒன்றில் ஏறி அமர்ந்தாள். தலைவன், பாணன் ஆகியோர் அங்கிருந்தனர். அப்போது பரத்தை அமர்ந்த ஊஞ்சலைத் தோழியர் ஆட்டி விட்டனர். தலைவன் ஊக்கிவிட வேண்டும் எனப் பரத்தை எதிர்பார்த்திருந்தாள். பாணன் முதலியோர் அருகிலிருந்ததால் தலைவன் அவ்வாறு செய்யவில்லை. அதனால் ஊடலுற்ற பரத்தை ஊசலில் ஆடாமல் இறங்கி அழுதுகொண்டு சென்று விட்டாள். அவள் ஊடியதனாலேயே தலைவன் இங்கு வந்துள் ளான்; இன்றேல் அவன் வந்திருக்க மாட்டான். அவன்

எப்போதுமே இங்கு வர வேண்டா" என்று தூது வந்த பாணன் அறியுமாறு தலைவியிடம் தோழி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. ஆடு இயல் - கூத்தாட்டு நிகழ்கின்ற; அழுங்கல் - ஆரவாரம்.
2. உடையோர் - உடையினை வெளுப்பதற்கு இடுவோர்; பன்மையின் - பலராதலின்; கைதூவா - கை ஓயாத.
3. புலத்தி - துணி துவைப்பவள்; எல்லி - இரவு.
4. புகாப் புகர் - கஞ்சிப்பசை; புன்பூ - சிறிய பூத்தொழில் கொண்ட; கலிங்கம் - ஆடை.
5. வாடா மாலை - பொன்னரி மாலை; துயல்வர - அசைய.
6. பெருங்கயிறு - பெரிய கயிற்றிலே; நாலும் - தொங்கும்; இரும் பனம் பிணையல் - பெரிய பனைநாரால் பின்னிப் பிணைக்கப்பட்ட ஊசல்.
7. ஊக்க - ஆட்ட; ஊங்காள் - ஆடாதவளாய்.
8. பெயரும் - செல்லும்.
9. நல்கூர் பெண்டு - பெண்மைத்தன்மையில் குறைவுபட்ட பெண்டிர்.
10. பூசல் கூட்டா - புலவி தீர்த்துக் கூட்டி வைக்காத.
11. நயன்இல் - அன்பில்லாத; மாக்கள் - பாணன் முதலியோர்; கெழீஇ - கூடியிருப்பது.
12. பயன் இன்று - பயன் இல்லை; அம்ம - கேட்பாயாக; வேந்து - தலைவன்; அவை - தலைவனுடன் இருப்பவர்.

தோழி கூற்று

நற்றிணை 291 **கபிலர்**

திணை : நெய்தல்

கூற்று

வாயிலாகப் புக்க பாணற்குத் தோழி தலைமகளது குறிப்பு அறிந்து நெருங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையை நாடிச் சென்ற தலைவன் மீண்டும் வீட்டுக்கு வந்து தலைவியோடு மகிழ்ச்சியாய் இருக்க விரும்பி, தலைவியின் சினம் தவிர்க்கப் பாணனைத் தூதாய் அனுப்புகிறான். தலைவியின் மனநிலையறிந்த தோழி, தூதாய் வந்த பாணனிடம் தலைவியின் நிலைபற்றிக் கூறியது.

நீர்பெயர்ந்து மாறிய செறிசேற்று அள்ளல்
நெய்த்தலைக் கொழுமீன் அருந்த, இனக்குருகு
குப்பை வெண்மணல் ஏறி, அரைசர்
ஒண்படைத் தொகுதியின் இலங்கித் தோன்றும்,
தண்பெரும் பௌவநீர்த் துறைவற்கு, நீயும்
கண்டாங்கு உரையாய்; கொண்மோ பாண!
மாஇரு முள்ளூர் மன்னன் மாஊர்ந்து,
எல்லித் தரீஇய இனநிரைப்
பல்ஆன் கிழவரின் அழிந்தஇவள் நலனே.

தெளிவுரை

பாணனே! மிகப்பெரிய முள்ளூர் மன்னனாகிய திரு முடிக்காரி குதிரைமீது ஏறிச் சென்று, இரவு நேரத்தில் கவர்ந்த தனால் பசுக்கூட்டத்தை இழந்து பசுவுக்கு உரிமையுடையவர் வருந்துவதுபோல, இவள் தன் அழகெல்லாம் அழிந்ததால் வருந்திக் கொண்டிருப்பதைக் கண்கூடாய்க் கண்டிருந்தும் நீ அதனைத் தலைவனிடம் உரைக்கவில்லை. குளத்திலுள்ள நீரெல்லாம் வற்றிய பின், செறிந்துள்ள சேற்றிலே உள்ள கொழுப்புமிக்க மீன்களைக் கவர்ந்து உண்பதற்காக, நாரைக் கூட்டம் வெண்மணல் மேட்டில் குவிந்திருக்கும் காட்சி, அரசரின் காலாட்படையினைப் போலத் தோன்றும். அத்தகைய பெரிய கடற்றுறையையுடைய தலைவனிடம் சென்று இவளது நலனைப்பற்றி உள்ளபடி கூறு! (கூறியிருந்தால் இது வரையில் அவன் வாராமல் இருப்பானா?)

கருத்து

பாணனே! தலைவனின் செயலால் தலைவி அடைந்துள்ள நலக் கேட்டினைக் கண்டது கண்டபடியே நீ தலைவனிடம் சொல்ல வேண்டும்.

விளக்கம்

“முள்ளூர் மன்னன் கவர்ந்து சென்ற பசுக்கூட்டங்களை இழந்து வருந்திய ஆயர்போலத் தலைவியும் தன் நலனெல்லாம் இழந்து வருந்தியிருக்கிறாள். அதனை நீயும் காணுகின்றாய். இனி, நேரே நீ தலைவனிடம் சென்று, இங்குக் கண்டதைக்

கண்டவாறே சொல். இங்கே நிற்பதில் பயனில்லை" என்று தோழி பாணனிடம் கூறினாள்.

குறிப்பு

"மீனை உட்கொள்வதற்காக நாரைகள் காத்திருப்பது போலத் தலைவனிடம் கிடைப்பதைச் சுருட்டுவதற்காகவே நீங்களெல்லாம் காத்திருக்கிறீர்களே அன்றி அவனுக்கு நலம் தேடுவோராய் இல்லை" என்று பாணனிடம் அவன் பொய்ம்மை வாழ்வைத் தான் உணர்ந்துள்ளவாறு தோழி உணர்த்தினாள்.

சொற்பொருள்

1. நீர்பெயர்ந்து - நீர் வற்றி; அள்ளல் - சேற்றுப்பகுதி.
2. நெய்த்தலை - நெய்ப்பசை கொண்ட.
3. குப்பை - மேடு; அரைசர் - அரசர்; தொகுதி - கூட்டம்.
4. இலங்கி - விளங்கி.
5. பௌவம் - கடல்.
6. கண்டாங்கு - கண்டது கண்டவாறே.
7. மா - குதிரை; முள்ளூர் மன்னன் - முள்ளூர்க்குரிய மன்னன் மலையமான் திருமுடிக்காரி; ஊர்ந்து - ஏறிச் சென்று.
8. எல்லி - இரவு; தரீஇய - கொண்டுவந்த.
9. ஆன் - பசு.

தோழி கூற்று

அகநானூறு 50 **கருவூப் பூதஞ்சாத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி, பாணனுக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையர் சேரியில் இருந்ததால் தலைவி வருந்தி, அதனைப் பிறர் காணாதவாறு மறைத்து ஒழுகினாள். அது கண்ட தோழி, தலைவியின் நிலையைத் தலைவனிடம் கூறுமாறு பாணனிடம் சொல்லியது.

கடல்பாடு அவிந்து, தோணி நீங்கி,
நெடுநீர் இருங்கழிக் கடுமீன் கலிப்பினும்,
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை தூற்றினும்,
மாண்இழை நெடுந்தேர் பாணி நிற்ப,
பகலும் நும்வயின் அகலா னாகிப்
பயின்றுவரும் மன்னே, பனிநீர்ச் சேர்ப்பன்,
'இனியே, மணப்பருங் காமம், தணப்பநீந்தி,
வாரா தோர்நமக்கு யாஅர்?' என்னாது,
மல்லல் மூதூர் மறையினை சென்று,
சொல்லின் எவனோ – பாண! 'எல்லி
மனைசேர் பெண்ணை மடிவாய் அன்றில்
துணைஒன்று பிரியினும் துஞ்சா காண்'என,
கண்நிறை நீர்கொடு கரக்கும்,
ஒண்நுதல் அரிவை,'யான் என்செய்கோ?' எனவே.

தெளிவுரை

"கடல்ஒலி அடங்கியது; தோணிகள் கடலிலிருந்து நீங்கிக் கரை சேர்ந்தன. மிக்க நீரினைக்கொண்ட உப்பங்கழிகளில் சுறா முதலிய கொடிய மீன்கள் செருக்கோடு திரிந்தன. கொடிய வாயைக்கொண்ட பெண்டிர் பழிச்சொல் கூறினர். இவற்றை யெல்லாம் பொருட்படுத்தாது, குளிர்ச்சி பொருந்திய நீரினைக் கொண்ட நம் நெய்தல் நிலத் தலைவன், களவுக் காலத்தில் மாட்சிமைப்பட்ட அணிகளைக் கொண்ட நெடிய தேரில் வந்து, காலம் கழிவதைப் பொருட்படுத்தாது பகலெல்லாம் பிரியாது தலைவியோடு கூடியிருந்து செல்வான்; இதுபோன்றே அடுத் தடுத்த நாள்களிலும் நிகழ்ந்தன. இப்பொழுது அது கழிந்தது.

"களவுக் காலத்துக்குரிய வேட்கை நீங்கியதால், இப்போது தான் தங்கியுள்ள இடத்திலிருந்து (பரத்தையர் இல்லத்திலிருந்து) கடந்து வரவியலாதவனாய் இருக்கிறான்.

"ஆயினும், அவன் நமக்கு உறவற்றவன் ஆகிவிட்டான் என்று தலைவி கருதாள்; இரவு நேரத்தில் தன் மனையைச் சார்ந்துள்ள பனை மரத்தில், 'மடித்த வாயினைக் கொண்ட அன்றில் பறவை களுள் ஒன்று சற்றே பிரியினும் மற்றொன்று தூங்காதிருப்பதைப்

பார்' என்று எனக்குக் காட்டி, தன் கண்களிலிருந்து பெருகும் கண்ணீரை நான் அறியாதவாறு மறைப்பாள். தோழியாகிய நான் அவளை எவ்வாறு தேற்ற இயலும்?

"வளப்பம் மிக்க பழைய ஊருக்குத் தலைவனிடம் நீ மறைவாய்ச் சென்று இதனைக் கூறினால் என்ன?" என்று தோழி பாணனிடம் கூறினாள். (பாணன் தலைவனிடம் சென்று இதனைக் கூற வேண்டும் என்பது தோழியின் கருத்து.)

கருத்து

தலைவன் பரத்தையர் சேரியில் தங்கிவிட்டதால் தலைவி வருந்தியிருந் தாள். அவ்வருத்தத்தை அவள் வெளிக்காட்டவில்லை. 'அவளது இந் நிலையைத் தலைவனிடம் சென்று நீ கூறவேண்டும்' என்று பாணனிடம் தோழி கூறினாள்.

விளக்கம்

காற்று வீசாமையால், பரதவர் பாய் விரித்து மீன் பிடிக்கக் கடலிற் செல்லாமல் வீட்டில் தங்கியிருந்தனர்; வழியில் உப்பங் கழிகளில் சுறா முதலிய கொடிய மீன்கள் திரிகின்றன; பெண்கள் பழிதூற்றுகின்றனர்; இவற்றுள் எதற்கும் அஞ்சாது தலைவன் களவுக் காலத்தில் அடுத்தடுத்து வந்து தலைவியைக் கண்டு மகிழ்ந்தும் மகிழ்வூட்டியும் சென்றான். கற்புக்காலமாகிய இப்பொழுது, அருகில் பரத்தை வீட்டில் இருந்தும் வந்து காணாதவனாய் இருக்கிறான். எனினும், இவன் உறவு நமக்கு எதற்கு என்று வெறுக்காத கற்பினைக் கொண்டவளாயிருக் கிறாள், தலைவி.

சொற்பொருள்

1. பாடு - ஒலி; அவிதல் - ஓய்தல், அடங்குதல்; நீங்கி - கடலில் செல்லாது ஒழிய.
2. நெடுநீர் - மிக்க நீர்; இருங்கழி - பெரிய உப்பங்கழி; கடுமீன் - சுறா முதலிய கொடுமையான மீன்கள்; கலிப்பினும் - செருக்கித் திரியினும்.
3. வெவ்வாய் - கொடிய வாய்; கௌவை - பழிச்சொல்.
4. மாண் இழை - மாட்சிமைப்பட்ட அணிகலன்; நெடுந்தேர் - உயரமான தேர்; பாணி - காலம் தாழ்த்து.

5. நும்வயின் - நும்மிடம்; அகலான் - பிரியாதவன்.
6. பயின்று வரும் - அடுத்தடுத்த நாள்களிலும் வருவான்.
7. மணப்பரும் காமம் - களவுக்காலத்தில் கூடுதற்குரிய வேட்கை; தணப்ப - நீங்குதலால்; நீந்தி வாராதோர் - கடந்து வாராதவர்.
8. என்னாது - என்று கருதாது.
9. மல்லல் - வளப்பம்; மூதூர் - பழைய ஊர்; மறையினை - மறைந்து.
10. எவனோ? - என்ன?; எல்லி - இரவில்.
11. மனைசேர் - வீட்டினைச் சார்ந்துள்ள; பெண்ணை - பனை மரம்; மடிவாய் - வளைந்த வாய்; அன்றில் - அன்றில் பறவை.
12. துஞ்சா - தூங்கா; காண் - காண்பாய்.
13. கரக்கும் - பிறர் அறியாமல் மறைக்கும்.
14. ஒண் நுதல் - ஒளி பொருந்திய நெற்றி; அரிவை - பெண் (தலைவி); என் செய்கோ? - என்ன செய்வேன்?

தோழி கூற்று

நற்றிணை 127 — **சீத்தலைச் சாத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

பாணற்குத் தோழி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையைப் பிரிந்து வந்த தலைவன், தலைவியின் ஊடலைத் தீர்க்கப் பாணனைத் தூதாய் விடுத்தான். பாணனைக் கண்ட தோழி வாயில் மறுத்துரைத்தது.

இருங்கழி துழைஇய ஈர்ம்புற நாரை
இறஎறி திவலையின் பனிக்கும் பாக்கத்து,
உவன்வரின், எவனோ பாண! பேதை
கொழுமீன் ஆர்கைச் செழுநகர் நிறைந்த
கல்லாக் கதவர் தன்ஐயர் ஆகவும்,
வண்டல் ஆயமொடு பண்டுதான் ஆடிய
ஈனாப் பாவை தலையிட்டு ஓரும்,
'மெல்லம் புலம்பன் அன்றியும்
செல்வாம்' என்னும் கான லானே!

தெளிவுரை

பாணனே! கொழுத்த மீனையுண்டு செழித்த எம் ஐயன்மார் தமது தொழிலன்றி வேறொன்றும் அறியாதவராய் மாளிகையில் உள்ளனர். அவர்கள் மிகுந்த சினம் கொண்டவர்கள். எனினும், பேதையளான எம் தலைவி, தன் தோழியரோடு விளையாடக் கருதி முன்னொரு காலத்தில் கடற்கரையில் தலைவனோடு சேர்ந்து விளையாடியபோது பயன்படுத்திய பாவைப் பொம்மையைத் தலையில் வைத்துக்கொண்டு, 'கடற்கரைத் தலைவனின்றியே விளையாடக் கடற்கரைக்குச் செல்வோம்' என்கின்றனள். கரிய கழியில் இரை தேடித் துழாவும் ஈரமான புறத்தைக் கொண்ட நாரை தன் சிறகுகளை உதறுதலால் தெறித்து விழும் குளிர்ச்சி பொருந்திய துளிகளால் நடுங்கும் எம் பாக்கத்திற்குத் தலைவன் வருதலால் என்ன பயன் விளையப் போகிறது? ஆகையால், அவன் இனி வருதல் வேண்டா!

கருத்து

'தலைவனின் முறையற்ற செய்கையால் தலைவி வெறுப்புற்றுள்ளனள். அவள் ஊடலைத் தணித்தல் அரிது; ஆதலால், தலைவன் வருகையால் சிறிதளவும் பயனில்லை' எனத் தோழி வாயில் மறுத்தாள்.

விளக்கம்

"பாண! கொழுத்த மீன்களைப் பிடித்தல் அன்றிப் பிற தொழில்களைக் கல்லாத பரதவர் மகள், தலைவி. உப்பங்கழிச் சேற்றினைத் துழாவி மீன் பிடிக்கும் நாரை, தன் சிறகினைச் சிலிர்த்து உதறுவதால் தெறித்து விழும் குளிர்ச்சி பொருந்திய நீர் எமது பாக்கத்தை நடுங்கச்செய்யும். அத்தகைய சூழலைக் கொண்ட கடற்கரையிலே முன்பொரு காலத்தில் தலைவனோடு மணல் வீடு கட்டி விளையாடிய தலைவி இப்போது தலைவனின்றியே சோலையில் சென்று விளையாடலாம் என்று கூறிவிட்டாள். இந்நிலையில் தலைவியைக் காண இந்தப் பாக்கத்துக்கு வருவதால் பயனொன்றும் இல்லை" எனக் கூறித் தலைவன் வர வேண்டா எனத் தோழி மறுத்துரைக்கிறாள்.

உள்ளுறை

கழியில் இரை துழாவும் நாரை தன் சிறகுகளை உதறுவதால் சிதறும் நீர்த்துளிகள் பாக்கத்தினை நடுங்கச்செய்யும் என்றது, பரத்தையோடு கூடியிருந்த தலைவன், 'யான் யாரையும் அறியேன்' என்றுரைத்த பொய்ம்மொழி பாக்கமெங்கும் பரவ, அஃது அங்கிருந்தோரை நடுங்கச்செய்யும் என்னும் குறிப்பின தாம்.

சொற்பொருள்

1. இருங்கழி - கரிய உப்பங்கழி; ஈர்ம்புறம் - நனைந்த மேற்புறம்.
2. இற எறி - சிறகுகளை உதறுவதால்; திவலை - நீர்த்துளி; பனிக்கும் - நடுங்கச் செய்யும்.
3. உவன் - இங்கு; எவனோ - என்ன பயன்?
4. ஆர்கை - உண்ணுதல்.
5. கதவர் - சினம் கொண்டவர்; தன் ஐயர் - தன் ஐயன்மார்.
6. வண்டல் ஆயம் - விளையாட்டுத்தோழியர்; பண்டு - பழைய நாளில்.
7. ஈனாப் பாவை - பஞ்சாய்க்கோரையினால் செய்யப்பட்ட பாவைப் பொம்மை (இது மகவைப் பெற்றெடுக்காது ஆதலால் 'ஈனாப் பாவை' எனப்பட்டது.); தலையிட்டு - தலையில் வைத்துக்கொண்டு.
8. மெல்லம் புலம்பன் - மென்மையான நெய்தல்நிலத் தலைவன்; அன்றியும் - இல்லாமலேயே; செல்வாம் - செல்லுவோம்; கானல் - கடற்கரைச்சோலை.

தோழி கூற்று

நற்றிணை 380 **கூடலூர்ப் பல்கண்ணனார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தோழி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தை வீடு விட்டுத் தன் இல்லம் திரும்பினான். அவன் தன்மீது தலைவி கொண்டுள்ள ஊடலைத் தீர்க்கப் பாணனைத் தூதாய் விடுத்தான். அப்பாணனைக் கண்ட தோழி, அவன் தூதினை ஏற்காது மறுத்துக் கூறியது.

நெய்யும் குய்யும் ஆடி, மையொடு
மாசுபட் டன்றே கலிங்கமும்; தோளும்,
திதலை மென்முலைத் தீம்பால் பிலிற்ற,
புதல்வற் புல்லிப் புனிறுநா றும்மே;
வால்இழை மகளிர் சேரித் தோன்றும்
தேரோற்கு ஒத்தனெம் அல்லேம்; அதனால்
பொன்புரை நரம்பின் இன்குரல் சீறியாழ்
எழாஅல் வல்லை ஆயினும், தொழாஅல்;
கொண்டுசெல், பாண!நின் தண்துறை ஊரனைப்
பாடுமனைப் பாடல்; கூடாது நீடுநிலைப்
புரவியும் பூண்நிலை முனிகுவ;
விரகுஇல மொழியல்,யாம் வேட்டதுஇல் வழியே!

தெளிவுரை

பாணனே! மனை வாழ்வினால் என் தலைவியின் ஆடையோ, நெய்யும் புகையும் படிந்து அழுக்கடைந்துள்ளது. அவள் உடம்பும் அவ்வாறே மாசுபட்டுள்ளது. சுணங்கணிந்த மெல்லிய அவள் கொங்கையில் இனிய பால் பெருக, புதல்வனைத் தழுவிக் கொண்டமையால் தோள்களும் அண்மையில் குழந்தையினைப் பெற்றமையால் முடைநாற்றம் வீசுவனவாயின. அதனால் தூய அணிகலனணிந்த பரத்தையர் வாழும் சேரியில் தோன்றும் தேரினைக் கொண்ட தலைவன் மருவுதற்குத் தலைவி ஏற்றவளாய் இல்லை! (இணைவதற்குத் தகுந்தவளாய் இல்லை.) பொன் போன்ற நரம்பிலே இனிய ஒலியை எழுப்பி, சிறிய யாழை மீட்டிப் பாடுவதில் நீ வல்லவன். ஆயினும், எம் வீட்டில் நின்று நீ தொழுது பாட வேண்டா. தண்ணிய துறையைக் கொண்ட உன் ஊரனை இப்போதே இடம்பெயரச் சொல். (இப்போதே இவ்விடமிருந்து அழைத்துக்கொண்டு செல்.) நீ இங்கிருந்து எம் வீட்டில் பாடுதலை, தேரில் பூட்டப்பட்டு நீண்ட நேரமாய் நிற்கும் குதிரைகளும் விரும்பாமல் வெறுக்கின்றன. யாம் விரும்பாதபோது நீ பயனற்ற சொற்களை இங்குக் கூறவேண்டா.

கருத்து

‘தலைவியின் உடையும் மேனியும் புதல்வனைப் பேணும் செயல்களால் மாசுற்றன. எனவே, தலைவன் முயங்கும் நிலையில் அவள் இல்லை.

தலைவன் விரும்பியுறையும் பரத்தையர் சேரிக்கே நீ அவனை அழைத்துச் செல்.'

விளக்கம்

“தலைவியையும் புதல்வனையும் மறந்து, பரத்தை தரும் இழிந்த இன்பமே பெரிதெனு மயங்கி, அவ்வீடே கதியெனச் சுற்றும் தலைவனோடு எமக்கு இனி எந்த உறவும் வேண்டா; இங்கே நின்று வீண் பேச்சுப் பேசுதலும் வேண்டா; உன் தலைவனுடனும் யாழுடனும் நீ அங்கேயே செல்” எனப் பாணனிடம் கடிந்து பேசுகிறாள், தோழி.

குறிப்பு

பரத்தையர் தம் உடம்பால் தூயவர் ஆயினும் மனத்தால் தூய்மையற்றவர்.

தம்மை வண்டியிலே பூட்டி நீண்ட நேரம் நிற்கும்படி விட்டிருப்பதைக் குதிரைகள் வெறுத்தன; ஆதலின், அவற்றுக்குப் பழக்கமாகியுள்ள பரத்தையர் சேரிக்கே அவற்றைக் கொண்டுசெல்.

பாண, நீ இசை பாடுதலில் வல்லவன் ஆயினும், அதனைக் கேட்கும் மன நிலையில் நாங்கள் இல்லை; ஆகவே, நீ இவ்விடத்திலிருந்து அகன்று செல் எனத் தோழி கூறினாள்.

சொற்பொருள்

1. குய் - தாளிதப்புகை; ஆடி - படிந்து; மையொடு - கருமையோடு.
2. கலிங்கம் - ஆடை.
3. திதலை - தேமல்; பிலிற்ற - பீச்சிட.
4. புல்லி - தழுவி; புனிறு - அண்மையில் ஈன்ற.
5. வால் - தூய; மகளிர் - பரத்தையர்.
6. தேரோற்கு - தேரினையுடைய தலைவனுக்கு; அல்லேம் - அல்லர்.
7. புரை - போன்ற; சீறியாழ் - சிறிய யாழ்.
8. எழாஅல் - இசை எழுப்புவதில்; வல்லை - வல்லவன்; தொழாஅல் - (இங்கே) தொழுதபடி நிற்காதே.
10. பாடுமனைப் பாடல் - வீட்டிலிருந்து பாடும் பாடல்; கூடாது - விரும்பாமல்; நீடுநிலை - நீண்ட நேரம் நிற்கும்.
11. புரவி - குதிரை; பூண்நிலை - தேரில் பூட்டப்பட்டிருத்தலை; முனிகுவ - வெறுக்கின்றன.
12. விரகு இல - பயன் இல்லாத; வேட்டது - விரும்பியது.

தோழி கூற்று

குறுந்தொகை 85 **வடம வண்ணக்கண் தாமோதரன்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிச் சென்ற பாணர்க்குத் தோழி சொல்லி, வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவனிடமிருந்து தூதாய்ச் சென்ற பாணன், 'தலைவன் இனியவன்; மிகுந்த அன்பு கொண்டவன்' என்று பாராட்டிக் கூறிய பொழுது தோழி, 'பாண! நீதான் தலைவன் அன்பு கொண்டவன் என்று சொல்லுகிறாய். ஆனால், தலைவன் செயல்கள் அதை வெளிப்படுத்துவனவாய் இல்லையே!' என்று கூறிப் பாணனிடம் முகங்கொடுத்துப் பேச மறுத்தது.

யாரினும் இனியன்; பேர்அன் பினனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூல்முதிர் பேடைக்கு ஈன்இல் இழைஇயர்,
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாணர் ஊரன் பாணன் வாயே.

தெளிவுரை

ஊரில் இருக்கும் துள்ளிய நடையினைக் கொண்ட ஆண் குருவி, கரு முற்றிய தன் பெண்குருவி முட்டையிடுவதற்கான கூட்டினைக் கட்டும்பொருட்டு, இன்சுவை பொதிந்துள்ள இனிய தண்டினைக் கொண்ட கரும்பின் வெள்ளை நிற மலரை மூக்கினால் கோதிக்கொண்டு வரும் புது வருவாயினைக் கொண்ட ஊருக்கு உரியவன், தலைவன். பாணன் தன் வாயளவில்தான், 'அவன் எவரினும் இனியவன்; தலைவியிடம் மிகுந்த அன்பினன்' என்று கூறுகிறான். (உண்மையில் அவன் அப்படிப்பட்டவன் அல்லன்).

கருத்து

தலைவன் தலைவியிடம் அன்புள்ளவன் என்று பாணன் கூறினும் அவன் உண்மையில் அத்தகையவன் அல்லன் என்று கூறித் தோழி வாயில் மறுத்தாள்.

விளக்கம்

இனிய தேனடையும் தீங்கழையும் உளதாகவும் மணமும் நல்ல நிறமுமில்லாத கரும்பின் பூவைக் குருவி கோதியெடுப்பது போல், அறத்தொடு பொருந்திய இன்பத்தைத் தரும் தலைவி இருக்கவும், அன்பும் கற்பும் இல்லாத பரத்தையரைத் தலைவன் விரும்பினன் என்று இகழ்ச்சியாய்க் குறிப்பிடுகிறாள், தோழி.

சொற்பொருள்

1. பேர் அன்பினன் - மிகவும் அன்பு கொண்டவன்.
2. குரீஇ - குருவி.
3. சூல் - கருப்பம்; பேடை - பெண்குருவி; ஈன் இல் - ஈனுவதற்கு அமைக்கும் இல்லம் (முட்டையிடக் கட்டும் கூடு); இழைஇயர் - கட்டுவதற்காக.
4. தேம்பொதிக் கொண்ட - இனிமையை உள்ளே கொண்டிருக்கின்ற; தீங்கழைக் கரும்பு - கோல் வடிவான இனிய கரும்பு.
5. நாறா - மணமற்ற; வெண்பூ - வெண்மையான பூ; கொழுதும் - அலகால் கோதிக்கொண்டு வரும்.
6. யாணர் - புது வருவாய்; பாணன் வாயே - பாணன் வாயளவில்தான்.

தோழி கூற்று

நற்றிணை 167 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : நெய்தல்

கூற்று

தோழி பாணற்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிற்பிரிந்த தலைவன் தலைவியின் ஊடல் தீர்க்கப் பாணனைத் தூதாய் அனுப்ப, அப்பாணனை நோக்கித் தோழி, “பாணனே! நீ கூறும் சொற்களால் தலைவியின் பசலை நீங்காது. எனவே, திரும்பிச் செல்” என்று கூறியது.

கருங்கோட்டுப் புன்னைக் குடக்குவாங்கு பெருஞ்சினை
விருந்தின் வெண்குருகு ஆர்ப்பின், ஆஅய்
வண்மகிழ் நாளவைப் பரிசில் பெற்ற
பண்அமை நெடுந்தேர்ப் பாணியின், ஒலிக்கும்
தண்ணம் துறைவன் தூதொடும் வந்த
பயன்தெரி பனுவல் பைதீர் பாண!
நின்வாய்ப் பணிமொழி களையா பல்மாண்
புதுவீ ஞாழலொடு புன்னை தாஅம்
மணம்கமழ் கானல், மாண்நலம் இழந்த
இறைஏர் எல்வளைக் குறுமகள்
பிறைஏர் திருநுதல் பாஅய பசப்பே.

தெளிவுரை

பாணனே! மேல்நோக்கி வளைந்த புன்னை மரத்தின் கரிய பெரிய கிளையில் புதிதாய் வந்து, வெண்ணிறம் கொண்ட நாரை ஒன்று தங்கிற்று. அந்நாரை ஒலி, கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகிய ஆய் அண்டிரனின் மகிழ்ச்சி நிரம்பிய பெரிய அவையில் இரவலர் பரிசாய்ப் பெற்ற அணிகள் பொருந்திய நெடிய தேரின் ஒலிபோலக் கேட்கும். குளிர்ச்சி பொருந்திய கடற்கரைக்குத் தலைவனாகிய காதலன் உன்னைத் தூதாய் அனுப்பியுள்ளான். பெறுகின்ற பயனுக்குத் தக்கவாறு பேசுகின்ற வருத்தமற்ற பாணனே! புதிய ஞாழல் மலரோடு புன்னை மலரும் உதிர்ந்து பரவி மணம் கமழும் கடற்கரைச்சோலையில் முன்பு தலைவனால் நுகரப்பட்டதால் இப்போது தனது அழகையும் கையிலுள்ள அழகிய வளையலையும் இழந்து நிற்கும் இளமை வாய்ந்த தலைவியின் பிறை போன்ற அழகிய நெற்றியில் உண்டான பசலையை உன் வாயிலிருந்து வெளிப்படும் பொய்ம் மொழிகள் நீக்குவன அல்ல. ஆகவே, நீ இங்கிருந்து நீங்கிச் செல்! (இங்கு நில்லாது போ.)

கருத்து

'பாணனே! உன் மொழிகள் தலைவியின் பசலையைப் போக்கா. நீ திரும்பிச் சென்றுவிடு.'

விளக்கம்

"நெய்தல் நிலத்தில் வளர்ந்துள்ள புன்னையின் கிளையில் தங்கிய நாரை நரலுகிறது. இந்த ஒலி, கடையெழு வள்ளல்களுள் ஒருவனான ஆய் அண்டிரனது அவையில் இரவலர் பரிசிலாகப் பெற்ற அணிகள் பொருத்தப்பட்ட நெடிய தேரின் ஒலி போல ஒலிக்கும். அத்தகைய வளமிக்க கடற்கரைக்குத் தலைவன் உன்னைத் தூதாய் அனுப்பியுள்ளான். அவனுக்குத் தக்கவாறு பேசுகின்ற உன் பொய்ம்மொழிகள் தலைவியின் பசலையைப் போக்க வல்லன அல்ல. எனவே, திரும்பிச் செல்" என்று தோழி கூறினாள்.

இறைச்சி

(1) நாரை ஒலித்தல் தேரின் ஒலி போன்றது என்னும் தொடர், பாணன் நயந்து கூறும் மொழி எமக்கு இடிஇடிப்பது போன்றுள்ளது என்னும் கருத்தை உணர்த்துகிறது.

(2) ஞாழலொடு புன்னையும் மணம் கமழும் என்னும் தொடர், தலைவன் தலைவியை ஒப்பப் பரத்தையையும் கருதினன் என்பதை உணர்த்துகிறது.

சொற்பொருள்

1. கோடு - கிளை; குடக்கு - மேற்கு, மேல்நோக்கி; வாங்கு - வளைந்த; சினை - கிளை.
2. விருந்தின் - புதுவதாய் வந்து (அமர்ந்த); ஆர்ப்பு - ஒலி.
3. வண்மகிழ் - வள்ளன்மையினாலே மகிழ்ச்சி கொண்ட; நாளவை - நாளோலக்கம்.
4. பாணி - ஓசை.
6. பனுவல் - (இசை நுட்பங்களைக் கூறும்) நூல்; பைதீர் - வருத்தமற்ற.
7. பணிமொழி - பணிவான சொற்களால்; களையா - நீக்க இயலாது.
8. புதுவீ - புதிய மலர்; தாஅம் - உதிர்ந்து கிடக்கும்.
9. நாண் நலம் - பெண்மைக்குரிய நாணத்தின் தன்மை.
10. இறைஏர் - அழகிய முன்கை; எல்வளை - ஒளி பொருந்திய வளையல்.
11. பிறைஏர் - பிறை போலும் அழகிய; பாஅய - பரவிய; பசப்பு - பசலை.

தோழி கூற்று

கைந்நிலை 40 **புல்லங்காடனார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிய பாணற்குத் தோழி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தூதனாய் வந்த பாணனைத் தோழி கண்டித்து மறுத்தது.

தாரா இரியும் தகைவயல் ஊரனை
வாரான் எனினும், வரும்என்று – சேரி
புலப்படும் சொல்லும்,இப் பூங்கொடி அன்னாள்
கலப்(பு)அடும்; கூடும்கொல் மற்று?

தெளிவுரை

தாரா என்னும் பறவைகள் பறந்து செல்லுகின்ற அழகுமிக்க வயல்கள் சூழ்ந்த மருதநிலத்திற்கு உரியவனான தலைவனைக் குறித்துச் சேரியில் வாழ்கின்ற பரத்தையர், வாராமல் இருப்பினும், 'வருகின்றான்' என்று கூறுகின்றனர். அவர்கள் கூறும் சொல் பூங்கொடி போன்ற எம் தலைவி கூடுவதைத் தடுக்கின்றது. (தலைவி தலைவனுடன் கூடுவளா?)

கருத்து

'தலைவி தலைவனோடு கூடாள்; நீ செல்.'

விளக்கம்

'பரத்தையர் சேரிக்குத் தலைவன் வருகின்றான்' என்னும் சொற்கள் நாள்தோறும் வெளிப்பட்டால் தலைவனோடு எம் தலைவி எவ்வாறு கூடுவாள்? கூடாள், எனத் தோழி பாணற்கு வாயில் மறுத்துக் கூறினாள்.

சொற்பொருள்

1. தாரா - ஒரு பறவை; இரியும் - பறந்து செல்லும்; தகை - அழகு.
2. சேரி - பரத்தையர் சேரி (இருப்பிடம்).
3. புலப்படும் - வெளிப்படும்.
4. அடும் - தடுக்கும்.

தோழி கூற்று

நற்றிணை 50 **மருதம் பாடிய இளங்கடுங்கோ**

திணை : மருதம்

கூற்று

தோழி பாணற்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிற்பிரிந்த தலைவன் தலைவியிடம் மீளப் பாணனைத் தூதாய் அனுப்பிவிட்டுத் தான் சிறைப்புறமாய் நின்றான். அப்போது தோழி, தலைவன் கேட்குமாறு தலைவியை நோக்கிக் கூறியது.

அறியா மையின் அன்னை! அஞ்சிக்
குழையன் கோதையன் குறம்பைந் தொடியன்
விழவுஅயர் துணங்கை தழூஉகஞ் செல்ல
நெடுநிமிர் தெருவில் கைபுகு கொடுமிடை
நொதும லாளன் கதும்எனத் தாக்கலின்
'கேட்பார் உளர்கொல் இல்லைகொல்? போற்று'என
'யாணது பசலை'என்றனன் அதன்எதிர்
'நாண்இலை எலுவ' என்று வந்திசினே
செருநரும் விழையும் செம்ம லோன்என
நறுநுதல் அரிவை! போற்றேன்,
சிறுமை பெருமையின் காணாது துணிந்தே.

தெளிவுரை

"மணம் கமழும் நெற்றியைக் கொண்ட தலைவியே! அன்னையே! காதில் குழையும், கழுத்தில் மாலையும், கையில் குறுகிய பசிய வளையல்களையும் அணிந்தவனாய், தலைவன், விழாக் காலத்தில் (பரத்தையருடன் சேர்ந்து) துணங்கையாடச் சென்றுள்ளான் என அறிந்தேன். அவனைக் கையும் களவுமாய்ப் பிடிக்க, உன்னிடம் அச்சம் கொண்டு, சொல்லாமலேயே சென்று விட்டோம். தான் அணிந்த அணிகளோடும் புனைவுடனும் நீண்ட நெடிய தெருவில் வேறொரு வழியாய் விழாக்களத்திற்கு வந்தவன் என்னை எதிர்ப்பட்டான். 'இவ்வாறு செயல்படும் உன்னிடம் கேட்பார் எவரும் இலரா?' என்று அவனிடம்

கேட்டேன். அவனோ ஒன்றும் அறியாதவன்போல 'உன் கண் பசலை அழகாய் உள்ளது' என்றான். அவன் பகைவராலும் விரும்பப்படும் போராற்றல் கொண்டவன் என்பதையும் கருதாது, என் சிறுமை வெளிப்பட, 'தலைவனே! நீ நாணமற்றவன்' என்று கூறிவிட்டு வந்தேன்" என்று தலைவன் கேட்குமாறு தோழி தலைவியை நோக்கிக் கூறினாள்.

கருத்து

'தலைவன் செய்கைகளுக்கெல்லாம் காரணமாய் இருப்பவன், இப் பாணனே! இவன் இங்கிருந்து நீங்கட்டும்.'

விளக்கம்

பரத்தையிடமிருந்து பிரிந்துவந்த தலைவன் வாயில் வேண்டி, சிறைப்புறமாய் ஒதுங்கி நின்று, பாணனைத் தலைவியிடம் அனுப்பினான். அப்போது தோழி, தலைவன் கேட்கும் வகையில், "தலைவியே! தலைவன் துணங்கையாடும்போது அவனைக் கையும் களவுமாய்ப் பிடிக்க விழாக்களம் சென்றோம். அவன் எதிர்ப்பட்டபோது, 'இவ்வாறு கூத்தாடும் உன்னைக் கேட்பார் எவரும் இலரோ?' என்றேன். அவனோ, 'உன் கண் பசலை அழகு வாய்ந்தது' என்றான். அவன் வீரப்பெருமையை யும் கருதாது, 'நீ நாணமற்றவன்' என்று கூறிவிட்டுத் திரும்பி னேன்" எனத் தோழி கூறினாள்.

துணங்கை

போர் முடிவுற்று வெற்றி விழா எடுக்கும் காலங்களில் ஆணும் பெண்ணும் கைகோத்து ஆடுகின்ற ஆட்டம், 'துணங்கைக் கூத்து' எனப்படும்.

குறிப்பு

'தலைவன் பகைவராலும் விரும்பப்படும் போராற்றல் கொண்டவன்' என்று பெருமைபடச் சொல்வதன்வழி, 'தலைவனை ஏற்கலாம்' என்பதைத் தோழி குறிப்பாய்ச் சொல்கிறாள்.

சொற்பொருள்

1. அன்னை - தலைவியே!
2. குழை - தளிர், காதணி; கோதை - மாலை; தொடி - வளையல்.

3. விழவுஅயர் - விழாவின் பொருட்டு; துணங்கை - ஒரு வகைக் கூத்து; தழூஉகம் - கைப்பற்ற.
4. நெடு நிமிர் - நீண்ட நெடிய; கொடுமிடை - (துணங்கைக் கூத்துக்கு ஒதுக்கப்பட்ட) வளைந்த இடம்.
5. நொதுமலாளன் - அயலான் (பாணன்); கதும் - விரைவாய்.
7. யாணது - அழகுடையது.
8. நாண் இலை - நாணம் இல்லை; எலுவ - தோழ.
9. செருநர் - பகைவர்; விழையும் - விரும்பும், மதிக்கும்; செம்மல் - சிறந்தோன்.
10. நுதல் - நெற்றி; அரிவை - பெண், தலைவி.
11. காணாது - கருதாது.

தோழி கூற்று

நற்றிணை 200 **கூடலூர்ப் பல்கண்ணனார்**

திணை : மருதம்

கூற்று

தோழி, தலைமகளது குறிப்பறிந்து, வாயிலாகப் புக்க பாணன் கேட்பக் குயவனைக் கூஉய், 'இங்ஙனம் சொல்லாயோ' என்று குயவற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தான் பரத்தை வீடு சென்றிருந்த நிலையில் தலைவியிடத்துப் பாணனைத் தலைவன் தூதாய் அனுப்புகிறான்; அத்தூதினை ஏற்கத் தோழி மறுக்கிறாள். அப்போது ஊரில் திருவிழா நடக்க இருப்பதைக் குயவன் அறிவித்துக் கொண்டு வருகிறான். அக்குயவனிடம் தோழி, 'இவ்வூர் மகளிரிடம் இப் பாணனின் பொய்ம்மொழி குறித்தும் கூறுக' என்று கூறியது.

கண்ணி கட்டிய கதிர அன்ன
ஒண்குரல் நொச்சித் தெரியல் சூடி,
யாறுகிடந் தன்ன அகல்நெடுந் தெருவில்,
சாறுஎன நுவலும் முதுவாய்க் குயவ!
ஈதும் ஆங்கண் நுவன்றிசின் மாதோ
ஆம்பல் அமன்ற தீம்பெரும் பழனத்துப்
பொய்கை ஊர்க்குப் போவோய் ஆகி,

கைகவர் நரம்பின் பனுவல் பாணன்
செய்த அல்லல் பல்குவ வைஎயிற்று,
ஐதுஅகல் அல்குல் மகளிர்!இவன்
பொய்பொதி கொடுஞ்செயல் ஓம்புமின் எனவே.

தெளிவுரை

அரும்புகளால் தொடுக்கப்பட்ட ஒளி பொருந்திய பூங் கொத்தினைக் கொண்ட நொச்சி மாலையைச் சூடியவனாய், 'ஆறு போன்ற அகன்ற நீண்ட தெருவில் விழா நடக்க விருக்கின்றது, எல்லோரும் வருக' என்று கூறும் குயவனே! நீ விழா குறித்துக் கூறும் செய்தியோடு நான் கூறும் இதனையும் சேர்த்துக் கூறு! ஆம்பல் மலர்கள் நெருங்கிய வயலையும், பொய்கையையும் கொண்ட ஊருக்கு நீ செல்வாய். அங்குள்ள மகளிரை அழைத்து, 'கூர்மையான பற்களையும் மென்மையான அகன்ற அடிவயிற்றினையும் கொண்ட மகளிரே! கை விரலால் மீட்டப்படும் நரம்பினைக் கொண்ட யாழை இசைக்க வல்லவன், இப்பாணன். தூதாய் வந்து இவன் உண்டாக்கிய துன்பங்கள் மிகுதியானவை. அதனால் பொய் நிறைந்த இவன் கூறும் கொடிய சொற்களை நீங்கள் நம்பாது, உம்மைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்' என்று கூறு.

கருத்து

'பாண! உன் கூற்றுப் பொய். ஆதலின் தலைவி அதனை ஏற்க மாட்டாள்.'

விளக்கம்

தலைவன் பரத்தையிற்பிரிந்தான்; தலைவியைக் காண்பதற் காகப் பாணனைத் தூது அனுப்பினான். ஆனால், தோழி அதற்கு உடன்படவில்லை. அப்போது அந்த ஊரில் திருவிழா நடப்பதைக் குயவன் ஊரார்க்கு அறிவித்தபடி வந்தான். தோழி அக்குயவனை நோக்கி, "நீ விழாவினை அறிவிப்பதோடு, 'பாணனின் இசையால் கவரப்பட்டு அவன் கூறும் சொற்களை நம்பிவிடாதீர்கள்; அதனால் துன்பந்தான் நேரிடும்' என்பதை யும் சேர்த்துச் சொல்லிவிடு" என்றாள்.

சொற்பொருள்

1. கண்ணி - அரும்புகள்; கதிர - ஒளி வீச.
2. ஒண்குரல் - ஒள்ளிய கொத்துகளைக் கொண்ட; தெரியல் - மாலை.
3. யாறு - ஆறு; அகல்நெடும் - அகன்ற நெடிய.
4. சாறு - விழா; நுவலும் - சொல்லும்; முதுவாய் - அறிவுள்ள.
5. ஆங்கண் - அங்கே; ஈதும் நுவன்றிசின் - யான் கூறும் இதனையும் அறிவித்திடு.
6. அமன்ற - நிறைந்த; பழனம் - வயல்.
8. கைகவர் நரம்பின் - கை விரலினால் மீட்டப்படும் நரம்புகளைக் கொண்ட; பனுவல் பாணன் - யாழை மீட்டிப் பாடவல்ல பாணன்.
9. பல்குவ - மிகுதியானவை.
10. ஐது அகல் - மென்மையான அகன்ற.
11. பொய்பொதி - பொய் நிறைந்த; ஓம்புமின் - பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 141 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

ஊடிநின்ற தலைமகளின் நிலையினைத் தலைமகன், சிறந்த மொழியை ஒழிந்து நின்ற வாயிலாகிய பாணற்கு உரைத்தது.

(பாணன் இன்னிசையால் மகிழ்வித்துத் தலைவியின் ஊடலைப் போக்கு வான். ஆதலின் ‘சிறந்த மொழியை ஒழிந்து நின்ற வாயில்’ எனப்பட்டனன்).

கூற்று விளக்கம்

மகனைப் பெற்று நெய்யாடிய தலைவியிடம் தலைவன், தோழி முதலிய வாயில்களால் ஊடல் தீர்க்க முயன்று முடியாமற் போயிற்று. ஆதலால் பாணனை வாயிலாக அனுப்ப வேண்டும் என்று எண்ணி, அப்பாணனிடம் தலைவன் சொல்லியது.

அணிக்குரல்மேல் நல்லாரோ(டு) ஆடினேன் என்ன
மணிக்குரல்மேல் மாதராள் ஊடி – மணிச்சிரல்
பாட்டை இருந்தயரும் பாய்நீர்க் கழனித்தே
யாட்டை இருந்துறையும் ஊர்.

தெளிவுரை

பாணனே! மணி போன்ற குரலினைக் கொண்ட என் மனைவி, நான், அழகிய குரல் கொண்ட பரத்தையரோடு ஆடி மகிழ்ந்தேன் என ஊடியிருக்கிறாள். அவள் இருக்கும் ஊர், சிச்சிலிப் பறவை தங்கிப் பாடும் நீர்நிலைகளும் வயல்களும் கொண்டது. (ஊடல் நீங்கி என்னிடம் கூட வேண்டுமென அவளிடம் சென்று சொல்.)

கருத்து

இன்னிசை பாடும் பாணனைத் தலைவி இருக்குமிடம் சென்று, அவள் கொண்டுள்ள ஊடலைத் தீர்க்க வேண்டுமெனத் தலைவன் கேட்டுக் கொள்கிறான்.

குறிப்பு

பாணன் இன்னிசையால் மகிழ்வித்துத் தலைவியின் ஊடலைப் போக்க இயலும் எனத் தலைவன் கருதுகிறான்.

சொற்பொருள்

1. அணிக்குரல் - அழகிய குரல்; மேல் - மேன்மை பெற்ற; நல்லார் - பரத்தையர்; ஆடினேன் - கூடி விளையாடினேன்.
2. மணிக்குரல் - மணியொலி போன்ற குரல்; மாதராள் - தலைவி; மணிச்சிரல் - அழகிய சிச்சிலிப் பறவை.
3. பாட்டை - பாட்டினை; அயரும் - பாடுகின்ற; பாய் நீர் - நீர் பாயும்; கழனி - வயல்.
4. யாட்டை - ஓராண்டுக் காலம் (மனத்தை அடக்கி); இருந்து - தங்கி; உறையும் - வாழும்.

தலைவி பாணர்க்கு வாயில் மறுத்தது.

தலைவி கூற்று

நாலடியார் 390 சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற் பிரிந்த தலைமகனுக்குத் தூதாய் வந்த பாணனிடம் தலைமகள் வெகுண்டு கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தை வீடு சென்றதால் தலைவி ஊடல் கொண்டிருந்தாள். அவ்வூடல் நீங்கித் தன்னைத் தலைவி ஏற்றுக்கொள்ள வேண்டுமெனத் தலைவன் தூதாய் அனுப்பிய பாணனிடம் தலைவி வெகுண்டு கூறியது.

அரும்(பு)அவிழ் தாரினான் எம்அருளும் என்று
பெரும்பொய் உரையாதி பாண! – கரும்பின்
கடைக்கண் அனையம்நாம் ஊரற்(கு); அதனால்
இடைக்கண் அனையார்க்கு உரை.

தெளிவுரை

'பாணனே! அரும்புகள் மலர்கின்ற மாலைகள் அணிந்த தலைவன் எமக்கு அருள் செய்வார்' என்று பெரும் பொய்யைச் சொல்லாதே! ஏனெனில், நான் தலைவனுக்குக் கரும்பின் நுனிக்கணுக்களைப் போன்று சுவை குறைந்தவளாய் உள்ளேன். அதனால் இப்பேச்சைத் தலைவனுக்குக் கரும்பின் இடையிலுள்ள கணுக்களையொத்துச் சுவைமிக்கவளாயுள்ள பரத்தையிடம் போய்ச் சொல்.

கருத்து

பாணனே! தலைவனுக்கு நுனிக்கரும்பாய்க் கசக்கும் என்னிடம் சொல்வதைவிட, இதனை நடுக்கரும்பாய் இனிக்கும் பரத்தையிடம் சென்று சொல்.

குறிப்பு

நுனிக் கரும்பாகவோ, இடைக் கரும்பாகவோ இல்லாமல் எப்போதும் அடிக்கரும்பாக இருக்கவே குலமகளிர் விரும்புவர்.

சொற்பொருள்

1. அவிர் - மலர்கின்ற; தார் - மாலை.
2. உரையாதி - சொல்லாதே.
3. கடைக்கண் - நுனிக்கணு; ஊரன் - தலைவன்.
4. அணையார்க்கு - பரத்தைக்கு.

தலைவி கூற்று

நற்றிணை 74 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகள் பாணற்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தை இல்லம் சென்றான், தலைவன். அதனால் தலைவி ஊடல் கொண்டாள். அவ்வூடலை நீக்கத் தலைவன் பாணனைத் தூதாய் அனுப்பினான். தலைவி, 'தலைவன் எமக்கு அயலவன் ஆயினான். அதை மறைத்துப் பேசாதே' எனப் பாணன் தூதினை ஏற்காது மறுத்துக் கூறியது.

வடிக்கதிர் திரித்த வல்ஞாண் பெருவலை
இடிக்குரல் புணரிப் பௌவத்து இடுமார்,
நிறையப் பெய்த அம்பி, காழோர்
சிறைஅருங் களிற்றின், பரதவர் ஒய்யுஞ்
சிறுவீ ஞாழற் பெருங்கடற் சேர்ப்பனை,
ஏதி லாளனும் என்ப; போதுஅவிழ்
புதுமணல் கானல் புன்னைநுண் தாது,
கொண்டல் அசைவளி தூக்குதொறும், குருகின்
வெண்புறம் மொசிய ஆர்க்குந் தெண்கடல்
கண்டல் வேலிய ஊர்அவன்
பெண்டுஎன அறிந்தன்று, பெயர்த்தலோ அரிதே!

தெளிவுரை

திருத்தமாய்ச் செய்யப்பட்ட வலிமையான கயிற்றால் பின்னப் பட்ட பெரிய வலையை, இடிபோல முழங்குகின்ற அலைகடலில் இடும்பொருட்டுத் தோணி நிறையப் பரதவர் ஏற்றுவர். அத் தோணியை, அடக்குதற்கரிய யானையை அடக்கிச் செலுத்தும் பாகர் போன்று கடலிற்செலுத்திச் செல்வர். சிறிய மலர்கள் கொண்ட ஞாழல் மரங்கள் இருக்கும் அக்கடற்கரைக்குத் தலைவனைக் குறித்து, 'அவன் உனக்கு நட்பினன் அல்லன்; அயலவன் ஆயினான்' என்று பலரும் கூறுவர். அதற்கேற்பவே, புதுமணற் பரப்பிலுள்ள கடற்கரைச்சோலையில் உள்ள புன்னையின் நுண்ணிய மகரந்தப்பொடியைக் கீழைக்காற்று வீசி, நாரையின் வெண்மையான முதுகில் நிரம்பக் குவிக்கும், தாழை மரங்களை வேலியாய்க் கொண்ட இவ்வூரார், 'பரத்தையே தலைவனுக்கு மனைவி' என்று கூறுகின்றனர். இனி இச் சொற்களை மாற்றிக் கூறுதல் யார்க்கும் அரிது. அதனால் பாணனே! நீ இவ்விடத்தை விட்டு உடனே அகல்க.

கருத்து

'பாண! பரத்தை அவனுக்கு மனைவியாயினாள் என்று ஊர் கூறுகிறது. இனி அது மறைத்தற்கரியது. எனவே, நீ ஊடல் தீர்க்க முயல்வதில் பயனில்லை. நீ செல்லலாம்.'

விளக்கம்

"மிக்க அன்புடையவன் தலைவன் எனக் கூறும் பாணனே! இவ்வூரார் கூறுவதனை நீ கேட்டாயா? தலைவன் தன் வீட்டில் தங்காமல், பரத்தை ஒருத்தியின் வீட்டில் தங்கியிருக்கிறான் என்கின்றனர். பரத்தை ஒருத்தியைக் காட்டி அவள் தலைவனுக்குப் பெண்டாயினாள் என்றும் கூறுகின்றனர். அப்படியிருக்க அத் தலைவன்பொருட்டு நீ வாயிலாய் வந்தது எவ்வாறு?" என்று தலைவி பாணனை நோக்கிக் கடிந்துரைத்தாள்.

உள்ளுறை

பரதவர் தாம் திரித்த கயிற்றில் பின்னிய பெருவலையைக் கடலில் இட்டு மீன் பிடிக்க எண்ணித் தோணியில் ஏற்றிச்

செலுத்துவர் என்னும் உள்ளுறையால் தலைவன் தான் கற்ற சூழ்ச்சியைப் பாணனுக்குக் கற்பித்து ஈங்கு வர விடுத்தனன் என்னும் கருத்து உணர்த்தப்படுகிறது.

இறைச்சி

கீழைக்காற்று, புன்னை நுண்தாதினைக் குருகின்மேல் சேர்க்கிறது என்னும் இறைச்சி, தலைவனது பிரிவினாலே தலைவியின் உடலில் பசலை படர்ந்தது என்னும் பொருளைத் தருகிறது.

சொற்பொருள்

1. வடிக்கதிர் - கூரிய கதிர்கொண்டு; வல்ஞாண் - வலிய கயிறு.
2. இடிக்குரல் - முழங்கும் ஒலி; புணரி - அலை; பௌவம் - கடல்.
3. பெய்த - ஏற்றப்பட்ட; அம்பி - தோணி; காழோர் - அங்குசமுடைய பாகர்.
4. சிறைஅரும் - அருகே நின்று செலுத்தும்; களிற்றின்- ஆண் யானையைப் போல; ஒய்யும் - செலுத்தும்.
5. சிறுவீ - சிறிய மலர்; ஞாழல் - ஞாழல் மரம்; சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன்.
6. ஏதிலாளன் - அயலவன்; போது அவிழ் - பூக்கள் மலர்ந்த.
7. தாது - மகரந்தப்பொடி.
8. கொண்டல் - கீழ்க்காற்று; தூக்குதொறும் - அசைக்குந்தொறும்; குருகு - நாரை.
9. வெண்புறம் - வெண்மையான முதுகு; மொசிய - நெருங்க; ஆர்க்கும் - உதிர்க்கும்.
10. கண்டல் - தாழை.
11. பெண்டு என அறிந்து - பரத்தை அவனுக்குரிய பெண்டு என்பதை அறிந்து (உரைக்கின்றனர்); பெயர்த்தலோ அரிது - அதனை மாற்றிக் கூறுதல் இயலாது.

தலைவி கூற்று

அகநானூறு 146 **உவர்கண்ணூர்ப் புல்லங்கீரனார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிச் சென்ற பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிடம் தலைவன் சென்றதால் ஊடல் கொண்டிருந்த தலைவியைக் காண விரும்பிப் பாணனைத் தூதாய் அனுப்பினான். தலைவி அப்பாணன் கூற்றை மறுத்து உரைத்தது.

வலிமிகு முன்பின் அண்ணல் ஏஎறு
பனிமலர்ப் பொய்கைப் பகல்செல மறுகி,
மடக்கண் எருமை மாண்நாகு தழீஇ,
படப்பை நண்ணி, பழனத்து அல்கும்
கலிமகிழ் ஊரன் ஒலிமணி நெடுந்தேர்,
ஒள்இழை மகளிர் சேரி, பல்நாள்
இயங்கல் ஆனாது ஆயின், வயங்கிழை
யார்கொல் அளியள் தானே – எம்போல்
மாயப் பரத்தன் வாய்மொழி நம்பி,
வளிபொரத் துயல்வரும் தளிபொழி மலரின்
கண்பனி ஆகத்து உறைப்ப, கண்பசந்து
ஆயமும் அயலும் மருள,
தாய்ஓம்பு ஆய்நலம் வேண்டா தோளே?

தெளிவுரை

இவ்வூரில் உடல் வலிமையும் பெருமிதமும் கொண்ட ஓர் எருமைக்கடா, பொழுது சாயுமட்டும் குளிர்ச்சி பொருந்திய பொய்கையில் கிடக்கும்; மாலையில் மடப்பம் பொருந்திய தன் பெண் எருமையுடன் இணைந்து தோட்டத்தில் மேயும்; இரவில் வயலில் தங்கும். இத்தகைய மகிழ்வுக்காட்சிகளைக் கொண்ட ஊரினை உடையவன், தலைவன்.

மணி ஒலிக்கும் அவனுடைய பெரிய தேர், ஒளிமிக்க அணிகலன்களை அணிந்துள்ள பரத்தையர் வாழும் சேரியில் பல

நாள் சுற்றுகிறது. இப்போது என்னிடம் அன்பு கொண்டவன் போல இங்கு வருவதற்கு உன்னைத் தூதாய் விடுத்துள்ளான்.

என்னைப்போல, அம்மாயப் பரத்தனின் வாய்ச்சொல்லை உண்மை என்று நம்பி, மழை பெய்தபோது நீரைத் தாங்கி யிருக்கும் மலரைக் காற்று அசைக்கின்றபோது நீர்த்துளிகள் சிதறுவது போலத் தம் கண்ணீர் மார்பிலே சொரியக் கண் கலங்கிப் பசப்பெய்த, தோழியரும் அல்லாதவரும், 'இவளுக்கு என்ன ஆயிற்று' என்று குழம்பி நிற்க, தன் அன்னை பாதுகாத்துத் தந்த அழகை வேண்டா என்று ஒதுக்கும் பரத்தை எவளேனும் இருப்பாளா? இருந்தால் அவள் இரங்கத்தக்கவள். (பரத்தையர் எவரும் தம் அழகு நலம்கெட அவனை இழக்கமாட்டார்; அவனை இங்கே வரவும் விடார்). நீ இங்கே பேசுவதில் என்ன பயன் என்று பாணனிடம் கூறித் தலைவி வாயில் மறுத்தாள்.

கருத்து

'பாண! தலைவன் இங்கு வரத் தூதாய் நீ வந்துள்ளாய்; அதனால் பயன் ஏதுமில்லை. பரத்தையர் எவரும் தலைவனை வெளிச் செல்ல அனுமதியார்.'

விளக்கம்

பாணனே! ஊரனது தேர் பல நாளாய்ப் பரத்தையர் வீதியில் சுற்றித் திரிகிறது. என்னைப் போலப் பரத்தையர் எவரும் அவன் மாயப்பேச்சை நம்ப மாட்டார்; அப்படி நம்பினால் அவன் இப் போது என்னைப் பிரிந்துள்ளதுபோல அவர்களையும் விட்டு விட்டுப் பிரிவான். அதனால் அவர்கள் கண்கள் நீர் சிந்திப் பசப்படைய நேரிடும்; தன் தாய் பேணித் தந்த அழகைப் பரத்தை எவளும் இழக்கத் துணிய மாட்டாள். ஆதலால், பரத்தையர் தம் நலம் கெடும்படியாகத் தலைவனைத் தம்மை விட்டுப் பிரிந்து செல்ல அனுமதிக்க மாட்டார். ஆகவே, நீ இங்கு வந்து பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை எனக் கூறித் தலைவி வாயில் மறுத்தாள்.

உள்ளுறை

எருமைக்கடா பகலில் பொய்கையில் தங்கி மகிழ்ந்து, பின்னர்த் தன் பெண்எருமையுடன் தோட்டத்தில் மேய்ந்து வயலில் தங்கும்.

இந்தத் தலைவன் பரத்தையர் சேரியில் தங்கி, அவர்களை அனுபவித்து, பின்பு இன்னொரு பரத்தையுடன் சோலையில் விளையாடி, பிறகு தலைவியோடு வீட்டில் தங்கியிருக்க மட்டும் விரும்புகிறான் என்னும் பொருள் தருதலை அறிக.

சொற்பொருள்

1. முன்பு - வலிமை; அண்ணல் - தலைமை; ஏஎறு - எருமைக்கடா.
2. பகல்செல - பகல் கழியும்வரை; மறுகி - சுழன்று.
3. நாகு - பெண் எருமை.
4. படப்பை - தோட்டம்; பழனம் - வயல்; அல்கும் - தங்கும்.
5. கலி - ஆரவாரம்.
6. சேரி - பரத்தையர் சேரி.
7. இயங்கல் - சென்று வருதல்.
8. அளியள் - இரங்கத்தக்கவள்.
9. மாயப் பரத்தன் - மாயம் செய்யும் பரத்தமை ஒழுக்கம் கொண்டவன் (தலைவன்); வாய்மொழி - உண்மை போன்ற மொழி.
10. வளிபொர - காற்று மோத; துயல் வரும் - அசையும்; தளி - மழை.
11. கண்பனி - கண்ணீர்; ஆகம் - மார்பு; உறைப்ப - சொரிய.
12. ஆயம் - தோழியர்; அயல் - மற்றவர்; மருள - மயங்க.
13. தாய் ஓம்பு - தாய் பாதுகாத்து வளர்த்த; ஆய்நலம் - அழகிய நலம்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 133 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீடு சென்ற தலைவன், பாணன் ஒருவனைத் தன்மீது தலைவி கொண்டுள்ள சினத்தைப் போக்கித் தன்னை ஏற்குமாறு தூதாய் அனுப்பினான். அவன் கூறியதைத் தலைவி மறுத்து மொழிந்தது.

பாலையாழ்ப் பாண்மகனே! பண்டுநின் நாயகற்கு
மாலையாழ் ஒதி வருடாயோ – காலையாழ்
செய்யும் இடமறியாய் சேந்தாய்நின் பொய்ம்மொழிக்கு
நையும் இடமறிந்து நாடு.

தெளிவுரை

"பாலை என்னும் பண்ணினைப் பாடும் சிறந்த யாழினைக் கொண்ட பாணனே! முன்னம் உன் தலைவனுக்கு மாலை வேளையில் பாட வேண்டிய பண்ணினைப் பாடித் தொண்டு செய்ததில்லையா? மாலையில் பாட வேண்டிய பண்ணைக் காலையில் பாடுகிறாயே! உன் பொய்ம்மொழிகளுக்கு உள்ளம் நெகிழும் இடமறிந்து நீ அங்கு விரும்பிச் செல்" என்று தலைவி வாயில் மறுத்தாள்.

கருத்து

'பாண! தலைவன் பரத்தை வீட்டில் உள்ளான். நீ அங்கே செல்!'

சொற்பொருள்

1. பாலை - பாலைப்பண்; பண்டு - முன்பு; நின் நாயகற்கு - உன் தலைவர்க்கு.
2. மாலையாழ் - மாலை வேளையில் பாட வேண்டிய பண்ணினைப் பாடி; வருடாயோ - ஊழியம் செய்ததில்லையா?; காலையாழ் - காலையில் பாட வேண்டிய பண்ணினை.
3. செய்யும் - செய்யும்படியான; இடம் - நிலையினை; சேந்தல் - சோம்புதல், ஒடுங்கல்.
4. நையும் - உள்ளம் நெகிழும்படியான; அறிந்து - தெரிந்து; நாடு - விரும்பிச் செல்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 132 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீடு சென்ற தலைவன், தன்மீது தலைவி கொண்டுள்ள சினத்தைப் போக்கித் தன்னை ஏற்குமாறு பாணன் ஒருவனைத் தூதாய் அனுப்பினான். அவன் கூறியதை ஏற்க மறுத்துத் தலைவி உரைத்தது.

எங்கை யரில்உள்ளா னேபாண! நீபிறர்
மங்கையரில் என்று மயங்கினாய் – மங்கையரில்
என்னா(து) இறவா(து) இவணின் இகந்தேகல்
பின்னாரில் அந்தி முடிவு.

தெளிவுரை

“என் தங்கையரான பரத்தையர் இல்லத்திலேயே கிடக்கும் பாணனே! எம் வீட்டையும் அப்பரத்தையர் வீடு என்று கருதி மயங்கி வந்துவிட்டாயா? பரத்தையர் இல்லத்தில் இம்மாலைப் பொழுது, நாள் இறுதி - மணவிழாத் தொடங்கும் காலமாகும். எம் இல்லத்தைப் பரத்தையர் வீடு என்று கருதாது, உடனே பரத்தையர் மனைக்கு மீண்டு செல்!” என்று தலைவி பாணற்கு *வாயில் மறுத்துக் கூறினாள்.*

கருத்து

‘பாண! நீ பரத்தையர் வீட்டுக்கே செல்.’

குறிப்பு

பரத்தையர் வீட்டில் ஒவ்வொரு மாலைப்பொழுதும் திருமணப் பொழுதுதான் என்னுமொரு குறிப்பை இப்பாடல் மூலம் பெறுகிறோம்.

சொற்பொருள்

1. எங்கையர் - எம் தங்கையர், பரத்தையர்; இல் - வீடு; உள்ளானே - இருப்பவனே.

2. மங்கையரில் - மங்கையர் + இல், மங்கையர் - பரத்தையர்; மயங்கினாய் - மயங்கிவிட்டாய் (என் மனையைப் பிறழ உணர்ந்து வந்துவிட்டாய்).
3. என்னாது - கருதாது; இறவாது - தவறாய்க் கருதாது; இவண்இன் - இங்கிருந்து; இகந்து - நீங்கி; ஏகல் - செல்.
4. பின்னாரில் - பின்னார் + இல் - எனக்குப் பின்னவராகிய பரத்தையர் வீட்டில்; அந்தி முடிவு - மாலைப்பொழுது முடியும் நேரம் (இது பரத்தையர் வீட்டில் மணவிழாத் தொடங்கும் காலம்).

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 22 — **மாறன் பொறையனார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிற்பிரிந்த தலைவன், தன்னை ஏற்குமாறு பாணன் ஒருவனைத் தூதாய் அனுப்பினான். அவன் கூறியதை ஏற்க மறுத்துத் தலைவி உரைத்தது.

போதார்வண்(டு) ஊதும் புனல்வயல் ஊரற்குத்
தூதாய்த் திரிதரும் பாண்மகனே – நீதான்
அறிவயர்ந்(து) எம்மில்லுள் என்செய்ய வந்தாய்
நெறியதுகாண் எங்கையர் இற்கு.

தெளிவுரை

மலர்களில் மொய்க்கும் வண்டுகள் ஒலி எழுப்பும் நீர்வளம் மிக்க நன்செய் நிலத் தலைவனுக்குத் தூதுவனாய்த் திரியும் பாணனே! நீ அறிவு கெட்டுப்போய் என் வீட்டிற்கு ஏன் வந்தாய்? எனக்குத் தங்கை முறையினரான பரத்தையர் வீட்டிற்குச் செல்லும்வழி அதோ இருக்கிறது! அங்கே செல்வாய்!

கருத்து

'பாண! என் வீட்டில் உனக்கு வேலை இல்லை. தலைவன் எங்கிருக்கிறானோ, அங்கே செல்.'

சொற்பொருள்

1. போது - மலர்; ஆர் - மொய்க்கும்; புனல்வயல் - நன்செய் நிலம்.
3. அறிவு அயர்ந்து - அறிவு கெட்டு; இல்லுள் - வீட்டினுள்.
4. எங்கையர் - எம் தங்கையர்; இற்கு - வீட்டுக்கு; நெறி - செல்லும் வழி; அதுகாண் - அதோ அங்கே இருக்கிறது பார்.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 21 **மாறன் பொறையனார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிற்பிரிந்த தலைவன், தன் பாணனிடம், 'தலைவியிடம் சொல்' என்று சொல்லி அனுப்பினான். இச்செய்தியைக் கேட்ட தலைவி பாணனிடம் அதனை மறுத்துக் கூறியது.

கொண்டுழிப் பண்டம் விலையொரீஇக் கொற்சேரி!
நுண்துளைத் துன்னூசி விற்பாரின் – ஒன்றானும்
வேறல்ல பாண! வியலூரன் வாய்மொழியைத்
தேற எமக்குரைப்பாய் நீ.

தெளிவுரை

"பாண! விரிந்து பரந்த மருதநில ஊர்த்தலைவன் உன்னிடம் சொல்லி விடுத்த மொழிகளைத் தெளிவாய் என்னிடம் சொல். கொல்லர் தெருவிலே நுண்ணிய துளையைக்கொண்ட ஊசியினைக் கொள்முதல் செய்தபோது கொடுத்த விலையை விட அதிகமான விலைக்கு அதே வீதியில் விற்கின்ற வணிகரை விட நீ எந்த வகையிலும் வேறுபட்டவன் அல்லன்" என்று தலைவி பாணனிடம் கூறினாள்.

கருத்து

'கொல்லர் தெருவில் கொள்முதலாய் வாங்கிய ஊசியை அதே தெருவில் அதிக விலைக்கு விற்கும் வணிகரைப் போல, நீ என்னிடம் நடந்துகொள்ள முயல்கிறாய். அது எடுபடாது.'

குறிப்பு

'கொல்லன் தெருவில் ஊசி விற்பதுபோல' என்னும் பழமொழி இப் பாடலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. கொண்டுழி - கொள்முதல் இடத்தில் கொடுத்த; ஒரீஇ - விலையை வேறுபடுத்தி மிகுத்துக் கூறி; கொற்சேரி - கொல்லர் தெருவில்.
2. துன்ஊசி - தைக்கும் ஊசி; ஒன்றானும் - எந்த ஒரு வகையிலும்.
3. வியல் - இடமகன்ற; வாய்மொழி - சொல்லி அனுப்பிய மொழி.
4. தேற - தெளிவாய்.

தலைவி கூற்று

நாலடியார் 388 சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை

திணை : மருதம்

கூற்று

பரத்தை வீடு சென்ற தலைமகனின் தூதாய்ப் பாணன் வர, அவனை நோக்கித் தலைமகள் நகையாடிக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தை வீடு சென்றமையால் தலைவி சினமுற்று ஊடல் கொண்டிருந்தாள். அவள் சினத்தை நீக்கி ஊடலைத் தவிர்த்து அவனை ஏற்குமாறு தலவைன் பாணனைத் தலைவியிடம் தூதாய் அனுப்பினான். அத்தூதனைப் பரிகசித்துத் தலைவி சொல்லியது.

கொடியவை கூறாதி பாணநீ! கூறின்,
அடிபைய இட்(டு)ஒதுங்கிச் சென்று – துடியின்
இடக்கண் அணையம்யாம் ஊரற்கு, அதனால்
வலக்கண் அணையார்க்கு உரை.

தெளிவுரை

பாணனே! தலைவன் பக்கமாய்ச் சேர்ந்து கொடுமையான சொற்களை எம்மிடம் கூறாதே. யாம் தலைவனுக்கு உடுக்கையின் இடப்பக்கம்போலப் பயன்படாதிருக்கின்றோம். அதனால் நீ கூறுவதாயிருந்தால் மெதுவாக இங்கிருந்து விலகிச் சென்று, உடுக்கையின் வலப்பக்கம்போல் தலைவனுக்குப் பயன்பட்டு வருகின்ற பரத்தையிடம் சொல்.

கருத்து

பாண! நீ பரத்தையர் வீட்டுக்கே செல்.

விளக்கம்

உடுக்கை ஒலி எழுப்பும் ஒரு தோற்கருவி; இது தோலால் மூடப்பட்ட இரண்டு பக்கங்களைக் கொண்டது. உடுக்கையை அடிப்பவன் அதன் வலப்புறத்தை மட்டுமே தட்டி ஒலி எழுப்புவான். இடப்பக்கம் பயன்படுத்தப்படுவதில்லை.

சொற்பொருள்

1. கூறாதி - கூறாதே.
2. பைய - மெதுவாக; துடி - உடுக்கை.
3. இடக்கண் - இடப்பக்கம்; ஊரன் - தலைவன்.
4. வலக்கண் அணையார் - பரத்தை.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 49 **மூவாதியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் பாணற்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையரிடம் சென்றிருந்த தலைவன், தலைவி தன்னோடு கொண் டுள்ள ஊடலை நீக்குமாறு பாணன் ஒருவனைத் தூதாய் அனுப்பினான். அவன் கூறிய மொழியை ஏற்காது, தலைவி மறுத்துக் கூறியது.

யாணர்நல் ஊரன் திறம்கிளப்பல் என்னுடைய
பாண! இருக்க அதுகளை – நாண்உடையான்
தன்உற்ற எல்லாம் இருக்க இரும்பாண!
நின்உற்ற(து) உண்டேல் உரை.

தெளிவுரை

பாணனே! புது வருவாயுள்ள நல்ல ஊரினைக் கொண்டுள்ள தலைவனின் பெருமைகளைப் பலவிதமாய் என்னிடம் எடுத்துச் சொல்வதைக் கைவிடு. பெருமை மிக்க பாணனே! 'தலைவன் பிற பெண்டிரைக் கண்டு நாணப்படுபவன்' என்றெல்லாம் நீ சொல்வது ஒருபுறம் இருக்கட்டும். உனக்கு ஏதேனும் வேண்டியிருந்தால் என்னிடம் சொல்.

கருத்து

'பாண! தலைவனுக்காக என்னிடம் பரிந்து பேசுவதை நிறுத்து.'

விளக்கம்

பரத்தையர் வீட்டில் இருக்கும் தலைவனை, 'அவன் பிற பெண்டிரைப் பார்க்கவே நாணப்படுவான்' என்று கூற உனக்கே வெட்கமாயில்லை? அவனுக்காகப் பேசுவது ஒருபுறமிருக்கட்டும். உனக்கு ஏதாவது வேண்டியிருந்தால் அதை மட்டும் சொல்லு.

சொற்பொருள்

1. யாணர் - புது வருவாய்; திறம் - பெருமையை; கிளப்பல் - என்னிடம் பேசுவதை.
2. களை - விடு; நாண் உடையான் - (பிற பெண்டிரைக் காண) நாணம் கொண்டவன் என்று.
3. தன் உற்ற எல்லாம் - அவனிடம் அமைந்துள்ள குணங்கள்பற்றி எல்லாம்; இருக்க - இருக்கட்டும்; இரும் பாண - பெருமைமிக்க பாணனே!
4. நின் - உனக்கு; உற்றது உண்டேல் - ஏதேனும் தேவை இருந்தால்; உரை - சொல்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 131 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீடு சென்ற தலைவன், தன்மீது தலைவி கொண்டுள்ள சினத்தைப் போக்கித் தன்னை ஏற்குமாறு பாணன் ஒருவனைத் தூதாய் அனுப்பினான். அவன் கூறியதை தலைவி மறுத்து உரைத்தது.

மடங்(கு)இறவு போலும்யாழ்ப் பண்பில்லாப் பாண!
தொடங்குறவு சொல்துணிக்க வேண்டா – முடங்கிறவு
பூட்டுற்ற வில்ஏய்க்கும் பூம்பொய்கை ஊரன்பொய்
கேட்டுற்ற கீழ்நாள் கிளர்ந்து.

தெளிவுரை

"மடங்கிய இறால் மீனைப் போன்ற யாழினையுடைய நற்பண்பில்லாத நாண் பூட்டிய வில்போல் விளங்கும் பாணனே! வளைந்த இறால் மீன்களும், மலர்களும் நிரம்பிய பொய்கைகள் மிக்க மருத நில ஊர்களை உடையவன், தலைவன். அத் தலைவனின் பொய்ம்மொழிகளைக் கேட்டு வந்து, பாண! என்னோடு தலைவன் கொண்டுள்ள உறவினை உன் சொற்களில் கூற வேண்டா. அதனை நான் நன்றாகவே அறிவேன். நீ சென்று வருக" என்று தலைவி வாயில் மறுத்தாள்.

கருத்து

தலைவனை நான் நன்றாய் அறிவேன்; பாண, நீ சொல்ல வேண்டியதில்லை.

சொற்பொருள்

1. மடங்கு - மடங்கிய; இறவு - இறால் மீன்; பண்பில்லாப் பாண - நற்பண்புகளில்லாத பாணனே!
2. தொடங்கு உறவு - எம்மிடையே தொடங்கப்பெற்ற உறவினை; சொல் - உன் சொற்களினாலே; துணிக்க வேண்டா - துணிந்து

கொள்ளுமாறு கூற வேண்டுவதின்று (நான் நன்கு அறிவேன்); முடங்கு இறவு - வளைவுற்ற இறால் மீன்கள்.

3. பூட்டுற்ற - நாணினாலே தொடுக்கப்பட்ட; வில் - வில்லினை; ஏய்க்கும் - ஒத்திருக்கும்; பூம்பொய்கை ஊரன் - மலர்கள் நிரம்பிய பொய்கைகளைக் கொண்ட ஊரன்; பொய் - பொய்யான மொழிகளை.

4. கேட்டு - தெரிந்து; உற்ற - பெற்ற; கீழ்நாள் - சென்ற நாள் செய்திகளை; கிளர்ந்து - கிளர்ச்சியாய் எடுத்துச் சொல்லி.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 23 — **மாறன் பொறையனார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிற்பிரிந்த தலைவன், தன் பாணனிடம், 'தலைவியிடம் சொல்லுக' என்று சொல்லி அனுப்பினான். இச்செய்தியைக் கேட்ட தலைவி அதனைப் பாணனிடம் மறுத்துக் கூறியது.

யாணர் அகல்வயல் ஊரன் அருளுதல்
பாண! பரிந்துரைக்க வேண்டுமோ – மாண
அறிவ(து) அறியும் அறிவினார் கேண்மை
நெறியே உரையாதோ மற்று.

தெளிவுரை

பாணனே! புது வருவாயினைக் கொண்ட அகன்ற மருத நிலத்திற்கு உரியவனான ஊரன் என்மேல் மிகுந்த அன்புள்ள வனாயிருக்கிறான் என்பதை நீ பாராட்டித்தான் நான் அறிந்து கொள்ள வேண்டுமா? எத்தகைய அன்பு கொண்டவன் என்பதை நான் அறிவேன். அறிய வேண்டியதை அறிந்த அறிவுடையோர் கைக்கொள்ளும் நட்பினை அவரது நடத்தையே அறிவிக்காதா?

கருத்து

'தலைவன் அன்பு எத்தகையது என்பதை நானே அறிவேன்; பாண! நீ சொல்லி அறிய வேண்டியதில்லை.'

விளக்கம்

'யாணர் அகல் வயல் ஊரன்' என்னும் தொடரில், தலைவன் நாள்தோறும் புதிய புதிய பரத்தையரை நுகரும் தன்மையினன் எனும் குறிப்புப்பொருள் தோன்றக் காணலாம்.

சொற்பொருள்

1. யாணர் - புது வருவாய்; அகல் - அகன்ற; அருளுதல் - எனக்கு அருள்வதை.
2. பரிந்துரைக்க - பாராட்டிச் சொல்ல; மாண - நன்றாய்.
3. கேண்மை - நட்பு.
4. நெறியே - (அவர்கள் மேற்கொள்ளும்) போக்கே.

தலைவி கூற்று

கைந்நிலை 46 **புல்லங்காடனார்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாக வந்த பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவனுக்காகத் தூது வந்த பாணனிடம், தலைவி மறுத்துரைத்தது.

கயநீர் பாய்ந்தோடும் காஞ்சிநல் ஊரன்
நயமே பலசொல்லி நாணினன் போன்றான்
பயமில்யாழ்ப் பாண பழுதாய கூறாது
எழுநீபோ நீடாது மற்று.

தெளிவுரை

வாயிலாய் வந்த பாணனிடம், "பயனற்ற யாழைக் கையிலே கொண்டுள்ள பாணனே! பொய்கையிலிருந்து கால்வாய் வழியே

பாய்ந்து ஓடும் நீர் வளமிக்க காஞ்சி மரங்களைச் சேரும். அத்தகைய வளம் நிறைந்துள்ள மருத நிலத்திற்குத் தலைவன், அந்நாளில் நயம் நிறைந்த சொற்கள் பலவற்றைச் சொல்லி என்னை மணந்தான். அவன் இன்று என் இல்லத்துக்கு வருவதற்கு நாணங்கொண்டவன் போல அஞ்சி மறைந்திருக்கின்றான். ஆதலால், நீ வீணான சொற்களைக் கூறி என் மனத்தைப் புண்படுத்தாது, இங்கு நீடித்து நில்லாமல் எழுந்து விரைவில் செல்" என்று தலைவி கூறினாள்.

கருத்து

'பாண! நீ வீணான சொற்களைப் பேசி இங்கு நிற்காதே.'

குறிப்பு

பொய்கையின் நீர், கால்வாய் வழியாகக் காஞ்சி மரத்தைச் சென்றடைகிறது என்னும் தொடர், தலைவனின் செல்வமெல்லாம் பாணன் மூலமாய்ப் பரத்தையர் வீட்டைச் சென்றடைகிறது என்னும் குறிப்புப் பொருளைத் தருகிறது.

சொற்பொருள்

1. கய நீர் - பொய்கை நீர்; காஞ்சி - காஞ்சி மரம்.
2. நயமே பலசொல்லி - இயற்கைப் புணர்ச்சியில் 'உன்னைப் பிரியேன்; பிரியின் உயிர் தரியேன்' என்பன போன்ற நயமான சொற்கள் பலவற்றைச் சொன்னான்; நாணினன் போன்றான் - (அச் சொற்களை நினைத்து) நாணம் உறுகிறான் போலும்.
3. பயமில் - பயன் + இல் - பயன் இல்லாத; பழுதுஆய - வீணான.
4. எழு, நீ, போ நீடாது - இங்கு நீடித்து நில்லாமல் எழுந்து நீ விரைவில் செல்.

தலைவி கூற்று

கைந்நிலை 37 **புல்லங்காடனார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தூதனாய்த் தன்னிடம் வந்த பாணனை நோக்கித் தலைவி சினந்து கூறியது.

கழனி உழவர், கலிஅஞ்சி ஓடி,
தழெனு, மதஎருமை தண்கயம் பாயும்
பழன வயல்ஊரன் பாண!எம் முன்னர்,
பொழெனப் பொய்கூறா(து), ஒழி.

தெளிவுரை

தலைவி பாணனிடம், "வயலில் உழுகின்ற உழவர்களின் ஆரவாரத்துக்கு அஞ்சிச் செருக்குக் கொண்ட எருமைகள் ஓடி, 'தழ' என ஒலியை எழுப்பிக் குளிர்ச்சியினைக் கொண்ட குளத்தில் வீழும். இத்தகைய காட்சி பொருந்திய மருத நிலங்களையும் வயல்களையும் உடைய தலைவன் அனுப்பிய பாணனே! எம் முன்பு நீ 'பொழ' என்னும் ஒலியுடன் பொய் சொல்வதை நீக்கு" எனக் கூறினாள்.

கருத்து

'பாண! நீ பொய் சொல்வதை நிறுத்து.'

உள்ளுறை

மாடுகளை உழவர்கள் விரட்டும் ஓசையைக் கேட்டு எருமைகள் குளத்தில் விழும் என்னும் உள்ளுறைத் தொடர் மூலம், தலைவியின் குரல் கேட்டு வெகுண்டு தலைவன் பரத்தையர் சேரி சென்று அங்கு இன்பம் துய்க்கின்றான் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

குறிப்பு

எருமை, இழிந்த சேற்றுநீரில் இன்பம் காண்கிறது; அதுபோல், தலைவன் இழிந்த பரத்தையரிடம் இன்பம் பெறுகிறான் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. கழனி - வயல்; கலி - ஆரவாரம்.
2. மதம் - செருக்கு; தண் - குளிர்ந்த; கயம் - குளம்.
3. பழனம் - மருத நிலம்.

2, 4.தழ, பொழ - ஒலிக்குறிப்புகள்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 48 **மூவாதியார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையரிடம் சென்றிருந்த தலைவன், தலைவி தன்னோடு கொண்டுள்ள ஊடலை நீக்கப் பாணன் ஒருவனைத் தூதாய் அனுப்பினான். அவன் கூறிய மொழியை ஏற்காது, தலைவி மறுத்துக் கூறியது.

பேதை புகலை புதல்வன் துணைச்சான்றோன்
ஓதை மலிமகிழ்நற்(கு) யாஅம் எவன்செய்தும்?
பூவார் குழல்கூந்தல் பொன்அன்னார் சேரியுள்
ஓவாது செல்பாண! நீ.

தெளிவுரை

“*பாணனே! பல்வகை ஒலிகள் மிகுந்த வயல்கள் சூழ்ந்த மருதநில ஊர்களைக் கொண்டிருப்பவன், தலைவன். அவனுக்குப் பிறந்துள்ள அன்பு மகனையே பெருந்துணையாய்க் கொண்டிருக்கும் நான், அத்தலைவனுக்காக என்ன செய்ய இயலும்? (என்னால் அவனுக்கு ஆவது ஒன்றுமில்லை). முடித்துள்ள கூந்தலில் மலர்களைச் சூடியுள்ளவளும் மிகுந்த பொன்*

போலும் சிவந்த மேனியைக் கொண்டவளுமான பரத்தையர் வாழும் சேரிக்கு நீ இடைவிடாமல் செல்" என்று பாணற்கு வாயில் மறுத்துத் தலைவி வெறுப்புடன் கூறினாள்.

கருத்து

'பாணனே! தலைவனுக்கு நான் எதுவும் அளிக்க இயலாதவளாய் உள்ளேன்! நீ பரத்தையர் சேரிக்கே செல்.'

குறிப்பு

தலைவனை ஈர்க்கும் பரத்தையர், தங்கம் போன்ற நிறம் கொண்டவர் எனும் கருத்தைப் 'பொன் அன்னார் சேரி' எனும் தொடர் காட்டுகிறது.

தலைவிக்கு அவள் மகனே எந்நிலையிலும் துணை என்னும் கருத்தைப் 'புதல்வன் துணை' எனும் தொடர் புலப்படுத்துகிறது.

சொற்பொருள்

1. துணைச் சான்றோன் - துணையாய் இருக்கும் சான்றோனாகிய; புதல்வன் - மகனை; புகல் - அடைக்கலமாய்க் கொண்டுள்ள; பேதை - பேதைப்பெண் (நான்).
2. ஓதை - ஒலிகள்; மலி - மிகுந்துள்ள; மகிழ்நற்கு - தலைவனுக்கு; யாஅம் - நான்; எவன் செய்தும்? - என்ன செய்ய இயலும்?
3. பூ ஆர்- மலர்கள் நிறைந்த; குழல் கூந்தல் - சுருட்டி முடித்த கூந்தலைக் கொண்ட; பொன் அன்னார் - பொன் போன்ற நிறம் வாய்ந்த பரத்தையர்.
4. ஓவாது - இடைவிடாது.

தலைவி கூற்று

திணைமொழி ஐம்பது 37 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் பாணற்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீடு சென்று தங்கிய தலைவன், தலைவி தன் மீது கொண்டுள்ள சினத்தை நீக்கப் பாணன் ஒருவனைத் தூதாய் அனுப்பினான். தலைவி அப்பாணனிடம் மறுத்துக் கூறியது.

பல்காலும் வந்து பயின்றுரையல் பாண!கேள்
நெல்சேர் வளவயல் ஊரன் புணர்ந்தநாள்
எல்வளையம் மென்தோளேம், எங்கையர் தம்போல
நல்லஅருள் நாட்டம் இலேம்.

தெளிவுரை

பாணனே, கேள்! நெல் வயல்கள் சூழ்ந்த மருத நில ஊருக்குத் தலைவன், எம்மோடு கலந்து வாழ்ந்த காலத்திலும் எளிய வளையல்களை அணிந்து மெல்லிய தோள்களைக் கொண்டவராய்த்தான் இருந்தோம்! எம் தங்கையரான பரத்தையரிடம் காட்டும் அன்புப் பார்வையை நாங்கள் பெறவில்லை. எனவே, அவனைப்பற்றி என்னிடம் பல தடவையும் வந்து பன்னிப் பன்னிப் பேச வேண்டா.

கருத்து

'பாண! தலைவன் என்மீது அன்பு கொண்டவன் அல்லன்; அவனுக்காக நீ பரிந்து பேச வேண்டா.'

குறிப்பு

தலைவன் என்னோடு இருந்தபொழுதிலும் உண்மை அன்புடன் இருக்கவில்லை. அவனைப் பிரிந்துள்ள இப்போது கொண்டுள்ள தோற்றத்தையே அப்போதும் பெற்றிருந்தேன்.

சொற்பொருள்

1. பல்காலும் - பல முறையும்; பயின்று உரையல் - எடுத்துச் சொல்ல வேண்டா.
2. புணர்ந்த நாள் - எம்மோடு கலந்து வாழ்ந்த அக்காலத்திலும்.
3. எங்கையர் - பரத்தையர்; போல - போன்று.
4. நல்ல அருள் நாட்டம் - சிறந்த அருளோடு கூடிய பார்வையினை; இலேம் - பெற்றோம் இல்லை.

தலைவி கூற்று

திணைமொழி ஐம்பது 35 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் பாணற்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீடு சென்று தங்கிய தலைவன், தலைவி தன்மீது கொண்டுள்ள சினத்தை நீக்கப் பாணன் ஒருவனைத் தூதாய் அனுப்பினான். தலைவி அப்பாணனிடம் மறுத்துக் கூறியது.

வேனிற் பருவத்(து) எதிர்மலரேற் றூதும்
கூனிவண்(டு) அன்ன குளிர்வயல் நல்லூரன்
மாணிழை நல்லார் இளநலம் உண்டவர்
மேனி ஒழிய விடும்.

தெளிவுரை

“வேனிற்பருவத்தில் கண்ணில் படும் மலர்களில் அமர்ந்து தேன் அருந்தும் பழக்கம் கொண்ட வளைந்த சிறகினைக் கொண்ட வண்டினம் போன்றவன், குளிர்ச்சி பொருந்திய கழனிகள் சூழ்ந்த மருத நிலத்துக்கு உரியனான நம் தலைவன். சிறந்த அணிகலன்களை அணிந்த இளம் பெண்களிடம் இளமை இருந்த போது அவர்களிடமிருந்து இன்பத்தைப் பெற்று, அப்பெண்களின் அழகு நீங்கியவுடன் அவர்களை விட்டு விலகுவான். இத்தகைய தன்மை கொண்ட தலைவனது

தொடர்பு எங்களுக்குத் தேவையில்லை" என்று தலைவி பாணனிடம் கூறினாள்.

கருத்து

'மலர் தாவும் வண்டு போன்றவன், தலைவன்; அவன் அன்பு எனக்குத் தேவையற்றது.'

சொற்பொருள்

1. எதிர்மலர் - கண் எதிரில் தோன்றும் மலர்; ஏற்று ஊதும் - அமர்ந்து தேன் அருந்தும்.
2. கூனி - வளைந்த (சிறகினைக்கொண்ட).
3. இளநலம் - இளமை நலம்; உண்டவர் - உண்டு+அவர்; உண்டு - மேனி நலத்தை உண்டு.

3-4. அவர் மேனி - அவர்களின் மேனி அழகு; ஒழிய - நீங்கியவுடன்; விடும் - விட்டு நீங்குவன்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 124 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீடு சென்ற தலைவன், தன்மீது தலைவி கொண்டுள்ள சினத்தைப் போக்கித் தன்னை ஏற்குமாறு செய்யத் தூதாய் ஒருவனை அனுப்பினான். அவன் கூறியதைக் கேட்டுத் தலைவி மறுத்தது.

செவ்வழியாழ்ப் பாண்மகனே! சீரார்தேர் கையினால்
இவ்வகை ஈர்த்துய்ப்பான் தோன்றாமுன் – இவ்வழியே
ஆடினான் ஆய்வயல் ஊரன்மற்(று) எங்கையர்தோள்
கூடினான் பின்பெரிது கூர்ந்து.

தெளிவுரை

"யாழினைக் கையில் கொண்டு செவ்வழிப்பண்ணினைச் சிறப்பாய்ப் பாடும் நல்ல பாணனே! நல்லவை என்று பாராட்டப் பெற்ற நன்செய் நிலங்களை உரிமையாய்க் கொண்டவன், தலைவன். சிறப்பான சிறு தேரினைக் கையினால் இழுத்து விளையாடும் என் மகன் பிறப்பதற்கு முன் (என் இளமைக் காலத்தில்) இவ்வீட்டில் என்னோடு தங்கியிருந்தான்; என் மகன் பிறந்த பின் என் தங்கையரான பரத்தையர் தோள்களைப் பெரிதும் விரும்பி அவர்களோடு கூடி மகிழ்ந்துகொண்டிருக் கிறான். ஆதலால், இப்போது தலைவன் ஏற்கத்தக்கவளாய் நான் இல்லை" என்று பாணனிடம் வாயில் மறுத்துத் தலைவி கூறினாள்.

கருத்து

'என் இளமை கழிந்ததால் தலைவன் என்னைத் தவிர்த்தான்; இப்போது நான் அவன் ஏற்கத்தக்கவளாய் இல்லை.'

சொற்பொருள்

1. செவ்வழி - செவ்வழிப்பண்(பாடும்); யாழ் - யாழினைக் (கையில் கொண்ட); சீரார் - சிறப்பினைக் கொண்ட; கையினால் - கைகளினாலே.
2. இவ்வகை - இம்முறையாய்; ஈர்த்து - இழுத்துச் சென்று; உய்ப்பான் - (தன் விளையாட்டினை) நடத்துகின்ற என் மகன்; தோன்றாமுன் - பிறப்பதற்கு முன்; இவ்வழியே - இம்மனையிடத்தில்.
3. ஆடினான் - என்னுடன் மகிழ்ந்து ஆடினான்; எங்கையர் - என் தங்கையர் (பரத்தையர்);
4. பின் - பிறகு.; பெரிது கூர்ந்து - மிகவும் விரும்பி.

தலைவி கூற்று

கைந்நிலை 43 **புல்லங்காடனார்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாக வந்த பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிடம் சென்றிருந்த தலைவன், ஊடல் கொண்டிருக்கும் தலைவியின் சினத்தைத் தணிப்பதற்காகப் பாணனைத் தூது அனுப்பினான். தலைவி அப்பாணனிடம் சினந்து சொன்னது.

போதுஅவிழ் தாமரைப் பூந்துறை ஊரனைத்
தாதுஅவிழ் கோதைத் தகையிலார் தாம்புலப்பர்;
ஏதின்மை சொல்லி இருப்பர், பிறர்மகளிர்,
பேதைமை தம்மேலே கொண்டு.

தெளிவுரை

"மலர்கின்ற தாமரை அரும்புகள் நிறைந்த நீர்த்துறையை யுடைய மருத நிலத்தவன், என் தலைவன். மகரந்தத்தூள் சிந்தும் மலர் மாலையை அணிந்த அழகினைக் கொண்ட பரத்தையர், என்னைத் தலைவன் மனைவியாய்க் கருதாமல், அயலொருத்தி யாய்க் கருதி என் வீட்டுக்கு அவன் வந்ததைச் சொல்லி அவனோடு பிணக்கம் கொள்கின்றனர் என்று பலர் வாயிலாய் நான் கேட்கின்றேன்" என்று கூறிப் பாணனிடம் வாயில் மறுத்தாள், தலைவி.

கருத்து

'பாண! பரத்தை என்னைப்பற்றிக் குறை கூறி என் கணவனைத் தன்னிடமே இருத்திக்கொள்கிறாள். அவ்வாறிருக்க நீ ஏன் இங்கு வந்தாய்?'

விளக்கம்

"பரத்தையர் என்னைத் தலைவன் மனைவியாய்க் கருதாமல், அயல் ஒருத்தியாய்க் கருதி என் மனைக்கு என் தலைவன் வருவதையே குறையாய்க் கூறி, என் தலைவனிடம் ஊடல் கொள் கின்றனர்" எனப் பலர் வாயிலாய்க் கேட்டிருக்கிறேன் என்று தலைவி கூறுகிறாள்.

குறிப்பு

தலைவன் தன் வீட்டில்தான் இருக்க வேண்டும் என்று தலைவி கருது வதைப்போலத் தாங்களும் கருதுவதாய்க் கூறிப் பரத்தையர், தலைவனைத் தம்மில்லத்திலேயே இருத்திக்கொள்கின்றனர். அவ்வாறிருக்க, நீ ஏன் இங்கு வந்தாய்?' என்று தலைவி பாணனிடம் கேட்டு வாயில் மறுக்கிறாள்.

சொற்பொருள்

1. போது - அரும்பு; பூந்துறை ஊரன் - மலர்கள் நிறைந்த நீர்த்துறையை உடைய மருதநிலத் தலைவன்.
2. தாது - மகரந்தம்; அவிழ் - உதிர்கின்ற; தோகை - மாலை.
3. ஏதின்மை - பகைமை.
4. பேதைமை - அறியாமை.

தலைவி கூற்று

திணைமொழி ஐம்பது 34 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் பாணற்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீடு சென்று தங்கிய தலைவன், தலைவி தன்மீது கொண்டுள்ள சினத்தை நீக்கப் பாணன் ஒருவனைத் தூதாய் அனுப்ப, தலைவி பாணனிடம் மறுத்துக் கூறியது.

செந்நெல் விளைவயல் ஊரன் சிலபகல்
தன்னலம் என்அலார்க்(கு) ஈயான் எழுபாண!
பாரித்த அல்குல் பணைத்தோளார் சேரியுள்
வாரிக்குப் புக்குநின் றாய்.

தெளிவுரை

பாணனே! செந்நெல் விளையும் வயல்களுக்கு உரிமை யாளனான தலைவன், சில காலம் என்னோடு இணைந்து வாழ்ந்து இன்பம் ஈந்தான்; என்னை அல்லாது மற்ற பெண்களை

விரும்பாதவனாயும் இருந்தான். ஆனால், இப்போதோ பரந்த அல்குலினையும், மூங்கில் போன்ற தோள்களையும் கொண்ட பரத்தையரை விரும்பி அவர் வாழும் சேரியில் இன்பக்கடலில் திளைக்கிறான். அதற்குரிய காரணத்தை நீ அங்குச் சென்று ஆய்ந்து பார்.

கருத்து

'முன்பு என்னோடு இணைந்திருந்த தலைவன் இப்போது பரத்தையரோடு இணைந்து இன்பத்தில் திளைக்கின்றான். பாண! நீ அவனை அங்குச் சென்று காண்.'

சொற்பொருள்

1. சில பகல் - (முன்பு) சில காலம்.
2. தன் நலம் - தன் அன்பை; ஈயான் - (என்னை அல்லாத மற்ற பெண்களுக்கு)க் கொடாதவனாயிருந்தான்; எழு பாண! - பாணனே இங்கிருந்து எழுந்து செல்.
3. பாரித்த - பரந்த; பணை - பருத்த; தோளார் - தோள்களைக் கொண்டவர் (பரத்தையர்).
4. வாரிக்கு - (தலைவன் தன் இன்பத்தை) வாரி இறைத்தற்குரிய காரணத்தினை; புக்கு - அப்பரத்தையர் வீடு சென்று; ஆய் - ஆராய்க.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 46 **மூவாதியார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையரிடம் சென்றிருந்த தலைவன், தலைவி தன்னோடு கொண்டுள்ள ஊடலைப் போக்கத் தூதாய்ப் பாணனை அனுப்பினான். அப் பாணன் கூறிய மொழியை ஏற்காது, தலைவி மறுத்துக் கூறியது.

உழலை முருக்கிய செந்நோக்(கு) எருமை
பழனம் படிந்துசெய் மாந்தி – நிழல்வதியும்
தண்துறை ஊரன் மலர்அன்ன மார்புறப்
பெண்டிர்க்(கு) உரைபாண! உய்த்து.

தெளிவுரை

"பாணனே! உழலை என்னும் மரத்தை முரித்து அழிவு செய்த செந்நிறக் கண்களைக் கொண்ட எருமை (தொழுவத்தை விட்டு நீங்கி) வயலிலே மேய்ந்து மருத மர நிழலில் தங்கியிருக்கும் குளிர்ச்சி பொருந்திய துறையினைக் கொண்ட ஊரினை உடையவன், தலைவன். மலரை ஒத்த அவனது மார்பினைத் தழுவிக் கிடக்கும் பரத்தையிடம் போய்ப் பேசு" என்று தலைவி பாணன்மீது சினமுற்றுக் கூறினள்.

கருத்து

'தலைவன் பரத்தையர் இல்லம் சென்று, அவரோடு கூடி மகிழ்ந்து தங்கி யிருப்பவன்' என்று தலைவி சினமுற்றுக் கூறினாள்.

குறிப்பு

தொழுவத்தை விட்டு எருமை நீங்கி, வயலில் மேய்ந்து, அங்குள்ள மர நிழலில் தங்கியிருத்தற்கும் ஊரினை உடையவன் என்னும் அடி மூலம், தலைவன் தலைவியை விட்டு நீங்கி, பரத்தையரோடு கூடி மகிழ்ந்து, அவர்களுடைய இல்லத்திலேயே தங்கியிருப்பவன் என்னும் கருத்து வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. உழலை - உழலை மரம்; முருக்கிய - முரித்த; செந்நோக்கு - சிவந்த கண்களைக் கொண்ட.
2. பழனம் படிந்து - மருத நிலத்தினூடே சென்று; செய் - கழனியில்; மாந்தி - மேய்ந்து; நிழல் வதியும் - (மருதமர) நிழலில் தங்கும்.
3. மலர் அன்ன - மலர் போன்ற.
4. பெண்டிர்க்கு - பரத்தையர்க்கு; உரை - சொல்.

தலைவி கூற்று

திணைமொழி ஐம்பது 38 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீடு சென்று தங்கிய தலைவன், தலைவி தன்மீது கொண்டுள்ள சினத்தை நீக்கப் பாணன் ஒருவனைத் தூதாய் அனுப்ப, தலைவி அவனிடம் மறுத்துக் கூறியது.

நல்வயல் ஊரன் நலமுரைத்து நீபாண
சொல்லில் பயின்றுஉரைக்க வேண்டா ஒழிதிநீ
எல்லுநல் முல்லைத்தார் சேர்ந்த இருங்கூந்தல்
சொல்லும் அவர்வண்ணம் சோர்வு.

தெளிவுரை

பாணனே! நல்ல வயல்கள் நிறைந்த மருதநிலத் தலைவனின் பண்புகளைப்பற்றி நீ உன் வெற்றுச்சொற்களால் மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டா. ஒளிமிக்க முல்லை மாலைகள் நிறைந்த நீண்ட கூந்தலைக் கொண்ட பரத்தையரே, அத் தலைவன் தம்மீது கொண்டுள்ள காதல் நேர்த்தியினையும், எம்மீது அத்தலைவன் காட்டுகின்ற இகழ்ச்சியினையும் தம் நடத்தையால் எடுத்துக்காட்டுகின்றனர். வேண்டுமானால், தலைவனின் நேர்மையைப்பற்றி நாங்களே சொல்லுவோம்! நீ ஒன்றும் சொல்ல வேண்டா.

கருத்து

'தலைவன் பரத்தையரோடு சேர்ந்து அவர்களைப் பாராட்டி எம்மை இகழ்கின்றான். அவனைப்பற்றி நீ எதுவும் கூறவேண்டா.'

சொற்பொருள்

1. பாண - பாணனே; நலம் - நன்மைகளை.
2. சொல்லில் - உன் வெற்றுச்சொற்களினாலே; பயின்று - எடுத்து; நீ ஒழிதி - நீ இங்கிருந்து நீங்கு.

3. எல்லும் - வெள்ளை நிறமிக்க; தார் – மாலை; இருங்கூந்தல் - நீண்ட கூந்தலைக் கொண்ட (பரத்தையரே).
4. அவர் வண்ணம் - தலைவர் பரத்தையரிடம் கொண்டுள்ள காதல் நேர்த்தியையும்; சோர்வு - எம்மிடம் காட்டுகின்ற இகழ்ச்சியையும்; சொல்லும் - நாங்களே சொல்லுவோம்.

தலைவி கூற்று

கைந்நிலை 47 **புல்லங்காடனார்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாக வந்த பாணற்கு, தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவனின் தூதாய் வந்த பாணனிடம், தலைவி மறுத்துரைத்தல்.

அரக்காம்பல் தாமரை அம்செங் கழுநீர்
ஒருக்கார்ந்த அல்லி ஒலித்(து)ஆரக் குத்தும்
செருக்கார் வளவயல் ஊரன்பொய்ப் பாண
இருக்கஎம் இல்லுள்வா ரல்.

தெளிவுரை

“அரக்கினைப் போன்ற செந்நிறம் கொண்ட செங்குமுத மலர்கள், தாமரை மலர்கள், செங்கழுநீர் மலர்கள், அல்லி மலர்கள் ஆகிய இவையெல்லாம் ஒன்றுடன் ஒன்றுகூடி மோதிக் கொள்ளும் இயல்புள்ள, மகிழ்ச்சி தரும் வளமான வயல்கள் சூழ்ந்த மருத நிலத் தலைவனின் பொய்ம்மொழிகளைச் சொல்லும் பாணனே! உன் தலைவன் பரத்தையர் சேரியிலேயே இருக்கட்டும்; எம் மனைக்கு வருதல் வேண்டா” என்று தலைவி பாணனிடம் வாயில் மறுத்தாள்.

கருத்து

‘பாண! பரத்தையர் சேரியிலேயே என் கணவர் இருக்கட்டும்.’

குறிப்பு

ஆம்பல், தாமரை, செங்கழுநீர், அல்லி ஆகியன ஒன்றை ஒன்று குத்திச் செருக்குக்கொண்டன என்னும் தொடர்மூலம், பரத்தையர் தலைவனை அடைய ஒருவருடன் ஒருவர் மோதிக்கொள்வர் என்னும் கருத்துப் பெறப் படுகின்றது.

விளக்கம்

செல்வம் மிக்க தலைவன் பரத்தையர் சேரிக்குச் சென்றால், பரத்தை ஒவ்வொருத்தியும், 'எம் மனைக்கு வருக; எம் மனைக்கு வருக' எனக் கூறுவர். தலைவன் பரத்தை ஒருத்தியின் மனைக்குச் சென்றால் மற்றவர் அவளுடன் மோதுவர். இக்கருத்து, மலர்கள் கொண்டு நயமாய் விளக்கப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. அரக்கு ஆம்பல் - அரக்கினைப் போன்ற செந்நிறம் கொண்ட ஆம்பல் மலர்; அம் - அழகிய.
2. ஒருக்கு ஆர்ந்த - ஒன்றாய் நிறைந்த; ஒலித்து - தழைத்து.
3. செருக்கு ஆர் - மகிழ்ச்சி மிக்க.
4. இருக்க - பரத்தையர் வீட்டிலேயே இருக்கட்டும்.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 25 **மாறன் பொறையனார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிச் சென்றார்க்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிற்பிரிந்துள்ள தலைவன்மீது கொண்டுள்ள சினத்தை நீக்கி அவனை ஏற்க வேண்டுமென்று தலைவன் சார்பில் வந்து வேண்டியவரிடம் தலைவி மறுத்துக் கூறியது.

அழல்அவிழ் தாமரை ஆய்வயல் ஊரன்
விழைதகு மார்பம் உறும்நோய் — விழையின்
குழலும் குடுமிஎன் பாலகன் கூறும்
மழலைவாய்க் கட்டுரை யால்.

தெளிவுரை

நெருப்பினைப்போல் செந்நிறம் காட்டி மலர்ந்துள்ள செந்தாமரைப் பூக்கள் நிரம்பிய வயல்கள் சூழ்ந்த மருத நிலத்துக்கு உரியவன், தலைவன். பரத்தையிற்பிரிந்து சென்ற அவன் திரும்பி வந்து என்னைத் தழுவுவானேயானால், அவன் மார்பு மென்மையான தலைமுடியைக் கொண்ட என் இளமகன் கூறும் மழலை உரையால் துன்பமுறும்.

கருத்து

'பரத்தையரைத் தழுவியிருக்கும் தலைவன் மார்பு, என்னைத் தழுவினால் துன்புறும். ஆதலின், அவன் இங்கு வர வேண்டா.'

விளக்கம்

தலைவன், என்னைத் தழுவ வரவில்லை; மகனின் மழலைச் சொற்களைக் கேட்க விழைந்தே இல்லத்திற்கு வரவேண்டுமென்கிறான். அவ்வாறு வந்து அவன் என்னைத் தழுவுவானாயின் அவன் மார்பு துன்புறும். தன் மார்பைத் துன்புறுத்திக்கொள்ள அவன் இங்கு வரவேண்டியதில்லை.

குறிப்பு

பரத்தையரோடு உறவு கொண்ட தலைவனுக்கு, தலைவியின் மார்பைத் தழுவிப் பெறும் இன்பத்தினும் மகன் தரும் மழலை இன்பமே மேலானது.

சொற்பொருள்

1. அழல் - நெருப்பினைப் போல்; அவிழ் - மலரும்.
2. விழைதகு - கண்டாரால் விரும்பப்படும்; மார்பம் - மார்பு; விழையின் - என்னைத் தழுவ விரும்புவானேயானால்.
3. குழலும் குடுமி - மென்மையான தலைமுடி; பாலகன் - மகன்; கூறும் - சொல்லும்.
4. மழலை வாய் - மழலை மொழியினைக் கொண்ட; கட்டுரையால் - சிறு மொழியால்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 127 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீடு சென்ற தலைவன், தன்மீது தலைவி கொண்டுள்ள சினத்தைப் போக்கித் தன்னை ஏற்குமாறு பாணனைத் தூதாய் அனுப்பினான். அவன் கூறியதைத் தலைவி ஏற்க மறுத்தது.

மென்கண் கலிவயல் ஊரன்தன் மெய்ம்மையை
எங்கட்(கு) உரையாய் எழுந்துபோய் – இங்கண்
குலம்கூரம் என்(று)அணுகான் கூடும்கூர்த்(து) என்றே
அலங்கார நல்லார்க்(கு) அறை.

தெளிவுரை

பாண! மென்மையான ஒலி நிறைந்த மருதநிலத்தைச் சார்ந்த ஊரனின் உரைகளை என்னிடம் சொல்ல வேண்டா. இங்கிருந்து எழுந்து போ. இவ்வுலகில் நல்ல குலத்தில் தோன்றிய மனை யாளைக் கூடிக் களித்தல், புண்ணுக்கு இடும் கார மருந்தைப் போன்று வெம்மையானது என்று தலைவன் பரத்தையரை நாடிச் சென்றுவிட்டான். ஆண்களை ஈர்ப்பதற்காக அலங்கரிப் பதையே தம் தொழிலாய்க் கொண்ட அப்பரத்தையரிடம் சென்று நீ சொல்ல வேண்டியதைச் சொல்.

கருத்து

‘நற்குடியில் பிறந்த தலைவியை விட்டுவிட்டுப் பரத்தையரை நாடித் தலைவன் சென்றுவிட்டான். அப்பரத்தையரிடம் சென்று நீ சொல்ல வேண்டியதைச் சொல்.’

சொற்பொருள்

1. மென்கண் - மெல்லிய இடத்தை; கலி - ஒலி நிறைந்த; தன் மெய்ம்மையை - தலைவனின் உண்மை உரைகளை.

2. எங்கட்கு உரையாய் - எம்மிடம் சொல்ல வேண்டா; எழுந்துபோ - எழுந்து செல்; இங்கண் - இவ்வுலகில்.
3. குலம் - நற்குலத்தில் தோன்றிய மனையாளைக் (கூடிக் களித்தல்); காரம் என்று அணுகான் - புண்ணிற்கு இடும் காரம் போன்று வெம்மையானது என்று கருதி நெருங்கான்; (பரத்தையரைப் புணர்தல் இன்பம் தருமென்று கருதி); கூர்த்து - விருப்பம் மிகப் பெற்று; கூடும் - அவர்களோடு சேர்ந்து வாழும்; என்றே - என்று.
4. அலங்கார நல்லார்க்கு - நன்றாய் அலங்காரம் செய்துகொள்ளும் பரத்தையர்க்கு; அறை - சொல்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 151 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீடு சென்ற தலைவன், தன்மீது தலைவி கொண்டுள்ள சினத்தைப் போக்கித் தன்னை ஏற்குமாறு பாணன் ஒருவனைத் தூதாய் அனுப்பினான். அவன் கூறியதைத் தலைவி மறுத்து உரைத்தது.

சேறுஆடும் கிண்கிணிக்கால் செம்பொன்செய் பட்டத்து
நீறுஆடும் ஆயதிவன் இல்முனா – வேறாய
மங்கையரின் ஆடுமோ மாக்கோல்யாழ்ப் பாண்மகனே!
எங்கையரின் ஆடலாம் இன்று.

தெளிவுரை

மூங்கிற்கோலையும் யாழினையும் உடைய பாணனே! தலைவன் பரத்தையரோடு கூடி விளையாடும் இந்த நேரத்தில், சேறு படிந்திருக்கும் கிண்கிணி அணிந்த கால்களையும், சிவந்த

பொன்னாலான புழுதி படிந்த நெற்றிச்சுட்டியினையும் கொண்ட என் மகனுடன் வீட்டு முற்றத்திற்கு வந்து பொழுதைக் கழிப் பானா? மாட்டான். எனவே, நீ சென்றுவிடு என்று கூறித் தலைவி வாயில் மறுத்தாள்.

கருத்து

'தலைவன் தன் குடும்பத்தோடு வாழ்வதைவிடப் பரத்தையரோடு காலங்கழிப்பதையே விரும்பியுள்ளான்.'

சொற்பொருள்

3. மாக்கோல் - மூங்கிற்கோலையும்; யாழ் - யாழினையும் உடைய; பாண் மகனே - பாணனே!
4. எங்கையரின் - எனக்குப் பின் வந்த தங்கையரோடு (பரத்தை யரோடு); ஆடலாம் - ஆடல் ஆம் - கூடி விளையாடுதற்குரிய; இன்று - இப்பொழுது.
1. சேறு ஆடும் - சேறு நிரம்பியிருக்கும்; கிண்கிணிக்கால் - சிறு சதங்கை அணியப்பெற்ற கால்களிலும்; செம்பொன் - சிவந்த பொன்னாலே; செய் - செய்யப்பட்ட; பட்டத்து - நெற்றிச்சுட்டியிலும்.
2. நீறு ஆடும் - புழுதியில் ஆடும்; ஆயது - தன்மை கொண்ட; இவன் - இம்மகனோடு; இல்முனா - வீட்டின் முகப்பிலே; வேறு ஆய - (இவனினும் நயத்தால்) வேறுபட்டு மேம்பட்ட.
3. மங்கையரின் - பரத்தையரிடம் விளையாடுவதுபோல; ஆடுமோ - (தலைவன்) விளையாட விரும்புவானா? (ஆதலின், நீ வீணே தூது கூறி வருந்த வேண்டா).

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 125 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீடு சென்ற தலைவன், தன்மீது தலைவி கொண்டுள்ள சினத்தைப் போக்கித் தன்னை ஏற்குமாறு பாணன் ஒருவனைத் தூதாய் அனுப்பினான். அவன் கூறியதை ஏற்க மறுத்துத் தலைவி இயம்பியது.

மாக்கோல்யாழ்ப் பாண்மகனே! மண்யானைப் பாகனார்
தூக்கோல் துடியோடு தோன்றாமுன் – தூக்கோல்
தொடியுடையார் சேரிக்குத் தோன்றுமோ சொல்லாய்
கடியுடையேன் வாயில் கடந்து.

தெளிவுரை

மூங்கிலால் ஆன கோலினையும் யாழினையும் கொண்டுள்ள பாணனே! மண்ணால் செய்யப்பட்ட விளையாட்டு யானையை உடுக்கை கொட்டிக் கோலால் ஓட்டும் என் மகன் பிறப்பதற்கு முன் தலைவன் அவனால் மணந்துகொள்ளப்பட்ட குலப்பெண் ணாகிய எனது வீட்டுவாயிலைத் தாண்டிப் பரத்தையர் வீட்டிற் குச் சென்றிருப்பானா?

கருத்து

'குலப்பெண்ணாகிய நான் இருக்கும் வீட்டுவாயிலை விட்டு விலகிச் சென்று பரத்தையர் சேரியில் தலைவன் காணப்படுவது வெட்கம் கொள்ளத் தக்கது.'

விளக்கம்

"மகன் தோன்றியபின் தலைவன் பரத்தையர் சேரி சென்றனன். ஆதலால், மகப்பெற்ற என்னை, தலைவன் மருவுதற்குத் தகுதி யற்றவள் எனக் கருதுகிறான். தகுதி கொண்டவரிடமே அவன் சென்று தங்கட்டும்" என்று தலைவி கூறினாள்.

சொற்பொருள்

1. மா - அழகிய; கோல் -கைக்கோலினைக் கொண்ட; மண் யானை - மண்ணால் செய்யப்பட்ட விளையாட்டுயானை; பாகனார் - பாகனாகிய என் மகன்.
2. தூக்கோல் துடி - யானையைச் செலுத்தப் பாகன் கொட்டுகின்ற தூக்கோல், துடி எனும் கருவிகள்; தூக்கோல் - தூ+கோல் - தூய்மையான வளைவினைக் கொண்ட.
3. சேரிக்கு - பரத்தையர் சேரிக்குச் சென்று; தோன்றுமோ - காணப்படுமோ?
4. கடிஉடையேன் - அவனால் மணந்துகொள்ளப்பட்டவள்.

தலைவி கூற்று

திணைமொழி ஐம்பது 39 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிச் சென்றார்க்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தை இல்லம் சென்ற தலைவன், தலைவி தன்மீது கொண்டுள்ள சினத்தைப் போக்குவதற்குச் சிலரைத் தூதாய் அனுப்ப, தலைவி அவர் களிடம் மறுத்துக் கூறியது.

கருங்கயத்(து) ஆங்கண் கழுமிய நீலம்
பெரும்புற வாளைப் பெடைகதூஉம் ஊரன்
விரும்புநாள் போலான் வியன்நலம் உண்டான்
கரும்பின்கோ(து) ஆயினேம் யாம்.

தெளிவுரை

பெரிய குளத்தில் உள்ள குவளை மலரை, விரிந்த முதுகினைக் கொண்ட பெட்டை வாளைமீன் பற்றி உண்ணுகின்ற காட்சிக்கு இடனான மருதநிலத்திற்குரியவன், ஊரன். அவன் எம்மிட மிருந்த அழகையெல்லாம் கைக்கொண்டான். ஆதலால், நாம் அவனுக்குச் சாறு பிழிந்தெடுக்கப்பட்ட கரும்பின் சக்கையைப்

போல ஆயினோம். அந்நாளில் கொண்டிருந்ததுபோல இப்பொழுது எம்மீது விருப்பம் கொண்டிருக்கவில்லை. (ஆதலால், நீவிர் ஏதும் சொல்ல வேண்டா) என்று தூது வந்தவரிடம் தலைவி உரைத்தாள்.

கருத்து

'தலைவனுக்கு அன்று கரும்பாய் இருந்த நான் இன்று சக்கையாய் ஆனேன்.'

சொற்பொருள்

1. கரும் - பெரிய; கயம் - குளம்; ஆங்கண் - அவ்விடத்தே; கழுமிய - முளைத்துள்ள; நீலம் - நீல மலர்.
2. பெரும் புறம் - பெரிய முதுகு; வாளை - வாளை மீன்; பெடை - பெண்; கதூஉம் - பற்றும்.
3. வியன்நலம் - மிகுந்த அழகு; உண்டான் - கைக்கொண்டான்; விரும்பு நாள் - (முன்பு நம்மை) விரும்பிய நாள்களில்; போலான் - (கொண்டிருந்தது போல) இப்போது அவன் கொண்டிருக்கவில்லை.
4. கரும்பின் - கரும்பினது; கோது - சக்கை; ஆயினேம் - ஆனோம்.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 24 **மாறன் பொறையனார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையரிடம் சென்றிருந்த தலைவன், தலைவி தன்மீது கொண்டுள்ள ஊடலை நீக்கப் பாணனைத் தூதாய் அனுப்பினான். அவன் மொழியை ஏற்காது, தலைவி மறுத்துக் கூறியது.

கோலச் சிறுகுருகின் குத்(து)அஞ்சி ஈர்வாளை
நீலத்துப் புக்(கு)ஒளிக்கும் ஊரற்கு – மேலெல்லாம்
சார்தற்குச் சந்தனச்சாந்(து) ஆயினேம் இப்பருவம்
காரத்தின் வெய்யஎன் தோள்.

தெளிவுரை

பாணனே! சிறிய நாரையின் கூர்த்த கொத்துதலுக்கு அஞ்சி நீல மலர்களிடையே புகுந்து தன்னை மறைத்துக்கொள்ளும் குளிர்ச்சி பொருந்திய வாளைமீன் வாழும் வளம் மிகுந்த மருத நிலத்தை உடையவன், தலைவன். முன்பு அவனோடு, இணையும் போது தழுவுதற்குச் சந்தனக்குழம்புபோல் குளிர்ச்சி பொருந் தியவளாய் இருந்தேன். ஆனால், இப்போதோ அத்தலைவனுக்கு என் தோள்கள் புண்ணுக்கு இடுகின்ற கார மருந்தைப்போல வெம்மை கொண்டனவாய் உள்ளன.

கருத்து

'முன்பு தலைவனுக்குக் குளிர்ச்சி பொருந்தியவளாய் இருந்த நான் இப்போது வெய்யள் ஆனேன்.'

குறிப்பு

'நாரையின் கொத்துதலுக்கு அஞ்சி நீரில் மறையும் ஊரன்' என்பது, தலைவியின் ஊடலுக்கு அஞ்சிப் பரத்தை வீட்டில் தலைவன் இருக்கிறான் என்னும் குறிப்பைத் தருகிறது.

சொற்பொருள்

1. கோலம் - அழகு; குருகு - நாரை; ஈர் - குளிர்ச்சி பொருந்திய; வாளை - வாளை மீன்.
2. நீலத்து - குவளை மலரில்; புக்கு - புகுந்து; ஒளிக்கும் - மறைத்துக் கொள்ளும்; மேலெல்லாம் - முன்பெல்லாம்.
3. சார்தற்கு - அணைதற்கு; சந்தனச் சாந்து - சந்தனக்குழம்பு; இப் பருவம் - இப்போது; காரம் - புண்ணுக்கிடும் கார மருந்து; வெய்ய - வெம்மையுடையது.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 45 **மூவாதியார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையரிடம் சென்றிருந்த தலைவன், தலைவி தன்மீது கொண்டுள்ள ஊடலை நீக்கப் பாணனைத் தூதாய் அனுப்பினான். அவன் மொழியை ஏற்காது, தலைவி மறுத்துக் கூறியது.

போத்தில் கழுத்தின் புதல்வன் உணச்சான்றான்
மூத்தேம் இனியாம் வருமுலையார் சேரியுள்
நீத்துநீர் ஊன்வாய்ப் பாண!நீ போய்மொழி
கூத்தாடி உண்ணினும் உண்.

தெளிவுரை

"பாணனே! தலைவன் என் கழுத்தைத் தழுவுவதற்கு நேரம் இல்லாதவாறு, எம் மகன் என்னிடம் பால் உண்ணும் நிலையில் உள்ளான். மேலும், நான் தலைவனுக்கு இன்பம் தரத் தகுதியின்றி முதுமை அடைந்துவிட்டேன். எனவே, நீ இங்கிருந்து நீங்கி, வளர்கின்ற மார்பகங்களைக் கொண்ட பரத்தையரின் சேரிக்குப் போய், எம் மூப்பு முதலியனவற்றைப்பற்றித் தலைவனிடம் சொல்! அங்கேயே கள் முதலியவற்றையும் ஊனையும் விரும்பி உண்டு, தலைவன் முன் கூத்தாடிக்கொண்டிரு" எனப் பாணனிடம் தலைவி கூறினாள்.

கருத்து

'பாண! நான் முதுமையடைந்துவிட்டேன்! அதனால் இளைய பரத்தை வீடு சென்றுவிட்ட தலைவனிடமே நீ போய்க் கூத்தாடு.'

சொற்பொருள்

1. போத்து - பொழுது; போத்துஇல் - (தழுவுவதற்கு) நேரமின்றி; உண - முலையுண்ணும்படி; சான்றான் - அமைந்துள்ளான்.

2. மூத்தேம் - மூப்பினை அடைந்தோம்; வருமுலையார் - வளருகின்ற முலைகளைக் கொண்ட பரத்தையர்.
3. நீ நீத்து - நீ இங்கிருந்து நீங்கி; நீர் ஊன்வாய் - கள், இறைச்சி முதலியவற்றை உண்டு; நீ போய் - நீ சென்று; மொழி - சொல்.
4. கூத்தாடி - (அவர்களுக்கு ஏற்ப) கூத்தாடியும்; உண்ணினும் உண -(அவர்கள் இடும் சோற்றை) உண்டும் வாழ்.

தலைவி கூற்று

கைந்நிலை 45 **புல்லங்காடனார்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாக வந்த பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவனிடமிருந்து தூதாய் வந்த பாணனிடம், தலைவி மறுத்துரைத்தல்.

மூத்தேம் இனி,பாண முன்னாயின் நாம்இளையேம்
கார்த்தண் கலிவயல் ஊரன் கடி(து)எமக்குப்
பாத்(து)இல் பயமொழி பண்பு பலகூறி
நீத்தல் அறிந்திலேம் இன்று.

தெளிவுரை

“பாணனே! நாம் முன்னாளில் இளம் பருவத்தினராய் இருந்தோம். இந்நாளில் நாம் முதுமை உற்றோம். மழை பொழிதலினால் குளிர்ச்சியுற்ற தழைத்த வயல்கள் சூழ்ந்த மருத நிலத்துக்கு உரிய தலைவன், அன்று பிரிதல் இல்லாத பயன் நல்கும் சொற்களைப் பேசிக் கலந்து வாழ்ந்தான். அவன் விரைவாய்ப் பிரிந்துவிடுவான் என்று யாம் அறியாதிருந்து விட்டோம்” என்று தலைவி கூறிப் பாணற்கு வாயில் மறுத்தாள்.

கருத்து

'நான் முதுமையுற்றதால் அவன் பிரிந்து சென்றனனோ?'

குறிப்பு

புறத்தொழுக்கம் மேற்கொண்ட தன் தலைவனை வரவேற்பது தனக்குத் தகுதியன்று என்பதைத் தலைவி குறிப்பாய் உணர்த்தினாள்.

சொற்பொருள்

1. மூத்தேம் - முதுமையுற்றோம்; முன்னாயின் - முன் நாளில்; இளையேம் - இளையவராயிருந்தோம்.
2. கார் - மழை (பொழிதலினால்); தண்கலி - குளிர்ச்சி பொருந்திய தழைத்த; கடிது - விரைந்து.
3. பாத்துஇல் - பிரிதல் இல்லாத; பயமொழி - பயன் மொழி.
4. நீத்தல் - பிரிதல்.

தலைவி கூற்று

கைந்நிலை 48 **புல்லங்காடனார்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாக வந்த பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் நிமித்தம் தூது வந்த பாணனிடம், தலைவி மறுத்துரைத்தல்.

கொக்கார் வளவயல் ஊரன் குளிர்சாந்தம்
மிக்க வனமுலை புல்லான் பொலிவுடைத்தா
தக்கயாழ்ப் பாண! தளர்முலையாய் மூத்தமைந்தார்
உத்தரம் வேண்டா வரல்.

தெளிவுரை

"*யாழினைக் கையில் ஏந்திக்கொண்டு, தலைவனுக்கு ஏற்ற வகையில் நடந்துகொள்ளும் பாணனே! கொக்குகள் நிறைந் துள்ள வளப்பம் மிக்க வயல்கள் சூழ்ந்த மருதநிலத்துக்குரிய*

தலைவன், சந்தனக்குழம்பு பூசிய பரத்தையர்தம் அழகுமிக்க மார்பகங்களைப் பொலிவு பெறத் தழுவுவதை விட்டுவிட்டு, தளர்ந்த மார்பகங்களையும் முதுமை பொருந்திய தன்மையினையும் கொண்ட எம்மைத் தழுவ வரமாட்டான். அவன் இங்கு வர வேண்டியதில்லை" என்று, வாயிலாய் வந்த பாணனிடம் கூறித் தலைவி வாயில் மறுத்தாள்.

கருத்து

'பாண! தலைவன் இளைய பரத்தையை விட்டுவிட்டு, முதுமையுற்றுள்ள என்னிடம் வரமாட்டான்.'

குறிப்பு

கொக்கார் வளவயல் ஊரன்: கொக்கு, ஓடுமீன் ஓட உறுமீனைத் தேர்ந்து பற்றும். அதுபோலத் தலைவன் தனக்குத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதில் வல்லவன் என்பது உட்கருத்தாகும். அஃதாவது சரிந்த மார்பகங்களைக் கொண்ட தன்னை நாடித் தலைவன் வரமாட்டான் என்கிறாள், தலைவி.

சொற்பொருள்

1. கொக்கார் - கொக்கு + ஆர் - கொக்குகள் நிறைந்துள்ள; சாந்தம் - சந்தனம்.
2. புல்லான் - தழுவ மாட்டான்; பொலி - அழகு (பொலிவு கொண்ட அழகிய முலையைத் தழுவாது).
3. தளர் முலை - சரிந்த முலை; மூத்தமைந்து - முதுமை பொருந்தி.
4. உத்தரம் - எச்சில் (தலைவன் தன்னை அனுபவித்ததால் தலைவி தன்னை எச்சில் என்கிறாள்).

தலைவி கூற்று

திணைமொழி ஐம்பது 32 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தை வீடு சென்ற தலைவன், தன் இல்லம் வரத் தூதாய் அனுப்பிய வரிடம் தலைவி மறுத்துக் கூறியது.

கணைக்கால் நெடுமருது கான்ற நறுந்தா(து)
இணைக்கால நீலத்(து) இதழ்மேல் சொரியும்
பணைத்தாள் கதிர்செந்நெல் பாய்வயல் ஊரன்
இணைத்தான் எமக்குமோர் நோய்.

தெளிவுரை

"திரண்ட அடிப்பகுதியைக் கொண்டு நீண்டு வளர்ந்த மருத மரங்கள் உதிர்க்கின்ற பூந்தாதுகளை நெற்பயிர்மேல் சொரி யாமல், குவளை மலர்மீது சொரிந்துகொண்டிருக்கும் தன்மை யினைக் கொண்ட விரிந்த மருத நிலத்தினை உடையவன், தலைவன். அவன் எனக்குப் பசலை நோயைத்தான் தந்துள் ளான்" என்று கூறித் தலைவி வாயில் மறுத்தாள்.

கருத்து

'தலைவன் என்னைப் பிரிந்து சென்றதன்மூலம் எனக்குப் பசலை நோயைத் தந்துள்ளான்.'

குறிப்பு

மருத மரம் பூந்தாதினைச் செந்நெல்மீது சொரியாது குவளை மலர்மீது சொரியும். இது தலைவன் தன் அன்பினைத் தலைவியிடம் செலுத்தாது பரத்தையரிடம் செலுத்திக்கொண்டிருக்கிறான் என்னும் கருத்தைத் தருகிறது.

சொற்பொருள்

1. **கணைக்கால் - திரண்ட அடிப்பாகம்; மருது - மருத மரம்; கான்ற - உதிர்க்கின்ற; நறுந்தாது - மணமிக்க பூந்தாது.**

2. இணை - ஒத்த; கால - அடிப்பாகங்களைக் கொண்ட; நீலம் - நீல மலர்.
3. பணை - பருத்த; தாள் - தூறு; கதிர் - நெற்கதிர்; செந்நெல் - செவ்விய நெற்பயிர்; பாய் - பரந்த.
4. ஓர் நோய் - இணையில்லாத பசலை நோயினை; இணைத்தான் - பொருந்தும்படி செய்தான்.

தலைவி கூற்று

திணைமொழி ஐம்பது 31 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தை வீடு சென்ற தலைவன், தன் இல்லம் வரத் தூதாக அனுப்பி யவரிடம் தலைவி மறுத்துக் கூறியது.

பழனம் படிந்த படுகோட்(டு) எருமை
கழனி வினைஞர்க்(கு) எறிந்த பறைகேட்(டு)
உரனழிந்(து) ஓடும் ஒலிபுனல் ஊரன்
கிழமை உடையன் என்தோட்கு.

தெளிவுரை

வளைந்த கொம்புகளைக் கொண்ட எருமை மருத நிலத்தில் மேய்ந்துகொண்டிருந்தது. அது வயல்களில் தொழிலாற்றும் உழவர் ஊக்கம் கொள்வதற்காகக் கொட்டப்பட்ட பறையின் ஒலியைக் கேட்டு மருண்டு, வீட்டை நோக்கி விரைந்து ஓடியது. இத்தகைய வளமிக்க ஊரினை உடையவன், தலைவன். முன்பு எமக்கிடையே நிகழ்ந்த திருமணம் காரணமாய் அவன் என் தோள்களுக்கு உரியவன் என்னும் உரிமையினைப் பெற்றுள்ளான். அவ்வுரிமை ஒன்றே எனக்குப் போதும்; அவன் அருள் எதுவும் எனக்கு வேண்டா" என்று தலைவி, தலைவனுக்காகத் தூது வந்தவரிடம் கூறினாள்.

கருத்து

'எனக்கு அவன் கணவன் என்னும் உரிமை ஒன்று மட்டுமே போதும்; பிற எதுவும் வேண்டா.'

சொற்பொருள்

1. படு - வளைந்த; கோடு - கொம்பு.
2. வினைஞர் - உழவர்; எறிந்த - கொட்டப்பட்ட; பறை கேட்டு - பறை ஒலியைக் கேட்டு.
3. உரன் - ஊக்கம், விரைவு.
4. என் தோட்கு - என் தோளுக்கு; கிழமை - (திருமணம் மூலம் பெற்ற) உரிமை; உடையன் - உடையவன்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 55 **மூவாதியார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையரிடம் சென்றிருந்த தலைவன், தன்மீது தலைவி கொண்டுள்ள ஊடலைப் போக்குமாறு பாணனைத் தூதாய் அனுப்ப, அத்தூதினை மறுத்துத் தலைவி கூறியது.

பொய்கைநல் ஊரன் திறங்கிளத்தல் என்னுடைய
எவ்வம் எனினும் எழுந்தீக – வைகல்
மறுவில் பொலந்தொடி வீசும் அலற்றும்
சிறுவன் உடையேன் துணை.

தெளிவுரை

பாணனே! நீர் நிலைகளைக் கொண்ட மருத நிலத்தூருக்குத் தலைவனாய் உள்ளவனின் பெருமைகளை நீ எடுத்துக் கூற வேண்டியதில்லை. (அவற்றை நானே அறிவேன்). தலைவன் என்னைப் பிரிந்து சென்றதற்குக் காரணம் நான் செய்த

தவறாகவே இருக்கட்டும். குற்றமற்ற பொன் வளையல்களை அணிந்து நாள்தோறும் கைவீசி விளையாடும் என் மகனை நான் துணையாய்க் கொண்டுள்ளேன். ஆகையால், நீ இங்கிருந்து எழுந்து செல்!

கருத்து

'தலைவன் பிரிந்ததால் எனக்கு ஏற்பட்ட துன்பத்தை என் மகன் போக்கு கின்றான்.'

சொற்பொருள்

1. திறம் - பெருமை; கிளத்தல் - கூறாதே.

2-3. என்னுடைய எவ்வம் எனினும் - (தலைவன் பிரிய நேரிட்டது) என் தவறாகவே (இருக்கட்டும்); எழுந்தீக - இங்கிருந்து எழுந்து செல்; வைகல் - நாள்தோறும்.

3. மறுஇல் - குற்றம் இல்லாத; பொலந்தொடி - பொன் வளையல் (அணிந்து); வீசும் - கை வீசியும்; அலற்றும் - விரித்தும் (விளையாடும்).

4. சிறுவன் - சிறுவனாகிய என் மகன்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 136 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீடு சென்ற தலைவன், தன்மீது தலைவி கொண்டுள்ள சினத்தைப் போக்கித் தன்னை ஏற்குமாறு பாணன் ஒருவனைத் தூதாய் அனுப்பினான். அவன் கூறியதை ஏற்க மறுத்துத் தலைவி உரைத்தது.

எங்கை இயல்பின் எழுவல்யாழ்ப் பாண்மகனே
தங்கையும் வாயும் அறியாமல் – இங்கண்
உளர உளர உவனோடிச் சால
வளர வளர்ந்த வகை.

தெளிவுரை

"யாழையுடைய பாண்மகனே! இங்கிருந்து எழுந்து போய் விடு. இங்கு என் மகன், கைச்சாடை காட்டியும் பொருள் புரியாத மழலை மொழிகளைப் பேசியும் வளர்கிறான். தலைவன் பரத்தையைக் கூடிப் பெறும் இன்பத்தினும் பேரின்பமாகும் என் மகன் தரும் இன்பம்" என்று கூறித் தலைவி பாணனுக்கு வாயில் மறுத்தாள்.

கருத்து

'மழலை பேசும் என் மகனோடு கூடி வாழும் வாழ்க்கையே எனக்குப் போதும்!'

குறிப்பு

தலைவனின் வருகையைக் கூற வந்த பாணனிடம் தலைவி, தன் மகனோடு வாழும் வாழ்க்கையே தனக்குப் போதுமானது எனக் கூறி வாயில் மறுத்தாள்.

சொற்பொருள்

1. யாழ்ப்பாண்மகனே - யாழையுடைய பாணனே!
2. தங்கையும் - தம் கையும் - தன் சிறிய கைகளாலும்; வாயும் - வாயின் மழலைமொழிகளாலும்; அறியாமல் - பொருள் புலப்படாத நிலையில்; இங்கண் - இவ்விடத்தில் (என் வீட்டில்).
3. உளர உளர - பலமுறை சுழன்று; உவன் - என் முன்னே; ஓடி - விரைந்து சென்று; சால - மிகவும்.
4. வளர வளர்ந்த வகை - நாளடைவில் வளர்ந்த முறையால்.
1. (நான்) எங்கை - எனக்குப் பின்னவளாகிய பரத்தை; இயல்பின் - (தலைவனோடு கூடிச் சிறப்புற்றிருக்கும்) தன்மையைப் போன்று; எழுவல் - கிளர்ச்சியுற்று வாழ்கிறேன் (ஆதலின், எனக்கொரு குறையும் இல்லை).

தலைவி கூற்று

கைந்நிலை 41 **புல்லங்காடனார்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாகிய பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிடம் சென்றிருந்த தலைவன், ஊடல் கொண்டுள்ள தலைவியின் ஊடலைத் தணிப்பதற்காகப் பாணனைத் தூது அனுப்பினான். வந்த பாணனிடம் தலைவி சினமுற்றுச் சொன்னது.

பொய்கைநல் ஊரன் திறம்கிளப்ப, என்உடையை?
அஃது(அ)ன்று எனினும், அறிந்தேம்யாம் – செய்தி
நெறியின் இனியசொல் நீர்வாய் மழலைச்
சிறுவன் எனக்(கு)உடைமை யால்.

தெளிவுரை

"இனிய நீர் ஒழுகும் வாயினையும், திருந்தாத மழலைச் சொற்களையும் கொண்ட என் மகன் எனக்குத் துணையாய் உள்ளான்; எனவே, எனக்கு வேறு துணை வேண்டியதில்லை. குளங்கள் சூழ்ந்த மருதநிலத்திற்கு உரியவனான தலைவன் தன்மைகளை என்னிடம் கூறுதற்கு உனக்கு என்ன தகுதி உள்ளது? அவன் செய்தது பிழையன்று என்று நீ கூறினாலும் உன் தலைவனைப்பற்றிய செய்தி முழுவதையும் நான் அறிந் துள்ளேன்" என்று, வாயில் வேண்டி வந்த பாணனை நோக்கித் தலைவி கூறினாள்.

கருத்து

'எனக்கு என் மகன் துணையே போதும்; தலைவன் துணை வேண்டு வதில்லை.'

விளக்கம்

பாணனை நோக்கி, "தலைவனைப்பற்றிச் சொல்ல உனக்கு என்ன தகுதி உள்ளது? அப்படியே இருந்தாலும் நீ ஏதும் சொல்ல

வேண்டா. தலைவனைப்பற்றிய செய்திகள் அனைத்தையும் நானே அறிவேன்" என்கிறாள் தலைவி.

சொற்பொருள்

1. பொய்கை - குளம்; திறம் - தன்மை; கிளப்ப - கூற; என் உடையை? - உனக்கு என்ன தகுதி உண்டு?
2. அஃது அன்று எனினும் - அவன் செய்தது பிழையன்று என்று கூறினாலும்; அறிந்தேம் யாம் செய்தி - அவனைப்பற்றிய செய்தி அனைத்தையும் நான் அறிவேன்.
3. நீர் வாய் - 'சொள்ளு' நீர் ஒழுகும் வாய்; மழலை - மழலைப்பேச்சு.
4. எனக்கு உடைமை - எனக்குத் துணையாய் இருக்கிறான்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 126 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீடு சென்ற தலைவன், தன்மீது தலைவி கொண்டுள்ள சினத்தைப் போக்கித் தன்னை ஏற்குமாறு வேண்டிப் பாணன் ஒருவனைத் தூதாய் அனுப்பினான். அவன் கூறியதை ஏற்க மறுத்துத் தலைவி உரைத்தது.

விளரியாழ்ப் பாண்மகனே! வேண்டா அழையேல்
முளரி மொழியா(து) உளரிக் – கிளரிநீ
பூங்கண் வயலூரன் புத்தில் புகுவதன்முன்
ஆங்கண் அறிய வுரை.

தெளிவுரை

விளரிப்பண்ணை இசைக்கும் யாழ்ப்பாணனே! நான் விரும்பாத செய்தியை என்னிடம் சொல்ல வேண்டா. முள் செடிகளைப் போன்ற கொடிய சொற்களை இங்குக் கூறாதே!

இந்த இடத்தை விட்டுப் புறப்படு. மலர்ந்த தாமரை மலர்களைக் கொண்ட வயல்கள் சூழ்ந்த மருதநிலத்திற்கு உரியவனான தலைவன், மனக்கிளர்ச்சியுடன் புதிய பரத்தையின் வீட்டில் புகுவதற்கு முன்பே நீ அங்கே சென்று, அப்பரத்தை மனம் மகிழும்படி தலைவன் அங்கு வரவிருப்பதைச் சொல்.

கருத்து

'பாண! உன் சொற்களை இங்கே சொல்ல வேண்டா. பரத்தை வீட்டில் போய்ச் சொல்.'

சொற்பொருள்

1. விளரி - விளரிப்பண்; வேண்டா - (எம்மால்) விரும்பப்படாத செய்திகளை; அழையேல் - நீ வந்து கூறாதே.
2. முளரி மொழியாது - முட்செடிகளைப் போன்ற கொடிய மொழிகளை மொழியாது; உளரி - இவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு; கிளரி - கிளர்ச்சி கொண்டவனாய்.
3. புத்தில் - புது + இல் - புதிய பரத்தையர் மனையில்; புகுவதன்முன் - போய் நுழைவதற்கு முன்.
4. ஆங்கண் - அவ்விடத்தே; அறிய உரை - அங்குள்ள பரத்தையர்கள் அறியச் சொல்.

தலைவி கூற்று

கைந்நிலை 42 **புல்லங்காடனார்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாகிய பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிடம் சென்றிருந்த தலைவன், தன்னோடு தலைவி கொண்டுள்ள ஊடலைத் தணிப்பதற்காகப் பாணனைத் தூதாய் அனுப்பினான். தலைவி, அப்பாணனிடம் சினமுற்றுச் சொன்னது.

நீத்தநீர் ஊரன் நிலைமையும் வண்ணமும்
யார்க்(கு)உரைத்தி பாண! அதனால்யாம் என்செய்தும்?
கூத்தனாக் கொண்டு, குறைநீ உடையையேல்,
ஆட்டுவித்து உண்ணினும் உண்

தெளிவுரை

"பாணனே! வெள்ளமெனப் பெருக்கெடுக்கும் நீரினைக் கொண்ட மருதநிலத்திற்கு உரியவனான தலைவனின் நல்லொழுக்கத்தையும் நற்பண்புகளையும் நீ யாரிடத்தில் கூறுகின்றாய்? (அவன் இயல்பினை நான் நன்கு அறிவேன்). எனினும், என்னால் என்ன செய்ய இயலும்? (ஒருவழியும் அறியேன்). உனக்கு ஏதாவது குறை இருந்தால் தலைவன்முன் கூத்தனைப் போல ஆடியும் பாடியும், அவனையும் உனக்கேற்ற வகையில் செயல்படும்படி ஆக்கி உனக்கு வேண்டியவற்றைக் கேட்டுப் பெற்று உண். அதுபற்றி நான் கவலை கொள்ள மாட்டேன்" என்று வாயில் மறுத்துத் தலைவி பாணனிடம் கூறினாள்.

கருத்து

'பாண! நீ எனக்கு எதுவும் செய்ய வேண்டா. நீ தலைவனிடம் சென்று கூத்தாடி உனக்கு வேண்டியதைக் கேட்டுப் பெற்றுக்கொள்.'

குறிப்பு

'என் செய்தும்' என்பதனால், "தலைவனை என் வழிக்குக் கொண்டுவர இயலவில்லை" என்பது பெறப்படுகின்றது. 'உண்ணினும் உண்' என்பது இழிவு தோன்றச் சொல்லப்பட்டது.

சொற்பொருள்

1. நீத்தம் - வெள்ளம்; வண்ணம் - ஒழுக்கம்.
2. செய்தும்? - செய்ய இயலும்?
3. கூத்தனாக் கொண்டு - (தலைவனைக்) கூத்தாடுபவனாய்க் கொண்டு.
4. ஆட்டுவித்து - ஆடச்செய்து.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 136 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வாயிலாய்ப் புகுந்து தலைமகன் குணங்கூறிய பாணற்கு வாயில் மறுக்கும் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியிடம் சென்று தலைவனை ஏற்குமாறு வேண்டுகின்ற பாணன், தலைவனின் உயர்குணங்களை எடுத்துக் கூறித் தலைவியிடம் மன மாற்றத்தை ஏற்படுத்த முயல்கின்றான். அவனுக்குப் பதிலுரையாகத் தலைவி கூறியது.

நாண்இலை மன்ற பாண! நீயே
கோள்நேர் இலங்குவளை நெகிழ்த்த
கானல்அம் துறைவற்குச் சொல்உகுப் போயே.

தெளிவுரை

பாணனே! ஒளி உமிழும் அழகிய வளைந்த என் வளைகள் நெகிழுமாறு பிரிந்து சென்ற, கடற்கரைச்சோலைகளைக் கொண்ட நாட்டிற்கு உரியவனான தலைவன்பொருட்டு வந்து, நீ சொற்களை வீணாய் உதிர்த்தபடி நிற்கிறாய்; நாணம் என்பதே உன்னிடம் இல்லையே!

கருத்து

'பாணனே! பொய்யான சொற்களை நாணமின்றி நீ பேசிக்கொண்டிருக்கிறாய்!'

விளக்கம்

'நீ சொல்வது பொய் என்று உனக்கே தெரிந்திருந்தும் என்னிடம் நாணமின்றிப் பேசிக்கொண்டிருக்கிறாயே' எனப் பாணனைக் கண்டித்துப் பேசித் தலைவி வாயில் நேர மறுக்கிறாள்.

சொற்பொருள்

1. நாண் - நாணம்; இலை - இல்லை.

2. கோள்நேர் - முன்பு கொள்ளுதற்கமைந்த (நெகிழாமலிருந்த).
3. உகுத்தல் - உதிர்த்தல்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 133 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வாயிலாய்ப் புகுந்த பாணன், தலைமகள் தோள் மெலிவு கண்டு, 'மனைப்புறத்துப் போய்வந்த துணையானே இவ்வாறு வேறுபடுதல் தகாது' என்றாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனுக்காகத் தூது வந்த பாணன், பிரிவாற்றாமையால் தலைவியின் தோள் மெலிந்திருப்பது கண்டு, 'தலைவன் சில நாள் பிரிந்தமைக்கு உடல் மெலிவுறும்படி வருந்துவது தகாது' என்று கூறிய பொழுது, தலைவி அவனிடம் கூறியது.

யான்எவன் செய்கோ பாண! ஆனாது
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
புல்லென் றனஎன் புரிவளைத் தோளே!

தெளிவுரை

பாணனே! மென்மையான நெய்தல்நிலத் தலைவன் என்னை மறந்தவனாய்ப் பிரிந்து போயினான் என்பதற்காக முறுக்குண்ட சங்குவளைகளை அணிந்த என் தோள்கள் ஆற்றாது தாமே மெலிவுற்றன. நான் என்ன செய்ய இயலும்?

கருத்து

"பாண! தோள் மெலிவுறுவதற்குக் காரணமானவனை இடித்துக் கூறித் திருத்த முயலாமல், 'தோள் மெலிந்தது ஏன்?' என்று என்னைக் கேட்க வந்து விட்டாயே" என்று சொல்லித் தலைவி வாயில் மறுத்தாள்.

விளக்கம்

தலைவன் பிரிந்து பரத்தை வீட்டுக்குச் செல்வதற்குத் துணையாய் இருந்த நீ, இங்கு இரக்கம் காட்ட வந்துவிட்டாயா என்று பாணன்மீது சினம் கொண்டு தலைவி கூறினாள் எனவும் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. ஆனாது - அமையாது.
2. மெல்லம் புலம்பன் - நெய்தல்நிலத் தலைவன்.
3. புல்லென்றன - பொலிவழிந்தன; புரிவளை - சங்குகளாலான வளையல்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 132 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வாயில் வேண்டி வந்த பாணன், 'நீர் கொடுமை கூறல் வேண்டா; நும்மேல் அருளுடையர்!' என்றாற்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தை வீட்டிலிருக்கும் தலைவனிடமிருந்து தூதாய் வந்த பாணன் தலைவியிடம், 'நீங்கள் தலைவரைக் கொடியவர் என்று கூறாதீர். அவர் உங்கள்மீது அருளுடையவர்' என்று கூற, அப்பாணனிடம் தலைவி சொல்லியது.

அம்ம வாழி, பாண! புன்னை
அரும்புமலி கானல் இவ்வூர்
அலர்ஆ கின்(று)அவர் அருளு மாறே.

தெளிவுரை

பாணனே! வாழ்க! தலைவன் எனக்கு அருள் செய்யும் விதத்தாலன்றோ புன்னை அரும்பு மிகுந்த கானற்சோலைகளைக் கொண்ட இவ்வூர் முழுவதும், பலரும் கூறும் பழிமொழி பரவி

யுள்ளது. அத்தகையவனாயிருக்கத் தலைவன் அருளுடையவனா யிருப்பது எங்ஙனம்?

கருத்து

'தலைவன் செயலால் ஊரே பழித்துரைக்கிறது. அப்படியிருக்க, அவன் என்னிடம் எவ்வாறு அருளுள்ளவனாய் இருக்க இயலும்?'

விளக்கம்

ஊரார் தலைவனது பரத்தமை ஒழுக்கத்தைச் சொல்லிப் பலபடப் பழித்துப் பேசுகின்றனர். அப்படியிருக்க அவன் எவ்வாறு என்னிடம் அருளுள்ளவனாயிருக்க இயலும் என்று வினவி, பாணன் கூறுவதைத் தலைவி ஏற்க மறுத்தாள்.

சொற்பொருள்

2. மலி - நிறைந்த; கானல் - கடற்கரைச்சோலை.
3. அலர் - பழிச்சொல்; ஆகின்று - எழலாயிற்று; அருளும் ஆறு - அருளும் விதம்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 131 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வாயில் வேண்டி வந்த பாணன் தலைமகன் காதன்மை கூறினானாகத் தலைமகள் வாயில் மறுப்பாள் அவற்குக் கூறியது. (காதன்மை - அன்புடைமை.)

கூற்று விளக்கம்

பரத்தை மனையிலிருந்து தலைவியிடம் தலைவன் தூதாய்ப் பாணன் வந்தான். அவன், தலைவிமீது தலைவன் பேரன்பு கொண்டவனாயிருக் கிறான் என்று கூறி, அவனை ஏற்குமாறு தலைவியிடம் வேண்டினான். அப்பொழுது தலைவி மறுத்துக் கூறியது.

நன்றே, பாண! கொண்கனது நட்பே
தில்லை வேலி இவ்வூர்க்
கல்லென் கௌவை எழாஅக் காலே.

தெளிவுரை

தலைவனிடமிருந்து தூது வந்துள்ள பாணனே! தில்லை மரங்களை வேலியாய்க் கொண்ட இவ்வூரில், தலைவனின் பரத்தமை ஒழுக்கம் 'கல்'லென்னும் ஒலியோடு பழித்துப் பேசப் படுகிறது. இப்பழிமொழி இல்லாதிருந்தால் தலைவனோடு கொள்ளும் நட்பு மிக நல்லதே!

கருத்து

'ஊரெல்லாம் அவன் பரத்தமைபற்றிப் பழித்துப் பேசுகிறது. அவன் எப்படி என்னிடம் அன்பு கொண்டவனாய் இருக்க இயலும்?'

விளக்கம்

"தலைவன் பரத்தையொடு இருப்பதை ஊரெல்லாம் பழித்துத் தூற்றுகிறது. ஆனால் பாண! நீயோ அவன் என்னிடம் அன்பு கொண்டவனாய் இருக்கிறான் என்கிறாயே! இது வியப்புக்குரியது. பரத்தையரோடு தொடர்பு கொண்டுள்ள தலைவன் என்னிடம் உண்மையான அன்பு கொண்டவனா யிருக்க இயலாது" என்று கூறித் தலைவி வாயில் மறுக்கிறாள்.

சொற்பொருள்

1. கொண்கன் - தலைவன்.
2. தில்லை - தில்லை மரங்கள்.
3. கல் என் - 'கல்' என்னும் ஒலியுடன்; கௌவை - பழிச்சொல்; எழாஅக் காலே - எழாதபோது.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 82 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

மனைவயிற்புகுந்த பாணற்குத் தலைமகன் கேட்குமாற்றால் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தை இல்லத்திலிருந்து தலைவனோடு அவன் தூதுவனாய் வந்த பாணனிடம் தலைவன் கேட்கும்வண்ணம் தலைவி சொல்லியது.

வெகுண்டனள் என்ப, பாணநின் தலைமகள்
'மகிழ்நன் மார்பின் அவிழ்இணர் நறுந்தார்த்
தாதுஉண் பறவை வந்துஎம்
போதுஅர் கூந்தல் இருந்தன' எனவே.

தெளிவுரை

பாணனே! என் தலைவன் மார்பிலிருந்த மாலையிலுள்ள மலர்ந்த பூக்களில் தேனைக் குடித்த வண்டுகள் வந்து, என் கூந்தலில் உள்ள மலர்களில் தங்கின என்பது கேட்டு உன் தலைவியாகிய பரத்தை மிகவும் சினம் கொண்டாள் என்று கேள்விப்பட்டேன். (வண்டு வரவே பொறுத்திடாதவள், தலைவனே இங்கு வந்தால் என்ன ஆவாள்?)

கருத்து

'பாணனே! தலைவனது மாலையில் இருந்த வண்டு வந்து என் கூந்தலில் அமர்வதையே பொறுத்திடாது வெருளும் பரத்தை, தலைவன் என்னைத் தழுவிக்கொண்டால் அதைப் பொறுத்திடுவாளா?'

விளக்கம்

தலைவனின் மார்பில் கிடந்த மாலையில் மொய்த்த வண்டுகள் பின்னர்த் தலைவியின் கூந்தலில் சூட்டப்பட்டிருந்த மலரில் சென்று மொய்த்தன. அவ்வாறு தலைவன்மீது மொய்த்த வண்டுகள்கூட என்மீது மொய்க்கக்கூடாது என்று கருதுகிற பரத்தை, தலைவனே வந்து என்னோடு கூடியிருக்க விடு

வாளா? ஆதலால், பாணனே! நீயும் தலைவனும் அவளிடமே சென்று விடுங்கள். இங்கே என் வீட்டில் நுழையாதீர்" எனத் தலைவன் வரவைத் தலைவி மறுத்தாள்.

சொற்பொருள்

1. வெகுண்டனள் - சினந்தனள்; தலைமகள் - பாணனுக்குத் தலைவியாகிய பரத்தை.
2. அவிழ்இணர் - மலர்ந்துள்ள பூங்கொத்து; நறுந்தார் - மணமுள்ள மாலை.
3. தாது உண் பறவை - வண்டு.
4. போது - மலர்; ஆர் - நிறைந்து.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 43 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பாணன் வாயிலாகப் புகுந்து தெளிப்ப மறுத்த தலைமகள், பாணனோடு தலைமகன் புகுந்து தெளித்துழிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையிற்பிரிந்த தலைவன், தன் பாணனைத் தூதாய் விடுத்தான். அவன் தலைவியைத் தெளிவிக்க முயன்று தோற்றான். பின்னர்த் தலைவனும் பாணனும் சேர்ந்துவந்து தலைவியைச் சமாதானப்படுத்த முயன்றபோது, இருவரும் பொய்யர் எனத் தலைவி மறுத்துக் கூறியது.

அம்பணத் தன்ன யாமை ஏறிச்
செம்பின் அன்ன பார்ப்புப் பலதுஞ்சும்
யாணர் ஊர! நின்னினும்
பாணன் பொய்யன்; பலசூ ளினனே.

தெளிவுரை

மரக்கால் போன்ற தாய்ஆமையின் மேலேறி, உருக்கி வார்த்த செம்புக்கட்டிகள் போன்ற அதன் பார்ப்புகள் உறங்கும். அத்தகைய காட்சியினைக் கொண்ட புது வருவாயினை உடைய

ஊரனே! உனக்காகப் பரிந்து பேசும் உன் பாணன் உன்னைவிடப் பொய்யன்; பல சூள்களையும் செய்பவன்.

கருத்து

'ஊரனே! பொய் பேசிப் பொய்ச்சூளுரைகள் செய்யும் உன்னையும், உன் பாணனையும் நம்பேன்.'

உள்ளுறை

ஆமைப்பார்ப்புகள் அவற்றின் தாய் முதுகில் ஏறி உறங்கும் வளமிகுந்த ஊரினைக் கொண்டவனான தலைவன் என்னும் தொடர்மூலம், தன் புதல்வன் அவன் தாயின் மார்பில் கிடந்து உறங்குதலைத் தலைவன் அறிந்திருந்தும் தான் இல்லறக் கடமையாற்றாது காம இன்பத்தையே நாடிப் பரத்தையரிடம் மயங்கிக் கிடக்கிறான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப் படுகிறது.

சொற்பொருள்

1. அம்பணம் - மரக்கால்; யாமை - ஆமை; ஏறி - முதுகின் மேல் ஏறி.
2. செம்பின் அன்ன - செம்புக்கட்டிகள் போன்ற.
4. சூளினன் - உறுதிமொழி கூறுபவன்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 47 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பாணற்கு வாயில் மறுத்த தலைமகள், பின் அப்பாணனொடு தலைமகன் புகுந்து தன் காதன்மை கூறியவழிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தமை மேற்கொண்டொழுகிய தலைவன் முதலில் பாணனை வாயிலாய் விடுப்ப, தலைவி அப்பாணனை இகழ்ந்து வாயில் மறுத்தாள். பின்பு, தலைவன் அப்பாணனோடு தலைவியிடம் சென்று, 'நான் தவறு செய்யவில்லை' என்று கூறித் தலைவியின் சினத்தைப் போக்க முயன்ற போது, தலைவி அவனையும் இகழ்ந்து வாயில் மறுத்துக் கூறியது.

முள்எயிற்றுப் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த
அகன்பெரு வட்டி நிறைய, மனையோள்
அரிகால் பெரும்பயறு நிறைக்கும் ஊர!
மாண்இழை ஆயம் அறியும்நின்,
பாணன் போலப் பலபொய்த் தல்லே.

தெளிவுரை

முள் போன்று கூரிய பற்களைக் கொண்ட பாண்மகள் பெரிய வட்டி நிறையக் கெளிறு மீன்களைக் கொண்டுவந்து சொரிந்து அவற்றிற்கு ஈடாய், வயலில் விதைத்துப் பெற்ற பயற்றினை அதே வட்டி நிறைய இல்லக்கிழத்தி தரப் பெற்றுச் செல்வாள். அத்தகைய வளம் மிகுந்த ஊரினைக் கொண்டவனே! உன் பாணனைப் போலவே நீயும் பல பொய்களைப் பேசுவதைச் சிறந்த அணிகலன் அணிந்த தோழியர் கூட்டம் நன்றாய் அறியும்.

கருத்து

'ஊர! உன் பொய்ம்மொழிக்கு நான் மயங்கேன். ஒருவேளை நான் மயங்கினாலும் தோழியர் பொறுத்துக்கொள்ளார்.'

விளக்கம்

ஒரு கூடை மீனுக்கு ஒரு கூடை பயறு கொடுப்பது அன்று வழக்கமாயிருந்திருக்கிறது.

குறிப்பு

தலைவ! நீ பிறர் அறியார் என்று கருதிப் பரத்தமை மேற்கொண்டொழுகு கிறாய். அதனை நான் மட்டும் அன்று, இவ்வூரே அறியும்.

சொற்பொருள்

1. எயிறு - பல்; கெடிறு - கெளுத்தி எனப்படும் ஒருவகை மீன்; கெளிற்று மீன் என்றும் கூறுவர்.
2. அகன் பெரு வட்டி - அகன்ற பெரிய கடகப்பெட்டி.
3. அரிகால் - கதிர் அரியப்பட்ட பின் வயலில் நிற்கும் கால்கள்.
4. ஆயம் - தோழியர் கூட்டம்.
5. பொய்த்தல் - பொய் பேசுதல்.

தோழி தலைவனுக்கு வாயில் மறுத்தது.

தோழி கூற்று

நற்றிணை 30 **கொற்றனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வந்த தலைமகன் 'யாரையும் அறியேன்' என்றாற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையர் சேரியினின்றும் வந்த தலைவன், 'யாரையும் அறியேன்' எனக் கூற, அவன் புறத்தொழுக்கம் அறிந்த தோழி, 'பரத்தையர் பலர் உன்னைப் பற்றி இழுத்ததை நானே கண்டேன்' என்று கூறியது.

கண்டனென் மகிழ்ந! கண்டுஎவன் செய்கோ?
பாணன் கையது பண்புடைச் சீறியாழ்
யாணர் வண்டின் இம்மென இமிரும்,
ஏர்தரு தெருவின், எதிர்ச்சி நோக்கிநின்
மார்புதலைக் கொண்ட மாண்இழை மகளிர்
கவல்ஏ முற்ற வெய்துவீழ் அரிப்பனி
கால்ஏ முற்ற பைதரு காலை,
கடல்மரம் கவிழ்ந்தெனக் கலங்கி, உடன்வீழ்பு,
பலர்கொள் பலகை போல,
வாங்க வாங்கநின்று ஊங்குஅஞர் நிலையே.

தெளிவுரை

மகிழ்ந! நீ வருகின்ற தெருவில், பாணன் கையில் உள்ள பண்ணமைந்த சிறிய யாழ், அழகிய வண்டுபோல 'இம்' என ஒலித்தது. நீ வருதலை எதிர்பார்த்து, உன் மார்பை முன்பு தமக்கு உரியதாய்ப் பற்றிக்கொண்டிருந்த பரத்தையர் பலரும், நீ பிரிந்ததனால் உண்டான கவலை மிகுதியால் கண்ணீர் வடித் திருந்தனர். கடுமையான புயல் காற்று வீசியதால், கடலில் சென்ற மரக்கலம் கவிழ, சில மரப்பலகைகள் அம்மரக்கலத்திலிருந்து பிரிந்து விழ, தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்கு ஒவ்வொரு வரும் அம்மரப்பலகைகளைப் பற்றி இழுப்பதுபோல, உன்னைக்

கண்டதும் பரத்தையர் உன் கைகளை ஆளுக்கொரு பக்கம் இழுத்ததையும் நீ வருந்தியதையும் என் கண்களாலேயே கண்டேன். கண்டும் நான் என்ன செய்ய இயலும்? ஆனால், நீ யாரையும் அறியேன் என்று கூறுகிறாய்!

கருத்து

பரத்தையர் பலர் உன்னைப் பற்றி இழுப்பதை நான் என் கண்களால் கண்டேன். ஆனால் நீயோ, 'யாரையும் அறியேன்' என்கிறாய். உண்மைக்கு மாறாய்ப் பேசும் உன்னிடம் நான் என்ன கூற இயலும்?

'கண்ணால் கண்டும் நான் என்ன செய்ய இயலும்?' என்று தோழி கூறியதைக் கேட்டுத் தலைவி ஊடல் நீங்குவாள் என்பது பெறப்பட்டது.

விளக்கம்

"பாணன் யாழ் மீட்டி நிற்க, நீ தெரு வழியே வந்தாய். அப்போது உன்னை உரிமை பாராட்டிய பரத்தையர் பலரும் சூழ்ந்தனர். மரக்கலம் உடைந்ததால் கடலில் வீழ்ந்து தத்தளிப் போர் பலரும் உடைந்து பிரிந்த பலகைகளைப் பற்றித் தம் போக்கில் இழுத்தலைப் போன்று, பரத்தையர் ஒவ்வொருவரும் உன்னைத் தத்தம் பக்கம் இழுத்தனர். அப்போது நீ கலங்கி நின்றதை என் கண்களாலேயே கண்டேன். இப்போதோ நீ, 'யாரையும் அறியேன்' என்கிறாய். நான் என்ன செய்ய இயலும்?" எனத் தோழி கூறினாள்.

சொற்பொருள்

1. கண்டனென் - கண்டேன்; எவன் செய்கோ? - என்ன செய்ய இயலும்?
2. பண்புடை - பண் அமைந்த.
3. இமிரும் - ஒலிக்கும்.
4. ஏர்தரு - நீ எழுந்தருள்கின்ற; எதிர்ச்சி - எதிர்ப்பட்டு.
5. தலைக்கொண்ட - முன்னர் உரிமை பாராட்டிய.
6. கவல் ஏமுற்ற - கவலை மிகுதியால்; வெய்துவீழ் - வெப்பப் பெருமூச்சு விட்டு; அரிப்பனி - நுதல் வியர்க்கும் துளியுடன்.
7. கால் ஏமுற்ற - காற்றுத் திரண்டு; பைதரு - வருந்திய.
8. கடல் மரம் - மரக்கலம்; உடன்வீழ்பு - ஒருங்கே கடலிடை வீழ்ந்த.
9. பலர் - பலரும்; கொள் பலகை - கைப்பற்றிய பலகை.
10. வாங்க - இழுக்க; ஊங்கு - அங்கே; அஞர் - துன்பம், வருத்தம்.

தோழி கூற்று

குறுந்தொகை 238 **குன்றியனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் பரத்தையின் மறுத்தந்து, வாயில் வேண்டித் தோழியிடைச் சென்று தெளிப்பான் புக்காற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தைமேல் கொண்ட காமத்தால் தலைவியைப் பிரிந்திருந்து, மீண்டும் மனைவியிடம் திரும்பிய தலைவன், தலைவி தன்னை ஏற்குமாறு செய்வதற்குத் தோழியின் உதவியை நாடுகிறான். தோழி, அவன் மொழிகள் நம்பத்தகாதவை எனக் கூறி அவனைத் திரும்பிச் செல்லுமாறு கூறியது.

பாசவல் இடித்த கருங்காழ் உலக்கை
ஆய்கதிர் நெல்லின் வரம்புஅணைத் துயிற்றி,
ஒண்தொடி மகளிர் வண்டல் அயரும்
தொண்டி அன்ன என்நலம் தந்து
கொண்டனை சென்மோ மகிழ்ந!நின் சூளே.

தெளிவுரை

மருதநிலத் தலைவனே! பசுமையான அவலை இடிப்பதற்குப் பயன்படுத்திய, வயிரம் பாய்ந்த கரிய உலக்கையினை, அழகிய கதிர்களைக் கொண்ட நெல் வயல்களின் வரப்பில் கிடத்திவிட்டு, ஒள்ளிய தொடியணிந்த பெண்கள் வண்டல் விளையாட்டு ஆடும் சிறப்பினைக் கொண்டது, தொண்டிப்பட்டினம். அத் தொண்டி போன்ற சிறப்பு வாய்ந்த எம் பெண்மை நலத்தை எமக்குத் தந்துவிட்டு, நீ செய்த உறுதிமொழிகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு செல்.

கருத்து

'உன் சூளுரை கேட்டு இனியும் மயங்க மாட்டோம்.'

விளக்கம்

"தலைவியைக் கூடியபோது, 'நான் உன்னைப் பிரியேன்' என்று உறுதியளித்தாய். அதனை உண்மையென நம்பி எம்

தலைவி தன் பெண்மை நலனை உனக்குத் தந்தாள். உன் உறுதி மொழியினின்றும் நீ பிறழ்ந்துவிட்டாய்! இப்போது பரத்தமை உடையவனானாய். அதனால், தலைவி தன் பெண்மை நலனை இழந்திருக்கிறாள். அந்நலத்தைத் தந்துவிட்டு நீ கூறிய உறுதி மொழிகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு எம்மை வீட்டு நீங்கு" என்கிறாள், தோழி!

சொற்பொருள்

1. பாசவல் - பசுமையான அவல்; கருங்காழ் - கரிய வயிரமேறிய.
2. வரம்பு - வரப்பு; துயிற்றி - கிடத்திவிட்டு.
3. வண்டல் அயரும் - விளையாடிக்கொண்டிருக்கிற.
4. தொண்டி - ஒரு துறைமுக நகரம்; நலம் - பெண்மை நலம்; தந்து - தந்துவிட்டு.
5. கொண்டனை சென்ம் - கொண்டுசெல்; மகிழ்ந - தலைவ!; சூள் - உறுதிமொழி.

தோழி கூற்று

குறுந்தொகை 384 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

'நின் பரத்தையர்க்கு நீ உற்ற சூளுறவு நன்றாயிருந்தது' என்று நகையாடித் தோழி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிடமிருந்து வந்த தலைவனை நோக்கி, 'உன் உறுதிமொழி பொய்யானாது' என்று கூறித் தோழி வாயில் மறுத்தது.

உழுந்துடைக் கழுந்தின் கரும்புடைப் பணைத்தோள்,
நெடும்பல் கூந்தல், குறுந்தொடி மகளிர்
நலன்உண்டு துறத்தி ஆயின்,
மிகநன்று அம்ம மகிழ்நநின் சூளே.

தெளிவுரை

மருதநிலத் தலைவ! உழுந்தினை உடைக்கப் பயன்படும் தடியின் முனை கொண்டிருக்கும் வழுவழுப்பைப் பெற்றிருப்பதும், தொய்யிலாய்க் கரும்பு வில் எழுதப்பட்டிருப்பதுமான பருத்த தோள்களைக் கொண்டுள்ளவர், பரத்தையர். நீண்டு திரண்ட கூந்தலையும், முன் கையில் சிறிய வளையல்களையும் கொண்ட அப்பரத்தையரின் நலனை உண்டுவிட்டு, இப்பொழுது அவர்களைத் துறந்து இங்கு வந்துள்ளாய்! உன் உறுதிமொழி மிகவும் சிறந்ததுதான்!

கருத்து

'உன் உறுதிமொழியை உண்மையென்று எப்படி நம்ப இயலும்?'

குறிப்பு

'உம்மை என்றும் பிரியேன்' என்று உறுதிமொழி கூறி எம்மோடு கூடினாய். ஆனால், பிரிந்து சென்ற நீ பரத்தையிடமும் உறுதிமொழி கூறியிருப்பாய். இப்பொழுது அங்கிருந்து பிரிந்து இங்கு வந்துள்ளாய்! உன் உறுதிமொழி மிகவும் நன்றாய்த்தான் இருக்கிறது என்று தோழி தலைவன் பேச்சினை நம்ப இயலாது என்கிறாள்.

சொற்பொருள்

1. கழுந்து - உலக்கையின் முன் பகுதி; பணை - பருத்த.
2. நெடும்பல் - நீண்டு அடர்ந்த; குறுந்தொடி - குறுகிய வளையல்கள்; மகளிர் - பரத்தையர்.
3. நலன் உண்டு - அழகினைத் துய்த்து; துறத்தி - துறந்து இங்கு வந்துள்ளாய்.
4. மகிழ்ந - தலைவனே; நின் சூளே - உன் உறுதிமொழி; மிகநன்று - மிகவும் சிறந்தது.

தோழி கூற்று

குறுந்தொகை 139 **ஒக்கூர் மாசாத்தியார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிப் புக்க தலைமகற்குத் தோழி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவனது பரத்தமையால் தலைவி ஊடியிருந்தாள். அவள் ஊடலைத் தீர்த்து அவளோடு கூடுவதற்குத் துணை செய்யுமாறு தோழியிடம் தலைவன் வேண்டினான். அவள் அதற்கு உடன்படாது கூறியது.

மனைஉறை கோழிக் குறுங்காற் பேடை,
வேலி வெருகினம் மாலை உற்றெனப்
புகும்இடன் அறியாது தொகுபுஉடன் குழீஇய,
பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்கு
இன்னாது இசைக்கும் அம்பலொடு
வாரல், வாழியர்! ஐயஎம் தெருவே.

தெளிவுரை

தலைவ! வீட்டில் வாழும் குறுகிய காலைக்கொண்ட பெட்டைக்கோழி, வேலியின் ஓரமாய்க் காட்டுப்பூனைக் கூட்டம் மாலை நேரத்தில் வந்ததைக் கண்டு, அவற்றிடமிருந்து தப்பி ஓடி நுழைந்துகொள்வதற்கான இடம் தெரியாமல், துன்பங் கொண்ட தன் குஞ்சுக்கூட்டங்களை ஒன்றாய்க் கூடும் பொருட்டுக் கூவி அழைக்கும். அதுபோல, துன்பத்துடன் பரத்தையர்கள் சொல்லும் பழிமொழிகளுடன் எம் தெருப் பக்கம் நீ வர வேண்டா! நீ வாழ்க!

கருத்து

'எங்கள் தெருப்பக்கம் வாராதே! பரத்தையர் பழித்துரைப்பர்.'

விளக்கம்

"எம்மிடமிருந்து பிரிந்து போன உன்னை உன் பரத்தையர் பழிச்சொல் பேசுகின்றனர். ஆதலால், நாங்கள் இருக்கும் இத்தெருப்பக்கமே நீ வரவேண்டா! உன் விருப்பம் போலப்

பரத்தையர் வீட்டிலேயே இன்பமாய் வாழ்க!" எனத் தோழி தலைவனோடு உடன்படாது கூறுகிறாள்.

குறிப்பு

கோழிக்குஞ்சுகளைப் பூனை கவருமோ என்று பெட்டைக்கோழி அலறுவதுபோல, தம்மால் மயக்கி வைக்கப்பட்டிருந்த தலைவனைத் தலைவி மீண்டும் கவர்ந்துகொள்வாளோ என்று பரத்தையர் அலறுவர் என்பது உவமையின் பொருள்.

கோழிக்குஞ்சுகளை வஞ்சனையால் கொல்ல வேலிக்கு ஓரத்தில் மறைந்துவரும் காட்டுப்பூனையைப் போல, நீயும் தலைவியை ஏமாற்றிக் கைக்கொள்ள நல்லவன்போல நடித்து வருகின்றாயா எனத் தோழி கேட்பதாகவும் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. மனை உறை - வீட்டில் வாழும்; குறுங்கால் - குறுகிய கால்களைக் கொண்ட; பேடை - பெண்கோழி.
2. வேலி - வேலிக்கு ஓரமாய்; வெருகு இனம் - காட்டுப்பூனைக்கூட்டம்; மாலை - மாலை நேரத்தில்; உற்று என - வந்திட.
3. புகும் இடன் - மறையும் இடம்; தொகுபு உடன்குழீஇய - சேர்ந்து ஒருங்கே கூடும்பொருட்டு.
4. பைதல் - துன்பம்; பிள்ளைக்கிளை - குஞ்சுக்கூட்டம்; பயிர்தல் - அழைத்தல்.
5. இன்னாது இசைக்கும் - இன்னாததாய்ப் பரத்தையரால் கூறப்படும்; அம்பலொடு - பழிச்சொல்லோடு.
6. வாரல் - வாராதே!

தோழி கூற்று

குறுந்தொகை 258 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

தோழி தலைமகற்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிற்பிரிந்து சென்று மீண்டு வந்த தலைவனை நோக்கி, "தலைவி அழகிழந்தாள்; அவளால் உனக்கு ஆகும் பயன் ஒன்றுமில்லை. ஆதலின், இங்கு வரவேண்டா" என்று தோழி தலைவனை ஏற்க மறுப்பது.

வாரல்எம் சேரி; தாரல்நின் தாரே;
அலரா கின்றால் பெரும! காவிரிப்
பலர்ஆடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்துகோட்டு யானைச் சேந்தன் தந்தை,
அரியல்அம் புகவின் அம்தோட்டு வேட்டை
நிரைய ஒள்வாள் இளையர் பெருமகன்,
அழிசி ஆர்க்காடு அன்ன இவள்
பழிதீர் மாண்நலம் தொலைதல் கண்டே.

தெளிவுரை

தலைவ! காவிரியில் நீராடும் பெரிய துறையில் மருத மரத்தோடு சேர்த்துக் கட்டப்பட்ட, ஏந்திய தந்தங்களைக் கொண்ட யானைகளை உடையவன், சேந்தன். அவன் தந்தை அழிசி என்பான் சிறந்த கள் உணவினையும், தொகுதியான விலங்குக் கூட்டத்தை வேட்டையாடும் தொழிலையும், பகைவருக்கு நரகம்போன்ற துன்பத்தைத் தரும் வாளினையும் கொண்டவன்; வீரம் பொருந்திய இளைஞர்களுக்குத் தலைவனாயும் விளங்கியவன். அவனுடைய ஆர்க்காடு என்னும் நகரைப் போன்ற தலைவியின் அழகு அழிவதைக் கண்டு, நம் ஊரில் பழிச்சொல் மிகுதியாகின்றது. அதனால் இனி எம் வீட்டுப்பக்கம் வாராதே! உன் மாலையும் எமக்கு வேண்டா!

கருத்து

'நீ இங்கு வரவேண்டா; வருவதனால் பயன் இல்லை; வீண் பழிதான் ஏற்படும்' என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

குறிப்பு

தலைவ! ‘இவளிடம் அழகு நலம் குறைந்தது. இனி இவளிடம் உனக்கு இன்பம் பிறவாது; ஆதலின், இங்கு வரவேண்டா’ எனக் கூறித் தோழி வாயில் மறுத்தாள்.

சொற்பொருள்

1. வாரல் - வாராதே; தாரல் - தாராதே; தார் - மாலை.
2. அலர் ஆகின்றது - பழிச்சொல் ஆகின்றது.
3. பெருந்துறை - பெரிய நீர்த்துறை; மருதம் - மருத மரம்; பிணித்த - கட்டப்பட்ட.
4. ஏந்துகோடு - ஏந்திய கொம்பு, தந்தம்; சேந்தன் - அரசருள் ஒருவன்; தந்தை - அவன் தந்தை.
5. அரியல் அம் புகவு - சிறந்த கள்ளுணவு, (புகவு - உணவு); அம்தோட்டு வேட்டை - அழகிய தொகுதியான விலங்குகளை வேட்டையாடும் தொழில்.
6. நிரைய - பகைவர்க்கு நரகம் போன்ற துன்பம் தரும்; இளையர் - இளைஞர்.
7. அழிசி - சேந்தன் தந்தை; ஆர்க்காடு - அழிசியின் தலைநகர்.
8. பழிதீர் - குற்றமற்ற; மாண்நலம் - மாட்சிமைப்பட்ட நலம்; தொலைதல் கண்டு - அழிவது கண்டு.

தோழி கூற்று

அகநானூறு 326 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

தோழி தலைமகனை வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையரோடு உறவு கொண்டிருந்த தலைவன் தன் இல்லத்திற்கு வந்து, தலைவியின் சினத்தைப் போக்கித் தன்னைக் கூட்டுவிக்குமாறு தோழியை வேண்டினான். தோழி, தன்னால் இயலாது என்று மறுத்துத் தலைவனிடம் கூறியது.

ஊரல் அவ்வாய் உருத்த தித்தி,
பேர்அமர் மழைக்கண், பெருந்தோள், சிறுநுதல்,
நல்லள் அம்ம, குறுமகள்; செல்வர்
கடுந்தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண்,
நெடுங்கொடி நுடங்கும் அட்ட வாயில்,
இருங்கதிர்க் கழனிப் பெருங்கவின் அன்ன,
நலம்பா ராட்டி நடைஎழில் பொலிந்து,
விழவில் செலீஇயர் வேண்டும்; வெண்வேல்
இழைஅணி யானைச் சோழர் மறவன்
கழைஅளந்து அறியாக் காவிரிப் படப்பை,
புனல்மலி புதவின், போஒர் கிழவோன்,
பழையன் ஒக்கிய வேல்போல்,
பிழையல கண்,அவள் நோக்கியோர் திறத்தே!

தெளிவுரை

தலைவ! அழகு உருப்பெற்ற தேமலையும், ஒன்றையொன்று எதிர்த்துப் போர் செய்வது போன்ற குளிர்ச்சி பொருந்திய கண்களையும், பெரிய தோளினையும், சிறிய நெற்றியையும் கொண்ட உன் இளமையான பரத்தை, அழகிற்சிறந்தவள்.

பழையன் என்பவன், வெற்றி பொருந்திய வேலினையும், அணி பூண்ட யானைகளையும் உடைய சோழ மன்னனிடம் படைத் தலைவனாய் இருந்தான். ஓடக்கோலால் ஆழம் அளந்தறிய இயலாத காவிரியாற்றின் கரையினைச் சார்ந்த தோட்டங்களை யுடைய அவன், நீர் நிறைந்து ஓடும் மதகுகளைக் கொண்ட 'போஒர்' என்னும் ஊருக்குத் தலைவனும் ஆவான். அப் பழையன் தன் பகைவர் மேல் செலுத்தும் வேல் தப்பாததுபோல, அப்பரத்தையால் பார்க்கப் பெற்ற ஆடவர் எவரும் தப்ப மாட்டார்.

விரைந்து செல்லும் செல்வர்களின் தேர் உண்டாக்கிய குழிகள் நிறைந்த தெருக்களைக் கொண்டதும், அசையும் நீண்ட கொடிகளைக் கொண்டதுமான 'அட்டவாயில்' என்னும் ஊர் அழகானது. அவ்வூரிலுள்ள நெடிய கதிர்களைக் கொண்ட வயல்கள் கவர்ச்சிமிக்க அழகினைக் கொண்டு விளங்கும். அத்தகைய அழகினைக் கொண்ட அவளைப் பாராட்டி,

அவளுடன் சேர்ந்து நடக்கும் நடையால் சிறப்புப்பெற்று, அவளுடன் விழாவிற்குச் செல்லுதலே உனக்குத் தக்கது. இனி இந்த இல்லத்தில் நுழையாதே.

கருத்து

'தலைவ! அழகு மிக்க பரத்தையைப் பிரிந்து இங்கே வந்தது ஏன்? அங்கேயே செல்.'

விளக்கம்

பரத்தையிடமிருந்து பிரிந்து வந்த தலைவனை நோக்கித் தோழி, 'உன்னால் விரும்பப்பட்ட பரத்தை அழகு மிக்கவள். தன்னைப் பார்ப்பவர்களை அடிமை கொள்ளும் கண்களைக் கொண்டவள். அவள் அழகினைப் பாராட்டி, அழகிய நடையோடு புனலாடச் செல்வதே உனக்குத் தகுதியானது. எம் போன்றார் உமக்குத் தகுதி வாய்ந்தவர் அல்லர். ஆதலின், நீ அங்கேயே செல்லலாம்' என்று கூறித் தலைவனை இல்லத்துள் நுழையவிடாது தடுக்கிறாள்.

குறிப்பு

"பழையன் விடுத்த வேல் மாற்றார் உயிரைப் போக்காது விட்டதில்லை. அதுபோல, தலைவன் உள்ளமும் பரத்தைக்கு அடிமையாகிப்போய் அவளிடமிருந்து நீங்க இயலாததாய் உள்ளது" எனத் தோழி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. ஊரல் - தேமல் வகை, ஊரலாகிய தேமல்; அவ்வாய் - அழகிய; உருத்த - உருப்பெற்ற, நிறம் அழகிய.
2. பேர் அமர் - பெரும் போர் செய்யும்; மழைக்கண் - குளிர்ச்சி பொருந்திய கண்.
3. நல்லள் - அழகிற்சிறந்தவள்; குறுமகள் - இளமையான பரத்தை.
4. குழித்த - பள்ளம் செய்த; ஞெள்ளல் - தெரு.
5. நுடங்கும் - அசையும்; அட்டவாயில் - ஓர் ஊர்.
6. இருங்கதிர் - நெடிய கதிர்; கழனி - வயல்; கவின் - அழகு.
7. நலம் - அழகு; நடை எழில் - நடைச்சிறப்பு.
8. செலீஇயர் - செல்லுதல்.
9. சோழர் மறவன் - சோழர் படைத்தலைவன்.

10. கழை அளந்து அறியா - ஓடக்கோலாலும் அளந்து காண இயலாத (ஆழம்).
11. புதவு - மதகு; பழையன் - பழையன் என்பவன்; 'போஒர்' - போர் என்னும் ஊர்.
12. ஒக்கிய - செலுத்திய.
13. கண் பிழையல - கண்கள் தைத்தலிலிருந்து தப்பா; நோக்கியோர் - அவளால் பார்க்கப்பெற்ற ஆடவர்.

தோழி கூற்று

அகநானூறு 386 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

தோழி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தை வீடு சென்றான் என்பதால் தலைவி ஊடல் கொண்டாள். அந்த ஊடலைத் தீர்க்கும்படி தலைவன் தோழியை வேண்டினான்; அதற்குத் தோழி உடன்படாது மறுத்துக் கூறியது.

பொய்கை நீர்நாய்ப் புலவுநாறு இரும்போத்து
வாளை நாள்இரை தேரும் ஊர!
நாணினென், பெரும! யானே; பாணன்
மல்அடு மார்பின் வலிஉற வருந்தி,
எதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருநன்
நிறைத்திரள் முழவுத்தோள் கையகத்து ஒழிந்த
திறன்வேறு கிடக்கை நோக்கி, நல்போர்க்,
கணையன் நாணி யாங்கு; மறையினள்
மெல்ல வந்து நல்ல கூறி,
'மைஈர் ஓதி மடவோய்! யானும்நின்!
சேரி யேனே; அயல்இ லாட்டியேன்;
நுங்கை ஆகுவென் நினக்கு'என, தன்கைத்
தொடுமணி மெல்விரல் தண்ணெனத் தைவர,
நுதலும் கூந்தலும் நீவி,
பகல்வந்து பெயர்ந்த வாள்நுதல் கண்டே.

தெளிவுரை

பொய்கையிலுள்ள புலால் நாற்றம் கொண்ட பெரிய ஆண் நீர்நாய் காலையிலேயே இரையாக வாளை மீனைத் தேடிச் செல்லும் ஊரினை உடையவனே!

ஒருத்தி என்னிடம் மறைந்து மெல்ல வந்து, பெருமையுடன் பேசி, என்னைப் பார்த்து, "கரிய நெளிந்த கூந்தலைக் கொண்டவளே! நானும் உன் சேரியில் உள்ளவளே! அயலே உள்ள மனையில் இருக்கிறேன்; உனக்குத் தங்கை ஆவேன்" என்று கூறி, மோதிரம் அணிந்த தன் மெல்லிய விரலால் குளிர்ச்சி பொருந்திய என் முகத்தினையும் கூந்தலையும் தடவினாள். இவ்வாறு பகல் நேரத்தில் வந்து கூறித் திரும்பிய உன் பரத்தையைக் கண்டேன்.

மற்போர் செய்தலில் வல்ல பாணன் என்பவனை எதிர்த்துப் போர் செய்த ஆரியப்பொருநன் என்பவன், பாணன் கொண்டிருந்த மார்பு வலிமையால் மிக்க துன்பமுற்றான்; முழவு போன்ற அவன் திரண்ட தோள்கள் பாணனின் கையில் சிக்குண்டு தோள் வேறு, உடல் வேறாய் ஆகி அவன் இறக்க நேரிட்டது. அதைப் பார்த்துப் போரில் வல்ல கணையன் என்பான் நாணி நின்றான். அதுபோன்று (உன் பரத்தை பகலில் வந்து என்னிடம் பேசிச் சென்றபோது) நானும் நாணமுற்றேன்.

கருத்து

"தலைவ! உன் பரத்தையை நானறிவேன். அவள் வீடும் அருகேதான் உள்ளது. நீ அங்கேயே செல்லலாம்!" என்று கூறித் தோழி வாயில் மறுத்தாள்.

விளக்கம்

"பெரும! பகல் நேரத்தில் ஒருத்தி என்னிடம் வந்து, 'பெண்ணே! நான் இச்சேரியில் உள்ளவள்தான். உனக்குத் தங்கையாவேன்' என நல்ல முறையில் கூறி என் நெற்றியையும் கூந்தலையும் தடவிச் சென்றாள். அவள் உன் பரத்தை என்பதை அறிவேன். அவள் அவ்வாறு சொன்னபோது, நான், மற்போரில் வல்ல பாணனுடன் போர் செய்து, அவன் கையிலகப்பட்டுத் தன்

கைகள் அற்று விழ இறந்து கிடந்த ஆரியப்பொருநனைக் கண்டபோது, கணையன் என்பவன் அடைந்ததைவிட மிகவும் நாணமடைந்தேன்.''

குறிப்பு

தமிழ மல்லன் பாணனும் ஆரியப்பொருநனும் ஒருவரோடு ஒருவர் எதிர்த்து மற்போர் இட்டனர். கைகள் அறுபட்டு ஆரியப்பொருநன் மாண்டான். அவன் வீரம் இகழ்ச்சிக்குரியதாயிற்று. கணையன் என்பான் ஆரியப் பொருநனுக்குத் தோழனாய் இருந்திருக்கக்கூடும்.

சொற்பொருள்

1. புலவு நாறு - புலால் நாறும்; இரும் போத்து - பெரிய ஆண்நீர்நாய்.
2. வாளை - வாளை மீன்; நாள்இரை - அதிகாலை உணவாக; தேரும் - தேடும்.
3. நாணினென் - நாணமுற்றேன்.
4. மல் அடு மார்பு - மற்போர் செய்தலில் வல்ல மார்பு; வலிஉற - வலிமை மிகுதலான்.
5. எதிர்தலை - எதிர் நின்று பொருதலை.
6. நிறைத் திரள் முழவுத் தோள் - ஆற்றல் நிறைந்து திரண்ட முழவுபோல விளங்கும் தோள்கள்; கை அகத்து - அப்பாணன் கையகப்பட்டு; ஒழிந்த திறன் - நீங்கிய வலிமை.
7. வேறு கிடக்கை - வேறு வகையாகிய கிடக்கை; நல்போர் - நல்ல போரில் வல்ல.
8. கணையன் - கணையன் என்பவன்; மறை - மறைந்து.
9. மெல்ல - மெதுவாய்; நல்ல - இனியன.
10. மை ஈர் ஓதி - கரிய குளிர்ச்சி பொருந்திய கூந்தல்; மடவோய் - இளமையளே!
11. அயல் இலாட்டியேன் - அருகே உள்ள இல்லத்தில் இருக்கிறேன்.
12. நுங்கை - உன் தங்கை.
13. தொடுமணி - மணி பதித்த மோதிரம்; தைவர - தடவி.
15. வாள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்டவள்.

தோழி கூற்று

நற்றிணை 360 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வந்த தலைமகனைத் தோழி தலைமகள் குறிப்பறிந்து, வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையிற்பிரிந்து தன் இல்லத்திற்குத் திரும்பினான். அவன் தன் மேல் தலைவி கொண்டுள்ள சினத்தைப் போக்கத் தோழியின் உதவியை நாடினான். தலைவியின் உள்ளக்குறிப்பறிந்த தோழி, அவன் மொழியை ஏற்காது தலைவனைக் கடிந்து கூறியது.

முழவுமுகம் புலர்ந்து முறையின் ஆடிய
விழவுஒழி களத்த பாவை போல,
நெருநைப் புணர்ந்தோர் புதுநலம் வௌவி,
இன்றுதரு மகளிர் மென்தோள் பெறீஇயர்,
சென்றீ பெரும! சிறக்கநின் பரத்தை!
பல்லோர் பழித்தல் நாணி, வல்லே
காழின் குத்திக் கசிந்தவர் அலைப்ப,
கையிடை வைத்தது மெய்யிடைத் திமிரும்
முனியுடைக் கவளம் போல, நனிபெரிது
உற்றநின் விழுமம் உவப்பேன்;
மற்றும் கூடும்; மனைமடி துயிலே.

தெளிவுரை

பெருமானே! பலரும் பழித்துப் பேசியதால் வருந்திய பாகர், இரும்பு முள்ளாலே வன்மையாய்க் குத்தி யானையைத் துன்புறுத்தினர். அதனால் சினம் கொண்ட யானை, துதிக்கை யிடத்தே வைத்த கவளத்தினை உண்ணாது தன் உடலின்மேல் இறைத்துக்கொண்டது. அந்த யானை பெற்ற கவளம் போன்று மிகவும் வருத்தத்துடன் இங்கு வந்துள்ளாய். உன் வருகைக்கு மகிழ்வேனாயினும் நம் மனையிடத்தே வந்து துயில்கின்ற இன்பம் பின் ஒரு நாள் உனக்குக் கைகூடுவதே. அதனாலே முழவு

ஒலிக்க முறைப்படி ஆடல் புரிந்து விழாக் களத்திலிருந்து நீங்கிய பாவை போன்ற அழகு கொண்ட பரத்தை ஒருத்தியின் நலத்தினை நேற்று நுகர்ந்து கழித்துள்ளாய். இன்று பாணனால் கொண்டுவரப்படும் புதிய பரத்தையினது மென்மையான தோள் நலத்தைப் பெறுவதற்காக நீ விரைந்து செல்! உன் பரத்தையரும் உன்னாலே நாளும் இன்பம் பெற்றுச் சிறப்படையட்டும்.

கருத்து

'தலைவ! உன் புதிய பரத்தையின் நலத்தைப் பெற விரைந்து செல்.'

விளக்கம்

யானைக்கிட்ட கவளம் அதன் வாயில் சேராது, மேனி முழுவதும் இறைக்கப்பட்டுப் பயனற்றதாய் ஆனதுபோல, உன் நலனும் தலைவிக்குக் கிட்டாது, பொருந்தாத பிறர்க்கு ஆகிப் பெருமை இழக்கிறது. நம் மனைக்குப் பின்னொரு நாள் நீ வரலாம். விழாவில் ஆடியவள் போன்ற அழகுப் பரத்தையை நேற்றுப் புணர்ந்துள்ளாய்! இன்றும் உன் வருகையை நோக்கிப் பரத்தை ஒருத்தி காத்திருக்கக்கூடும். அவளோடு சேர உடனே புறப்படு.

குறிப்பு

பாகர் குத்தியதாலே வருத்தமுற்ற யானை, உணவுக்கவளத்தை உண்ணாது தன் மேலெல்லாம் இறைத்துக்கொண்டது. அதுபோல, நீயும் ஊரார் தூற்றுதலினாலே மனம் புண்பட்டு உன் பாணனாலே கொண்டு வரப்பட்ட பரத்தையை நுகர்வதைக் கைவிட்டு இங்கே வந்து வீணாய்ப் பொழுதைக் கழிக்கின்றாய் என்று தோழி பழிக்கின்றாள்.

சொற்பொருள்

1. முழவு முகம் - முழவில் அடித்து முழக்குவதற்காக உள்ள கண் பகுதி; புலர்ந்து - காய்ந்து.
2. விழவுஒழி - விழா நீங்கிய; களத்த - இடத்திலிருந்த.
3. நெருநை - நேற்று; வௌவி - கைக்கொண்டு.
4. இன்று தரு - பாணனால் இன்று கொண்டுவரப்படும்; பெறீஇயர் - பெறுக.
5. சென்றீ - செல்க.
6. வல்லே - விரைவாய்.

7. காழ் - முட்கோல்; கசிந்தவர் - வருந்தியவர்; அலைப்ப - வருத்த.
8. கை - துதிக்கை; மெய் - உடல்; திமிரும் - இறைத்துக்கொள்ளும்.
9. முனியுடைக் கவளம் - சினத்துக்கு இடனான கவளம்.
10. விழுமம் - பெருமை.
11. மனை மடி துயில் - மனையில் பெறுகின்ற இனிய உறக்கம்.

தோழி கூற்று

அகநானூறு 346 **நக்கீரர்**

திணை : மருதம்

கூற்று

தோழி தலைமகற்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிடம் சென்று மீண்டு வந்த தலைவன், தலைவி தன்னிடம் ஊடல் கொண்டிருப்பதைக் கண்டான். அதனைத் தீர்த்து வைக்கத் தோழியைத் தலைவியிடம் தூது செல்ல வேண்டினான். அவன் வேண்டுகோளை ஏற்க மறுத்துத் தோழி கூறியது.

நகைநன்று அம்ம தானே; இறைமிசை
மாரிச் சுதையின் ஈர்ம்புறத்து அன்ன,
கூரல் கொக்கின் குறும்பறைச் சேவல்,
வெள்ளி வெண்தோடு அன்ன, கயல்குறித்து,
கள்ஆர் உவகைக் கலிமகிழ் உழவர்
காஞ்சிஅம் குறுந்தறி குத்தி, தீம்சுவை
மென்கழைக் கரும்பின் நன்பல மிடைந்து,
பெருஞ்செய் நெல்லின் பாசவல் பொத்தி,
வருத்திக் கொண்ட வல்வாய்க் கொடுஞ்சிறை
மீதுஅழி கடுநீர் நோக்கி, பைப்பயப்
பார்வல் இருக்கும் பயம்கேழ் ஊர!
யாம்அது பேணின்றோ இலமே; நீநின்
பண்அமை நல்யாழ்ப் பாணனொடு, விசிபிணி,
மண்ஆர் முழவின் கண்அதிர்ந்து இயம்ப,

மகிழ்துணைச் சுற்றமொடு மட்டு மாந்தி,
எம்மனை வாரா யாகி, முன்நாள்,
நும்மனைச் சேர்ந்த ஞான்றை, அம்மனைக்
குறுந்தொடி மடந்தை உவந்தனள்; நெடுந்தேர்,
இழைஅணி யானைப் பழையன் மாறன்,
மாடமலி மறுகின் கூடல் ஆங்கண்,
வெள்ளத் தானையொடு வேறுபுலத்து இறுத்த
கிள்ளி வளவன் நல்அமர் சாஅய்,
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி,
ஏதில் மன்னர் ஊர்கொள,
கோதை மார்பன் உவகையின் பெரிதே.

தெளிவுரை

மழைக்காலத்தில் வீட்டிற்கு வெளிப்புறம் சுண்ணாம்பு பூசியது போன்ற நிறம் கொண்ட இறகினையும் குறுகக் குறுகப் பறக்கும் தன்மை கொண்டதுமாகிய ஆண்கொக்கு, வெள்ளியால் ஆகிய வெண்மையான இதழ் போன்ற கயல்மீனைப் பெறக் கருதிக் காத்திருக்கும். கள்ளினையுண்டு மிகவும் மகிழ்ந்த உழவர், காஞ்சி மரத்தின் குறுகிய துண்டுகளை நட்டு, இனிய சுவை மிக்க மெல்லிய தண்டினைக் கொண்ட சிறந்த கரும்புக்கழிகளைக் குறுக்கே வைத்துக் கட்டி அடைத்து, நெற்பயிரினைக் கொண்ட பெரிய வயலின் பசிய பள்ளங்களிலே நீரைத் தேக்குவர். அவர்கள் அவ்வாறு முயன்று அமைத்த வலிய வளைவான அணையின்மேலிருந்து விரைந்து வழியும் நீரைப் பார்த்தபடியே அக்கொக்குகள் மெல்ல மெல்லச் சென்று மீன்களைக் கொத்தி எடுக்க எதிர்பார்த்திருக்கும். இத்தகைய பயன்மிக்க ஊரினையுடையவனே!

முன்னொரு நாள், பண்ணின்திறம் அமைந்த நல்ல யாழினையுடைய உன் பாணன், கருஞ்சாந்து பொருந்திய முழவின் கண் அதிர்ந்து முழங்க இசைத்தான். அதனால் மகிழ்ச்சி கொண்டு உன் உரிமைச்சுற்றத்துடன் கள்ளுண்டு களித்தாய். அங்கிருந்து நீங்கி நம் வீட்டுக்கு வாராமல் உன் இல்லமாகிய பரத்தை வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தாய்! அந்த வீட்டிலிருந்த சிறிய வளையல் அணிந்த உன் பரத்தை மகிழ்ந்தாள்.

மாடங்கள் நிறைந்த தெருக்களைக் கொண்ட கூடலை (மதுரையை), நெடிய தேர்களையும் அணிகள் பூண்ட யானைகளையும் கொண்டு பழையன் மாறன் என்பான் ஆண்டுவந்தான். வெள்ளம் போன்ற படைகளுடன் சென்று வேற்று நாடுகளை அழிக்கும் கிள்ளி வளவன், பழையன் மாறனைக் கூடல் போரில் வென்று அழித்தான்; போர்க்களத்திலிருந்த பகைவர் குதிரைகளையும் யானைகளையும் பற்றிக்கொண்டு அவர்கள் ஊரினையும் கைக்கொண்டான். அதனைக் கண்ட சேர மன்னன் கோதை மார்பன் மிகுந்த மகிழ்ச்சி கொண்டான். கோதை மார்பன் கொண்ட அம்மகிழ்ச்சியைவிட, நீ பரத்தை வீடு சென்றபோது அவளடைந்த மகிழ்ச்சி மிகுந்ததாயிருந்தது. நாங்கள் அதை நினைத்துக்கூடப் பார்க்கவில்லை; அவ்வாறிருக்க நீ நடந்ததை மறைப்பது நகைப்பைத் தருகிறது.

கருத்து

'உன் வரவைக் கண்டால் மிகவும் மகிழ்வு கொள்ளும் பரத்தையர் வீட்டுக்கே செல்.'

விளக்கம்

வளம் மிகுந்த ஊரனே! உன் பாணன் முழவொலிக்க நீ விரும்பிய பரத்தையோடு கள்ளுண்டு, நம் இல்லத்திற்கு வாராமல் பரத்தை வீடாகிய உன் இல்லத்திற்குச் சென்றாய். அப்பொழுது அப்பரத்தை மிகவும் மகிழ்ந்தாள். அம்மகிழ்ச்சி, பழையன் மாறனைக் கிள்ளிவளவன் வென்றது கேட்டு, சேரன் கோதை மார்பன் கொண்ட மகிழ்ச்சியைவிட மிகுந்ததாய் இருந்தது. அவ்வாறிருக்க நீ, 'நான் பரத்தையர் எவரையும் அறியேன்' என்று கூறுவது நகைப்பைத் தருகிறது. உன் பரத்தை காத்திருப்பாள்; நீ அங்கேயே செல்க என்று இகழ்ச்சியாய்க் கூறித் தோழி வாயில் மறுத்தாள்.

சொற்பொருள்

1. இறைமிசை - இறப்பின் மேல், இறப்பு - தாழ்வாரம்.
2. மாரிச் சுதையின் - மாரிக்காலத்தில் பூசப்பட்ட சுண்ணாம்பு; ஈர்ம்புறம் - குளிர்ச்சியுற்ற பகுதி.

3. கூரல் - இறகு: குறும்பறை - குறுகப் பறக்கும்.
4. தோடு - இதழ்; கயல் - கயல்மீன்.
5. கள்ஆர் - கள்ளினையுண்ட; கலி - ஆரவாரம்.
6. காஞ்சி - காஞ்சி மரம்; குறுந்தறி - குறிய துண்டுகள்; குத்தி - நட்டு.
7. மெல்கழை - மெல்லிய தண்டு; மிடைந்து - குறுக்கே வைத்துக் கட்டி.
8. பாசவல் - பசிய பள்ளம்; பொத்தி - நீரைத் தேக்கி.
9. வல்வாய் - வலிய இடத்தினைக் கொண்ட; கொடுஞ்சிறை - வளைந்த அணை.
10. மீது அழி - மேலே தேங்கி வழியும்.
11. பார்வல் இருக்கும் - பார்த்துக்கொண்டிருக்கும்; பயம் - பயன்.
12. யாம் அது பேணின்றோ இலம் - நாங்கள் அதைக் கருதியதும் இல்லை.
13. விசி பிணி - இறுகிய கட்டினைக் கொண்ட.
14. மண்ஆர் - கருஞ்சாந்து பொருந்திய; இயம்ப - ஒலிக்க.
15. மட்டு மாந்தி - கள்ளுண்டு.
17. நும் மனை - உன் வீடு (பரத்தை வீடு).
18. மடந்தை - பெண் (பரத்தை).
19. பழையன் மாறன் - பாண்டிய மன்னருள் ஒருவன்.
20. மலி - நிறைந்த; மறுகு - வீதி; கூடல் - மதுரை.
21. வெள்ளத் தானை - மிகுந்த படை; இறுத்தல் - தங்கியிருத்தல்.
22. கிள்ளி வளவன் - சோழ மன்னருள் ஒருவன்; அமர் - போர்; சாஅய் - சாய்த்து.
23. வவ்வி - கைக்கொண்டு.
24. ஏதில் மன்னர் - பகை மன்னர்.
25. கோதை மார்பன் - சேர அரசருள் ஒருவன்.

தோழி கூற்று

அகநானூறு 176 **மருதம் பாடிய இளங்கடுங்கோ**

திணை : மருதம்

கூற்று

தோழி, தலைமகனை வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையோடு இருந்தான். ஒருநாள் அவன் தன் வீட்டிற்கு வந்து, தலைவியோடு சேரத் தோழியின் உதவியை நாடினான். தோழி அதனை மறுத்துக் கூறியது.

கடல்கண் டன்ன கண்அகல் பரப்பின்
நிலம்பக வீழ்ந்த வேர்முதிர் கிழங்கின்
கழைகண் டன்ன தூம்புடைத் திரள்கால்,
களிற்றுச்செவி அன்ன பாசடை மருங்கில்,
கழுநிவந் தன்ன கொழுமுகை இடைஇடை
முறுவல் முகத்தில் பல்மலர் தயங்க,
பூத்த தாமரைப் புள்இமிழ் பழனத்து,
வேப்புநனை அன்ன நெடுங்கண் நீர்ஞெண்டு
இரைதேர் வெண்குருகு அஞ்சி, அயலது
ஒலித்த பகன்றை இருஞ்சேற்று அள்ளல்
திதலையின் வரிப்ப ஓடி, விரைந்துதன்
நீர்மலி மண்அளைச் செறியும் ஊர!
மனைநகு வயலை மரன்இவர் கொழுங்கொடி
அரிமலர் ஆம்பலொடு ஆர்தழை தைஇ,
விழவுஆடு மகளிரொடு தழூஉ அணிப் பொலிந்து
மலர்ஏர் உண்கண் மாண்இழை முன்கைக்
குறுந்தொடி துடக்கிய நெடுந்தொடர் விடுத்தது
உடன்றனள் போலும்நின் காதலி எம்போல்
புல்உளைக் குடுமிப் புதல்வற் பயந்து,
நெல்லுடை நெடுநகர் நின்இன்று உறைய,
என்ன கடத்தளோ, மற்றே தன்முகத்து
எழுதுஎழில் சிதைய அழுதனள் ஏங்கி,
வடித்தென உருத்த தித்திப் பல்ஊழ்
நொடித்தெனச் சிவந்த மெல்விரல் திருகுபு,

25 கூர்நுனை மழுகிய எயிற்றள்
ஊர்முழுதும் நுவலும்நிற் காணிய சென்மே.

தெளிவுரை

"கடலினைக் காண்பதுபோல இடமகன்ற நீர்ப்பரப்புடன் வயற்பகுதிகள் விளங்குகின்றன. அவ்வயல்களில் நிலம் பிளக்கு மாறு இறங்கிய தாமரையின் வேரில் முதிர்ந்த கிழங்கினைக் காணலாம். அத்தாமரை, மூங்கிலை ஒத்த துளை கொண்ட தண்டினையும், யானையின் செவி போன்ற பசிய இலைகளையும் கொண்டிருக்கும். பசிய இலைகளினிடையே, கழுக்கோல் ஊன்றியிருப்பது போன்ற கொழுமையான தாமரை மொட்டுகள் தென்படும். அம்மொட்டுகளுக்கு இடையிடையே புன்சிரிப் பினைக் கொண்ட முகம் போல மலர்ந்த தாமரைப்பூக்கள் பல தோன்றும்; புள்ளினங்களும் அங்கே ஒலித்துக்கொண்டிருக்கும்.

"அவ்விடத்தில் தனக்குரிய இரையினை ஆராய்ந்துகொண் டிருந்த வெண்மையான நாரையைக் கண்டு, வேம்பின் அரும்பினை யொத்த நீண்ட கண் கொண்ட நண்டு அஞ்சி ஓடும்; அது தழைத்த பகன்றைக்கொடியினைக் கரிய சேற்றுப்பிழம்பில், தேமல்போல வரியுண்டாகும்படி விரைந்து சென்று, ஈரமிக்க தன் மண்வளையுள் பதுங்கும்; இத்தகைய வளமுடைய ஊருக்கு உரியவனே!

"வீட்டிற்கு அருகேயுள்ள மரத்தில் படரும் வயலையின் கொழுவிய கொடிகளை, ஆம்பல் மலர்களுடன் சேர்த்துக் கட்டிய தழை உடையை உடுத்துள்ள உன் பரத்தை, விழாவில் ஆடும் மகளிருடன் தழுவி ஆடும் அழகினால் பொலிவு பெற்று விளங்குபவள். குவளை மலரையொத்த மையுண்ட கண்களை யும், மாண்பு அமைந்த அணி வகைகளையும், முன்கையில் குறுகிய வளையல்களையுமுடைய அவள், தன் முன்கையினால் உன்னைப் பிடித்திருந்த பிடியிலிருந்து நீ விலகியதற்கே சினமடைந்தாள்; எழுதுதற்கரிய தன் முக அழகு கெடுமாறு அழுது, ஏக்கமுற்றாள். பொன்னை உருக்கி வைத்தாற்போன்ற தேமல், பன்முறை நெரித்துக்கொண்டதால் சிவந்த மெல்லிய விரல்கள், இறுகக் கடித்துக்கொண்டதால் கூர் மழுங்கிய பற்கள்

ஆசியவற்றோடு, ஊர் எங்கும் அலர் கூறப்படும் உன்னைக் காண்பதற்குத் தேடிச் செல்லுகிறாள்.

"உன் காதலியாகிய பரத்தைக்குப் புல்லிய குடுமியைக் கொண்ட புதல்வனைப் பெற்று, நெல் வளமுள்ள நெடிய மனையில், நீ இல்லாமல் தங்கியிருப்பதற்கு எம்மைப்போல என்ன கடப்பாடு உள்ளது?" என்று தலைவனிடம் கூறித் தோழி வாயில் மறுத்தாள்.

கருத்து

நீ பரத்தையைப் பிரிந்தால், அவள் உன்னை ஊரெங்கும் தேடுவாள். அதற்கிடமின்றி நீ அவளிடமே சென்றுவிடு.

விளக்கம்

"ஊரனே! விழாவில் தழையுடையால் பொலிவு பெற்ற உன் பரத்தை, தன் முன்கையினால் உன்னைப் பிடித்திருந்த பிடியிலிருந்து நீ விலகிய அப்போதே சினமுற்றவளாய்த் தன் முகத்து ஒப்பனையழகு கெட அழுது ஏங்கி உன்னைக் காண்பதற்கு ஊரெல்லாம் தேடிச் செல்வாள். உன் காதலியாகிய அவள், புல்லிய குடுமியினைக் கொண்ட புதல்வனைப் பெற்று, நெல்லுடைய நீண்ட மனையில் தங்குதற்கு எம்மைப்போலக் கடமைப் பட்டவளா என்ன?

"கைப்பிடியை நீ அகற்றிய அளவிலேயே உன்னை ஊரெல்லாம் தேடுகிறாள், பரத்தை; தலைவியோ சினம் கொண்டு உன்னைப் பிரிந்து மனையிலேயே வருந்தித் தங்கியிருக்கிறாள்; உன்னைத் தேடும் பரத்தையிடமே நீ செல்" எனக் கூறித் தலைவனின் வேண்டுகோளைத் தோழி மறுத்தாள்.

உள்ளுறை

தாமரைக்கு இடையிலே இருந்த நீர்நண்டு, இரை தேடும் கொக்கினைக் கண்டு அச்சம் கொண்டு ஓடித் தன் வளையினுள்ளே மறையும். இதன்மூலம் பரத்தையரோடு உறவு கொண்டுள்ள தலைவனும் ஊர் அலர் கூறுவதற்கு அஞ்சித் தன் வீடு நோக்கி வந்தான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப் படுகிறது.

சொற்பொருள்

1. கண் அகல் - இடம் அகன்ற.
2. பக - பிளக்குமாறு; வீழ்ந்த - இறங்கிய.
3. கழை - மூங்கில்; தூம்பு - உள் துளை; திரள் - திரண்ட.
4. பாசடை - பசிய இலை.
5. கழு - கழுக்கோல் சூலம்; நிவத்தல் - உயர்தல்; கொழுமுகை - கொழுமையான மொட்டு.
6. முகத்தில் - முகத்தைப் போல; தயங்க - விளங்க, தோன்ற.
7. புள்இமிழ் - பறவைகள் ஒலிக்கும்.
8. வேப்பு - வேம்பு; நனை - அரும்பு; ஞெண்டு - நண்டு.
9. இரைதேர் - இரையினைத் தேடிக்கொண்டிருந்த.
10. பகன்றை - பகன்றைக்கொடி; இரு - கரிய.
11. திதலையின் - தேமல் போல; வரிப்ப - வரி உண்டாகும்படி.
12. அளை - வளை; செறியும் - பதுங்கும்.
13. மரன் - மரம்; இவர் - படரும்.
14. ஆர்தழை - நிறைந்த தழை; தைஇ - உடுத்து.
17. துடக்கிய - பொருந்திய, பிடியிலிருந்து.
18. உடன்றனள் - சினங்கொண்டனள்.
19. புல்உளை - புல்லிய மயிர்; பயந்து - ஈன்றெடுத்து.
20. நின்இன்று - நீ இல்லாமல்.
21. கடத்தளோ - கடமைப்பட்டவளா?
22. எழுது எழில் - எழுதுதற்கு அரிய அழகு.
23. வடித்து என - பொன்னை உருக்கி வார்த்தது ஒப்ப; உருத்த - உருக்கொண்ட; தித்தி - தேமல்; பல் ஊழ் - பல முறை.
24. நொடித்தல் - நெரித்தல்; திருகுபு - திருகிக் கடித்தலால்.
25. மழுகிய - மழுங்கிய.
26. நுவலும் - சொல்லுவாள்; சென்மே - செல்லுபவள்.

தோழி கூற்று

அகநானூறு 306 **மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்**

திணை : மருதம்

கூற்று

தோழி, தலைமகற்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தமை ஒழுக்கம் காரணமாய்த் தலைவி ஊடல் கொண்டாள். அந்த ஊடலைப் போக்கக் கருதிய தலைவன் தோழியின் உதவியை நாட, தோழி மறுத்து அவனிடம் உரைத்தது.

பெரும்பெயர் மகிழ்ந! பேணாது அகன்மோ!
பரந்த பொய்கைப் பிரம்பொடு நீடிய
முட்கொம்பு ஈங்கைத் துய்த்தலைப் புதுவீ
ஈன்ற மாத்தின் இளந்தளிர் வருட,
ஆர்குருகு உறங்கும் நீர்சூழ் வளவயல்
கழனிக் கரும்பின் சாய்ப்புறம் ஊர்ந்து,
பழன யாமை பசுவெயில் கொள்ளும்
நெல்லுடை மறுகின் நன்னர் ஊர!
இதுவோ மற்றுநின் செம்மல்? மாண்ட
மதிஏர் ஒள்நுதல் வயங்குஇழை ஒருத்தி,
இகழ்ந்த சொல்லும் சொல்லி, சிவந்த
ஆய்இதழ் மழைக்கண் நோய்உற நோக்கி,
தண்நறுங் கமழ்தார் பரீஇயினள், நும்மொடு
ஊடினள்; சிறுதுனி செய்துஎம்
மணல்மலி மறுகின் இறந்திசி னோரே.

தெளிவுரை

"பெரிய புகழ் கொண்ட தலைவனே! பரந்த பொய்கையில் பிரம்பொடு ஈங்கையும் சேர்ந்து நீண்டு வளர்ந்து கிடக்கும். அந்த ஈங்கையில் பஞ்சு போன்ற உச்சியினைக் கொண்ட பூக்கள் மலரும். அப்பூக்களும் மாமரத்தில் தோன்றிய இளந்தளிரும் தடவுவதால் மீனுண்ட நாரை உறக்கம் கொள்ளும். நீர் வளம் கொண்ட வயலில் நீண்டு வளர்ந்து சாய்ந்து கிடக்கும்

கரும்புகளில் ஊர்ந்து சென்று வயலாமை இளவெயில் காயும். வளம் பொருந்திய தெருக்களில் நெற்கூடுகள் பல நிறைந்திருக்கும். இத்தகைய பெருவளம் பொருந்திய ஊரினை உடையவனே!

"மாட்சிமை பொருந்திய மதிபோன்று ஒளி வீசும் நெற்றியினையும், அணிகலன்களையும் கொண்ட உனக்குரிய பரத்தை ஒருத்தி உன்னை இகழ்ந்து பேசினாள்; அழகிய மலர் போன்ற குளிர்ச்சி பொருந்திய கண்ணால் வருத்தம் தோன்ற உன்னைப் பார்த்தாள். உன்னுடன் கலகம் புரிந்து, குளிர்ச்சியும் மணமும் கொண்டு விளங்குகின்ற உன் மாலையையும் அறுத்தெறிந்தாள். இவ்வாறு உன்னுடன் ஊடியதுடன் மணல் நிறைந்த எமது வீதியின் வழியாகவும் சென்றாள் அன்றோ?

"தலைமைப்பண்புகளைக் கொண்ட உனக்கு இஃது அழகாகுமா? இவ்வளவுதானா? என்னைப் போற்றாது இங்கிருந்து அகன்று செல்" எனத் தோழி வாயில் மறுத்துக் கூறினாள்.

கருத்து

'பரத்தையைப் பிரிந்தால் அவள் உன்னை இகழ்ந்து பேசி இழிவுபடுத்துவாள்; அதனால் அவள் வீட்டுக்கே செல்.'

விளக்கம்

பரத்தையிடமிருந்து பிரிந்து வந்த தலைவனிடம், "பெரும் புகழினைக் கொண்ட தலைவனே! உன் தலைமை தோன்ற, பரத்தையரை இகழ்ந்து தலைவியைப் பாராட்டி இங்கு வந்து நிற்கிறாய்! ஆனால், உன் பரத்தை ஒருத்தி உன்னை இகழ்ந்து பேசினாள்; சினங்கொண்டு நோக்கினாள்; ஊடல் கொண்டு உன் மாலையை அறுத்து வீசிக் கலகம் செய்திருக்கிறாள். தலைமைத் தன்மை வாய்ந்த உனக்கு இஃது அழகாகுமோ? இவ்விடம் விட்டுச் செல். உன்னை யாம் ஏற்க இசையோம்" எனத் தோழி கூறினாள்.

உள்ளுறை

ஈங்கையின் புதுப்பூவும், மாமரத்தின் இளந்தளிரும் தடவ நாரை உறங்கும் என்றது, எதிர்பாராத இன்பத்தையும் தலைவன் எளிதாய் அடைவான் என்னும் உள்ளுறைப் பொருளைத் தருகிறது.

சொற்பொருள்

1. பேணாது - போற்றாது; அகன்மோ - செல்க.
2-3.பிரம்பு, ஈங்கை - கொடி வகைகள்.
3. துய்த்தலை - பஞ்சு போன்ற உச்சி; வீ - மலர்.
4. மா - மாமரம்; வருட - தடவிட.
6. ஆர்குருகு - மீனை உண்ட நாரை; சாய்ப்புறம் - சாய்ந்துள்ள கரும்பின் மேற்புறம்.
7. பசுவெயில் - இளவெயில்.
8. மறுகு - தெரு; நன்னர் - நல்ல (வளம் வாய்ந்த).
9. செம்மல் - தலைமைப்பண்பு; மாண்ட - மாட்சிமை பொருந்திய.
10. ஏர் - அழகு; வயங்கு இழை - விளங்குகின்ற அணிகலன்; ஒருத்தி - உன் பரத்தை.
12. நோய் - வருத்தம்.
13. பரீஇயினள் - அறுத்தெறிந்தனள்; தார் - மாலை.
14. துனி - பலரறியக் கலகம் விளைவித்தல்.
15. மலி - நிறைந்த; இறந்திசினோள் - சென்றாள்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 46 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

மனைக்கண் வருதல் பரத்தை விலக்க விலங்கிப் பின்பு உலகியல்பற்றி அவள் குறிப்பினோடும் வந்தமையறிந்த தோழி, தலைமகனைப் புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியின் வீட்டிற்குச் செல்வதைப் பரத்தை விலக்கினாள். அவனும் அங்கேயே தங்கினான். பிறகு, உலகம் பழிக்குமே என்று கருதிப் பரத்தையின் இசைவையும் குறிப்பையும் பெற்றுத் தலைவியிடம் வந்தான். அதனை அறிந்த தோழி, ஊடல் கொண்டுள்ள தலைவியின் சார்பாகத் தலைவனை வெறுத்துச் சொல்லியது.

நினக்கே அன்றுஅஃது; எமக்குமார் இனிதே
நின்மார்பு நயந்த நல்நுதல் அரிவை
வேண்டிய குறிப்பினை ஆகி,
ஈண்டுநீ அருளா(து), ஆண்டுறை தல்லே.

தெளிவுரை

தலைவனே! உன் மார்பை விரும்பிய பரத்தை, நல்ல நெற்றியைக் கொண்டவள். அவளது விருப்பத்தின் குறிப்பை அறிந்துகொண்டு, இங்கு வந்து அருளுவதை நீக்கி, அங்கேயே அவள் வீட்டில் தங்குதல் உனக்கு மட்டுமன்றி எமக்கும் இனியது.

கருத்து

'தலைவ! பரத்தை விருப்பப்படிதான் நீ இங்கு வரவேண்டுமென்றால் இங்கு வரவேண்டா; அங்கேயே தங்கிக்கொள்ளலாம்.'

விளக்கம்

உலகியலை அறிந்ததாலும், பரத்தையும் மறுக்கவில்லை என்னும் குறிப்பை அறிந்ததாலும் தலைவியின் வீட்டிற்குத் தலைவன் திரும்பினானேயன்றித் தலைவியின்மீது கொண்ட அன்பு காரணமாய்த் திரும்பவில்லை.

பரத்தையின் குறிப்பறிந்து தலைவன் தன் வீட்டிற்கு வருதல் தலைவிக்கு வெட்கத்தைத் தருமாதலால், தலைவன் பரத்தை வீட்டிலேயே தங்குதல் தக்கது என்று தலைவி சார்பாய்த் தோழி கூறினாள்.

சொற்பொருள்

2. நின் மார்பு - உன் மார்பினை; நயந்த - விரும்பிய; நல்நுதல் - அழகிய நெற்றியைக் கொண்ட; அரிவை - பரத்தை.
3. வேண்டிய குறிப்பினை - அவளது விருப்பத்தின் குறிப்பினை; ஆகி - அறிந்துகொண்டு.
4. நீ ஈண்டு அருளாது - நீ இங்கு வந்து அருளுவதை நீக்கி; ஆண்டு உறை - அவள் வீட்டிலேயே தங்கு.
1. அஃது நினக்கே அன்று - அவ்வாறு நீ செய்வது உனக்கு மட்டும் அன்று; எமக்கும் இனிது - எமக்கும் இனியது.

தோழி கூற்று

குறுந்தொகை 196 **மிளைக்கந்தனார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிப் புக்க கிழவற்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

ஊடியிருந்த தலைவியின் உடன்பாடு பெறுவதற்குத் துணை புரியுமாறு தலைவன் தோழியை வேண்டிய பொழுது அவள், "நீ முன்பு எம் தலைவியிடம் அன்பு செலுத்துபவனாயிருந்தாய். இப்பொழுதோ வெறுப்புள்ளவனாயுள்ளாய்; உன்னை ஏற்றுக்கொள்வது எவ்வாறு?" என அவன் வேண்டுகோளை மறுத்துக் கூறியது.

வேம்பின் பைங்காய்என் தோழி தரினே,
'தேம்பூங் கட்டி' என்றனிர்; இனியே,
பாரி பறம்பில் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்,
வெய்ய உவர்க்கும் என்றனிர்;
ஐய அற்றால் அன்பின் பாலே.

தெளிவுரை

"முன்பு என் தலைவி வேம்பின் பச்சைக்காயைத் தந்தாலும் அதனை மணமுள்ள இனிய வெல்லக்கட்டி எனக் கூறிச் சுவைத்து உண்டாய். இப்பொழுதோ, பாரியின் பறம்பு மலையில் ஊறிய, தை மாதக் குளிர்ச்சியினைக் கொண்ட தெளிந்த நீரைக் கொடுத்தாலும், 'இது வெப்பத்துடன் உவர்ப்புள்ளதாய் இருக்கிறது' என்று கூறுகிறாய். உலகில் அன்பின் தன்மை இத்தகையதாய் இருக்கிறது" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

'முன்பு நீ தலைவியிடம் அன்பு கொண்டிருந்தாய்; இப்பொழுது அதை மறந்தாய்!'

விளக்கம்

இயல்பாகவே கைப்புடையதாகிய வேப்பங்காய் முன்பு தலைவியின் கைபட்ட காரணத்தால் தலைவனுக்கு மிகவும்

இனிப்புள்ளதாய்த் தோன்றிற்று. தை மாதம் பனிக்காலமாதலின் நீர் இயல்பாகவே குளிர்ச்சியுடனிருக்கும்; மேலும் அக்காலத்தில் மலைச்சுனைநீர் மிகுந்த குளிர்ச்சியும் இனிமையும் பொருந்தியதாய் இருக்கும். தலைவி இப்போது அந்நீரைத் தந்தாலும் தலைவனுக்கு அந்நீர் வெப்பமுடையதாயும் உவர்ப்பாயும் தோன்றுகிறது. இம்மாறுபாடு தலைவனின் அன்பு மாறியதால் ஏற்பட்டது எனத் தோழி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. வேம்பு - வேப்ப மரம்; பைங்காய் - பசிய காய்; தரின் - தந்தால்.
2. தேன்பூங் கட்டி - இனிய மணமுள்ள வெல்லக்கட்டி; இனியே - இப்பொழுதோ.
3. பாரி - பாரி மன்னன்; பறம்பில் - பறம்பு மலையில்; பனிச்சுனை - குளிர்ச்சி பொருந்திய சுனை; தெள்நீர் - தெளிந்த நீர்.
4. தைத்திங்கள் - தை மாதத்தில்; தண்ணிய - குளிர்ச்சியாய்.
5. வெய்ய - வெம்மையாய் இருக்கிறது; உவர்க்கும் - உவர்ப்பாயுள்ளது.
6. அன்பின் பால் - அன்பின் தன்மை; அற்றால் - இத்தகையதாய் இருக்கிறது.

தோழி கூற்று

அகநானூறு 366 **குடவாயிற்கீரத்தனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வந்த தலைமகன் வாயில் வேண்டியவிடத்துத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தை வீடு சென்றிருந்த தலைவன், தன் வீடு திரும்பினான். ஊடல் கொண்டிருந்த தலைவியின் உறவைப் பெறத் தோழியின் உதவியை அவன் நாடியபோது, தோழி தலைவியை இசைவிக்க மறுத்துக் கூறியது.

தாழ்சினை மருதம் தகைபெறக் கவினிய
நீர்சூழ் வியன்களம் பொலிய, போர்அழித்து,
கள்ஆர் களமர் பகடுதளை மாற்றி,
கடுங்காற்று எறிய, போகிய துரும்புடன்
காயல் சிறுதடிக் கண்கெடப் பாய்தலின்,
இருநீர்ப் பரப்பின் பனித்துறைப் பரதவர்
தீம்பொழி வெள்உப்புச் சிதைதலின், சினைஇ,
கழனி உழவரொடு மாறுஎதிர்ந்து, மயங்கி,
இருஞ்சேற்று அள்ளல் எறிசெருக் கண்டு
நரைமூ தாளர் கைபிணி விடுத்து,
நனைமுதிர் தேறல் நுளையர்க்கு ஈயும்
பொலம்பூண் எவ்வி நீழல் அன்ன,
நலம்பெறு பணைத்தோள் நல்நுதல் அரிவையொடு,
மணம்கமழ் தண்பொழில் அல்கி, நெருநை
நீதற் பிழைத்தமை அறிந்து,
கலுழ்ந்த கண்ணள்,எம் அணங்குஅன் னாளே.

தெளிவுரை

தாழ்ந்த கிளைகளைக் கொண்ட மருத மரங்கள் தழைத்து அழகினைப் பெற்ற நீர் சூழ்ந்த நெற்களத்தில், உழவர்கள் நெல்லரி கட்டுகளை அவிழ்த்துப் பிரித்துப் போட்டுக் கடாவிட்டனர். பின், கள்ளுண்டு வந்து, கடாக்களைக் கட்டவிழ்த்து அகற்றி விட்டு, நெல்லைத் தூற்றினர். அதனால் காற்றில் பறந்துபோன துரும்புகள், அருகில் உப்பளங்களிலிருந்த பாத்திகள் முழுவதிலும் இடமின்றி எங்கும் விழுந்தன. கடற்பரப்பின் குளிர்ச்சி பொருந்திய துறையிலிருந்த பரதவர்கள், துரும்பு விழுந்து சுவைமிக்க வெள்ளுப்புக் கெடுதலால் சினமுற்றனர்; உழவரோடு பகை கொண்டு கைகலந்து சண்டையிட்டுக்கொண்டனர். இருதரப்பினரும் சேற்றுக்குழம்பினை ஒருவர்மீது ஒருவர் வாரி இறைத்தனர்.

இதனைக் கண்ட, மருத நிலத்தைச் சார்ந்த நரைத்து முதிர்ந்த பெரியார் ஒருவர் கைகலப்பில் ஈடுபட்ட இரு சாராரையும் விலக்கிவிட்டார். பரதவர் சமாதானம் அடைவதற்கு முதிர்ந்த கள்ளினை அவர்கட்குக் கொடுத்தார். பொற்பூண் பூண்ட எவ்வி

என்பவனின் 'நீழல்' என்னும் ஊர் இத்தகைய காட்சியினைக் கொண்டது.

அந்'நீழல்' போலும் அழகினையும், மூங்கில் போலும் தோளினையும் அழகிய நெற்றியினையும் கொண்ட பரத்தை ஒருத்தியொடு மணம் கமழ்கின்ற குளிர்ச்சி பொருந்திய சோலையில் நேற்று நீ தங்கினாய். இதனை அறிந்து, நீ இழைத்த தீங்கினை உணர்ந்து, தெய்வம் போன்ற எம் தலைவி கண்ணீர் விட்டு அழுதனள். (இக் கொடுமையைச் செய்த உன்னை அவள் ஏற்க மாட்டாள்).

கருத்து

தலைவனுக்கு வாயில் மறுத்த தோழி, தன்னை அழச்செய்த தலைவனைத் தலைவி ஏற்க மாட்டாள் எனச் சொன்னாள்.

விளக்கம்

தலைவ! நீ பரத்தையோடு சேர்ந்து நேற்றுச் சோலையில் தங்கியிருந்ததை அறிந்ததும் தெய்வம் போன்றவளாகிய எம் தலைவி கண்ணீர் விட்டு அழுதாள். தன்னை அழச்செய்து வருத்திய உன்னை அவள் எப்படி ஏற்றுக்கொள்வாள்?

குறிப்பு

நெல்லைத் தூற்றுவதால் உண்டாகும் தூசு உப்புப் பாத்திகளில் படியும் எனக் கூறியுள்ளதால், எவ்வியின் 'நீழல்' நகர், மருத வளமும் நெய்தல் வளமும் கொண்டதாயிருந்தது என அறிய இயல்கிறது.

உழவரும் பரதவரும் இட்ட சண்டையை நரைத்த முதியவர் ஒருவர் விலக்கி, பரதவர்க்குக் கள் கொடுத்து அவர்கள் சினத்தை நீக்கினார்.

சொற்பொருள்

1. தாழ் சினை - தாழ்ந்த கிளை; தகைபெற - சிறப்புற; கவினிய - அழகு பெற்ற.
2. பொலிய - பொலிவுற; போர்அழித்து - போரினைப் பிரித்துப் போட்டு.
3. கள்ஆர் - கள்ளுண்டு வந்த; களமர் - உழவர்; பகடு - கடா; தளை - கட்டு.
4. எறிய - தூற்ற; போகிய - பறந்து போன.

5. காயல் - உப்பளம்; சிறுதடி - சிறிய பாத்தி; கண்கெட - இடமில்லாது; பாய்தலின் - வீழ்ந்து பரவிக் கிடந்ததால்.
6. இருநீர் - கடல்; பனித்துறை - குளிர்ச்சி பொருந்திய துறை.
7. தீம்பொழி - இனிமைமிக்க; சிதைதலின் - கெடுதலினால்; சினைஇ - சினம் கொண்டு.
8. மாறு எதிர்ந்து - மாறுபட்டு எதிர்த்து; மயங்கி - கை கலந்து.
9. அள்ளல் - சேற்றுக்குழம்பு; எறி செரு - எறிந்து செய்யும் சண்டை.
10. நரை மூதாளர் - நரை தோன்றிய முதியவர்; கைபிணி - கைகலப்பு.
11. நனை - தேன்; முதிர் தேறல் - முதிர்ந்த கள்; நுளையர் - பரதவர்; ஈயும் - கொடுக்கும்.
12. எவ்வி - தலைவருள் ஒருவன்; நீழல் - எவ்விக்கு உரிய ஊர்.
13. நலம் பெறு - அழகு பெற்ற; பணை - மூங்கில்; அரிவை - பெண் (பரத்தை).
14. அல்கி - தங்கி; நெருநை - நேற்று.
15. நீதற்பிழைத்தமை - (தலைவன்) தலைவிக்குச் செய்த தீமையை.
16. கலுழ்ந்த - அழுத; அணங்கு - தெய்வம்.

தோழி கூற்று

குறுந்தொகை 354 — **கயத்தூர் கிழார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வாயில் வேண்டிச் சென்ற தமைகற்குத் தோழி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிடமிருந்து பிரிந்து வந்த தலைவனிடம், 'நீ எம்மை விரும்ப வில்லை; எம்மைக் கொண்டு சென்று எம் தந்தையின் வீட்டில் விட்டுவிடுக' எனக் கூறுவதன்வழி தோழி வாயில் மறுத்தது.

நீர்நீடு ஆடின் கண்ணும் சிவக்கும்;
ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்;
தணந்தனை ஆயின்,எம் இல்உய்த்துக் கொடுமோ
அம்தண் பொய்கை எந்தை எம்ஊர்க்
கடும்பாம்பு வழங்கும் தெருவில்
நடுங்குஅஞர் எவ்வம் களைந்த எம்மே.

தெளிவுரை

நீரில் நீண்ட நேரம் ஆடினால் கண் சிவக்கும்; திரும்பத் திரும்ப உண்டால் தேனும் புளிக்கும். அழகிய குளிர்ச்சி பொருந்திய குளங்களைக் கொண்ட எம் தந்தையின் ஊரில், கொடிய பாம்புகள் திரியும் தெருவில், முன்பு களவில் வந்து நடுங்கும் படியான எமது கடுந்துன்பத்தைப் போக்கினாய். இப்போது நீ எம்மைப் பிரிந்தமையால், எம்மைக் கொண்டுபோய் அதே தெருவில் உள்ள எம் வீட்டில் விட்டுவிடு!

கருத்து

'தலைவ! எம்மைக் கொண்டு சென்று எம் தந்தையின் வீட்டில் விட்டுவிடு.'

குறிப்பு

முன்பு களவுக்காலத்தில் தேடிவந்து தழுவி இன்புற்றவன், பல காலம் பழகிய பின் தலைவியை வெறுக்கத் தொடங்கினான் என்பது தோழியின் கருத்து.

'குளிர்ச்சி பொருந்தியதாயும் ஆடுவதற்கு இனியதாயும் இருந்த நீரில் நெடுநேரம் ஆடிய பின் கண் சிவப்பதால் அது வெறுப்பைத் தருகிறது. குடிக்கத் தொடங்கும்போது இனிப்பாயிருக்கும் தேன் தொடர்ந்து குடித்துக் கொண்டேயிருந்தால் அதன் சுவை குறைவதாய்த் தோன்றும். அவைபோல யாம் உமக்கு இனியவராயிருந்தோம்; நெடுங்காலம் பழகியமையால் இன்று வெறுக்கப்படுபவர் ஆயினேம்' என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. நீடு - நீண்ட நேரம்.
2. ஆர்ந்தோர் - பன்முறை உண்டோர்.
3. தணந்தனையாயின் - நீ எம்மைப் பிரிவையாயின்; எம் இல் உய்த்துக் கொடுமோ - எம்முடைய வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டுவிடு.
4. எந்தை - எம் தந்தை.
5. கடும்பாம்பு - கொடிய பாம்பு.
6. நடுங்குஅஞர் எவ்வம் - நடுங்குதற்குரிய மிக்க துன்பத்தை; களைந்த எம்மே - முன்பு களவுக் காலத்தில் எமக்கு நீக்கினை.

தோழி கூற்று

நற்றிணை 330 **ஆலங்குடி வங்கனார்**

திணை : மருதம்

கூற்று

தோழி, தலைமகனை வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தை இல்லத்திலிருந்து திரும்பிய தலைவன் தலைவியின் ஊடலைப் போக்குவதற்குத் தோழியின் உதவியை நாட, தோழி அவனைக் கடிந்து மறுத்துக் கூறியது.

தடமருப்பு எருமைப் பிணர்ச்சுவல் இரும்போத்து,
மடநடை நாரைப் பல்இனம் இரிய,
நெடுநீர்த் தண்கயம் துடும்எனப் பாய்ந்து,
நாள்தொழில் வருத்தம் வீடச் சேண்சினை
இருள்புனை மருதின் இன்நிழல் வதியும்
யாணர் ஊர்!நின் மாண்இழை மகளிரை
எம்மனைத் தந்துநீ தழீஇயினும், அவர்தம்
புன்மனத்து உண்மையோ அரிதே; அவரும்
பைந்தொடி மகளிரொடு சிறுவர்ப் பயந்து,
நன்றி சான்ற கற்போடு
எம்பாடு ஆதல் அதனினும் அரிதே.

தெளிவுரை

பெரிய வளைந்த கொம்பையும், சொரசொரப்பான பிடரியையும் கொண்ட கரிய எருமைக்கடா, இளநடை கொண்ட நாரையின் கூட்டம் பலவும் விலகுமாறு ஆழமான நீர் நிரம்பிய, குளிர்ச்சி பொருந்திய குளத்தில் துடுமெனப் பாயும். அவ்வாறு பாய்ந்த எருமை காலைப்பொழுதில் உழுதொழில் புரிந்த வருத்தம் நீங்க, உயர்ந்த பெரிய கிளைகளையும் இருளைப் புதைத்தது போன்ற அடர்ந்த நிழலையும் கொண்ட மருத மரத்தின் இனிய நிழலில் தங்கியிருக்கும். இத்தகைய இயல்பு வாய்ந்த எருமைகளையும் புதிய வருவாயினையும் உடைய ஊரனே! மாட்சிமை பெற்ற அணிகள் புனைந்த உன் மகளிரை

எம் மனையில் கொணர்ந்து குலமகளிரைப் போலத் தழுவிக் கிடந்தாலும், புன்மையான அவர்கள் மனத்தின் உண்மையை அறிதல் அரிது. அம்மகளிரும் பொன்னால் ஆன கொடிகளை அணிந்த புதல்வர் புதல்வியரைப் பயந்து, நன்மையுடன் விளங்கும் எம் போன்ற கற்புப் பொருந்திய மகளிரை ஒத்து அமைதல் அதனினும் அரிது.

கருத்து

'ஊரனே! பரத்தையர், குல மகளிராய் இரார்.'

விளக்கம்

ஊர்ப்பரத்தையரை எம் மனைக்கு அழைத்துவந்து கூடினாலும் அவர்தம் புல்லிய மனத்தின் உண்மையை அறிதல் அரிது; அப்பரத்தையரும் எம்போன்ற கற்புடைய மகளிராதல் அதனினும் அரிது.

உள்ளுறை

நாரையினம் இரிய எருமைக்கடா பொய்கையில் பாய்ந்து வருத்தம் நீங்கிய பின் தொழுவம் புகாது, மருத மர நிழலிலே தங்கும் என்றது, பரத்தையர் சேரியில் புகுந்த தலைவனைக் காமக் கிழத்தியர் வெறுத்து ஒதுங்கி அகன்றுபோக, பின்னும் வீடு திரும்பாது பாணன் கூட்டிய பரத்தையுடன் தங்கியிருந்தான் என்னும் உள்ளுறைப் பொருளைத் தருகிறது. தோழி தலைவனை இவ்வாறு குறிப்பாற் சுட்டிப் பழிக்கின்றனள். மேலும் தலைவன் எவரிடமும் அன்பு கொண்டிலன் என்பதையும் உணர்த்தினாள்.

சொற்பொருள்

1. தட - பெரிய; மருப்பு - கொம்பு; பிணர் - சொரசொரப்பு; சுவல் - பிடரி.
2. இரிய - அகன்றோட, விலகுமாறு.
3. கயம் - குளம்; துடும் என - ஒலிக்குறிப்பு.
4. நாள்தொழில் - காலைப்பொழுதில் செய்த உழவுத்தொழில்; வீட - நீங்க; சேண்சினை - நீண்ட கிளை.
5. இருள்புனை - இருள் போல அடர்ந்த; மருது - மருத மரம்; வதியும் - தங்கும்.

6. மாண்இழை மகளிர் என்பது பரத்தையரைக் குறிக்கிறது.
7. தழீஇயினும் - தழுவியிருந்தாலும்.
8. புன்மனம் - புன்மை வாய்ந்த மனம்.
9. மகளிரொடு சிறுவர் - புதல்வி புதல்வர்.
10. கற்போடு - இல்லறக் கற்புடன்.
11. எம்பாடு - எம் போன்ற, எமக்கு இணையானவர்.

தோழி கூற்று

நற்றிணை 230 **ஆலங்குடி வங்கனார்**

திணை : மருதம்

கூற்று

தோழி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தை இல்லத்தைவிட்டுத் தன் வீடு திரும்பிய தலைவன் தலைவியின் சினத்தைப் போக்கிச் சமாதானப்படுத்தத் தோழியை வேண்டினான். அவ்வாறு நடக்க மறுத்துத் தோழி கூறியது.

வயப்பிடிச் செவியின் அன்ன பாசடை,
கயக்கணக் கொக்கின் கூம்புமுகை அன்ன,
கணைக்கால் ஆம்பல் அமிழ்துநாறு தண்போது,
குணக்குத்தோன்று வெள்ளியின் இருள்கெட விரியும்
கயல்கணம் கலித்த பொய்கை ஊர!
முனிவுஇல் பரத்தையை என்துறந்து அருளாய்;
நனிபுலம்பு அலைத்த எல்லை நீங்க,
புதுவறம் கூர்ந்த செறுவில் தண்ணென,
மலிபுனல் பரத்தந் தாஅங்கு,
இனிதே தெய்ய,நிற் காணுங் காலே.

தெளிவுரை

இளம் பெண்யானையின் செவியைப் போன்று விளங்கும் பசுமையான இலைகளையும், குளத்தினுள் கூட்டமாய் நிற்கும்

கொக்கினைப் போன்று குவிந்த மலர் மொட்டுகளையும், திரட்சியான கால்களையும் கொண்டிருக்கிறது, நீராம்பல்; இனிய மணம் கமழும் குளிர்ச்சி பொருந்திய அவ்வாம்பல் மலர், கீழ்த்திசையில் தோன்றுகின்ற வெள்ளி மீனைப் போல இருள் நீங்க மலர்ந்திருக்கும். இத்தகைய ஆம்பல் மலர்களும் கயல்மீன்களின் கூட்டமும் பெருகியிருக்கும் பொய்கைகளை யுடைய ஊரனே! என்னை வேண்டி நிற்பதைக் கைவிட்டு, உன்னிடம் சினம் ஏதும் இல்லாதிருப்பவளாகிய பரத்தையிடம் சென்றுஅவளுக்கு அருள் செய்! தனிமை ஒரு காலத்தில் எம்மை மிகவும் வருத்தியது. வற்றிக் காய்ந்து வெடிப்பு ஏற்பட்டுள்ள வயற்பகுதிகளில் குளிர்ச்சி மிகுந்த புதுப்புனல் பாய்ந்து பரவியதைப் போல, உன்னைப் பார்க்கும் அந்தக் காட்சியே எமக்கு இன்பத்தைத் தருவதாயிருக்கிறது. எமக்கு அதுவே போதும்.

கருத்து

'தலைவ! நீ இங்கு வரவேண்டும் என்பதையே மறந்திருந்தாய். இப்போது வந்துள்ளாய்! உன்னைக் கண்டதே எமக்கு இன்பமாயிற்று. எமக்கு அதுபோதும். நீ திரும்பிச் செல்லலாம்.'

விளக்கம்

"வைகறைப்போதில் கிழக்கே வானத்தில் தோன்றி ஒளிரும் வெள்ளி மீன்கள் போல, ஆம்பல் மொட்டுகள் மலர்ந்திருக்கும் ஊரினைக் கொண்டவன் நீ. உன் பரத்தை எம்மைப்போல் உன்னைச் சினங்கொண்டு மறுப்பவள் அல்லள். நீ அவளிடமே சென்று அவளுக்கு அருள் செய். வற்றிக் காய்ந்து வெடிப்புற்ற வயற்பகுதியில் நீர் பெருகிப் பரந்தால் எத்துணைக் குளிர்ச்சியும் இனிமையும் ஏற்படுமோ, அத்துணைப் பேரின்பம் உன்னைக் காணப்பெறுவதால் எமக்கு ஏற்படும். ஆதலால், நீ உன் பரத்தையிடமே சென்று மகிழ்ந்திரு" எனத் தோழி தலைவனிடம் சினங்கொண்டு கூறினாள்.

இறைச்சி

ஆம்பல் மலர் விடிவெள்ளிபோல மலரும். எனினும், அது வெள்ளி மீனாகாது. அதுபோல, தலைவன் பரத்தைக்குச் சிறப்புச்

செய்யினும், அவள் தலைவனுக்கு மகவு ஈன்று, குடிக்கு ஒளி யூட்டும் உறவினளாய் ஆக மாட்டாள் எனப் பொருட்புறத்தே இறைச்சி தோன்றிற்று. அஃதாவது தலைவன் என்ன செய்யினும் பரத்தை தலைவியாகும் தகுதியினைப் பெறமாட்டாள்.

சொற்பொருள்

1. வயப்பிடி - இளம் பெண்யானை; பாசடை - பசிய இலை.
2. கயம் - குளம்; கணம் - கூட்டம்; முகை - மலர் மொட்டு.
3. கணை - திரட்சி; போது - மலர்.
4. குணக்கு - கிழக்கு; வெள்ளி - வெள்ளி மீன்; விரியும் - மலரும்.
5. கயல் - கயல் மீன்கள்; கலித்த - பெருகியுள்ள.
6. முனிவு - சினம்; என்துறந்து -என்னை விட்டு நீங்கி.
7. புலம்பு - தனிமை; நனிஅலைத்த - மிகவும் வருத்திய; எல்லை - பொழுது.
8. புதுவறம் - புதிதாய் உண்டான வறட்சி; செறு - வயல்.
9. மலிபுனல் - நிறைந்த புதுப்புனல்; பரத்தந்தாஅங்கு - பாய்ந்து பரவியது போல (பரத்தல் - பரவுதல்).
10. காணுங்கால் - காணும்பொழுது.

தோழி கூற்று

நற்றிணை 260 **எயினந்தை மகனார் இளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

தோழி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையை விட்டுப் பிரிந்துவந்த தலைவன் தலைவி கொண்டிருந்த ஊடலைத் தணிக்குமாறு தோழியை வேண்ட, அவள் தலைவன் செயலைக் கண்டித்து, வாயில் மறுத்துக் கூறியது.

குரும்பை மணிப்பூண் பெருஞ்செங் கிண்கிணிப்
பால்ஆர் துவர்வாய்ப் பைம்பூண் புதல்வன்,
மாலைக் கட்கின், மார்புஊர்பு இழிய,
அவ்எயிறு ஒழுகிய அவ்வாய் மாண்நகைச்

செயிர்தீர் கொள்கைநம் உயிர்வெங் காதலி
திருமுகத்து அலமரும் கண்இனைந்து அல்கலும்,
பெருமர வள்ளியின் பிணிக்கும் என்னார்,
சிறுபல் குன்றம் இறப்போர்;
அறிவார் யார்அவர் முன்னி யவ்வே?

தெளிவுரை

"பெரும! குரும்பை போன்ற மணிகளைக் கோத்த அணிகலன் களையும், பெரிய செவ்விய கிண்கிணியையும், பாலருந்துகின்ற சிவந்த வாயினையும், பசுமையான அணிகலன்களையும் கொண் டவன், நம் புதல்வன். அவன், கண்ணுக்கினிய மாலையணிந்த உன் மார்பில் ஏறியும் இறங்கியும் விளையாடுவான். அதனைக் கண்டு மகிழ்ந்த தலைவி, தன் அழகிய பற்கள் வெளிப்படப் புன்னகையைத் தோற்றுவிப்பாள். அவள் குற்றமற்ற கொள்கை களைக் கொண்டவள்; உயிர் போன்று விளங்குபவள். அழகிய அவள் திருமுகத்தில் சுழலும் கண்கள் துன்பமடைந்து, வள்ளிக் கொடியினால் பிணித்துக் கட்டியதுபோல நம்மைக் கட்டிப் போடும் என்றும் கருதாது, நீ முன்பொரு சமயம் தலைவியைப் பிரிந்து, குன்றுகளைக் கடந்து பொருளீட்டச் சென்றவனன்றோ? அங்ஙனம் செல்லும் தன்மையினைக் கொண்ட உன் உள்ளத்தில் நீ நினைந்திருப்பதை அறியவல்லார் யார்?" என்று தோழி, தலைவனிடம் கூறி, வாயில் மறுத்தாள்.

கருத்து

"தலைவ! உன் கருத்தை முன்கூட்டியே அறிந்துகொள்ள எம்மால் இயலாது. உன்னை ஒருபோதும் நம்புதற்கில்லை" என்று கூறித் தோழி வாயில் மறுக்கிறாள்.

விளக்கம்

இன்று தலைவியை நாடிப் பரத்தையைப் பிரிந்து வந்துள்ளவன் நாளையே பிரிந்து செல்லவும் துணிவான். அவனுக்கு அஃது அரிய செயல் அன்று. எளிதே! முன்பு தலைவி வருந்தப் பாலை நிலம் வழியாகச் சென்றனன் அல்லனோ? அவ்வாறு பிரியக் கருதியிருந்ததை அப்போது முன்கூட்டியே அறிய இயலவில்லை. இன்றும் அவன் கருதியிருப்பதை அறிய இயலாது.

சொற்பொருள்

1. குரும்பை - பனை, தென்னை முதலியவற்றின் இளங்காய்; பூண் - அணிகலன்; கிண்கிணி - காலில் அணியும் சதங்கை போன்ற ஓர் அணிகலன்.
2. ஆர் - அருந்தும்; துவர் - சிவந்த; பைம்பூண் - பசுமையான அணிகலன்.
3. கட்கின் - கண்ணுக்கு இனிமையான; ஊர்பு - தவழ்ந்தும்; இழிய - இறங்கியும்.
4. அவ்எயிறு - அழகிய பற்கள்; ஒழுகிய - நிரல்பட அமைந்த; மாண்நகை - பெருமைமிக்க புன்முறுவல்.
5. செயிர் - குற்றம்; தீர் - நீங்கிய; வெம் - விருப்பம் மிக்க.
6. அலமரும் - கலங்கும்; இனைந்து - வருந்தும்; அல்கலும் - நாள்தோறும்.
7. வள்ளி - வள்ளிக்கொடி; பிணிக்கும் - கட்டிப் போடும்; என்னார் - என்று கருதாது.
8. இறப்போர் - கடந்து செல்பவர்.
9. முன்னியவ்வே - கருதியிருப்பவை (முன்னுதல் - கருதுதல்).

தோழி கூற்று

ஐங்குறுநூறு 159 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

மராமற்பொருட்டு உண்டிக்காலத்து வாயில் வேண்டி வந்த தலைமகற்குத் தோழி கூறியது. (உண்டிக்காலம் - உணவு உண்ணும் நேரம்.)

கூற்று விளக்கம்

பரத்தை வீடு சென்றிருந்த தலைவன், உணவு நேரத்திற்கு வீடு சென்றால் தலைவி ஏற்க மறுக்க மாட்டாள் என்று கருதி, உணவு நேரத்தில் வீட்டிற்கு வந்தான். அப்படி வந்தவனைக் கண்டு தோழி சொல்லியது.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
பசிதின, அல்கும் பனிநீர்ச் சேர்ப்ப!
நின்ஒன்று இரக்குவென் அல்லேன்;
தந்தனை சென்மோ கொண்டஇவள் நலனே?

தெளிவுரை

வெள்ளைக் கொக்கின் குஞ்சினைத் தனது என்று கருதிக் காணச் சென்ற இளநடை நாரை, பசியால் வருந்தி அங்கேயே தங்கும் குளிர்ச்சி பொருந்திய கடல் நிலத்திற்குத் தலைவனே! இப்போது, உன்னிடம் உனக்கே உரிய எதையும் தருக என்று நான் இரக்கவில்லை. ஆனால், நீ எடுத்துச் சென்றுள்ளாயே என் தலைவியின் அழகு, அதைத் தந்துவிட்டுச் செல்.

கருத்து

'உன் கொடுமையால் என் தலைவி நலன் இழந்துள்ளாள்.'

விளக்கம்

தலைவன் பரத்தை வீடு சென்று தங்கியமையால் தலைவி ஊடல் கொண்டிருந்தாள். அவள் ஊடலைத் தீர்ப்பதற்குத் தலைவன் மற்ற பொழுதைவிட, உணவுண்ணும் நேரமே சிறந்தது என்று கருதித் தன் இல்லம் வந்தான். அவன் உணவுண்ண அங்கு வரவில்லை; தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ள அதுவே தக்க நேரம் என்னும் தந்திர உணர்வுடன் வந்துள்ளான் என்பதை உணர்ந்த தோழி, "உன் பசிக்குப் பரத்தை வீட்டிலேயே சோறிடுவார்கள்; அங்கேயே போய்விடு. ஆனால், போவதற்கு முன் உன் பிரிவால் நீ சிதைத்துள்ள தலைவியின் அழகைக் கொடுத்துவிட்டுப் போ" என்றாள்.

குறிப்பு

குருகினைக் காணச் சென்ற நாரை பசி வருத்த அங்கேயே தங்கும் என்னும் தோழியின் கூற்றில், 'பரத்தையரை வசப்படுத்தும் கருமத்தைக் கண்ணாய்க் கொண்டுள்ள நீ பசியை ஒரு பொருளென மதியாமல் அவரிடமே தங்கியிருக்கும் இயல்பினைக் கொண்டவன் என்பதை நாங்கள் அறிவோம்' எனும் பொருள் புதைந்திருக்கிறது.

சொற்பொருள்

2. மடநடை - மெல்லிய நடை.
3. பசிதின - பசி வருத்த; அல்கும் - அங்கேயே தங்கிவிடும்; பனிநீர்ச் சேர்ப்ப - குளிர்ச்சி பொருந்திய கடல் நிலத்திற்குத் தலைவனே.
4. நின்ஒன்று - உன்னிடம் உள்ள எந்த ஒரு பொருளையும்; இரக்குவென் அல்லேன் - இரந்து (கெஞ்சிக்) கேட்கவில்லை.
5. தந்தனை - திரும்பத் தந்துவிட்டு; சென்மோ - செல்க; கொண்ட - நீ எடுத்துச் சென்ற; இவள் நலன் - இவள் (தலைவியின்) அழகு.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 51 — **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் பெற்றுப் புகுந்துபோய்ப் புறத்தொழுக்கம் ஒழுகிப் பின்பும் வாயில் வேண்டும் தலைமகற்குத் தோழி மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீடு சென்ற தலைவன் தலைவியின் இசைவு பெற்று வீடு திரும்பினான். பிறகு, அங்கிருந்து நீங்கிப் பரத்தையோடு தங்கினான். மீண்டும் திரும்பி வந்து, தன் மனையில் நுழைய இசைவு வேண்டிய பொழுது தோழி தலைவனுக்கு வாயில் மறுத்தது.

நீர்உறை கோழி நீலச் சேவல்
கூர்உகிர்ப் பேடை வயாஅம் ஊர!
புளிங்காய் வேட்கைத்து அன்று,நின்
மலர்ந்த மார்புஇவள் வயாஅ நோய்க்கே.

தெளிவுரை

நீரிலே வாழும் நீலநிறச் சேவலை, கூரிய நகங்களைக் கொண்ட அதன் கருவுற்ற பேடை வேட்கை மிகுதியாலே நினைத்திருக்கும் காட்சியைக் கொண்ட ஊருக்குத் தலைவனே! இவளது வயாஅ நோய்க்கு, உன் மலர்ந்த மார்பு, புளியங்காயின் வேட்கையை

உண்டாக்கவில்லை; மாறாய் நினைக்கும் போதெல்லாம் வருத்தத்தையே தருகின்றது.

கருத்து

‘உன்னிடம் பெருங்காதல் கொண்டுள்ள இவளுக்கு நீ துன்பத்தையே தந்துள்ளாய்.’

விளக்கம்

பறவையாகிய நீர்க்கோழிப்பேடைகூட தான் வயாஅ உற்றிருக்கும்போது தன் சேவல் அருகிருக்கவேண்டுமென்று கருதுகிறது. ஆனால் நீயோ கருவுற்றிருக்கும் உன் மனைவி அவ்வாறு துயர்ப் படுவதை அறியாத மடமை கொண்டவனாய் அகன்றிருக்கிறாய் என்று, தோழி தலைவனின் பரத்தமையை இடித்துரைக்கிறாள்.

வயாஅவுற்ற மகளிர் புளியங்காயைத் தின்பதற்கு மிக்க துடிப் போடு விளங்குவர்.

உன் மார்பு தலைவிக்குப் புளியங்காயின் வேட்கையை உண்டாக்குவதாய் இல்லாதது மட்டுமன்றி வருத்தம் தருவதாயும் இருக்கிறது எனக் குற்றஞ்சாட்டித் தோழி தலைவனுக்கு வாயில் மறுக்கிறாள்.

சொற்பொருள்

1. உறை - வாழும்.
2. கூர் உகிர் - கூரிய நகம்; வயாஅம் - விரும்பும்.
3. புளிங்காய் - புளியங்காய்; வேட்கை - பெருவிருப்பம்.
4. வயாஅ - கருப்பம்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 84 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையர் மனைக்கண் தங்கிப் புணர்ச்சிக்குறியோடு வாயில் வேண்டி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையொடு கூடி இன்புற்று, அதற்குரிய அடையாளங் களோடு, தன் மனைக்குத் திரும்பி வந்து வாயில் வேண்டியபோது, அவனுக்கு வாயில் மறுத்த தோழி சொல்லியது.

செவியின் கேட்பினும் சொல்இறந்து வெகுள்வோள்,
கண்ணில் காணின், என்ஆ குவள்கொல்
நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும்
தைஇத் தண்கயம் போல,
பலர்படிந்து உண்ணும்நின் பரத்தை மார்பே?

தெளிவுரை

தலைவனே! நறுமண மலர்கள் அணிந்த கூந்தலைக் கொண்ட பெண்கள் பலர், தை மாதத்தில், நீர் நிரம்பித் ததும்பும் குளத்தில் நீராடுவர். அந்தக் குளம்போல ஊர்ப்பரத்தையர் அனைவரும் படிந்து நுகரும் பரத்தமையைக் கொண்டது உன் மார்பு என ஊரார் பேசுவதைக் காதால் கேட்டாலே சொல்லுதற்கரிய சினங் கொள்வாள், உன் தலைவி; இப்போது புணர்குறிகளோடு வந்துள்ள உன்னைக் கண்டால் என்னாகுவளோ?

கருத்து

'உன் மார்பில் காணும் புணர்குறிகளைத் தலைவி கண்டால் எல்லையற்ற சினங்கொள்வாள்.'

விளக்கம்

பிற பெண்டிரோடு நீ தொடர்பு கொண்டுள்ளாய் என்று கேட்டாலே சொல்ல இயலாத சினங்கொள்ளும் தலைவி,

நீ புணர்குறியோடு வந்துள்ள உன்னைக் கண்டால் என் ஆகுவளோ?

குறிப்பு

மகளிர் தமக்கேற்ற கணவனைப் பெறுதற்பொருட்டு, தைத்திங்களின் போது காலையில் குளிர்ச்சி பொருந்திய குளத்தில் நீராடி நோன்பு நோற்பர்.

சொற்பொருள்

1. சொல் இறந்து - சொற்கு அடங்காத; வெகுள்வோள் - சினம் கொள்வோள்.
2. என் ஆகுவள்? - என் ஆகுவளோ?
3. நறுவீ - நறுமண மலர்கள்; ஐம்பால் - ஐந்து வகையாய்ப் பகுத்துப் பின்னப்படும் மகளிர் கூந்தல்; ஆடும் - நீராடும்.
4. தை - தைத்திங்கள்; தண்கயம் - குளிர்ச்சி பொருந்திய குளம்.

தோழி கூற்று

குறுந்தொகை 295 **தூங்கலோரியார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிச் சென்ற கிழவற்குத் தோழி உரைத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர்பொருட்டுப் பிரிந்து, மீண்டும் தலைவியைப் பெறுதற்கு விரும்பிய தலைவன், தன்பொருட்டாய்த் தலைவியிடம் சென்று தூதுரைக்குமாறு தோழியிடம் கேட்டுக்கொண்டான். அதற்கு, ‘நீ தகாத ஒழுக்கமுள்ளவன்’ என்று கூறி அவன் வேண்டுகோளைத் தோழி ஏற்க மறுத்தது.

உடுத்தும், தொடுத்தும், பூண்டும், செரீஇயும்,
தழைஅணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி,
விழவொடு வருதி, நீயே; இஃதோ
ஓர்ஆன் வல்சிச் சீர்இல் வாழ்க்கைப்
பெருநலக் குறுமகள் வந்தென,
இனிவிழவு ஆயிற்று என்னும்இவ் ஊரே.

தெளிவுரை

தலைவ! தழைகளை ஆடையாய் உடுத்தியும், மாலையாய்த் தொடுத்து அணிந்தும், காதணியாய் அணிந்தும், கூந்தலில் செருகியும் பொலிவு பெற்ற பரத்தையர் கூட்டத்தோடு பொருந்தி, நீயும் புதுநீர் விழாவுக்கான பொலிவுகளுடன் வருகிறாய்! ஆனால், இவ்வூரில் உள்ளவரோ, ஒரு பசுவினால் மட்டுமே வரும் ஊதியத்தைக்கொண்டு சிறப்பில்லாத வாழ்க் கையை மேற்கொண்டிருந்த உனக்கு, பேரழகு கொண்ட இளை யோளான தலைவி மனைவியாய் வந்தமைந்த காரணத்தால், இப்போது இவ்வாறு விழாக் கொண்டாடும் வளமையான வாழ்க்கை அமைந்ததெனப் பேசுகின்றனர். இதனை அறிக!

கருத்து

'தான் புகுந்த வீடாகிய உன் வீட்டின் பெருநலம் பெருகுவதற்குக் காரணமாயிருந்த தலைவியை நீ மறந்துவிட்டாய்.'

விளக்கம்

தலைவியை மணந்துகொள்வதற்கு முன் நீ வறுமையுற்றி ருந்தனை; தலைவியை மணம் முடித்த பின் மிகுசெல்வம் கொண்டவன் ஆனாய். அங்ஙனமிருந்தும் உன் வாழ்க்கைத் துணையின் சிறப்பைக் கருதாமல் பரத்தையரோடு கூடி, நீர் விளையாடி மகிழ்ந்திருக்கிறாய், நீ.

ஒருநாள் தலைவன் தன் இல்லத்திற்கு வந்து, மனைவி தன்னோடு கொண்டுள்ள ஊடலைத் தீர்த்துத் தன்னைத் தலைவியுடன் சேர்த்து வைக்குமாறு தோழியிடம் வேண்ட, அத்தோழி, நன்றி மறந்தவன் என அவனைக் கடிந்துரைத்து நீக்குகிறாள்.

குறிப்பு

"தலைவியால் உனக்குச் செல்வம் வந்து சேர்ந்தது; அதனை எண்ணிப் பாராமல் அவளை நீ ஒதுக்கினாய்" எனத் தோழி இடித்துரைக்கிறாள்.

சொற்பொருள்

1. செரீஇயும் - செருகியும்.

2. பொலிந்த - பொலிவு பெற்ற; ஆயமொடு - பரத்தையர் கூட்டத்தோடு: துவன்றி - நெருங்கி.
3. விழவொடு வருதி - நீர்விழாவுக்கான அடையாளங்களோடு வருகிறாய்.
4. ஆன் - பசு; வல்சி - உணவு; சீர் இல் - செல்வச்சிறப்பில்லாத; வாழ்க்கை - உன் வாழ்க்கை.
5. பெருநலம் - மிக்க அழகு; குறுமகள் - இளைய மகள், தலைவி.
6. இனி - இப்பொழுது; விழவுஆயிற்று - விழாக் கொண்டாடும் வளமான வாழ்க்கை உண்டாயிற்று.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 98 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

புறத்தொழுக்கம் உளதாகிய துணையானே புலந்து, வாயில் நேராத் தலைமகள் கொடுமை, தலைமகன் கூறக் கேட்ட தோழி அவற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனுக்குப் பரத்தையரோடு தொடர்பு உண்டு என்று அறிந்த அளவிலேயே சினமுற்றுத் தலைவனை வீட்டினுள் நுழைய விடாது தடுத்தாள், தலைவி. கடுமையான அவளது போக்கினைத் தலைவன் கூறக் கேட்ட தோழி, அவனை இடித்துத் திருத்தும் உரிமை கொண்டவள் தலைவி என்பதுபடச் சொல்லியது.

தண்புனல் ஆடும் தடங்கோட்டு எருமை
திண்பிணி அம்பியின் தோன்றும் ஊர!
ஒண்தொடி மடமகள் இவளினும்
நுந்தையும் ஞாயுங் கடியரோ, நின்னே?

தெளிவுரை

குளிர்ச்சி பொருந்திய நீரிலே ஆடுகின்ற பெரிய கொம்புகளைக் கொண்ட எருமை, உறுதியாய்க் கட்டப்பெற்ற

படகுபோல் தோற்றமளிப்பதற்கு இடனாய் விளங்கும் ஊருக்குத் தலைவனே! ஒளி உமிழும் தொடியினை அணிந்த இளைய மகளாகிய இவளைக் காட்டிலும், உன் தாயும் தந்தையும் உன்னிடம் கடுமையாய் இருக்கும் உரிமை பெற்றவரோ? (அன்று.)

கருத்து

'தலைவ! உன் தாய் தந்தையரைவிட உன்னைக் கண்டித்துத் திருத்தும் உரிமை பெற்றவள் உன் மனைவியே!'

குறிப்பு

எருமை, படகுபோலத் தோன்றும் என்பதிலிருந்து, பலரும் ஏறிப் பயணம் செய்யும் படகுபோல் தலைவன் பல மகளிர்க்கும் உரியவ னாயினான் என்னும் குறிப்புப் பொருள் பெறப்படுகிறது.

உன் தந்தை தாயினும் தலைவி உன்னைக் கண்டிக்கும் உரிமை பெற்றவள். ஆகையால், அவள் கண்டித்தாள்; எனவே, அவள் கடுமையான கண்டிப்பைக் கொடுமை என்று கூறக் கூடாது என்று தோழி தலைவனிடம் மறுப்புரைத்தாள்.

சொற்பொருள்

1. ஆடும் - நீராடும்; தடங்கோட்டு - வளைந்த கொம்பினைக் கொண்ட.
2. திண்பிணி - உறுதியாய்க் கட்டப்பட்ட; அம்பி - படகு.
3. ஒண்தொடி - ஒள்ளிய வளையணிந்த; மடமகள் - இளைய மகள்; இவளினும் - இத் தலைவியினும்.
4. நின்னே - உன்னை; நுந்தையும் ஞாயும் - உன் தந்தையும் தாயும்; கடியரோ - கடுமையாய் இருக்கும் உரிமை பெற்றவரோ?

தோழி கூற்று

அகநானூறு 296 **மதுரைப் பேராலவாயர்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிச் சென்ற தலைமகற்கு வாயில் மறுக்குந் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வையைப் புதுப் புனலில் பரத்தையொடு நீராடிக் களித்தான் எனக் கேட்டுத் தலைவி ஊடல் கொண்டாள். வீட்டிற்குத் திரும்பிய தலைவன், தலைவியின் ஊடலைத் தீர்த்து வைக்குமாறு தோழியை வேண்ட, தோழி அதனை மறுத்துக் கூறியது.

கோதை இணர, குறுங்கால், காஞ்சிப்
போதுஅவிழ் நறுந்தாது அணிந்த கூந்தல்,
அரிமதர் மழைக்கண், மாஅ யோளொடு
நெருநையும் கமழ்பொழில் துஞ்சி, இன்றும்,
பெருநீர் வையை அவளொடு ஆடி,
புலரா மார்பினை வந்துநின்று, எம்வயின்
கரத்தல் கூடுமோ மற்றே? பரப்பில்
பல்மீன் கொள்பவர் முகந்த இப்பி
நார்அரி நறவின் மகிழ்நொடைக் கூட்டும்
போர்இசைக் கொற்கைப் பொருநன், வென்வேல்
கடும்பகட்டு யானை நெடுந்தேர்ச் செழியன்,
மலைபுரை நெடுநகர்க் கூடல் நீடிய
மலிதரு கம்பலை போல,
அலர்ஆ கின்று,அது பலர்வாய்ப் பட்டே.

தெளிவுரை

"*மாலை போன்ற பூங்கொத்துகளைக் கொண்ட காஞ்சி மரத்தின் மகரந்தப்பொடியை அணிந்த கூந்தலையும், செவ்வரி படர்ந்த, மதர்த்த, குளிர்ச்சி பொருந்திய கண்களையும் கொண்ட பரத்தையுடன், நீ நேற்று மணங்கமழும் சோலையில் விளையாடினாய். இன்றோ, அவளுடன் வையை நீர்ப்பெருக்கில்*

விளையாடி ஈரம் புலராத மார்புடன் எம்முன் வந்து நிற்கிறாய். நீ இதனை மறைக்க இயலுமா?

"கடற்பரப்பில் பல வகையான மீன்களைப் பிடிக்கப் பரதவர்கள் வீசிய வலையில் மீன்களுடன் முத்துச்சிப்பிகளும் கிடைக்கும். பன்னாடையால் வடிக்கப் பெற்ற கள்ளுக்கு விலையாய் அச்சிப்பிகளை அவர்கள் கொடுப்பார்கள். அத்தகைய காட்சியினைக் கொண்டது, கொற்கைத் துறைமுகம். இத்துறைமுகத்துக்குத் தலைவனாகிய பாண்டியன் நெடுஞ் செழியன் வெற்றி வேலினையும், கடுமையான பெரிய யானை களையும், நெடிய தேரினையும் உடையவன்; மலையைப் போன்ற நீண்ட அவனுடைய அரண்மனையினைக் கொண்ட மதுரையில், வெற்றிக்களிப்பால் வீரர்கள் செய்த பெரும் ஆரவாரத்தைப் போல, நீ பரத்தையோடு நீராடியது பலர் அறியுமாறு பெரிய அலராயிற்று. (இத்தகைய நிலையினை ஏற்படுத்திய நீ வீட்டினுள் நுழையாதே)" என்று தோழி கூறித் தலைவனுக்கு வாயில் மறுக் கிறாள்.

கருத்து

'தலைவ! பரத்தையுடன் புனலாடிய ஈரம் உலருமுன் இங்கு வந்து நிற்கிறாய்' என வாயில் மறுக்கும் தோழி கூறுகிறாள்.

விளக்கம்

பரத்தையிடமிருந்து பிரிந்து வந்த தலைவன் தன்னோடு தலைவி கொண்ட ஊடலை நீக்கிடத் தோழியின் துணையை நாடுகிறான். தோழி அவனிடம், 'நீ நேற்றுப் பரத்தையுடன் சோலையில் விளையாடினாய்; இன்று வையைப் பெருநீரில் நீராடி, அவள் பூசிய சந்தனம் உலராத மார்புடன் இங்கே வந்து நிற்கின்றாய். உன் புறத்தொழுக்கத்தை மறைக்க முயல்கிறாய். அதனை யாம் அறிவோம்' என்று கூறி வாயில் மறுக்கிறாள்.

சொற்பொருள்

1. கோதை - மாலை; இணர - பூங்கொத்து; கால் - அடிமரம்; காஞ்சி - காஞ்சி மரம்.
2. போது - மலர்; அவிழ் - சொரிந்த.

3. மாஅயோள் - மாமை நிறம் கொண்ட பரத்தை.
4. நெருநையும் - நேற்றும்; கமழ் - மணம் கமழ்கின்ற; துஞ்சி - துயின்று.
5. பெருநீர் - மிகுந்த நீர்.
6. புலரா - ஈரம் உலராத; எம்வயின் - எம்மிடம்.
7. கரத்தல் - மறைத்தல்; பரப்பில் - கடல்நீர்ப்பரப்பில்.
8. இப்பி - முத்துச்சிப்பி.
9. நார்அரி - பன்னாடையால் வடிகட்டப்பெற்ற; நறவு - கள்; நொடைக் கூட்டும் - விலையாய்க் கொடுக்கும்.
10. கொற்கை - கொற்கைத் துறைமுகம்; பொருநன் - தலைவன்.
11. கடும் பகடு - பெரிய வலிமை; செழியன் - பாண்டிய மன்னன்.
12. கூடல் - மதுரை நகரம்; நீடிய - நீண்ட.
13. மலிதரு - நிறைந்த; கம்பலை - ஆரவாரம்.
14. பலர் வாய்ப்பட்டு - பலராலும் கூறப்பட்டு.

தோழி கூற்று

அகநானூறு 256 **மதுரைத் தமிழ்க்கூத்தனார் கடுவன் மள்ளனார்**

திணை : மருதம்

கூற்று

தோழி, தலைமகற்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையுடன் புனலாடினான் எனக் கேட்ட தலைவி ஊடலுற்றாள். அவ்வூடலைத் தீர்த்துத் தன்னைத் தலைவியோடு கூட்டுவிக்குமாறு தோழியைத் தலைவன் வேண்ட, தோழி மறுத்து அவனிடம் கூறியது.

பிணங்குஅரில் வள்ளை நீடுஇலைப் பொதும்பில்
மடிதுயில் முனைஇய வள்உகிர் யாமை
நொடிவிடு கல்லின் போகி, அகன்துறைப்
பகுவாய் நிறைய, நுங்கின் கள்ளின்
உகுவார் அருந்து மகிழ்புஇயங்கு நடையொடு
தீம்பெரும் பழனம் உழக்கி, அயலது
ஆம்பல் மெல்அடை ஒடுங்கும் ஊர!

பொய்யால்; அறிவென்,நின் மாயம் அதுவே.
கையகப் பட்டமை அறியாய்; நெருநை
மைஎழில் உண்கண் மடந்தையொடு வையை
ஏர்தரு புதுப்புனல் உரிதினின் நுகர்ந்து,
பரத்தை ஆயம் கரப்பவும், ஒல்லாது
கவ்வை ஆகின்றால், பெரிதே காண்தகத்
தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனி,
கரும்புஅமல் படப்பை, பெரும்பெயர்க் கள்ளூர்,
திருநுதற் குறுமகள் அணிநலம் வவ்விய
அறனி லாளன், 'அறியேன்' என்ற
திறன்இல் வெஞ்சூள் அறிகரி கடாஅய்,
முறிஆர் பெருங்கிளை செறியப் பற்றி,
நீறு தலைப்பெய்த ஞான்றை,
வீறுசால் அவையத்து ஆர்ப்பினும் பெரிதே.

தெளிவுரை

வலிய நகம் கொண்ட ஆமை, வள்ளைக்கொடிகள் பின்னிக் கிடக்கும் தூரிலே, நீண்ட இலைச்செறிவுள்ள இடத்தில் தூங்கிக் கிடப்பதை வெறுத்தது. ஒலி செய்யும் கூழாங்கற்களின் வழியே ஊர்ந்து சென்றது; அகன்ற நீர்த்துறையின் கரையில் கள் பருகிக் கொண்டிருந்தவர்கள் சிந்திய துளிகளைப் பிளந்த வாய் நிறைந்திட உண்டது. பின்னர், மயக்கத்தோடு தள்ளாடி நகர்ந்து சென்று, இனிய பெரிய வயல்களைக் கலக்கியது; முடிவில், அருகில் இருந்த ஆம்பலின் மெல்லிய இலைக்குள்ளே சென்று ஒடுங்கிக் கிடந்தது. அத்தகைய நீர்வளம் மிக்க ஊரினை உடையவனே!

நீ பொய் கூறாதே! உன் வஞ்சனையை நாங்கள் அறிவோம். உன் பரத்தமை வெளிப்பட்டதை நீ அறியாய். மையுண்ட அழகிய கண்களைக் கொண்ட பரத்தையுடன் நீ நேற்று, வையையின் அழகு பொருந்திய புதுப்புனலில் ஆடி மகிழ்ந்தாய். பரத்தைக்குத் தோழியர் அதனை ஊரார் அறியாமல் மறைக்க முயன்றும் இயலாததாயிற்று. அலர் பெரிதாய் ஊரில் பரவியது.

கள்ளூர் என்னும் ஊர் மிகவும் சிறப்பு வாய்ந்தது. புகழ் மிக்க அவ்வூர், பலவகையான பூக்கள் நிறைந்த வயல்களையும்,

மிகுதியான கரும்புத்தோட்டங்களையும் கொண்டது. அவ்வூரில் அறநெறி இல்லாத ஒருவன், அழகிய நெற்றியைக் கொண்ட இளையாள் ஒருத்தியின் பெண்மை நலத்தை நுகர்ந்து, பின்பு தான் அவளை அறியேன் என்று சத்தியம் செய்தான். ஊர் அவையத்தார், சாட்சிகளை விசாரித்து, அவன் கூறியது பொய் யென்று அறிந்தனர். அவனைத் தளிர்கள் பொருந்திய பெரிய மரக்கிளையில் இறுகக் கட்டிவைத்து, அவன் தலையில் சுண்ணாம்பைக் கொட்டினர். அந்த வேளையில் அவையிலிருந் தோர் செய்த ஆரவாரத்தைவிட, உன்னைப்பற்றி இவ்வூரில் எழுந்துள்ள பழிச்சொல்லினது ஆரவாரம் மிகுதியாய் உள்ளது.

கருத்து

'நீ வையைப் புனலில் பரத்தையுடன் புனலாடியதை ஊரே பழிக்கிறது.'

விளக்கம்

'தலைவனே! நேற்று நீ வையைப்புனலில் ஆடியதை நாங்கள் அறிவோம். பரத்தையர் அதனை மறைக்க முயன்றும் இயலாமல் ஊரெல்லாம் உன்னைப்பற்றிய பழிச்சொல்லினது ஆரவாரம் எழுந்துள்ளது. கள்ளூர் என்னும் ஊரில் இளம்பெண் ஒருத்தியின் கற்புநலத்தைக் கெடுத்தவன், 'அவளை அறியேன்' என்று சத்தியம் செய்ய, ஊரவை விசாரித்து, அவன் சொன்னது பொய் என்பதை அறிந்து, அவனை மரத்தில் கட்டிவைத்துத் தலையில் சுண்ணாம்பைக் கொட்டியபோது அவையினர் செய்த ஆரவாரத்தைவிட, உன்னைப்பற்றிய பழிச்சொல்லால் எழுந்த ஆரவாரம் மிகுதியாய் உள்ளது' என்று சொல்லித் தோழி தலைவனை இல்லத்துள்ளே நுழையக்கூடாது என்றாள்.

உள்ளுறை

வள்ளை இலைக்கு அடியில் தூங்குவதை வெறுத்த யாமை, நகர்ந்து சென்று, உதிர்ந்த கள்ளின் துளிகளை உண்டது; மகிழ்ந்த நடையோடு சென்று வயலைக் கலக்கியது; பின்னர், அயலே யிருந்த ஆம்பல் இலைக்குக் கீழ் உறங்கிற்று. இதன்மூலம் தலைவன் தன் மனையில் துயில்வதை வெறுத்துச் சென்று பரத்தையர் சேரியில் இன்பம் நுகர்ந்தான்; அதனால் தலைவியின் உள்ளத்தைக் கலக்கமடையச்செய்து, இற்பரத்தையிடம் சென்று தங்கினான் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

குறிப்பு

அக்காலச் சிற்றூர்களில் நீதிமன்றங்களாய் அவையங்கள் இருந்தன. அவை 'அறங்கூறவையம்' என்று வழங்கப்பட்டன. அவ்வவையத்தார் சாட்சிகளை விசாரித்துக் குற்றங்களுக்கேற்ற தண்டனை வழங்கினர்.

பெண் ஒருத்தியின் நலமுண்டவன் அவளைக் கைவிட்டதால், அவனை மரத்தில் கட்டிவைத்து, அவன் தலையில் சுண்ணாம்பைக் கொட்டினர் என்று அறிகிறோம்.

சொற்பொருள்

1. பிணங்கு - பின்னிக் கிடக்கும்; அரில் - தூறு; பொதும்பு - இலைச் செறிவு.
2. மடி - சோம்பல்; முனைதல் - வெறுத்தல்; வள் - கூரிய; உகிர் - நகம்; யாமை - ஆமை.
3. நொடி விடு - ஒலி செய்யும்; கல் - கூழாங்கற்கள்.
4. பகுவாய் - பிளவுபட்ட வாய்; நுங்கின் கள் - பனங்கள்.
5. உகுவார் - (அருந்துவார்) சிந்திய துளிகள்; மகிழ்பு - களிப்புடன், மயக்கத்துடன்.
6. உழக்கி - கலக்கி.
7. மெல் அடை - மெல்லிய இலை; ஒடுங்கும் - ஒடுங்கிக் கிடக்கும்.
8. பொய்யால் - பொய் சொல்லாதே; மாயம் - வஞ்சனை.
9. கையகப்பட்டமை - வெளிப்பட்டமை; நெருநை - நேற்று.
10. மடந்தை - பெண் (பரத்தை).
11. ஏர்தரு - அழகு பொருந்திய; உரிதினின் - உரிமையுடன்.
12. கரப்பவும் - மறைக்கவும்; ஒல்லாது - இயலாமல்.
13. கவ்வை - அலர்; காண்தக - அழகு விளங்க.
14. தொல்புகழ் - பழமையான புகழ்.
15. அமல் - நிறைந்த; கள்ளூர் - ஓர் ஊர்.
16. அணிநலம் - அழகிய நலம்; வவ்விய - கவர்ந்துண்ட.
17. அறனிலாளன் - அறநெறி நில்லாதவன்.
18. வெஞ்சூள் - நீதியில்லாத கொடிய சூளினை; திறன்இல் - நீதியில்லாத; அறிகரி - அறிந்த சாட்சியங்களை; கடாஅய் - வினவி.
19. முறிஆர் - தளிர்கள் பொருந்திய; செறிய - இறுக; பற்றி - கட்டி.
20. நீறு - சுண்ணாம்பு; ஞான்றை - பொழுது.
21. வீறுசால் - சிறப்பு மிக்க.

தோழி கூற்று

அகநானூறு 116 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

தோழி, தலைமகனை வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையுடன் தலைவன் நீராடினான். அதனை அறிந்த தலைவி ஊடல் கொள்ள, அவ்வூடலை நீக்கித் தலைவியைத் தன்னுடன் சேர்த்து வைக்குமாறு தோழியைத் தலைவன் வேண்டினான். தோழி அதனை மறுத்துக் கூறியது.

எரிஅகைந் தன்ன தாமரை இடைஇடை
அரிந்துகால் குவித்த செந்நெல் வினைஞர்
கள்கொண்டு மறுகும் சாகாடு அளற்றுஉறின்,
ஆய்கரும்பு அடுக்கும் பாய்புனல் ஊர!
பெரிய நாணிலை மன்ற; பொரிஎனப்
புன்குஅவிழ் அகன்துறைப் பொலிய ஒள்நுதல்,
நறுமலர்க் காண்வரும் குறும்பல் கூந்தல்,
மாழை நோக்கின் காழ்இயல் வனமுலை,
எஃகுடை எழில்நலத்து, ஒருத்தியொடு நெருநை
வைகுபுனல் அயர்ந்தனை என்ப; அதுவே,
பொய்புறம் பொதிந்து,யாம் கரப்பவும், கைமிகந்து,
அலர்ஆ கின்றால் தானே; மலர்தார்,
மைஅணி யானை, மறப்போர்ச் செழியன்
பொய்யா விழவின் கூடற் பறந்தலை,
உடன்இயைந்து எழுந்த இருபெரு வேந்தர்
கடல்மருள் பெரும்படை கலங்கத் தாக்கி,
இரங்குஇசை முரசம் ஒழிய பரந்துஅவர்,
ஓடுபுறம் கண்ட ஞான்றை,
ஆடுகொள் வியன்களத்து ஆர்ப்பினும் பெரிதே.

தெளிவுரை

நெருப்பு எரிவது போன்று மலர்ந்துள்ள தாமரை மலர்களை இடையிடையே சேர்த்து, நெல்லை அறுத்து, உழவர் கட்டுக்

கட்டினர். அவர்கள் குடிப்பதற்காகக் கள் கொண்டுவரப்பட்ட வண்டி, சேற்றில் புதைந்ததனால் கரும்புகளை அடுக்கி, உருளைகள் பதியாவண்ணம் அவற்றின்மீது அவ்வண்டிகளை ஓட்டிச் செல்லும் நீர்வளம் மிக்க ஊரினை உடையவனே! நீ உறுதியாகப் பெரிதும் நாணமில்லாதவன்.

ஒளி பொருந்திய நெற்றியினையும், நறிய மலர்கள் சூடப்பட்டுக் காண்பதற்கினிய அடர்ந்த கூந்தலையும், மாவடு போன்ற கண் களையும், முத்துவடம் அசையும் அழகிய முலையினையும், மிக்க அழகினையும் கொண்டவளுமாகிய பரத்தை ஒருத்தியோடு நாணமின்றி, நேற்று, இடைவிடாது ஓடும் நீரில் நீ விளை யாடினாய் என்று பலரும் கூறுவர். நாங்கள் அதனைப் பொய் யென்று மறைத்து வைக்கவும், எங்களையும் மீறி அலராய்ப் பரவிவிட்டது.

மலர்ந்த வேப்பம்பூ மாலையினையும், தலையில் மை கொண்டு அழகு செய்யப் பெற்ற யானையையுமுடைய பாண்டியன் மறப்போர் புரிவதில் வல்லவன். அவன் என்றும் நீங்காது விழாக்கள் நடைபெறும் கூடல் மாநகரத்திற்கு அருகில் உள்ள போர்க்களத்தில், தன்னைப் பகைத்தெழுந்த சேரர், சோழர் ஆகிய பெருவேந்தர் இருவரையும் தாக்கி வெற்றி கொண்டான். வேந்தர் அவ்விருவரும் ஒலி சிறந்த தம் முரசுகளைக் களத்திலே போட்டு விட்டுப் புறமுதுகிட்டு ஓடிய போது, வெற்றி கொண்ட வீரர்கள் போர்க்களத்தில் மிகுதியாய் ஆரவாரித்தனர். அவர் களது வெற்றி ஆரவாரத்தைக்காட்டிலும், நீ புனலாடியதால் ஏற்பட்ட பழி ஆரவாரம் மிகுதியாய் இருக்கிறது.

கருத்து

'தலைவ! நீ பரத்தை ஒருத்தியுடன் நீராடியதை ஊரே பழித்துப் பேசுகிறது.'

விளக்கம்

"ஊரனே, நீ மிகவும் நாணமில்லாதவன். நெற்பொரிபோலப் புன்கு மலரும் அழகிய ஆற்றுத்துறையில் நேற்று, நீ அழகிய பரத்தை ஒருத்தியுடன் நீராடியுள்ளாய். அதனால் ஊரில் எழுந் துள்ள பழிச்சொல் ஆரவாரம், பாண்டியன், கூடற்போர்க்

களத்தில் சேர, சோழ வேந்தர்களை எதிர்த்துத் தாக்கி வெற்றி கண்டபோது வெற்றி வீரர்கள் எழுப்பிய ஆரவாரத்தினும் பெரிதாய் இருக்கிறது" என்று கூறித் தலைவனுக்குத் தோழி வாயில் மறுத்தாள்.

உள்ளுறை

நெல்லரியும் உழவர் தம் தொழிலை விடுத்து, சேற்றில் புதைந்த, இழிந்த கள் வண்டியைச் சேற்றிலிருந்து ஏற்றச் சிறந்த கரும்பினைச் சிதைப்பர். இத்தொடர்மூலம், நீ இல்லறம் நடத்துதலாகிய கடமையைக் கைவிட்டு, இழிந்த பரத்தையோடு இன்பம் நுகர்ந்து, சிறந்த தலைவியை வருத்தம் கொள்ளச் செய்கிறாய் என்னும் உள்ளுறைப்பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. அகைந்து அன்ன - கொழுந்துவிட்டு எரிந்தாற்போல.
2. கால் - நெல் தாள்; வினைஞர் - நெல் அரிவோர்.
3. கள்கொண்டு - கள்ளினை ஏற்றிக்கொண்டு; மறுகும் - திரியும்; சாகாடு - வண்டி; அளறு - சேறு.
4. ஆய் கரும்பு - சிறந்த கரும்பினை; அடுக்கும் - அடுக்கி இடைமடுக்கும்.
5. நாணிலை - நாண்+இலை - நாணம் இல்லாதவன்; பொரி - நெல் பொரி.
6. புன்கு - புன்க மரம்; அவிழும் - மலரும்; பொலிய - பொலிவு பெற.
7. காண வரும் - வேய்ந்த, சூடிய.
8. மாழை - மாவடு; காழ் இயல் - முத்துவடம் அசையும்.
9. எஃகுடை - நுண்ணிய; ஒருத்தி - பரத்தை ஒருத்தி; நெருநை - நேற்று.
10. வைகுபுனல் - இடையறாது ஓடும் நீர்; அயர்ந்தனை - விளையாடினாய்.
11. பொய்புறம் பொதிந்து - பொய்யென்று புறத்தே மூடி; கரத்தல் - மறைத்தல்; கைஇகத்தல் - அளவுக்கு மேற்படுதல்.
12. அலர் ஆகின்று - பழிச்சொல் ஆயிற்று.
13. மை அணி - தலையில் மை அணிவிக்கப் பெற்ற; செழியன் - பாண்டியன்.
14. பொய்யா விழவின் - நீங்காத விழாவினைக் கொண்ட; கூடல் பறந்தலை - கூடல் போர்க்களம்.

15. உடன் இயைந்து - ஒன்றாய்ச் சேர்ந்து; இருபெரு வேந்தர் - சோழர், சேரர்.
16. கடல் மருள் - கடல் போன்ற; தாக்கி - போரிட்டு.
17. இரங்கு இசை முரசம் - சிறந்த ஒலியினைக் கொண்ட முரசு; ஒழிய - போர்க்களத்திலே போட்டுவிட்டு.
18. ஓடுபுறம் - தோற்று முதுகு காட்டி ஓடும்; ஞான்றை - பொழுது.
19. ஆடுகொள் - வெற்றி கொண்ட; ஆர்ப்பு - ஆரவாரம்.

தோழி கூற்று

அகநானூறு 246 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

தோழி, தலைமகற்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையுடன் கூடிப் புனல் விளையாடியதையறிந்து தலைவி ஊடல் கொண்டாள். தலைவியின் ஊடலைத் தீர்க்கும்படி தலைவன் தோழியை வேண்ட, அவள், 'தலைவியின் சினம் பெரிது' எனக் கூறி மறுத்தது.

பிணர்மோட்டு நந்தின் பேழ்வாய் ஏற்றை
கதிர்மூக்கு ஆரல் கள்வன் ஆக,
நெடுநீர்ப் பொய்கைத் துணையொடு புணரும்
மலிநீர் அகல்வயல் யாணர் ஊர!
போதுஆர் கூந்தல் நீவெய் யோளொடு
தாதுஆர் காஞ்சித் தண்பொழில் அகல்யாறு
ஆடினை என்ப, நெருநை; அலரே
காய்சின மொய்ம்பின் பெரும்பெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்,
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழ்இசை முரசம் பொருகளத்து ஒழிய,
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய,
மொய்வலி அறுத்த ஞான்றை,
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே.

தெளிவுரை

ஊரனே! உன் ஊர்க் கடற்கரையில் திரியும் சொரசொரப்பான வயிற்றினையும் பிளந்த வாயினையும் கொண்ட ஆண்சங்குப் பூச்சி, நீர் கொண்ட ஆழமான பொய்கையில் பெண்சங்கினைத் தழுவி மகிழும். அதற்குக் கூர்மையான மூக்கினைக் கொண்ட ஆரல்மீன் சாட்சி. இத்தகைய நீர் நிலைகளையும், அகன்ற வயல்களையும், புதுவருவாயினையுமுடைய ஊரனே!

உன்னால் விரும்பப்பட்டவளும் பூக்கள் நிறைந்த கூந்தலைக் கொண்டவளுமான பரத்தை ஒருத்தியுடன் நீ நேற்று, பூந்துகள் நிறைந்த காஞ்சி மலர்ச்சோலை சூழ்ந்த அகன்ற ஆற்றில் நீர் விளையாட்டு விளையாடினாய் எனப் பலரும் கூறுகின்றனர். அதனால் எழுந்த பழிச்சொல் ஊரெல்லாம் பரவியுள்ளது.

மிக்க சினமும் வலிமையும் கொண்ட கரிகாற்பெருவளத்தானை ஆரவாரமிக்க, கள் வளமுள்ள வெண்ணிப்பறந்தலை என்னு மிடத்தில் சேர, சோழர் ஆகிய பெருவேந்தர் இருவரோடு வேளிர் பதினொருவரும் சேர்ந்து எதிர்த்தனர். அவர்கள் ஒலிமிக்க தங்கள் போர்முரசுகளைக் களத்திலேயே போட்டு விட்டு ஓடுமாறு அவர்கள் வலிமையைக் கரிகாலன் அழித்தான். அந்த நாளில் அழுந்தூரில் குறைவின்றி எழுந்த பெரிய ஆரவாரத்தைவிட, தலைவனே, உன் பொருட்டு எழுந்துள்ள பழிச்சொல் ஆரவாரம் மிகுந்ததாயுள்ளது.

கருத்து

'நீ பரத்தையோடு நீராடியதால் ஏற்பட்ட பழிச்சொல், போர்க்கள ஆரவாரத்தினும் மிகுந்ததாய் உள்ளது.'

விளக்கம்

"ஊரனே! நீ நேற்று உனக்கு விருப்பமான பரத்தையுடன் காஞ்சி மலர்ச்சோலை சூழ்ந்த ஆற்றில் நீர் விளையாட்டு விளை யாடினை என்று ஊரார் கூறினர். அதனால் எங்கும் பெரும் அலர் பரவியிருக்கிறது. அப்பழிச்சொல் ஆரவாரம், கரிகாற் பெருவளத்தான் வெண்ணிப்பறந்தலைப்போரில் பெரும் வேந்தர் இருவரோடு வேளிர் பதினொருவரையும் தோற்றோடச்

செய்தபோது, அப்போர்க்களத்தில் எழுந்த ஆரவாரத்தினும் பெரிதாயுள்ளது. இத்தவறிழைத்த உன்னைத் தலைவி ஏற்க மாட்டாள்" என்று கூறித் தோழி வாயில் மறுத்தாள்.

உள்ளுறை

ஆண்சங்குப் பூச்சி ஆரல் மீன் சான்றாக ஆழமான பொய்கையில் வாழும் பெண் சங்கினைத் தழுவி மகிழும். இத் தொடர்மூலம், அலர் கூறுவார் அறியும்படி தலைவன் தனக்குத் துணையான பரத்தையுடன் ஆற்றில் நீராடினான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. பிணர் - சொரசொரப்பு; மோடு - வயிறு; நந்து - சங்கு; பேழ்வாய் - பிளவுபட்ட வாய்; ஏற்றை - ஆண்சங்கு.
2. கதிர் - கூரிய; ஆரல் - ஆரல் மீன்; கள்வன் - சான்று, சாட்சி.
3. துணை - பெண்சங்கு.
4. மலி நீர் - மிகுந்த நீர்.
5. போது ஆர் - பூக்கள் நிறைந்த; வெய்யோள் - விரும்பியவள் (பரத்தை).
6. ஆர் - நிறைந்த; காஞ்சி - காஞ்சி மரம்; அகல்யாறு - அகன்ற ஆறு.
7. நெருநை - நேற்று.
8. காய் சினம் - மிக்க சினம்; மொய்ம்பு - வலிமை; கரிகால் - சோழன் கரிகாற்பெருவளத்தான்.
9. நறவு - கள்; வெண்ணி வாயில் - வெண்ணிப்பறந்தலைப் போர்.
10. மறலிய - மாறுபட்ட; ஞாட்பு - போர்.
11. இமிழ் - ஒலிக்கும்; களம் - போர்க்களம்; ஒழிய - கிடக்க.
12. வேந்தர் - சேர, பாண்டிய மன்னர்கள்; சாய - தோற்றோட.
13. மொய் வலி - மிக்க வலிமை; ஞான்றை - பொழுது.
14. தொய்யா - குறையாத; அழுந்தூர் - ஒரு போர்க்களம்.

தோழி கூற்று

அகநானூறு 226 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகற்குத் தோழி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையுடன் தலைவன் காவிரியில் நீராடினான் என்பதை அறிந்த தலைவி ஊடல் கொண்டாள். தலைவன் தோழியிடம் வந்து தலைவியின் சினத்தைத் தணிவிக்குமாறு வேண்டினான். தோழியோ, 'நீ செய்தது தவறு; அதனால் தலைவியின் ஊடலைப் போக்க என்னால் இயலாது' என்று கூறியது.

உணர்குவென் அல்லென்; உரையல் நின்மாயம்;
நாண்இலை மன்ற– யாணர் ஊர–
அகலுள் ஆங்கண், அம்பகை மடிவை,
குறுந்தொடி, மகளிர் குரூஉப்புனல் முனையின்,
பழனப் பைஞ்சாய் கொழுதி, கழனிக்
கரந்தைஅம் செறுவின் வெண்குருகு ஓப்பும்,
வல்வில் எறுழ்த்தோள், பரதவர் கோமான்,
பல்வேல் மத்தி, கழாஅர் முன்துறை,
நெடுவெண் மருதொடு வஞ்சி சாஅய்,
விடியல் வந்த பெருநீர்க் காவிரி,
தொடிஅணி முன்கை நீவெய் யோளொடு
முன்நாள் ஆடிய கவ்வை, இந்நாள்,
வலிமிகும் முன்பின் பாணனொடு, மலிதார்த்
தித்தன் வெளியன் உறந்தை நாள்அவைப்
பாடுஇன் தெண்கிணைப் பாடுகேட்டு அஞ்சி,
போர்அடு தானைக் கட்டி
பொராஅது ஓடிய ஆர்ப்பினும் பெரிதே.

தெளிவுரை

புது வருவாயினையுடைய ஊரனே! நீ இங்கு வந்து வஞ்சனை பொருந்திய சொற்களைக் கூறாதே; அவை பொய்யானவை

என்பதை நாங்கள் அறிவோம்! நீ நாணம் கொண்டவன் அல்லன். (நாணமிருந்தால் இத்தகைய பொய்ச்சொற்களைக் கூற மாட்டாய்.)

வில்லேந்திய வலிமை பொருந்திய பரதவர் இனத்தலைவன், தித்தன். கழாஅர்த் துறைமுகம் அவனுடையது. அங்கு வாழும் இளைய மகளிர் அழகிய பகுப்புகளைக் கொண்ட தழையுடையினையும் குறிய வளையல்களையும் அணிந்திருப்பர். அவர்கள் நீராடலை வெறுப்பாராயின் பொய்கைக்கரையில் வளர்ந்திருக்கும் கோரைப்புற்களைக் கிழித்துச் சாட்டையாக்கிக் கொண்டு, கரந்தைச்செடியினைக் கொண்ட வயலில் இரை தேடும் நாரைகளை ஓட்டுவர்.

அத்துறைமுகத்தின் வழியாக, நீண்ட வெண்மையான மருத மரத்தோடு வஞ்சி மரத்தையும் சாய்த்துக் காவிரியாறு பெரு வெள்ளத்துடன் பாய்ந்தோடுகிறது. அவ்வெள்ளத்தில் காலை நேரத்திலேயே, வளையலணிந்த முன்கையினைக் கொண்ட உன் மனங்கவர்ந்த பரத்தையோடு விளையாடினாய். அதனால் ஊரெங்கும் பழிச்சொல் எழுந்துள்ளது.

உறையூரை ஆட்சி புரிந்த தித்தன்வெளியனோடு போர் செய்வதற்கு மிக்க வலிமை கொண்ட பாணனோடு போராற்றல் மிகுந்த கட்டி என்பவன் படை திரட்டி வந்தான். அப்போது தித்தன் அவையில் எழுந்த இனிய தெளிவான முரசின் ஓசையைக் கேட்டு, அவனது பெருமையை உணர்ந்த கட்டி, அஞ்சிப் போரைத் தொடங்காமலேயே ஓடினான். அப்போது எழுந்த ஆரவாரத்தைக் காட்டிலும் உன்மீது ஏற்பட்டுள்ள பழிச்சொல் ஆரவாரம் மிகுதியாய் உள்ளது.

கருத்து

நீ பரத்தையோடு புனலாடியதால் ஏற்பட்ட பழிச்சொல் ஆரவாரம், போர்க்களத்தில் வெற்றி பெற்றாரின் ஆரவாரத்தினும் பெரிதாய் இருக்கிறது.

விளக்கம்

"ஊரனே! வஞ்சனையான பொய்ச்சொற்களை என்னிடம் கூறாதே; நான் அவற்றை நம்ப மாட்டேன். நீ மிகவும் நாண

மில்லாதவன். உறையூரிலுள்ள கழாஅர்த் துறையில் காவிரியின் புதுப்புனல் வெள்ளத்தில் நீ உனக்கு விருப்பமான பரத்தையுடன் நீராடியிருக்கிறாய். அதனால், ஊரில் ஏற்பட்டுள்ள பழிச்சொல் ஆரவாரம், தித்தன்வெளியனோடு போர் செய்ய வந்த கட்டி என்பான், தித்தனின் முரசு முழக்கத்துக்கு அஞ்சி, அவனோடு போரிடாமலேயே திரும்பி ஓடியபோது ஏற்பட்ட ஆரவா ரத்தினும் பெரிதாய் இருக்கிறது. தவறு செய்த உன்னோடு தலைவி கொண்டுள்ள ஊடல் தணியாது" என்று கூறித் தோழி தலைவனுக்கு வாயில் மறுத்தாள்.

சொற்பொருள்

1. மாயம் - வஞ்சனையான சொற்கள்; உணர்குவென் அல்லென் - நான் அவற்றை உண்மையென்று கொள்ள மாட்டேன்.
2. நாண்இலை - நீ நாணம் இல்லாதவன்.
3. அகலுள் - அகன்ற ஊரிலே; மடிவை - தழையுடை.
4. குரூஉப்புனல் - நிறமுள்ள புதுப்புனல்; முனையின் - வெறுத்தால்.
5. பைஞ்சாய் - ஒருவகைக் கோரை; கொழுதி - கோதி.
6. கரந்தை - கரந்தைச்செடி; செறு - வயல், நன்செய்; ஒப்பும் - ஓட்டும்.
7. எறுழ் - வலிமை; கோமான் - தலைவன்.
8. மத்தி - பரதவர் தலைவன்; கழாஅர் - ஒரு நீர்த்துறை.
9. மருது - மருத மரம்; வஞ்சி - வஞ்சி மரம்; சாஅய் - சாய்த்து.
10. விடியல் வந்த - நாள்காலையில் வந்த; பெருநீர் - மிக்க வெள்ளம்.
11. நீ வெய்யோளொடு - நீ விரும்பிய பரத்தையுடன்.
12. கவ்வை - பழிச்சொல்.
13. வலிமிகும் - ஆற்றல் மிகும்; முன்பு - வலிமை.
14. தித்தன்வெளியன் - உறையூரை ஆண்ட அரசன்; உறந்தை - உறையூர்; நாள் அவை - திருவோலக்கம், அத்தாணி மண்டபம்.
15. கிணை - மருதநிலப் பறைமுரசு; பாடு - ஒலி.
16. போர் அடுதானை - போரிடுதலில் வல்ல படை; கட்டி - படைத் தலைவருள் ஒருவன்.
17. பொராஅது - போர் செய்யாது; ஆர்ப்பு - ஆரவாரம்.

தோழி கூற்று

அகநானூறு 96 **மருதம் பாடிய இளங்கடுங்கோ**

திணை : மருதம்

கூற்று

தோழி, வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைப் பிரிந்து பரத்தை ஒருத்தியோடு சேர்ந்திருந்தான். அதனால் தலைவி ஊடல் கொண்டாள். திரும்பி வந்த தலைவன் தோழியிடம் வாயில் வேண்டினான். அவள், தான் அறிந்த செய்தியைச் சொல்லி வாயில் மறுத்தது.

நறவுஉண் மண்டை நுடக்கலின், இறவுக்கலித்து,
பூட்டுஅறு வில்லின் கூட்டுமுதல் தெறிக்கும்
பழனப் பொய்கை அடைகரைப் பிரம்பின்
அரவாய் அன்ன அம்முள் நெடுங்கொடி
அருவி ஆம்பல் அகல்அடை துடக்கி,
அசைவரல் வாடை தூக்கலின், ஊதுஉலை
விசைவாங்கு தோலின், வீங்குபு ஞெகிழும்
கழனிஅம் படப்பைக் காஞ்சி ஊர!
'ஒண்தொடி ஆயத் துள்ளும்நீ நயந்து
கொண்டனை' என்ப'ஓர் குறுமகள்' அதுவே
செம்பொற் சிலம்பின், செறிந்த குறங்கின்,
அம்கலுழ் மாமை, அஃதை தந்தை,
அண்ணல் யானை அடுபோர்ச் சோழர்,
வெண்ணெல் வைப்பின் பருவூர்ப் பறந்தலை
இருபெரு வேந்தரும் பொருதுகளத்து ஒழிய,
ஒளிறுவாள் நல்அமர்க் கடந்த ஞான்றை
களிறுகவர் கம்பலை போல,
அலர்ஆ கின்றது பலர்வாய்ப் பட்டே.

தெளிவுரை

கள்ளுண்ணப் பயன்படுத்திய பாத்திரத்தைக் கழுவிய நீரை இறால் மீன் உண்டு, நாண் பூட்டப்பட்ட வில் தெறிப்பதுபோல

நெற்கூடுகளின் அடிகளில் துள்ளி விழும். மருதநிலக் குளக்கரையில் வளர்ந்துள்ள அரம் போன்ற கூர்மையான முள்ளினைக் கொண்ட பிரம்பங்கொடி, ஆம்பல் இலையைப் பற்றிக்கொண்டிருக்கும். வாடைக்காற்றால் அக்கொடி மேலும் கீழும் அசையும் போது, கொல்லன் உலைக்களத்தில் விசையாய் இழுத்து விடப் படும் துருத்தியைப் போல, அந்த இலையும் புடைத்துச் சுருங்கும். இத்தகைய இனிய காட்சிகள் கொண்ட வயல்களையும் தோட்டங்களையுமுடைய ஊருக்குத் தலைவன் நீ.

பரத்தையருள்ளும் இளைய மகள் ஒருத்தியை விரும்பி, நீ அவளை மணந்துகொண்டாய் என்று ஊரார் கூறுகின்றனர். அதனால் எங்கும் பழிச்சொல் ஆரவாரம் எழுந்துள்ளது.

சிவந்த பொன்னாலான சிலம்பினையும், நெருங்கிய தொடையினையும், அழகொழுகும் மாமை நிறத்தினையும் கொண்டவள், அஃதை. அவள் தந்தை முறையினரான சோழர், பருவூர்ப் போர்க் களத்தில் சேரர், பாண்டியர் ஆகிய இருவரையும் வென்று கொன்றனர்; அப்போர்க்களத்தில் இறந்த மன்னர்களின் யானைகளைக் கைக்கொண்டபோது எழுந்த ஆரவாரம்போல, உன் பொருட்டு ஊரில் எழுந்த பழிச்சொல் ஆரவாரமும் இருந்தது.

கருத்து

'தலைவ! நீ இளைய பரத்தை ஒருத்தியை மணந்துகொண்டாய் என்னும் பழிச்சொல் ஊரெங்கும் பரவியுள்ளது.'

விளக்கம்

தலைவ! நீ பரத்தையருள் இளையவள் ஒருத்தியை விரும்பி மணந்துகொண்டாய் என்று ஊரார் கூறும் பழிச்சொல் ஆரவாரம், பருவூர்ப் போர்க்களத்தில் சோழர் படை சேர, பாண்டியரைக் கொன்று, அவர்களுடைய யானைகளைக் கைப்பற்றியபோது எழுந்த ஆரவாரத்தை ஒத்திருந்தது. அதனால் நீ இங்கு வரவேண்டா.

உள்ளுறை

குளக்கரையில் உள்ள முள்ளுடைய பிரம்பங்கொடி, ஆம்பல் இலையைப் பற்றிக்கொள்ள, காற்றால் அவ்விலை உயர்ந்தும் தாழ்ந்தும் ஆடும் என்னும் தொடர்மூலம் தலைவன் பாணனால் பரத்தையர் சேரிக்குப் போவதும் வருவதுமாய் உழல்கின்றான் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. நறவு - கள்; மண்டை - பாத்திரம், கலம்; நுடக்கல் - கழுவப்படுதல், இறவு - இறாமீன், கலித்து - செருக்கி.
2. பூட்டு - நாண்; கூட்டு முதல் - நெற்கூடுகளின் அடிப்பகுதி; தெறிக்கும் - துள்ளி விழும்.
3. பிரம்பு - பிரம்பங்கொடி.
4. அரவாய் - அரத்தின் வாய்; நெடுங்கொடி - நீண்ட கொடி.
5. அகல் அடை - அகன்ற இலை; துடக்குதல் - சிக்குதல், பற்றிக் கொள்ளுதல்.
6. அசைவரல் - அசைந்து வரும்; தூக்கலின் - மேலும் கீழும் அசைத்தலின்.
7. விசை வாங்கு தோல் - விசைத்து இழுத்துவிடப்படும் துருத்தி; ஞெகிழும் - புடைத்துச் சுருங்கும்.
8. காஞ்சி - காஞ்சி மரங்கள்.
9. ஆயம் - பரத்தையர் கூட்டம்; நயந்து - விரும்பி.
10. குறுமகள் - இளைய மகள்.
11. குறங்கு - தொடை.
12. அஃதை - பெண் ஒருத்தி.
13. அடுபோர் - வெல்லும் போர்.
14. வெண் நெல் வைப்பு - வெண்ணெல் விளையும் இடம்; பறந்தலை - போர்க்களம்; ஒழிய - இறக்க.
15. இரு பெரு வேந்தர் - சேரர், பாண்டியர்; பொரு - போரிட்டு; களம் - போர்க்களம்.
16. அமர்க் கடந்த - போரினை வென்ற; ஞான்றை - பொழுது.
17. களிறு கவர் - களிறுகளைக் கவர்ந்த பொழுது; கம்பலை - ஆரவாரம்.
18. அலர் - பழிச்சொல்.

தோழி கூற்று

அகநானூறு 46 **அள்ளூர் நன்முல்லையார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிச் சென்ற தலைமகற்குத் தோழி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிடமிருந்து பிரிந்து வந்த தலைவன், தலைவியை மீண்டும் சந்திக்கத் தோழியின்மூலம் முயல்கின்றான். அப்போது தோழி, அவனது கூடா ஒழுக்கத்தைச் சுட்டிக்காட்டி வாயில் மறுத்தது.

சேற்றுநிலை முனைஇய செங்கண் காரான்
ஊர்மடி கங்குலில், நோன்தளை பரிந்து,
கூர்முள் வேலி கோட்டின் நீக்கி,
நீர்முதிர் பழனத்து மீன்உடன் இரிய,
அம்தூம்பு வள்ளை மயக்கி, தாமரை
வண்டுஊது பனிமலர் ஆரும் ஊர!
யாரை யோ?நிற் புலக்கேம். வாருற்று,
உறைஇறந்து ஒளிரும் தாழ்இருங் கூந்தல்,
பிறரும் ஒருத்தியை நம்மனைத் தந்து,
வதுவை அயர்ந்தனை என்ப. அஃதுயாம்
கூறேம். வாழியர், எந்தை, செறுநர்!
களிறுடை அருஞ்சமம் ததைய நூறும்
ஒளிறுவாள் தானைக் கொற்றச் செழியன்
பிண்ட நெல்லின் அள்ளூர் அன்னஎன்
ஒண்தொடி நெகிழினும் நெகிழ்க;
சென்றீ, பெரும!நின் தகைக்குநர் யாரோ?

தெளிவுரை

சேற்றில் நிற்றலை வெறுத்துச் சிவந்த கண்ணினைக் கொண்ட ஓர் எருமை, ஊர் துயில்கின்ற இருளில் தான் கட்டப்பட்டிருந்த கயிற்றை அறுத்துக்கொண்டது; கூரிய முள்வேலியைத் தன் கொம்பினால் நீக்கியது; மீன்கள் அஞ்சி ஓடுமாறு நீர் மிக்க வயலில் இறங்கியது; அழகிய உள்துளையைக் கொண்ட

வள்ளைக்கொடியைச் சிதைத்தது; இறுதியாய் வண்டுகள் ஒலிக்கும் குளிர்ச்சி பொருந்திய மலரைத் தின்றது. இத்தகைய ஊரினை உடைய தலைவனே!

உன்னோடு ஊடுதற்கு நீ எவ்வகையில் எங்கட்கு உறவினன் ஆவாய்? மேகம் போன்ற கரிய கூந்தலைக் கொண்ட பரத்தை ஒருத்தியை நீ மணந்து கொண்டாய் என்று கூறுகின்றனர். நாங்கள் அப்படிக் கூறமாட்டோம். நீ வாழ்க!

போரில் யானைகளைக் கொல்லும் ஒளிமிக்க வாட் படையுடன் வெற்றியினையும் கொண்டிருப்பவன், செழியன். நெற்குவியல் நிறைந்த அவனுடைய அள்ளூரைப் போன்ற நலம் வாய்ந்த தலைவியின் ஒளி பொருந்திய வளையல்கள் நெகிழ்ந்து வீழினும் வீழட்டும்! (நீ உனக்கு விருப்பமான மகளிரிடம் செல்.) நீ விரும்பும் இடத்திற்குச் செல்ல உன்னைத் தடுக்க யாருளர்?

கருத்து

'தலைவ! நீ பரத்தை ஒருத்தியை மணந்துகொண்டதாய் ஊரார் கூறுகின்றனர். ஆதலின், நீ விருப்பம் கொண்டுள்ள அவளிடமே செல்.'

விளக்கம்

தலைவ! நீ பரத்தை ஒருத்தியை மணந்து கொண்டாய் என ஊரார் பலரும் கூறுகின்றனர். உன்னால் தலைவியின் தொடி நெகிழ்ந்தாலும் நெகிழட்டும். நீ விரும்புகின்ற அவளிடமே செல். உன்னைத் தடுக்க யார் உளர்?

உள்ளுறை

எருமை தனது இடமான கொட்டிலைத் தானே சேறாக்கிக் கட்டினை அறுத்துக்கொண்டு, வயலுக்குக் காவலாய் இருந்த முள்வேலியையும் கொம்பினால் நீக்கி, மீன்கள் அஞ்சுமாறு தாமரையைச் சுற்றியுள்ள வள்ளையைச் சிதைத்து, பின், வண்டுகள் ஊதும் தாமரை மலரைத் தின்னும். இத்தொடர் மூலம், தலைவன் தலைவியை வேறுபடுத்தி, நாணமாகிய கட்டினை அறுத்து, பரத்தையர்க்குக் காவலானவரைப் பாணன் மூலம் நீக்கி, அப்பரத்தையின் தோழியர் அகல, பரத்தையின்

தாயையும் மயக்கி உளம் மகிழ்ந்தான் என்னும் உள்ளுறைப் பொருளைப் பெறுகிறோம்.

சொற்பொருள்

1. நிலை - நிற்றல்; முனைஇய - வெறுத்த; காரான் - எருமை.
2. மடி - துயில்கின்ற; நோன் - வலிய; தளை - கட்டு; பரிந்து - அறுத்துக்கொண்டு.
3. கோடு - கொம்பு.
4. நீர்முதிர் - மிகுந்த நீரினைக் கொண்ட; பழனம் - வயல்; இரிய - ஓட.
5. தூம்பு - உள்துளை.
6. பனிமலர் - குளிர்ச்சி பொருந்திய மலர்; ஆரும் - உண்ணும்.
7. யாரையோ - நீ என்ன உறவு, நீ யார்?; புலக்கேம் - ஊடோம்; வாருற்று - நீண்டு.
8. உறை - மழைத்துளி; இறந்து - (வீழ்ச்சியினும்) மிக்கு; ஒளிரும் - விளங்கும்.
9. மனை - வீடு.
10. வதுவை அயர்ந்தனை - மணம் முடித்து மகிழ்ந்தாய்.
11. எந்தை - எம் தலைவ!; செறுநர் - பகைவர்.
12. சமம் - போர்; ததைய - சிதைந்திட; நூறும் - அழிக்கும், கொல்லும்.
13. கொற்றம் - வெற்றி; செழியன் - பாண்டிய மன்னன்.
14. பிண்ட நெல் - தொகுக்கப்பெற்ற நெல்; அள்ளூர் - செழியனின் ஊர்.
15. தொடி - வளையல்; நெகிழினும் நெகிழ்க - நெகிழ்ந்து வீழினும் வீழட்டும்.
16. சென்றீ - செல்க; தகைக்குநர் - தடுப்பவர்.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 33 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : மருதம்

கூற்று

தோழி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தான் பரத்தையர் இல்லம் சென்றதால் தலைவி தன்மீது கொண்டுள்ள ஊடலை நீக்கிக் கூட்டுவிக்குமாறு தலைவன் தோழியை வேண்ட, தோழி அவனிடம் மறுத்துக் கூறியது.

கடையாயார் நட்பேபோல் காஞ்சிநல் ஊர
உடைய இளநலம் உண்டாய் – கடைய
கதிர்முலை ஆகத்துக் கண்ணன்னார் சேரி
எதிர்நலம் ஏற்றுநின் றாய்.

தெளிவுரை

காஞ்சி மரங்கள் நிறைந்த நல்ல ஊர்களையுடைய தலைவனே! செல்வம் உள்ள காலத்து நெருங்கி நட்புக்கொண்டு, அஃது இல்லாத சமயத்து விட்டு விலகும் கீழ்மக்கள் தன்மைபோல், தலைவியிடம் அக்காலத்தில் இளமை நயத்தால் ஏற்பட்ட இன்பங்களையெல்லாம் நுகர்ந்து, பின்பு இளமை நலமில்லாத அவளைக் கைவிட்டாய்; ஒளி கொண்ட கொங்கைகளையும் மேனியையும் கொண்டு உனக்குக் கண் போன்றவராயுள்ள பரத்தையரின் இன்பத்தை எதிர்கொண்டு பரத்தையர் சேரியில் வாழ்கிறாய்! அங்ஙனமுள்ள நீ என்னை வாயிலாக வேண்டுவது பெரிதும் மறுக்கப்பட வேண்டியதாகும்!

கருத்து

“என் தோழியின் இளநலங்களையெல்லாம் முன்பு நுகர்ந்தாய்! இப்போதோ பரத்தையர் சேரியில் அவர்கள் இளமை நலத்தை எதிரேற்று நிற்கிறாய். நிலைமைக்கேற்ப நட்பினை மாற்றிக்கொள்ளும் கீழ்மக்களின் தன்மை போன்று ஒழுகும் நீ, என்னை வாயிலாய் இருக்கக் கேட்பது எம்முறையில் ஏற்புடையது?” என்று வினவுகிறாள், தோழி.

சொற்பொருள்

1. கடையாயார் - கீழ்மக்கள், கடைப்பட்டவர்; காஞ்சி - காஞ்சி மரங்கள்.
2. உடைய - கொண்டிருந்த; இளநலம் - இளமை அழகு; உண்டாய் - கைக்கொண்டாய்; கடைய - இப்பொழுது.
3. கதிர் - ஒளி; ஆகம் - மார்பு; கண்அன்னார் - கண் போன்றவர் (பரத்தையர்).
4. எதிர்நலம் - (சேரியில்) எதிர்ப்படும் இன்பம்; ஏற்று - பொருந்தி.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 54 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிவந்த தலைமகற்குத் தலைமகள் குறிப்பறிந்த தோழி அவன் கொடுமை கூறி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையர் வீட்டிலிருந்து தன் வீடு திரும்பினான். தலைவி கொண்டுள்ள சினத்தைப் போக்கத் தோழியின் துணையை வேண்டினான். தலைவனை வீட்டினுள் தலைவி விடமாட்டாள் என்பதைக் குறிப்பினாலறிந்த தோழி, அவனால் ஏற்பட்ட துன்பங்களைக் கூறி அவன் வேண்டுகோளை ஏற்க மறுத்துரைப்பது.

திண்தேர்த் தென்னவன் நல்நாட்டு உள்ளதை
வேனில் ஆயினும் தண்புனல் ஒழுகும்
தேனூர் அன்னஇவள் தெரிவளை நெகிழ,
ஊரின் ஊரனை நீதர, வந்த
பஞ்சாய்க் கோதை மகளிர்க்கு
அஞ்சுவல், அம்ம! அம்முறை வரினே.

தெளிவுரை

திண்ணிய தேரினைக் கொண்ட பாண்டியனது நாட்டில் உள்ளது, தேனூர். அங்குக் கோடைக்காலத்திலும் வற்றாமல் குளிர்ச்சி பொருந்திய நீர் ஓடிக்கொண்டிருக்கும். அத்தகைய

தேனூரைப் போன்று நலம் நிறைந்தவள், நம் தலைவி. அவள் ஆய்ந்து அணிந்த வளையல்கள் நெகிழுமாறு ஊரனாகிய நீ, உள்ளூரிலேயே இருந்தும் பரத்தையர் தெருவில் வாழ்ந் திருந்தாய். பெருமானே! தலைவிக்கு நடைபெறவிருக்கும் நெய்யணியும் நிகழ்ச்சிக்காக வரவேண்டிய முறைப்படி நான் அத்தெருவழியாக வரும்போது பஞ்சாய்க் கோரையால் புனைந்த மலர்மாலையையணிந்த பரத்தையர் உன்னைச் சூழ்ந்து நிற்பதைக் கண்டு மிகவும் அஞ்சினேன். ஆதலால், நீ இங்கு வருதலினும் அங்குத் தங்கியிருத்தலே உனக்கும் நலம் தரும்; எமக்கும் நலம் ஏற்படும்.

கருத்து

'நீ நிலையான காதல் கொள்ளாதவன்; நீ இங்கு வருதலைத் தலைவி விரும்பவில்லை.'

குறிப்பு

பூப்பு நிகழும் போதும், பிள்ளை பெறும் போதும் தீட்டு நீங்கப் பெண்கள் எண்ணெய் தேய்த்துக் குளிப்பர். அவ்வேளை தலைவன் அருகிருந்து சிறப்புச் செய்ய வேண்டும். அச்சமயம் தலைவன் பரத்தையர் சேரியில் இருந்ததால் தோழி, பரத்தையர் இடத்திற்குச் சென்று உணர்த்த வேண்டிய தாயிற்று.

சொற்பொருள்

1. திண்தேர் - வலிமையான தேர்; தென்னவன் - பாண்டியன்.
2. தண்புனல் - குளிர்ந்த நீர்; ஒழுகும் - ஓடும்.
3. தேனூர் - பாண்டிய நாட்டு ஊர்; தெரி - தேர்ந்தெடுக்கப்பட்ட.
4. ஊரின் ஊரனை - இந்த ஊரிலேயேயிருந்தும் வேற்றூரில் இருப்பது போல் வாழ்கிறாய். நீ தர வந்த - நீ அன்பு காட்டிய.
5. பஞ்சாய்க் கோதை - பஞ்சாய்க் கோரையால் புனைந்த மாலை; மகளிர் - பரத்தையர்.
6. அஞ்சுவல் - அஞ்சுகின்றேன்; அம்முறை - நெய்யணி நிகழ்ச்சி.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 55 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வரைந்த அணிமைக்கண்ணே புறத்தொழுக்கம் ஒழுகி வாயில் வேண்டி வந்து தன் மெலிவு கூறிய தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் திருமணம் புரிந்துகொண்ட அண்மைக் காலத்திலேயே தலைவன் பரத்தையரொடு உறவு கொண்டான். பின்னர்த் தன் இல்லம் வந்து, வருந்துவதாய்க் கூறி, உள்ளே நுழையத் தலைவியின் இசைவு வேண்டினான். அது கேட்ட தோழி இடித்துக் கூறி அவனை வீட்டிற்குள் நுழையவிட மறுத்தது.

கரும்பின் எந்திரம் களிற்(று)எதிர் பிளிற்றும்,
தேர்வண் கோமான், தேனூர் அன்னஇவள்
நல்அணி நயந்துநீ துறத்தலின்,
பல்லோர் அறியப் பசந்தன்று, நுதலே!

தெளிவுரை

களிறு பிளிறுதலுக்கு எதிராய்க் கரும்பினை அரைக்கும் எந்திரத்தின் ஒலி எழுந்துகொண்டிருக்கும் தேனூர், பரிசிலர்க்குத் தேர்களை வழங்கும் வள்ளல் தன்மையினைக் கொண்ட பாண்டிய மன்னனுக்குரியது. அத்தேனூரினை ஒத்த தலைவியின் நல்லழகை நயந்து வரைந்துகொண்டு, வரைந்த அண்மைக் காலத்திலேயே, அவளைப் பிரிந்து பரத்தை வீடு சென்றதால் பலரும் நன்கறியுமாறு அவள் நுதல் பசலை நிறம் எய்தியது. (உன் தன்மை இத்தகையதாயிருக்கிறது.)

கருத்து

'இவள் நுதல் பசப்படைவதற்குக் காரணமாயிருந்த நீ, இப்போது வருத்தம் தெரிவித்து வாயில் வேண்டுவது ஏற்கத்தக்கது அன்று.'

உள்ளுறை

யானையின் பிளிறலுக்கு எதிராய்க் கரும்பை அரைக்கும் எந்திரம் ஒலிக்கும் என்னும் தொடர்மூலம், யானைக்கு மாறாய்

உயிரற்ற பொறி ஒலிப்பது போல, கற்புடைத் தலைவிக்கு மாறாய்ப் பண்பில்லாப் பரத்தையர் தலைவனைக் கைக் கொண்டுவிட்டனர் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படு கிறது.

சொற்பொருள்

1. எந்திரம் - பொறி; களிற்று எதிர் - களிறு பிளிறுதலுக்கு எதிராய்; பிளிற்றும் - ஒலிக்கும்.
2. தேர்வண் கோமான் - தேரை வழங்கும் வள்ளல் தன்மையினைக் கொண்ட பாண்டிய மன்னன்; தேனூர் - பாண்டியனின் ஊர்.
3. நல் அணி - நல்ல அழகு; நயந்து - விரும்பி (மணந்துகொண்டு); துறத்தலின் - விட்டுப் பிரிந்ததால்.
4. நுதல் - நெற்றி; பசந்தன்று - பசப்பு எய்தியுள்ளது.

தோழி கூற்று

குறுந்தொகை 127 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பாணன் வாயிலாகப் புக்கவழித் தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியிடம் பாணனைத் தூதாய் விட்டுத் தான் பின் நிற்ப, தோழி அவனை நோக்கி, 'உன் பாணன் பொய்யனாயினான்; அதனால் பாணர் எல்லாரையுமே பொய்யராய்க் கருத வேண்டியுள்ளது' என்று கூறியது.

குருகுகொளக் குளித்த கெண்டை அயலது
உருகெழு தாமரை வான்முகை வெரூஉம்
கழனிஅம் படப்பைக் காஞ்சி ஊர!
ஒருநின் பாணன் பொய்யன் ஆக
உள்ள பாணர் எல்லாம்
கள்வர் போல்வர்,நீ அகன்றிசி னோர்க்கே.

தெளிவுரை

நாரை கொத்துதலுக்குத் தப்பி நீருள் மூழ்கிய கெண்டை மீன், தண்ணீரில் உள்ள அழகிய நிறம் பொருந்திய தாமரையின் வெண்ணிற மொட்டினைக் கண்டு (அதுவும் நாரை போலத் தோன்றியதால்) அஞ்சி மறைகிறது. இத்தகைய காட்சியினைக் கொண்ட வயல் சூழ்ந்த தோட்டத்தில் காஞ்சி மரங்கள் வளர்ந்து நிற்கும் ஊரினைக் கொண்டவனே! உன் பாணன் பொய்யனாய் இருப்பதால் ஊரில் உள்ள ஏனைய பாணர் அனைவருமே அவனைப்போல் பொய் பேசுபவராகவே இருப்பரோ என உன்னைப் பிரிந்திருக்கும் மகளிர் கருதத் தோன்றுகிறது.

கருத்து

'தலைவ! உன் பாணன் பொய்யன்.'

விளக்கம்

தலைவன் காதலியைப் பிரிந்து பரத்தை வீட்டிலிருந்தான். தன் வீட்டுக்குத் திரும்ப விரும்பிய அவன், தலைவி சினமுற்றிருப்ப தால், அவளைச் சமாதானப்படுத்தும் முறையில் தன் பாணனை முன்னதாக அனுப்பி, அவனுக்குப் பின்னே தானும் வந்தான். பாணன் தலைவியிடம், "தலைவன் மிகவும் நல்லவன்; எப்போதும் உன் நினைவாகவே இருப்பவன்" என அவளைச் சமாதானப் படுத்தும் முறையில் பேசினான். அதனைக் கேட்ட தோழி, தலைவனை நோக்கி, 'உன் பாணன் இப்படிப் பொய் பேசுவதால் ஊரிலுள்ள பாணர்கள் அனைவரையுமே பொய் பேசுபவர்தாம் எனக் கருத வேண்டியிருக்கிறது' என்று கடிந்து சொல்லித் தலைவனை ஏற்க மறுக்கிறாள்.

குறிப்பு

நாரைக்கு அஞ்சிய கெண்டை, அந்நாரையின் தோற்றத் திலுள்ள தாமரையின் மொட்டினையும் கண்டு அஞ்சுகிறது. அதுபோலப் பாணன் ஒருவன் பொய்யனாய் இருப்பதால், காணும் பாணர் அனைவரையும் பொய்யராய்க் கருதத் தோன்று கிறது.

சொற்பொருள்

1. குருகு - நாரை; கொள - கொத்தியபோது; குளித்த - தப்பித்து நீரினுள் சென்று மறைந்த; கெண்டை - கெண்டை மீன்; அயலது - அருகே யிருந்த.
2. உரு கெழு - நிறம் பொருந்திய; வான்முகை - வெண்மையான மொட்டு; வெரூஉம் - அஞ்சும்.
3. கழனி - வயல்; படப்பை - தோட்டம்; காஞ்சி - காஞ்சி மரங்கள்.
5. உள்ள - ஊரில் உள்ள.
6. கள்வர் - கள்ளத்தனம் கொண்டவர்; நீ அகன்றிசினோர் - தலைவனைப் பிரிந்ததால் தனித்திருப்போர்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 158 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பரத்தை புலந்துழிப் புலவி நீங்குவானாய் அஃது இடமாக வந்தமையறிந்த தோழி தலைமகற்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தை தலைவனோடு ஊடினாள். அவள் ஊடல் நீக்கக் கால இடைவெளி கொடுப்பதற்காகத் தலைவன் தலைவி இல்லம் வந்தான். அவன் வந்ததன் நோக்கமறிந்த தோழி, தலைவனை இல்லத்தில் நுழைய விடாது தடுத்துக் கூறியது.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
கானலம் பெருந்துறைத் துணையொடு கொட்கும்
தண்ணம் துறைவன் கண்டிகும்
அம்மா மேனிஎம் தோழியது துயரே.

தெளிவுரை

வெள்ளாங்குருகின் குஞ்சினைத் தன் குஞ்சென்று கருதிக் காணச்சென்ற நாரை, அதனை மறந்து கடற்கரையின் பெரிய

துறையில் தன் பெட்டையோடு உலவித் திரியும். இத்தகைய காட்சி கொண்டுள்ள ஊருக்குத் தலைவனே! முதலில் எங்கள் தோழியாம் பரத்தையின் ஊடலைத் தீர்த்துவிட்டுப் பின்பு இங்கு வருக.

கருத்து

'நீ, உன் பரத்தையின் ஊடலைத் தீர்த்த பின்னர் இங்கு வா!'

குறிப்பு

நீ இங்கு வந்ததற்குக் காரணம் நீ எம்மீது கொண்டுள்ள அன்பு அன்று. அன்புள்ள உன் பரத்தை உன்னோடு ஊடியதால் அவள் மனம் மாறிச் சினம் தீரும்வரை இங்கே இருக்க வந்துள்ளாய். நீ இங்கே இருக்க வேண்டா. உன் அன்புப் பரத்தை இல்லத்திற்கே செல்.

உள்ளுறை

'பிள்ளையைக் காணச் சென்ற நாரை அதனை மறந்து துணையொடு சுற்றித் திரியும் துறை' என்னும் தொடர்மூலம் தலைவன் தன் புதல்வனைக் காணும் ஆர்வத்துடன் வந்து, அதனை மறந்து, தலைவியொடு இன்புற்றிருத்தலை நாடியவனாய் உள்ளான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

3. கானல் - கடற்கரைச்சோலை; துணையொடு - பெண் குருகுடன்; கொட்கும் - உலவித் திரியும்.
4. தண் - குளிர்ந்த; அம் - அழகிய; கண்டிகும் - கண்டோம்.
5. அம் - அழகிய; மா - மாந்தளிர்; தோழி - தோழியாகிய பரத்தை; துயர் - துன்பம்.

தலைவன் கூற்று

அகநானூறு 86 **நல்லாவூர் கிழார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் மறுத்த தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையர் சேரியிலிருந்து தன் வீட்டிற்கு வந்த தலைவன், தலைவியைச் சந்தித்து இன்புறத் தோழியிடம் உதவி வேண்டினான். அவள் மறுத்தபோது தலைவன் திருமண நாளின்போது நடந்ததைக் கூறியது.

உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற்று அமலை நிற்ப, நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி,
மனைவிளக் குறுத்து, மாலை தொடரி,
கனைஇருள் அகன்ற கவின்பெறு காலை;
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்,
கேடுஇல் விழுப்புகழ் நாள்தலை வந்தென,
உச்சிக் குடத்தர் புத்துஅகல் மண்டையர்,
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்,
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தர,
புதல்வற் பயந்த திதலைஅவ் வயிற்று
வால்இழை மகளிர் நால்வர் கூடி,
'கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோன் பெட்கும் பிணையை ஆக!'என,
நீரொடு சொரிந்த ஈர்இதழ் அலரி
பல்இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க,
வதுவை நல்மணம் கழிந்த பின்றை,
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து,
'பேர்இல் கிழத்தி ஆக',எனத் தமர்தர,
ஓர்இல் கூடிய உடன்புணர் கங்குல்,
கொடும்புறம் வளைஇ, கோடிக் கலிங்கத்து
ஒடுங்கினள் கிடந்த ஓர்புறம் தழீஇ,
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப,

அஞ்சினள் உயிர்த்த காலை, 'யாழநின்,
நெஞ்சம் படர்ந்தது எஞ்சாது உரை'என,
இன்நகை இருக்கை, பின்யான் வினவலின்,
செஞ்சூட்டு ஒண்குழை வண்காது துயல்வர,
அகம்மலி உவகையள் ஆகி, முகன்இகுத்து,
ஒய்யென இறைஞ்சி யோளே – மாவின்
மடம்கொள் மதைஇய நோக்கின்,
ஒடுங்குஈர் ஓதி, மாஅ யோளே.

தெளிவுரை

"தோழியே! அன்றொரு நாள் திருமண ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. உழுத்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த, குழைந்த உழுத்தங்களியோடு சோற்றுத்திரளினைக் கூடியிருந்தவர் உண்பது இடையறாது நிகழ்ந்துகொண்டே இருந்தது. கால்கள் வரிசையாய் நடப்பட்ட குளிர்ச்சி பொருந்திய பெரிய பந்தலில் புதிதாய்க் கொண்டுவரப்பட்ட மணலைப் பரப்பினர். வீட்டில் விளக்கேற்றி எங்கும் மாலைகளைத் தொங்கவிட்டனர்; காலை நேரத்தில் தீய கோள்களின் தொடர்பு நீங்கிய, வளைந்த வெண்மையான சந்திரனைக் கேடற்ற சிறந்த புகழைக் கொண்ட உரோகிணி வந்து அடைந்த நல்ல நாள் அது. இருள் நீங்கிய அழகிய புலர்காலைப் பொழுது; தலையில் நிறைநீர்க் குடங்களைத் தாங்கி, கைகளிலே புதிய மண்கலங்களை உடையவராய் மணத்தினைச் செய்து வைக்கும் மங்கல மகளிர் ஆரவாரத்துடன் கூடினர். முன்னே தருவனவற்றையும் பின்னே தருவனவற்றையும் அவர்கள் முறையாய்த் தந்துகொண்டிருந்தனர்.

"மகனைப் பெற்றெடுத்த, தேமல் பொருந்திய அழகிய வயிற்றினைக் கொண்ட தூய அணிகளணிந்த கற்புடைய மகளிர் நால்வர் கூடி நின்றனர். 'கணவனாய் நீ ஏற்பவனை விருப்புடன் பேணி வருக' எனக் கூறி மணமகளை வாழ்த்தினர். நீரொடு, குளிர்ச்சி பொருந்திய பூக்களையும் நெல்லையும் கலந்து அவளை மங்கல நீராட்டியதும் வதுவை மணம் நிகழ்ந்து முடிந்தது.

"அதன் பின்னர்ச் சுற்றத்தார் எல்லாரும் 'கல்' என்ற ஒலியோடு வந்து, 'நீ சிறந்த மனைக்கிழத்தி ஆகுக' என்று வாழ்த்தி

அவளை எனக்கு அளித்தனர். அதனையடுத்து ஒரு தனி அறையில் இரவு வேளையில் என்னையும் அவளையும் முதலிரவுக்காக ஒன்றாய் இருத்தினர். அங்கு அவள் நாணமுற்று, முதுகினை வளைத்துக் கோடிப்புடவைக்குள் நடுங்கியபடி நின்றாள். அவளை மலரணையில் அணையும் விருப்புடன், அவள் தன்னை மூடியிருந்த ஆடையை நான் நீக்கினேன். அவள் அஞ்சிப் பெருமூச்சு விட்டாள். அப்போது நான் அவளிடம், 'உன் மனத்தில் இருப்பதை ஒளிக்காமல் சொல்' என்று கேட்டேன்.

"இனிய மகிழ்வுடன் கூடிய, அம்மலரணையிலே, மாமை நிறத்தினைக் கொண்ட அவள், மானின் மடப்பத்தையும் மதர்த்த நோக்கினையும் கொண்ட கண்கள், சிவந்த மணிகள் பதித்த ஒள்ளிய குழை பொருந்திய காதினைச் சென்றடைய, உள்ளம் நிறைந்த மகிழ்ச்சியை வெளிக்காட்டியவளாய், முகத்தினைத் தாழ்த்தி வெட்கத்துடன் நின்றாள்.

"தலைவி என்னிடம் இத்தகைய பேரன்பு கொண்டவள். அவள் கருத்தையறியாது நீ பேசுகிறாய்" என்று தலைவன் தோழியிடம் கூறினான்.

கருத்து

'தலைவன் தன் திருமண நாளன்று இரவு நடந்த இன்ப நிகழ்ச்சியைக் கூறி, அத்தகைய அன்பினைக் கொண்ட தலைவியிடம் சேர இடமின்றி நீயன்றோ இப்போது குறுக்கே நிற்கின்றாய்' எனத் தோழியிடம் கூறினான்.

விளக்கம்

உரோகிணி சந்திரனைக் கூடிய நன்னாள். அன்று திருமண வீட்டின் முற்றத்தில் புதுமணல் பரப்பினர். கால்கள் நட்டுப் பந்தல் அமைத்து மாலைகளைத் தொங்கவிட்டனர். அதிகாலை நேரம். மங்கல மகளிர் நீர்க்குடங்களைத் தலையில் சுமந்து வந்து மணவினைகளைத் தொடங்கினர். மக்களைப் பெற்றெடுத்த மகளிர் நால்வர் நீரொடு பூக்களையும் கலந்து மணமகளை நீராட்டினர். 'கணவனை விருப்புடன் பேணும் கற்புடை மனைவியாய் வாழ்க' என்று மணமகளை மணமகன் கையில் சேர்த்தனர். இத்துடன் வதுவை மணம் முடிவடைந்தது.

உறவினர் உழுத்தம்பருப்புக் கலந்த சோற்றுத்திரளை விருந்தாய் உண்டனர்.

அன்றிரவு, மணமக்களை ஒரு தனி அறையில் இருக்கச் செய் தனர். மணமகள் புத்தாடை அணிந்து அவள் முகத்தை மறைத்த வளாய் ஒரு புறம் வீற்றிருந்தாள். கணவன் அவள் அருகில் சென்று அவள் ஆடையை ஒதுக்க, அவள் மிகவும் மகிழ்ந்த வளாய்த் தலை குனிந்து வெட்கத்துடன் நின்றாள்.

சொற்பொருள்

1. உழுந்து - உழுத்தம் பருப்பு; தலைப்பெய்த - கூட்டிச் சமைத்த; மிதவை - பொங்கல்.
2. அமலை - திரளை, உருண்டை; நிற்ப - உண்ண; நிரைகால் - வரிசையாய் நடப்பட்ட பந்தல் கால்.
3. பந்தர் - பந்தல்; தருமணல் - கொண்டுவரப்பட்ட புதுமணல்; ஞெமிரி - பரப்பி.
4. விளக்குறுத்து - விளக்கினை ஏற்றி வைத்து; தொடரி - தொங்க விட்டு.
5. கனைஇருள் - மிக்க இருள்; கவின் - அழகு.
6. கோள் கால் நீங்கிய - தீய கோள்களின் தொடர்பு நீங்கப்பெற்ற; கொடு - வளைந்த.
7. விழுப்புகழ் - சிறந்த புகழ்; நாள் - உரோகிணி எனும் நாள்; தலைவந்தென - அடைந்ததாய்.
8. உச்சி - தலை உச்சி; குடத்தர் - குடங்களையுடையவர்; புத்து அகல் - புதிய அகன்ற; மண்டை - ஒரு கலம்.
9. கம்பலை - ஆரவாரம்; முதுசெம் பெண்டிர் - முதிய மங்கல மகளிர்.
10. தரத்தர - தந்துகொண்டேயிருக்க.
11. திதலை - தேமல்; அவ் வயிறு - அழகிய வயிறு.
12. வால் இழை - ஒளி பொருந்திய அணிகலன்கள்.
13. கற்பினின் - கற்பினின்று; வழாஅ - தவறாது; நற்பல - நல்ல பல பேறுகள்.
14. பெற்றோன் - (உன்னை மனைவியாகப்) பெற்றவன், கணவன்; பெட்கும் - விரும்பும்; பிணையை ஆக - ஆசை கொண்டவளாகி.
15. சொரிந்த - பெய்த; ஈர்இதழ் - குளிர்ச்சி பொருந்திய இதழ்கள்; அலரி - பூக்கள்.

16. இரு - கரிய; கதுப்பு - கூந்தல்; தயங்க - விளங்க.
17. கழிந்த பின்றை - முடிந்த பின்பு.
18. சும்மையர் - ஒலியினர்; ஞெரேர் என - விரைந்து.
19. பேர் - பெரிய; இல்கிழத்தி - மனைக்குரியவள்; தமர் - உறவினர்.
20. ஓர்இல் - ஓர் அறையில்; உடன்புணர் - ஒன்றாய்க் கூடிய புணர்ச்சி; கங்குல் - இரவு.
21. கொடும்புறம் - முதுகு; வளைஇ - வளைத்து; கோடி - புதிய; கலிங்கம் - ஆடை.
22. ஒடுங்கினள் - ஒடுங்கி; ஓர்புறம் - ஓர் இடம்; தழீஇ - சார்ந்து.
23. முயங்குதல் - தழுவுதல்; முகம் புதை - முகத்தை மூடியிருந்த ஆடையினை.
24. உயிர்த்த காலை - பெருமூச்சு விட்ட பொழுது; யாழ - ஓர் அசைச் சொல்; நின் - உன்.
25. படர்ந்தது - நினைந்ததை; எஞ்சாது - மறையாது; உரை - சொல்.
26. இன்நகை - இனிய மகிழ்ச்சியுடன் கூடிய; வினவல் - கேட்டல்.
27. செஞ்சூட்டு - செந்நிறமுள்ள மணிகள் பதித்த; குழை - காதணி; வண் - வளவிய; துயல்வர - அசைய.
28. அகம் - உள்ளம்; மலி - நிறைந்த; முகன் - முகம்; இகுத்து - தாழ்த்து.
29. ஒய்யென - விரைந்து; இறைஞ்சுதல் - வணங்குதல்; மாவின் - மானின்.
30. மடம் கொள் - அழகுடன்; மதைஇய - செருக்கிய; நோக்கு - பார்வை.
31. ஒடுங்கு - ஒடுங்கிய; ஈர் - குளிர்ச்சி பொருந்திய; ஓதி - கூந்தல்; மாஅயோள் - மாமை நிறத்தினைக் கொண்டவள்.

வாயிலாய்ப் புகுந்தார்க்கு வாயில் மறுத்தது.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 153 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வாயில் வேண்டிய தலைமகன் கேட்குமாற்றால் வாயிலாய்ப் புகுந்தார்க்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தை இல்லில் வாழ்ந்து வந்தான்; தலைவி தன் சினம் நீங்கித் தன்னை ஏற்க வேண்டி அவன் தூதனுப்பினான். அவன் காதில் விழுமாறு, வந்த தூதுவரிடம் தோழி சொல்லியது.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
உளர, ஒழிந்த தூவி குவவுமணல்
போர்வில் பெறூஉம் துறைவன் கேண்மை
நன்னெடும் கூந்தல் நாடுமோ மற்றே?

தெளிவுரை

வெள்ளாங்குருகின் குஞ்சினைத் தன் குஞ்செனக் கருதிக் காண்பதற்குச் சென்றது, மெல்லிய நடை கொண்ட நாரை. அந் நாரை தனது சிறகைக் கோதுதலால் உதிர்ந்த இறகுகள் காற்றால் குவிந்த மணல்மேட்டின்மேல் குவிந்து கிடக்கும். அத்தகைய கடற்றுறையை உடைய தலைவனது பொய்யான நட்பை, அழகிய நீண்ட கூந்தலைக் கொண்ட தலைவி இனியும் விரும்புவாளோ? விரும்பமாட்டாள்.

கருத்து

'தலைவனின் தகா ஒழுக்கத்தைத் தலைவி நன்குணர்ந்துள்ளாள். அவன் தன்னிடம் காட்டும் உறவிலும் உண்மையில்லை என உணர்கிறாள். இனியும் எப்படி அவனை ஏற்பாள்?'

உள்ளுறை

நாரை கோதிக் கழித்த தூவிகள் மணல்மேட்டில் குவிந்து கிடக்கும் என்னும் தொடர்மூலம், பரத்தையிடம் சென்ற தலைவன் அவள் மையலிலே சிக்கி வாரி இறைத்த பொன்னும் பொருளும் ஏராளம் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படு கிறது.

சொற்பொருள்

1. வெள்ளாங்குருகு - நீர்ப்பறவைகளுள் ஒன்று, இதனை உள்ளாங் குருவி என்றும் கூறுவர்; பிள்ளை - குஞ்சு; செத்தென - தன் குஞ்செனக் கருதிய.
2. காணிய - காண்பதற்கு; மடநடை - மெல்லிய நடை.
3. உளர - சிறகைக் கோதுதலால்; ஒழிந்த - கீழே வீழ்ந்த; தூவி - இறகு; குவவுமணல் போர்வு - குவிந்திருந்த மணல்மேடு.
4. பெறூஉம் - எடுக்கலாம்; கேண்மை - உறவு.
5. நன்னெடும் கூந்தல் - அழகிய நீண்ட கூந்தலைக் கொண்ட, தலைவி; நாடுமோ - (தலைவனை) விரும்புவளோ?

தோழி கூற்று

ஐங்குறுநூறு 156 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பரத்தையிடத்து வாயில்விட்டு ஒழுகுகின்ற தலைமகனது வாயிலாய் வந்தார்க்குத் தோழி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையிடத்துத் தங்கி வாழ்கிறான். அவன் அங்கிருந்து தன் வீட்டிலிருந்த தலைவிக்குத் தூதுவர்களை அனுப்பிக்கொண்டிருந்தான். அவ்வாறு வாயிலாய் வந்தவர்க்குத் தோழி, அவர்கள் சொற்களை மறுத்துக் கூறியது.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
பதைப்ப, ஒழிந்த செம்மறுத் தூவி
தெண்கழிப் பரக்குந் துறைவன்
எனக்கோ காதலன்; அனைக்கோ வேறே!

தெளிவுரை

வெள்ளாங்குருகின் குஞ்சினைத் தன் குஞ்சு எனக் கருதிக் காணச் சென்ற மென்மையான நடையைக் கொண்ட நாரை தன் இறகுகளைக் கோதுவதால், சிவந்த வரிகளைக் கொண்ட அதன் சிறிய இறகுகள் தெள்ளிய நீரினைக் கொண்ட கழியில் சென்று பரவும். அத்தகைய துறையினையுடைய தலைவன், தலைவி யிடத்தில் பேரன்பு கொண்டவன் என்று தூதுவர்களாகிய நீங்கள் கூறுவது எனக்கு உடன்பாடே! (எனக்கு மெய்யென்றே தோன்றுகிறது.) ஆனால், அன்னை போலும் என் தலைவிக்கு வேறாய்த் தோன்றுகின்றது. (அவளுக்கு அஃது உடன்பாடன்று.)

கருத்து

'தலைவன் தலைவியிடத்தில் பேரன்பு கொண்டவன் என்று நீங்கள் கூறுவதைத் தலைவி நம்பவில்லை.'

உள்ளுறை

நாரை கோத உதிர்ந்த தூவி கழியிடத்தே பரவும் என்னும் தொடர்மூலம், பரத்தையர் சேரியில் தலைவன் விடுத்த வாயில்கள், பரத்தையர் மனைதோறும் சென்று, அவரவர் சொன்ன பதிலுரையைச் சொல்லிக்கொண்டு திரிவதால், ஊர் முழுவதும் தலைவனின் பரத்தமை ஒழுக்கம் அலராய்ப் பரவி விட்டது என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

3. பதைப்ப - இறகுகளைக் கோத; ஒழிந்த - உதிர்ந்த; செம்மறுத் தூவி - சிவந்த வரிகளைக் கொண்ட சிறிய இறகு.
4. தெண்கழி - தெளிந்த நீரினைக் கொண்ட உப்பங்கழி; பரக்கும் - பரவும்.
5. அனைக்கு - தலைவிக்கு.

தோழி கூற்று

குறுந்தொகை 61 **தும்பிசேர்கீரனார்**

திணை : மருதம்

கூற்று

தோழி, தலைமகன் வாயில்கட்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையிற்பிரிந்தமையால் தலைவி ஊடியிருந்தாள். அவ்வூடலைத் தீர்க்கத் தலைவன் பாணன் முதலியோரைத் தூதாய் விட்டான். அத்தூதர்களை நோக்கித் தோழி, தலைவன் கொடுமையைக் குறிப்பால் கூறியது.

தச்சன் செய்த சிறுமா வையம்,
ஊர்ந்துஇன் புறாஅர் ஆயினும், கையின்
ஈர்ந்துஇன் புறூஉம் இளையோர் போல,
உற்றுஇன் புறேஎம் ஆயினும், நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்துஇன் புற்றனெம்; செறிந்தன வளையே.

தெளிவுரை

குழந்தைகள் விளையாடும் பொருட்டுத் தச்சனால் செய்யப் பட்ட குதிரை பூட்டப்பட்ட சிறு தேரினை, அதன்மேல் ஏறிச் செலுத்தி இன்பம் அடைய இயலாவிட்டாலும், கையினால் அவ்வண்டியை இழுத்துச் சிறுவர் இன்பமடைவர். அதுபோல நல்ல தேரினையும் பொய்கையினையும் கொண்ட வளமிக்க ஊரினையுடைய தலைவனை நேரில் தழுவி இன்பம் அடைய இயலாவிட்டாலும், அவன் நட்பை எங்கள் உள்ளத்தில் இருத்திக் கொண்டு இன்பம் அடைகிறோம். ஆதலால், தலைவியின் கையிலுள்ள வளையல்கள் கழன்றுவிடாமல் இறுகியிருக்கின்றன.

கருத்து

தலைவன் எம்மை மறந்துவிட்டாலும் நாங்கள் அவனை மறவாது எம் உள்ளத்தில் இருத்தி இன்பமுறுகிறோம்; அவன் அங்கேயே இருக்கட்டும்.

விளக்கம்

“தச்சனால் செய்யப்பட்ட சிறிய விளையாட்டு வண்டியை ஏறிச் செலுத்த இயலாவிட்டாலும், சிறுவர் தம் கையால் இழுத்து விளையாடி இன்புறுவர். அதுபோல, தலைவனைத் தழுவி மகிழ இயலாவிடினும் அவனோடு கூடியிருப்பதாய்க் கருதி இன்பமடைந்திருப்போம்” என்கிறாள், தோழி.

சொற்பொருள்

1. சிறு - சிறிய; மா - குதிரை; வையம் - வண்டி.
2. ஊர்ந்து - ஏறிச் செலுத்தி.
3. ஈர்ந்து - ஈர்த்து - இழுத்து; இளையோர் - சிறுவர்.
4. உற்று - தழுவி.
5. பொய்கை - குளம்; ஊரன் - தலைவன்; கேண்மை - நட்பு.
6. செய்து - உள்ளத்தில் இருக்கச்செய்து; செறிந்தன - இறுகிப் பொருந்தின; வளை - வளையல்கள்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 16 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாய்ப் புகுந்தார்க்குத் தோழி, ‘அவன் உறவையே நினைந்து இவள் கண்ணும் பசந்தன; இனி அவன் வந்து பெறுவது யாது?’ என்று சொல்லி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் விடுத்த பாணன் முதலிய தூதுவர்களுக்குத் தோழி காரணம் கூறி, தலைவி வீட்டு வாயிலில் தலைவன் நுழைவதை மறுத்துக் கூறியது.

ஓங்குபூ வேழத்துத் தூம்புடைத் திரள்கால்
சிறுதொழு மகளிர் அஞ்சனம் பெய்யும்
பூக்கஞல் ஊரனை உள்ளிப்
பூப்போல் உண்கண் பொன்போர்த் தனவே.

தெளிவுரை

வேழப்பூக்கள் நிறைந்த ஊரினையுடையவன், தலைவன். அவன் ஊரில் எளிய வாழ்க்கை வாழும் ஏழை மகளிர், ஓங்கி வளரும் வேழத்தின் உள்குழிந்த தட்டைக்குள் கண்ணுக்கிடும் அஞ்சன மையைப் பொதிந்து வைப்பர். அத்தகைய ஊரனாம் தலைவனை நினைந்து மை தீட்டப்பெற்ற பூவைப் போன்ற தலைவியின் அழகிய கண்கள் பொன் நிறத்துப் பசலையடைந்து பொலிவிழந்தன. (இனிமேல் தலைவன் வந்து என்ன பயன்?)

கருத்து

'தலைவியின் கண்கள் பசலை எய்தி அழகிழந்தன. இனி அவன் வந்து என்ன பயன்?'

உள்ளுறை

மை கெடாதவாறு பொதிந்து வைக்க, மகளிர் வேழக் கரும்பைப் பயன்படுத்துவர் என்னும் தொடர்மூலம், பரத்தை யர்க்குப் பயன்படும் வகையில் உதவி செய்து அவர்கள் நலங் கெடாதவாறு தலைவன் காப்பாற்றுகிறான் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

பொற்செப்பில் பெய்து வைக்க வேண்டிய சிறந்த அஞ்சனத்தை அற்ப வேழத் தட்டைக்குள் பெய்து வைப்பர், ஏழை மகளிர் என்னும் தொடர்மூலம், தலைவன் உயர்ந்த குலமகளாகிய தலைவியிடம் காட்ட வேண்டிய அருளை இழிந்த பரத்தை யரிடம் பெய்கிறான் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப் படுகிறது.

சொற்பொருள்

1. ஓங்கு பூ - உயர்ந்துள்ள பூ; வேழம் - கொறுக்கச்சி, வேழக்கரும்பு, மருத நிலப் பயிர்; தூம்பு - உள் துளை; திரள்கால் - திரண்ட தண்டு.
2. சிறுதொழு மகளிர் - உழைத்துப் பிழைக்கும் ஏழை மகளிர்; பெய்யும் - பொதிந்து வைக்கும்.
3. கஞல் - மிகுந்த; உள்ளி - நினைந்து.
4. பொன் போர்த்தன - பொன்போல் மஞ்சள் நிறம் கொண்டன (பசலையடைந்தன).

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 41 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

கழறித் தெருட்டற்பாலராகிய அகம்புகல் மரபின் வாயில்கள் புகுந்துழி, தலைமகனையும் பாணன் முதலாகிய பக்கத்தாரையும் இகழ்ந்து, தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியரிடையே பூசல் நிகழ்ந்தபோது, தவறுகளைச் சுட்டிக்காட்டித் தெளிவிக்கும் உரிமை கொண்ட பாணர், கூத்தர் முதலானோரைப் பரத்தை வீட்டிலிருந்த தலைவன் தூதாய் அனுப்ப, தலைவி வெறுப்புற்றுத் தலைவனையும் அவன் வாயில்களையும் இகழ்ந்துரைப்பது.

'தன்பார்ப்புத் தின்னும் அன்பில் முதலையொடு
வெண்பூம் பொய்கைத்து, அவன்ஊர்'என்ப; அதனால்
தன்சொல் உணர்ந்தோர் மேனி
பொன்போல் செய்யும் ஊர்கிழ வோனே.

தெளிவுரை

தான் ஈன்றெடுத்த பார்ப்பினைத் தானே உண்ணும் அன்புணர்ச்சியற்றது, முதலை. அதனோடு வெண்ணிறப் பூக்களையும் கொண்ட பொய்கைகளைக் கொண்டது தலைவன் ஊர் என்று சொல்வர். அதனாலேதான் தன் சொல்லை உணர்ந்து அன்பு கொள்பவரின் பொன்போன்ற மேனியைத் தன் பிரிவினால் பசலையால் மூழ்கச் செய்யும் கொடுமையைச் செய்கிறான்.

கருத்து

'அன்புணர்ச்சியற்ற அவன் சொல்லை நம்பும் மடமை எனக்கில்லை' என்று கூறித் தலைவி வாயில் மறுத்தாள்.

விளக்கம்

அன்பிற்சிறந்தவள் தாயாவாள்; ஆனால் முதலையோ, தான் ஈன்ற பார்ப்பினைத் தானே தின்று மகிழும் கீழ்மையான பண்பினைக் கொண்டது.

குறிப்பு

முதலை தன் பார்ப்பினைத் தின்னும் என்பது தலைவனின் அன்பில்லாமையையும், வெண்மையான பூக்களைப் பொய்கை பெற்றிருக்கிறது என்பது, தலைவன் கூறும் சொற்களை உண்மை என நம்பும் தலைவியின் வெள்ளை மனத்தையும் குறிப்பால் உணர்த்தும்.

சொற்பொருள்

1. பார்ப்பு - குட்டி (இளமைப் பருவ முதலை); தின்னும் - உண்ணும்; அன்பில் - அன்பில்லாத.
2. வெண்பூம் - வெண்மையான பூக்களைக் கொண்ட; பொய்கை - குளம்.
3. தன்சொல் உணர்ந்தோர் - தலைவனின் சொல்லை நினைத்துத் தேறியிருப்பவரது.
4. பொன் போல் செய்யும் - பொன்னைப் போலப் பசலை பெறச் செய்யும்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 134 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிவின்கண் தலைமகள் கவின் தொலைவு கண்டு வெறுத்து ஒழுகுகின்ற பாணற்குத் தலைமகன் வந்துழிக் கவின் எய்திய தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்திருந்த பொழுது, தலைவி தன் அழகு சிதையப் பெற்று வருந்தியிருந்தாள். அதுகண்டு பாணன் வெறுத்துப் பேசினான். தலைவன் திரும்பி வந்ததும் தான் இழந்த அழகினைத் தலைவி மீண்டும் பெற்றாள். அப்போது தலைவி பாணனிடம் கூறியது.

காண்மதி, பாண! இருங்கழிப் பாய்பரி
நெடுந்தேர்க் கொண்க னோடு
தான்வந் தன்றுஎன் மாமைக் கவினே.

தெளிவுரை

பாணனே! பெரிய கழிகளில் பாய்ந்து செல்லும் குதிரைகள் பூட்டிய தேரினைக் கொண்ட தலைவன் வந்தான்; அவனொடு மாந்தளிர் போன்ற என் மேனியழகும் தானாகத் திரும்ப வந்து விட்டது, காண்க.

கருத்து

'பாண! அவன் பிரியின் என் அழகும் அவனுடன் சென்றுவிடுகிறது.' (அழகு அழியாமல் இருக்க அவன் என்னை அகலாதிருக்க வேண்டும்; அஃது அவனால் இயலாது.)

விளக்கம்

தலைவன் பிரிந்தபோதே தலைவியின் அழகும் அவனுடன் சென்றுவிட்டது. தன் அழகு தன்னிடம் என்றும் இருக்க வேண்டுமானால் தன் காதலன் தன்னைப் பிரியலாகாது எனத் தலைவி புலப்படுத்துகிறாள்.

பரத்தையிடம் தலைவன் பிரிந்து செல்லப் பாணனே துணையாயிருப்பவனாதலால், இனியேனும் தலைவன் பிரிவுக்குப் பாணன் துணை செய்யாதிருக்க வேண்டுமென்கிறாள், தலைவி.

சொற்பொருள்

1. காண் மதி - காண்க.
2. பாய் பரி - பாய்ந்து செல்லும் குதிரை.
3. வந்தன்று - வந்தது.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 24 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையருள்ளும் ஒருத்தியை விட்டு ஒருத்தியைப்பற்றி ஒழுகுகின்றானென்பது கேட்ட தோழி, வாயிலாய் வந்தார் கேட்பத் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையர் பலருள் ஒருத்தியைக் கைவிட்டு இன்னொருத்தியோடு வாழுகின்றான் என்று தோழி கேள்விப்பட்டாள். அந்நிலையில் அவளையும் விட்டுவிட்டுத் தலைவியிடம் வருவதற்கு இசைவுபெற அவன் தூதுவர் வந்தனர். அவர்கள் காதில் விழுமாறு தோழி தலைவியிடம் சொல்லியது.

தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளை தின்னும் முதலைத்து அவன்ஊர்
எய்தினன் ஆகின்று கொல்லோ? மகிழ்நன்
பொலந்தொடி தெளிர்ப்ப முயங்கியவர்
நலம்கொண்டு துறப்பது எவன்கொல்? அன்னாய்!

தெளிவுரை

அம்மா! தலைவியே! தாய் சாகத் தான் பிறக்கும் புள்ளிகளைக் கொண்ட நண்டினையும், தன் பார்ப்பையே தின்னும் முதலையினையும் கொண்டது, நம் மருதநிலத் தலைவன் ஊர். அவ்வுயிர்களின் கொடும் பண்பினைத் தலைவனும் பெற்றுள்ளானோ? அவன், தம் தங்க வளையல்கள் ஒலிக்கத் தன்னைத் தழுவிய பெண்களின் நலத்தைக் கவர்ந்துகொண்டு, பின் பிரிவுத் துயரால் வருந்துமாறு அவரைத் துறந்து விலகுவது எதனாலோ?

கருத்து

“தலைவன் உனக்கு மட்டும் கொடுமை செய்பவன் அல்லன்; தன்னைத் தழுவிய பெண்களையெல்லாம் நுகர்ந்தபின் அவர் வருந்தக் கைவிடுதலே அவன் இயல்பு” என்று கூறி, வாயிலாய் வந்தார் கேட்குமாறு தோழி கூறினாள்.

விளக்கம்

'தன் தாய் சாகப் பிறக்கும் நண்டினையும், தான் பெற்ற பிள்ளையையே தின்னும் முதலையையும் கொண்டது, தலைவனுடைய ஊர். ஆகவே, அவ்வூரனான அவனிடத்தில் அன்பும் பாசமும் நிரம்பியிருக்கும் என எதிர்பார்த்தது நம் மடமையேயன்றி அவன் தவறன்று' என்கிறாள், தோழி.

குறிப்பு

தாய் சாகப் பிறக்கும் நண்டினையும், தன் பிள்ளையையே தின்னும் முதலையினையும் கொண்ட ஊர் என்றது, தலைவன் தான் கூடி மகிழ்ந்த மகளிரின் நலங்கெடுக்கும் அன்பில்லாதவன், இனிமேல் கூடவிருக்கும் மகளிரின் நலத்தை நுகர்ந்து பிரியும் அருளின்மையைக் கொண்டவன் என்னும் குறிப்புப் பொருளைத் தந்தது.

நிலையற்ற குணம் கொண்ட தலைவனைத் தலைவி ஏற்க மாட்டாள் என்பதைத் தலைவியிடம் கூறுவாள்போலத் தோழி வாயில் மறுத்தது.

சொற்பொருள்

1. தாய் சா - தாய் சாகும்படியாக; புள்ளி - புள்ளிகளைக் கொண்ட; கள்வன் - நண்டு.
2. பிள்ளை - முதலைப்பார்ப்பு; முதலைத்து - முதலையைக் கொண்டது.
3. எய்தினன் - (பண்பினைக்) கொண்டுள்ளான்.
4. பொலந்தொடி - பொன்னாலான வளையல்; தெளிர்ப்ப - ஒலிக்க; முயங்கியவர் - தழுவியவர் (பரத்தையர்).
5. நலங்கொண்டு - நலத்தைக் கவர்ந்துகொண்டு; துறப்பது - விட்டு நீங்குவது.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 18 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வந்து தெளித்துக் கூடிய தலைமகற்குப் பின் அவ்வொழுக்கம் உளதாயவழி அவன் வரவிடுத்த வாயில்கட்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையோடு வாழ்ந்த தலைவன், அவளை விட்டுப் பிரிந்து தலைவியிடம் வந்து, 'இனிப் பிரிய மாட்டேன்' என்று உறுதி கூறித் தலைவியோடு சேர்ந்தான். பிறகு, பரத்தையிடம் சென்றான். அங்கிருந்து மீண்டும் தன் இல்லம்வரத் தூதுவர்களை அனுப்பினான். அவர்களுக்குத் தலைவி சொல்லியது.

இருஞ்சாய் அன்ன செருந்தியொடு வேழம்
கரும்பின் அலமரும் கழனி ஊரன்,
பொருந்துமலர் அன்னஎன் கண்அழப்
பிரிந்தனன் அல்லனோ 'பிரியலென்' என்றே?

தெளிவுரை

"வாயிலாய் வந்தோரே! கருங்கோரையைப் போலத் தோன்றும் செருந்திப்பூவோடு சேர்ந்த வேழக்கரும்பு காற்றினால் அசைந் தாடும் கழனிகளையுடைய ஊரன், நம் தலைவன். முன்பு அவன் வந்து என்னைத் தெளிவித்துக் கூடியபோது, 'இனிப் பிரியேன்' என்று உறுதிமொழி கூறினான். பின்பு, மலர்போன்ற என் கண்கள் அழும்படியாக என்னைப் பிரிந்து போயினான்" என்று கூறித் தலைவி வாயிலாய் வந்தோரின் பேச்சினை மறுத்தாள்.

கருத்து

'அவன் பேச்சை அன்று மெய் என்று நம்பினேன். அதற்காக இப்போது அழுகிறேன்' என்று கூறித் தலைவி வாயிலாய் வந்தோரின் பேச்சை மறுத்தாள்.

விளக்கம்

வேழம் செருந்தியோடு சேர்ந்து, காற்றில் கரும்புபோல அசைந்தாடும் என்னும் தொடர்மூலம், தலைவனின் ஆதரவால் பரத்தையர் தம் தோழியரோடும் கூடி, ஊரிலே செருக்கித் திரிகின்றனர் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. இரு - கரிய; சாய் - பஞ்சாய்க்கோரை; செருந்தி - ஒரு வகைக் கோரை; வேழம் - வேழக்கரும்பு.
2. அலமரும் - சுழன்று ஆடும்.
3. பொருந்து மலர் - மலர் பொருந்தியது; அழ - அழும்படியாக.
4. பிரியலன் என்றே - இனிப் பிரிய மாட்டேன் என்று கூறியவன்; பிரிந்தனன் அல்லனோ? - பிரிந்து சென்றுவிட்டான் அன்றோ?

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 95 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

உண்டிக் காலத்து மனைக்கண் வருதலுஞ் சுருங்கிப் பரத்தை யிடத்தானாய்த் தலைமகன் ஒழுகியவழி, அவற்கு வாயிலாய் வந்தார்க்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் உணவு நேரத்தில் மட்டும் தன் இல்லத்திற்கு வந்துகொண் டிருந்தவன் பின்னர் அதையும் விடுத்துப் பரத்தை வீட்டிலேயே தங்கினான். அவன் தன் இல்லம் திரும்பத் தலைவியிடம் தூதர்களை அனுப்ப, அத் தூதரிடம் தலைவி சொல்லியது.

கருங்கோட்டு எருமை கயிறுபரிந்து அசைஇ
நெடுங்கதிர் நெல்லின் நாள்மேயல் ஆரும்
புனல்முற்று ஊரன் பகலும்
படர்மலி அருநோய் செய்தனன் எமக்கே.

தெளிவுரை

கரிய கொம்புகளைக் கொண்ட எருமை தான் கட்டப் பட்டிருக்கும் கயிற்றை அறுத்துக்கொண்டு சென்று, நீண்ட கதிர்களைக் கொண்ட நெற்பயிரினை நாளுணவாய் மேய்ந் திருக்கும் காட்சியினைக் கொண்டுள்ள நீர்வளம் சூழ்ந்துள்ள ஊரினையுடையவன், தலைவன். அவன் எமக்குப் பகற்போதிலும் படர்ந்து பெருகும் தீராத நோயினைச் செய்தனன். (அத்தகை யோன் பொருட்டுத் தூது வந்தது எதற்கு?)

கருத்து

'தலைவன் எம்மை முற்றிலும் மறந்துவிட்டான்; அவ்வாறிருக்க நீங்கள் தூதாய் வந்தது ஏன்?'

விளக்கம்

என்னைப் பிரிந்து பரத்தையரை நுகர்ந்து எனக்குத் துயர் செய்தவன், பகல் வேளையில் சிலபோது வந்தவன், பின்னர் அவ்வாறு வருவதையும் விடுத்து இப்போது இரவிலன்றிப் பகலிலும் துயர் செய்கிறான் எனத் தலைவி வருந்திக் கூறினாள்.

குறிப்பு

தலைவன் இரவிலும் வாராது, பகலிலும் வாராது பரத்தையரோடு வாழ்கின்றான் என்பது குறிப்புச் செய்தி.

உள்ளுறை

'எருமை, தான் கட்டப்பட்ட கயிற்றை அறுத்துக்கொண்டு நெற்பயிரை மேயும்' என்னும் அடிமூலம், தலைவனும் தன் குடிப் பெருமை, ஊரார் பழி ஆகிய கட்டுப்பாடுகளைத் தவிர்த்து விட்டுச் சென்று பரத்தையோடு கூடிக் களிப்பானாயினான் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. கரு - கரிய; கோடு - கொம்பு; பரிந்து - அறுத்து; அசைஇ - சென்று.
2. நாள் மேயல் ஆரும் - விடியலிலேயே மேயும்.
3. புனல்முற்று - நீர் நிறைந்து சூழும்; பகலும் - பகலிலும்.
4. படர்மலி - துன்பம் மிகுந்த; அருநோய் - பொறுத்தற்கு அரிய நோய்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 130 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிச் சென்றார்க்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தன்னிடம் தலைவன்பொருட்டாகத் தூது வந்தவரிடம் தலைவி மறுத்துக் கூறியது.

இசைஉரைக்கும் என்செய் திரம்நின் றவரை
வசைஉரைப்பச் சால வழுத்தீர் – பசைபொறை
மெய்ம்மருட்டு ஒல்லா மிகுபுனல் ஊரன்தன்
பொய்ம்மருட்டுப் பெற்ற பொழுது.

தெளிவுரை

“மெய்யான அன்பும், உண்மையும் இல்லாத மருதநிலத் தலைவனின் பொய் மாய உரைகளைக் (நீங்கள் கூறக்) கேட்ட பொழுது அவன் என்னிடம் நடந்துகொண்ட செயல்களே அவனது புகழை எடுத்துக் காட்டிவிட்டன. எனவே, அவனைப் புகழ்ந்து சொல்லும் உங்கள் உரை அவனுக்கு இகழ்ச்சியைக் கூட்டுகின்றது. எனவே, அவ்வுரையை விடுங்கள்.”

கருத்து

‘தலைவன் என்னிடம் நடந்துகொண்ட முறையே அவன் எத்தன்மை யினன் என்பதைக் கூறிவிட்டது. நீங்கள் ஏதும் கூறவேண்டா.’

குறிப்பு

உங்கள் புகழ்மொழிகளே அவனுக்குப் பழியாய் முடிந்துள்ளன.

சொற்பொருள்

2. பசை - அன்பு காரணமாய்; பொறை - மேற்கொள்ளப்பட்ட.
3. மெய்ம் மருட்டு - உண்மையான போக்கினை; ஒல்லா - கொண்டிராத; மிகு - மிக்க; புனல் ஊரன் - நீர் வளம் மிக்க மருதநிலத் தலைவன்.
4. பொய்ம்மருட்டு - பொய் மொழிகளை; பெற்ற பொழுது - கேட்ட பொழுது.

1. என் செய் திரம் - என்னிடம் தலைவன் காட்டிய காதல் செயல்களே; இசை - அவனது புகழினை; உரைக்கும் - எடுத்துச் சொல்வன ஆகும்; (ஆதலின்) நின்றவரை - கூடல் கருதி நிற்பவராகிய தலைவரை.
2. வசை உரைப்ப - (உங்கள் புகழ் மொழிகளே அவர்தம்) இகழ்வினைக் காட்டும்படி; சால - மிகுதியும்; வழுத்தீர் - போற்றிக் கூறாதீர்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 265 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பரத்தையிடத்தானாய் ஒழுகுகின்ற தலைமகன் விடுத்த வாயில் மாக்கட்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீட்டிலிருந்த தலைவன், தலைவி ஊடல் நீங்கித் தன்னை ஏற்குமாறு செய்யத் தூதுவர்களை அனுப்பினான். அவ்வாறு வந்த தூதுவர்களை நோக்கித் தலைவி சொல்லியது.

புலிகொல் பெண்பால் பூவரிக் குருளை
வளைவெண் மருப்பின் கேழல் புரக்கும்
குன்றுகெழு நாடன் மறந்தனன்
பொன்போல் புதல்வனோடு என்நீத் தோனே.

தெளிவுரை

புலியால் கொல்லப்பட்ட பெண்பன்றியின் குட்டியை, வளைந்த வெண்மையான கொம்பினைக் கொண்ட அதன் ஆண் பன்றி பாதுகாத்தற்கு உகந்த மலைநாட்டிற்கு உரியவனான தலைவன், இங்கு வருவதை மறந்துவிட்டான்; மேலும், பெறுதற்கரிய பொன்போன்ற மகனையும் என்னையும் அடியோடு மறந்து பரத்தை வீட்டிலேயே தங்கியிருக்கிறான். அத்தகையவன் பொருட்டு நீங்கள் தூதுவராய் வரலாமா?

கருத்து

'என்னையும் என் மகனையும் அறவே மறந்து நீங்கியவன்பொருட்டு நீங்கள் தூதுவராய் வரலாமா?'

உள்ளுறை

புலியால் கொல்லப்பட்ட தன் பெண்பன்றி ஈன்ற குட்டியை ஆண்பன்றி காக்கும் என்னும் தொடர்மூலம், பிரிவுத்துயரால் தன்னைச் சாகடித்த பின்னர், தலைவர் தம் மகனையேனும் காத்துப் பேணட்டும் எனத் தலைவி தன் மனச்சோர்வால் கூறும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுதல் காண்க.

சொற்பொருள்

1. பெண்பால் - பெண்பன்றி; பூவரி - பூப்போன்ற; குருளை - குட்டி.
2. வளை - வளைந்த; வெண் மருப்பு - வெண்மையான கொம்பு; கேழல் - ஆண் பன்றி; புரக்கும் - பாதுகாக்கும்.
3. கெழு - பொருந்திய.
4. புதல்வன் - மகன்; நீத்தோன் - நீங்கியவன்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 13 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாய்ப் புக்கார்க்குத் தலைமகள், 'அவன் பெண்டிர் நள்ளென் யாமத்தும் துயிலார்; அவரறியாமல் அவன் வருந்திறம் யாது?' எனச் சொல்லி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தன்னை ஏற்குமாறு தூதாய்ச் சிலரை அனுப்பினான். அவரிடம் தலைவி, "தலைவன் விரும்பும் பெண்டிர் நடு இரவிலும் தூங்க மாட்டார். அவர்கள் அறியாதவாறு அவன் எப்படி வர இயலும்?" என்று கேட்டு, 'தலைவன் இங்கு வருதற்கு உடம்படமாட்டேன்' என்று கூறியது.

பரியுடை நல்மான் பொங்குஉளை அன்ன,
அடைகரை வேழம் வெண்பூப் பகரும்,
தண்துறை ஊரன் பெண்டிர்,
துஞ்சுஊர் யாமத்தும், துயில்அறி யலரே.

தெளிவுரை

அழகாய் நடக்கும் நல்ல குதிரையின் தலையிலுள்ள நீண்ட சாமரையை ஒத்துக் கரையில் வளரும் வேழக்கரும்பு, வெண் பூக்களைச் சொரியும் குளிர்ச்சி பொருந்திய துறையைக் கொண்டவன், தலைவன். அவன் பெண்டிர், ஊர்மக்கள் யாவரும் உறங்கும் நடுயாமத்திலும் கண் விழித்திருப்பர். அவர்களை அறியாது தலைவன் தப்பி வருவது எவ்வாறு?

கருத்து

'தலைவனைப் பரத்தையர் விடமாட்டார். அவர்களிடமிருந்து அவன் தப்பி வர இயலாது. எனவே, நீங்கள் இங்கு வந்து என்ன பயன்?'

விளக்கம்

தலைவன் ஊரையாளும் தகுதியுடையவனாயினும், பரத்தை யரின் ஆளுகைக்கு உட்பட்டவன். ஆகவே, அவன் வருவதற்கு வாய்ப்பில்லை. எனவே, வருவான் என்று கூறுவதில் பொரு ளில்லை என்று கூறித் தலைவி வாயில் மறுத்தாள்.

உள்ளுறை

வேழத்தின் வெண்பூ குதிரையின் சாமரையைப் போலத் தோன்றும் என்பதன்மூலம், பரத்தையரும் குலமகளிர் போலவே நலமுடையவராய்த் தலைவனுக்குக் காணப்படுவர் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. பரி - குதிரையின் நடை வகைகளுள் ஒன்று; நல்மான் - நல்ல குதிரை; பொங்கு - மேன்மேலும் கிளர்ந்தெழும்; உளை - குதிரையின் தலையில் அணிவிக்கப்படுகின்ற அணி.
2. அடைகரை - அலை அடையும் கரை; வேழம் - வேழக் கரும்பு; பகரும் - சொரியும்.

3. பெண்டிர் - பரத்தையர்.
4. துஞ்சுதல் - துயிலுதல்; யாமம் - நள்ளிரவு; துயில் அறியலர் - உறக்கம் கொள்ளாதவர்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 35 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாய்ப் புகுந்தார் தலைமகன் குணங் கூறியவழி, 'அவனுக்கு இல்லாதனவே கூறுதலால் இப்பொழுதுகாண் என் மேனி பசந்தது' எனத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

ஊடியிருக்கும் தலைவியிடம் தலைவனுக்குச் சாதகமாய்ப் பரிந்து பேசச் சென்றவர்கள், தலைவனின் குணங்களைச் சிறப்பித்துக் கூறி, அவனை ஏற்றுக்கொள்ள வற்புறுத்தினர். அது கேட்ட தலைவி, "நீங்கள் அவனிடம் இல்லாத குணங்களைக் கூறினீர். இதோ பாருங்கள்; என் மேனி பசலை எய்திவிட்டது" என்று அவர்கள் பேச்சினை மறுத்து அவர்கள் கேட்பத் தன் தோழியிடம் சொல்லியது.

அம்ம வாழி, தோழி! நம்ஊர்ப்
பொய்கை ஆம்பல் நார்உரி மென்கால்
நிறத்தினும் நிழற்றுதல் மன்னே;
இனிப்பசந் தன்றுஎன் மாமைக் கவினே.

தெளிவுரை

தோழியே! நீ வாழ்க! நம் ஊர்ப் பொய்கையில் பூத்த ஆம்பலின் நார் உரிக்கப்பட்ட மெல்லிய தண்டினைக்காட்டிலும் மிகவும் ஒளியுடையதாய் இதுவரை என் மேனியழகு இருந்தது. அஃது, இப்போது அழகிழந்து பசந்துவிட்டது, பார்!

கருத்து

'தூதுவரின் பொய்ப் பேச்சை உண்மையென நம்பி மயங்க மாட்டேன்.'

குறிப்பு

தலைவன் திரும்பி வருவான் என நம்பிக்கையோடு ஆற்றியிருந்த தலைவியின் மேனி நிறம், தலைவன் சார்பாக வந்தவர் கூறிய பொய்யுரை களைக் கேட்டவுடனேயே 'தலைவன் வரமாட்டான்' எனக் கருதிப் பசலை அடைந்துவிட்டது. எனவே, 'தலைவன் இனி வரவேண்டா' எனத் தலைவி மறுத்துக் கூறினாள்.

சொற்பொருள்

2. பொய்கை - குளம்; ஆம்பல் - ஆம்பல் தண்டு; நார் உரி - நார் உரிக்கப்பட்ட; மென்கால் - மெல்லிய தண்டு.
3. நிறத்தினும் - நிறத்தைக் காட்டிலும்; நிழற்றும் - ஒளி வீசும்.
4. பசந்தன்று - பசலை பாய்ந்தது; மாமைக் கவின் - மேனியின் பேரழகு.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 32 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிப் புகுந்தார் கேட்பத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தை ஒழுக்கம் மேற்கொண்டிருக்கும் தலைவனிடமிருந்து வந்த தூதுவர்கள் தலைவியிடம் வாயில் வேண்டினர். அவர்கள் காதில் படுமாறு தலைவி தோழியிடம் சொல்லியது.

அம்ம வாழி, தோழி! மகிழ்நன்
ஒருநாள் நம்இல் வந்ததற்கு, எழுநாள்
அழுப என்ப,அவன் பெண்டிர்
தீஉறு மெழுகின் ஞெகிழ்வனர் விரைந்தே.

தெளிவுரை

தோழி! நீ வாழ்க! நம் இல்லம் நோக்கி நம் தலைவன் ஒரு நாள்தான் வந்தான். அதற்கே அவன் பெண்டிர், தீயிற்பட்ட

மெழுகினைப் போல விரைவாய் உள்ளம் உருகினவராய் ஏழு நாள்கள் முடிய அழுது தீர்த்தனர் என்று பலரும் கூறுகின்றனர்.

கருத்து

'தோழி! தலைவன் பிரிவை நாம் ஆற்றியிருக்கும் வல்லமை உடையோம். ஆற்றாது உருகும் அவன், பரத்தையரிடமே செல்லட்டும்.'

விளக்கம்

"ஒருநாள் அவனைப் பிரிய நேர்ந்ததற்கே ஏழு நாள் உருகி யழுது அவன் பரத்தையர் மெலிவர் என்கின்றனர். ஆதலின், அவன் அவரிடத்திலேயே சென்று அவர்களுக்கே அருள் செய்யட்டும்" என்று மன வெறுப்பால் தலைவி கூறினாள்.

சொற்பொருள்

1. மகிழ்நன் - தலைவன்.
2. நம் இல் - நம் வீட்டிற்கு; எழு நாள் - ஏழு நாள்.
3. அழுப - அழுதனர்; பெண்டிர் - பரத்தையர்.
4. தீஉறு - தீயிற்பட்டு; ஞெகிழ்வனர் - உருகியழுவர்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 33 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிப் புகுந்தார் கேட்பத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தை ஒழுக்கம் மேற்கொண்டிருக்கும் தலைவனிடமிருந்து வந்த தூதுவர், தலைவியிடம் வாயில் வேண்டினர். அவர்கள் காதில் படுமாறு தலைவி தோழியிடம் சொல்லியது.

அம்ம வாழி, தோழி! மகிழ்நன்
மருதுஉயர்ந்து ஓங்கிய விரிபூம் பெருந்துறைப்
பெண்டிரொடு ஆடும் என்பதன்
தண்தார் அகலம் தலைத்தலைக் கொளவே.

தெளிவுரை

தோழி! நீ வாழ்க! தலைவனுடைய பெரிய நீர்த்துறைகள், உயர்ந்து, வளர்ந்து, இதழ் விரிந்த பூக்களையுடைய மருத மரங்களைக் கொண்டிருப்பவை. அத்துறைகளில் நம் தலைவன், குளிர்ச்சி பொருந்திய மாலையினை அணிந்த தன் மார்பினைப் பரத்தையர் ஒவ்வொருவரும் புணையாய்ப் பற்றி நீராடி இன்புற்று மகிழுமாறு அவர்களுடன் நீராடி விளையாடினன் என்று கூறுகிறார்களே!

கருத்து

'பலராலும் விரும்பித் தழுவப்படும் நம் தலைவனுக்கு நம் உறவு இப்போது தேவையற்றது.'

விளக்கம்

பரத்தையர் அவனை விடமாட்டார் என்று கூறியவளாய்த் தலைவி வாயில் மறுக்கிறாள்.

சொற்பொருள்

1. மகிழ்நன் - தலைவன்.
2. மருது - மருத மரங்கள்.
3. பெண்டிர் - பரத்தையர்; ஆடும் - ஆடுவான்; என்ப - என்று கூறுவர்.
4. அகலம் - மார்பு; தலைத் தலைக்கொள - ஒவ்வொருவரும் தெப்பமாய்க் கொள்ளும்படி.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 34 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிப் புகுந்தார் கேட்பத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தை ஒழுக்கம் மேற்கொண்டிருக்கும் தலைவனிடமிருந்து வந்த தூதுவர், தலைவியிடம் வாயில் வேண்டினர். அவர்கள் காதில் படுமாறு தலைவி தோழியிடம் சொல்லியது.

அம்ம வாழி, தோழி! நம்மூர்ப்
பொய்கைப் பூத்த, புழைக்கால் ஆம்பல்
தாதுஏர் வண்ணம் கொண்டன
ஏதி லாளர்க்குப் பசந்தஎன் கண்ணே.

தெளிவுரை

தோழி! நீ வாழ்க! அன்பில்லாதவனாய் ஒழுகும் காதலன் பொருட்டு என் கண்கள், நம்மூர்ப் பொய்கையில் பூத்த உள்துளை பொருந்திய தண்டினைக்கொண்ட அல்லியின் தாது போன்ற பொன்னிறத்தை அடைந்தன.

கருத்து

'தலைவன் பிரிவால் என் கண்கள் பசலை பெற்றுள்ளன.'

குறிப்பு

ஆம்பலின் தண்டு உள்துளை கொண்டது என்பது, தலைவன் மனத்தில் திண்ணிய அன்பில்லை என்னும் குறிப்புப் பொருளைக் கொண்டுள்ளது.

சொற்பொருள்

2. பொய்கை - குளம்; பூத்த - மலர்ந்த; புழைக்கால் - உள்துளை பொருந்திய தண்டு; ஆம்பல் - ஆம்பல் மலர்.
3. தாது - பூந்தாது; ஏர் - அழகு; வண்ணம் - நிறம்.
4. ஏதிலாளர் - அயலவர் (தலைவன்); பசந்த - பசலையடைந்தன.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 184 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வாயில் வேண்டி வந்தார் தலைமகன் அன்புடைமை கூறியவழி, வாயில் மறுக்கும் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

பரத்தை இல்லத்திலுள்ள தலைவன் தலைவியின் ஊடலைப் போக்கப் பாணன் முதலியோரைத் தூதாய் அனுப்பினான். அவர்கள் தலைவியிடம் வந்து, 'தலைவன் மிகவும் அன்பு கொண்டவன்' எனப் பாராட்டினர். அது கேட்ட தலைவி அவரை மறுத்துக் கூறியது.

நெய்தல் இருங்கழி நெய்தல் நீக்கி,
மீன்உண் குருகுஇனம் கானல் அல்கும்
கடல்அணிந் தன்று,அவர் ஊரே;
கடலினும் பெரிதெமக்கு அவருடை நட்பே!

தெளிவுரை

நெய்தல் நிலத்தில் உள்ள பெரிய கழிகளில் நெய்தற்பூக்களை நீக்கி அங்குள்ள மீனை உண்ணும் கொக்குகளின் கூட்டம் கடற்கரைச்சோலையில் தங்கும். அத்தகைய கடலால் அழகு பெற்றுச் சிறந்தது தலைவனுடைய ஊர். அவன் கொண்ட நட்பு எமக்கு அக்கடலினும் பெரிது.

கருத்து

'தலைவன் என் உறவைத் துறந்து பரத்தையர் உறவைப் பெரிதெனப் பேணி வாழ்கிறான்.'

விளக்கம்

நான் தலைவனோடு கொண்டுள்ள நட்புக் கடலினும் பெரிதாகும். ஆனால், அவனோ பரத்தையரிடம் அன்பு காட்டி அவர்கள் வீட்டிலேயே இன்புற்று வாழ்கிறான். இதுதான் அவன் என்னிடம் கொண்டுள்ள அன்பா? நீங்கள் கூறுவது அனைத்தும் பொய் எனப் பாணன் முதலியோரை இகழ்ந்து பேசுகிறாள், தலைவி.

குறிப்பு

நெய்தற்பூக்களை நீக்கி மீனுண்ட கொக்கு தன் கூட்டத்தோடு கானலில் சென்று தங்கும் என்னும் தொடர்மூலம், தலைவன் தன் வீட்டை நீங்கிப் பரத்தையர் சேரியில் இன்பம் துய்த்து அவருடன் அங்கேயே தங்குகின்றான் என்னும் குறிப்புச்செய்தி பெறப்படுகிறது.

தலைவனது அன்பின்மையைச் சுட்டிக்காட்டி வெளிப்படையாய்த் தலைவி வாயில் மறுத்தாள்.

சொற்பொருள்

1. நெய்தல் - நெய்தல் நிலம்; இருங்கழி - கரிய உப்பங்கழி; நெய்தல் - நெய்தல் மலர்.
2. குருகு - கொக்கு; இனம் - கூட்டம்; கானல் - கடற்கரைச்சோலை; அல்கும் - தங்கும்.
3. கடல் அணிந்தன்று - கடலைக் கொண்டது.

தலைவி கூற்று

குறுந்தொகை 50 **குன்றியனார்**

திணை : மருதம்

கூற்று

கிழவற்குப் பாங்காயின வாயில்கட்குக் கிழத்தி சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையிடமிருந்து பிரிந்த தலைவனால் விடப்பட்ட தூதுவரை நோக்கி, “அவர் பரத்தையோடு விளையாடும் நீர்த்துறை அழகு பெற்றது; அவர் அணைத்த என் தோள்களோ மெலிவுற்றன” என்று தலைவி கூறியது.

ஐயவி அன்ன சிறுவீ ஞாழல்
செவ்வீ மருதின் செம்மலொடு தாஅய்த்
துறைஅணிந் தன்று, அவர்ஊரே; இறைஇறந்து
இலங்குவளை நெகிழச் சாஅய்ப்
புலம்புஅணிந் தன்று,அவர் மணந்த தோளே.

தெளிவுரை

ஞாழல் மரத்தின் பூக்கள் வெண்சிறு கடுகைப்போன்று சிறிய மருத மரத்தின் முதிர்ந்த சிவந்த மலர்களோடு தரையில் உதிர்ந்து பரவிக் கிடந்து தலைவருடைய ஊரின் நீர்த்துறையை அழகு செய்கின்றன. அவர் முன்பு தழுவிக் கூடிய என் தோள்களோ, வளையல்கள் மணிக்கட்டினைக் கடந்து நெகிழ்ந்து விழும்படி தனிமைத் துன்பத்தைத் தம் அழகாய்ப் பெற்றுள்ளன.

கருத்து

'தலைவன் புறக்கணிப்பால் என் உடல் மெலிவுற்றது.'

விளக்கம்

தலைவன் பரத்தையரோடு ஆடுதலால் ஞாழல் பூக்கள் சிதறி நீர்த்துறை அழகு பெற்றுள்ளது. அவன் பிரிந்தமையால் என் தோள்கள் மெலிந்துள்ளன.

குறிப்பு

'ஊர்த்துறையின் அழகு தலைவனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறது. மெலிந்த என் தோள்கள் என் வருத்த மிகுதியைத் தெரிவிக்கின்றன.'

பிரிந்த தலைவன் மீண்டும் வருவானாயின் என் தோள்கள் இழந்த அழகைப் பெறும்; தனிமைத்துன்பம் நீங்கித் துணை பெற்றுத் தழைக்கும் என்னும் கருத்தைத் தலைவி குறிப்பால் புலப்படுத்தினாள்.

சொற்பொருள்

1. ஐயவி - கடுகு; சிறுவீ - சிறிய மலர்; ஞாழல் - ஞாழல் மரம்.
2. செவ்வீ - சிவப்பான பூ; மருது - மருத மரம்; செம்மலொடு - பழைய பூக்களோடு; தாஅய் - பரவி.
3. துறை அணிந்தன்று - துறையை அழகு செய்துகொண்டிருக்கின்றன; இறை இறந்து - மணிக்கட்டினைக் கடந்து.
4. வளை - வளையல்; நெகிழ - கழன்று விழுமாறு; சாய் - மெலிந்து.
5. புலம்பு - தனிமை; அணிந்தன்று - அழகாய்ப் பெற்றுள்ளன, தாங்கியிருக்கிறது; மணந்த - தழுவப்பட்ட.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 27 **மாறன் பொறையனார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிச் சென்றார்க்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிற்பிரிந்துள்ள தலைவனிடம் கொண்டுள்ள சினம் நீங்கி அவனை ஏற்க வேண்டுமென்று தலைவன் சார்பில் வந்து வேண்டியவரிடம் தலைவி மறுத்துக் கூறியது.

தண்வயல் ஊரன் புலக்குந் தகையமோ
நுண்ணறல் போல நுணங்கிய ஐங்கூந்தல்
வெண்மரல் போல நிறந்திரிந்து வேறாய
வண்ணம் உடையேம்மற் றியாம்.

தெளிவுரை

முன்பு என் கூந்தல் ஆற்றின் அறல் மணல்போலக் கருமையாய், ஐவகையாய்ப் பின்னப்படக்கூடியதாயிருந்தது. இப்போது அது வெண்மையான கற்றாழைபோல நிறம் மாறுபடத் தொடங்கி விட்டது. எனவே, நன்செய் நிலங்களையுடைய தலைவனுடன் ஊடும் தகுதி எனக்கு இல்லை.

கருத்து

'என் கூந்தலில் நரை பொருந்தியதால் அவன் என்னை விரும்பவில்லை. அன்பில்லாத அவனை ஏற்பதால் என்ன பயன்?'

சொற்பொருள்

1. புலக்கும் - ஊடும்; தகையமோ - தகுதியினைப் பெற்றுள்ளோமோ?
2. நுண் அறல் - நுண்மையான அறல் மணல்; நுணங்கிய - துவளக் கூடிய; ஐங்கூந்தல் - ஐவகைப்பட்ட கூந்தல்.
3. வெண்மரல் - வெண்மையான கற்றாழை; வேறாய - மாறுபட்ட.
4. வண்ணம் - நிறம். (ஆதலால், யாம் ஊடும் தகுதி கொண்டவரோ?)

தோழி கூற்று

நற்றிணை 170 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : மருதம்

கூற்று

தோழி, விறலிக்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவி கொண்டுள்ள ஊடலைத் தீர்க்கத் தலைவன் விறலியைத் தூதாய் அனுப்பினான். தோழி, 'இவ்விறலியே தலைவனைப் பரத்தையுடன் சேர்த்தவள்' என்று ஆயத்தாரிடம் கூறி, 'இவள் மீண்டும் அச்செயலைச் செய்ய மாட்டாள் என்று உறுதி கூற இயலாது. ஆதலால், தலைவனை நாம் காத்துக் கொள்வோம்' என்று கூறினாள். அது கேட்ட விறலி, தான் கூறுதற்கு ஏதுமின்றித் திரும்பினாள்.

மடக்கண், தகரக் கூந்தல், பணைத்தோள்,
வார்ந்தவால் எயிற்று, சேர்ந்துசெறி குறங்கின்,
பிணையல் அம்தழைத் தைஇ, துணையிலள்
விழவுக்களம் பொலிய வந்துநின் றனளே;
எழுமினோ எழுமின்எங் கொழுநற் காக்கம்;
ஆரியர் துவன்றிய பேர்இசை முள்ளூர்ப்
பலர்உடன் கழித்த ஒள்வாள் மலையனது
ஒருவேற்கு ஓடி யாங்குநம்
பன்மையது எவனோஇவள் நன்மைதலைப் படினே?

தெளிவுரை

"இவ்விறலியை எல்லோரும் பாருங்கள்; மடப்பம் பொருந்திய கண், மயிர்ச்சந்தனம் அணிந்த கூந்தல், பருத்த தோள், வரிசையான வெள்ளிய பற்கள், திரண்டு நெருங்கிய தொடைகள் ஆகியவற்றைக் கொண்டு தனக்கு நிகரற்றவளாயுள்ளாள். இவ் விறலி, பிணைத்த அழகிய தழையுடையை உடுத்துள்ளாள்; திருவிழா நடைபெறும் இடமெங்கும் பொலிவெய்துமாறு, தன்னந்தனியளாய் வந்து நிற்கிறாள். நாம் தலைவனைப் பாதுகாக்க வேண்டியவர்களாய் உள்ளோம்! எழுங்கள்! எழுங்கள்! இவள் நம் தலைவனை வேறு பரத்தை ஒருத்தியுடன்

கூட்டுவிக்கும் செயலை மேற்கொண்டுவிட்டால், ஆரியர் நெருங்கிச்செய்த பெரிய புகழைக் கொண்ட முள்ளூர்ப் போர்க் களத்தில், ஒள்ளிய வாளினைக் கொண்ட மலையனது ஒப்பற்ற வேற்படைக்கு அஞ்சி அந்த ஆரியப்படை ஓடியதுபோல, பலவாய்க் கூடியுள்ள நமது பெருமை ஒரு பயனுமில்லாது போகும். அதனால், தலைவனுக்கு நாம் ஆக்கம் தேடுவோம். இவள் செயலை ஒழிப்போம். அனைவரும் ஒருங்கே எழுங்கள்! எழுங்கள்!" என்றாள், தோழி.

கருத்து

வாயிலாய் வந்த விறலியைக் கண்டதும், 'தலைவனை இவ்விறலி வேறு பரத்தை ஒருத்தியிடம் சேர்த்துவிடாதபடி பாதுகாப்போம்! எழுக அனைவரும்' என்றாள், தோழி.

விளக்கம்

"ஆரியப்படை தாக்குதலை மேற்கொண்டது. பெரும் புகழைக் கொண்ட முள்ளூர்ப் போர்க்களத்தில் மலையமான், அப்படையை எதிர்த்து நின்றான். அப்படையினர் பலரா யிருந்தனர். மலையமானோ தனி ஒருவனாய் நின்று, வாளை உருவிச் செய்த போரில் ஆரியர்கள் தோற்றோடினர். அதுபோல் இவ்விறலி தலைவனுக்குப் புதியவளான பரத்தை ஒருத்தியைக் கூட்டுவிக்க முயன்றால் நாம் பலராய் இருந்தும் இவளுக்கு எதிராய் எதனையும் செய்ய இயலாதவராய்விடுவோம். ஆதலின், அதற்கிடமில்லாமல் இப்பொழுதே நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து தலைவனுக்கு ஆக்கம் தேடுவோம்!" எனத் தோழி தன் வீட்டில் இருந்தவரிடம் கூறினாள்.

வரலாற்றுக்குறிப்பு

முள்ளூர் மன்னன், மலையமான் திருமுடிக்காரி ஆவான். அவனை ஆரியப்படை முள்ளூர்க் களத்தில் திரண்டு எதிர்த்துப் போரிட்டது. போரில் மலையமான் தனியனாய் எதிர்த்து நின்று போர் புரிந்து வென்றான் என்பது வரலாற்றுக் குறிப்பு.

சொற்பொருள்

1. தகரம் - மயிர்ச்சாந்து.

2. வார்ந்த - நிரையாய் ஒழுங்குற அமைந்த; வால் - வெண்மை; செறி - நெருங்கிய; குறங்கு - தொடை.
3. பிணையல் - பிணைத்துக் கட்டிய; அம்தழை - அழகிய தழையுடை; தைஇ - உடுத்து; துணையிலள் - தனியளாய்.
4. பொலிய - பொலிவெய்துமாறு.
5. எழுமின் - எழுங்கள்; கொழுநன் - தலைவன்; காக்கம் - காப்போம்.
6. துவன்றிய - நெருங்கிச் செய்த; பேர்இசை - பெரும் புகழ்; முள்ளூர் - ஒரு போர்க்களம்.
7. கழித்த - உறையினின்றும் நீக்கிய; மலையன் - மலையமான் திருமுடிக்காரி என்னும் மன்னன்.
8. ஒருவேற்கு - ஒருவனுக்கு; ஓடியாங்கு - தோற்றோடியது போல.
9. பன்மையது - பலராய் இருப்பது; எவனோ - என் செய்ய இயலும்; தலைப்படின் - செயற்படுமானால், கைகூடுமானால்.

தோழி கூற்று

நற்றிணை 310 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாகப் புக்க விறலியைத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையரிடமிருந்து மீண்டும் தலைவியிடம் வர எண்ணிய தலைவன், தலைவியின் ஊடலைத் தீர்ப்பதற்காக விறலியை அவளிடம் தூதாய் அனுப்புகிறான். அவ்விறலியிடம் தோழி சொல்லியது.

விளக்கின் அன்ன சுடர்விடு தாமரைக்
களிற்றுச் செவிஅன்ன பாசடை தயங்க
உண்துறை மகளிர் இரியக் குண்டுநீர்
வாளை பிறழும் ஊரற்கு – நாளை
மகட்கொடை எதிர்ந்த மடங்கெழு பெண்டே!
தொலைந்த நாவின் உலைந்த குறுமொழி
உடன்பட் டோராத் தாயரோடு ஒழிபுடன்
சொல்லலை கொல்லோ நீயே? – வல்லைக்
களிறுபெறு வல்சிப் பாணன் கையதை

10 வள்ளுயிர்த் தண்ணுமை போல
உள்யாதும் இல்லதோர் போர்வையஞ் சொல்லே!

தெளிவுரை

விளக்கினைப் போன்று ஒளி வீசுகின்ற மலரினைக் கொண்டுள்ளது, தாமரை. யானைக் காதுகளைப் போன்ற அதன் இலைகள் அசையும் நீர் நிரம்பிய ஆழமான நீர்த்துறையில் இறங்கிய பெண்கள் அஞ்சி ஓடுமாறு வாளை மீன்கள் துள்ளிப் பாயும் ஊருக்கு உரிமையுள்ளவன், நம் தலைவன். அவனுக்கு நாள் ஒன்றுக்குப் பரத்தை ஒருத்தியைக் கூட்டுவிக்க முற்பட்டுப் பரத்தை ஒருத்தியை நேர்வித்து வந்த மடமை கொண்ட விறலியே! மெய்ம்மை பேசியறியாத உன் பேச்சைக் கேட்டு இழிந்த உன் சொல்லுக்கு உடன்பட்ட பரத்தையருக்குத் தாயான வருடன் பேசுவதை விட்டுவிட்டு எம்மிடம் வந்து பேசுவதை ஒழி. களிற்றைப் பரிசிலாய்ப் பெற்று வாழும் பாணன் கையில் உள்ள, மிகுந்த ஒலியை எழுப்பக்கூடிய தண்ணுமை என்னும் இசைக் கருவியைப் போல உன் உரையும் உள்ளீடாகிய உண்மை இல்லாமல் பொய்ச்சொற்களால் போர்த்தப்பட்டுள்ளது.

கருத்து

'விறலியே! ஒவ்வொரு நாளும் தலைவனுக்குப் புதுப்புதுப் பரத்தையைக் கூட்டுவிக்கும் நீ, அப்பரத்தையருடனும் அவர் தாயருடனும் பேசாமல் இங்கு எதற்காக வந்தாய்?

விளக்கம்

விறலியே! தண்ணுமையின் உள்ளகம் ஏதும் இல்லாது வெற்றிடமாய் இருக்கும். அதன் மேலே தோல் போர்த்தப் பட்டிருக்கும். அதுபோல, உள் உள்ளத்திலே உண்மை என்பதே இல்லாமல் வெளிப்பகட்டாய்ப் பொய்ச்சொற்களைப் பேசி வருகிறாய்! ஒவ்வொரு நாளும் பரத்தை ஒருத்தியைத் தலைவனோடு கூட்டுவிக்கும் நீ, அப்பரத்தையருக்குத் தாயான வருடன் பேசுவதை விட்டுவிட்டு இங்கு வந்தது ஏன் எனக் கேட்டுத் தோழி விறலியை வெளியே செல்லுமாறு கூறுகிறாள்.

குறிப்பு

'உன் தலைவனுக்குப் புதிய பெண்ணொருத்தி தேவையானால் இங்கு ஏன் நீ வரவேண்டும்? அவன் தரும் பொருளை விரும்பும் பரத்தையரைப் பெற்ற தாயரைக் கண்டு பேசிக் கூட்டுவிக்கலாமே' எனத் தோழி விறலியை எள்ளி நகையாடினாள்.

இறைச்சி

தாமரை வருந்தவும், மகளிர் அஞ்சி ஓடவும் வாளை மீன் நீரில் பிறழும் என்னும் தொடர்மூலம், தலைவி, தோழி ஆகியோர் வருந்தவும், காமக்கிழத்தியர் கதறவும் விறலி புதிய பரத்தையைத் தலைவனோடு கூட்டுவிப்பாள் என்னும் இறைச்சிப்பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. சுடர்விடு - ஒளி வீசும்.
2. பாசடை - பசிய இலை; தயங்க - அசைய.
3. இரிய - ஓடுமாறு; குண்டு - ஆழம்.
4. வாளை - வாளை மீன்.
5. மகட்கொடை எதிர்ந்த - பரத்தை ஒருத்தியைக் கூட்டுவிக்க முற்பட்டுச் (சேர்த்து வைத்த).
6. தொலைந்த நாவின் - உண்மை தொலைந்த பேச்சைக் கேட்டு; உலைந்த - நிலை குலைந்த.
7. உடன்பட்டு, ஓரா - (உண்மையை) ஆராய்ந்து அறியாத; உடன்ஒழிபு - உடனே கைவிட்டு.
8. வல்லை - விரைவு.
9. வல்சி - உணவு; கையதை - கையில் உள்ள.
10. வள்ளுயிர் - மிகுந்த ஓசையை எழுப்பும்.
11. உள் யாதும் இல்லது - உள்ளீடு எதுவும் இல்லாத.

தலைவி கூற்று

அகநானூறு 206 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிச் சென்ற விறலிக்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர் உறவிலே திளைத்திருந்தான், தலைவன். அதனால் தலைவி சினம் கொண்டு ஊடியிருந்தாள். தன் இல்லம் திரும்ப விரும்பிய தலைவன் தலைவியைச் சமாதானப்படுத்த விறலியைத் தூதாய் அனுப்பினான். தலைவி விறலியின் பேச்சை மறுத்துத் தன் தோழியிடம் கூறியது.

என்எனப் படும்கொல்– தோழி!– நல்மகிழ்ப்
பேடிப் பெண்கொண்டு ஆடுகை கடுப்ப,
நகுவரப் பணைத்த திரிமருப்பு எருமை
மயிர்க்கவின் கொண்ட மாத்தோல் இரும்புறம்,
சிறுதொழில் மகாஅர் ஏறி, சேணோர்க்குத்
துறுகல் மந்தியின் தோன்றும் ஊரன்,
மாரி ஈங்கை மாத்தளிர் அன்ன,
அம்மா மேனி, ஆய்இழை, மகளிர்
ஆரம் தாங்கிய அலர்முலை ஆகத்து
ஆராக் காதலொடு தார்இடை குழைய,
முழவுமுகம் புலரா விழவுடை வியல்நகர்,
வதுவை மேவலன் ஆகலின், அதுபுலந்து,
அடுபோர் வேளிர் வீரை முன்துறை
நெடுவெள் உப்பின் நிரம்பாக் குப்பை,
பெரும்பெயற்கு உருகி யாஅங்கு,
திருந்துஇழை நெகிழ்ந்தன, தடமென் தோளே?

தெளிவுரை

"உழவிற்குப் பயன்படும் எருமைகள் முறுக்கிவிட்டாற் போன்ற கொம்புகளைக் கொண்டுள்ளன. கள் குடித்த ஒருவன் பேடிப்பெண் வேடம் பூண்டு, தன் கைகளை முதுகுப்புறமாய் நீட்டி மேல்பக்கமாய் வளைத்தது போல அக்கொம்புகள்

உள்ளன. கரிய முடியினைக் கொண்ட தோல் வாய்க்கப்பெற்ற அவ்வெருமையின் பெரிய முதுகில் குறும்பு செய்யும் சிறுவன் ஏறி விளையாடுகிறான். அக்காட்சி, தொலைவில் இருப்பவர்க்கு உருண்டைக்கல்லின்மீது பெண்குரங்கு ஒன்று அமர்ந்திருப்பது போலத் தோற்றமளிக்கிறது. அத்தகைய ஊரினையுடைய தலைவன் இப்போது பரத்தையர் சேரியில் உள்ளான். அங்கே, மாரிக்காலத்து ஈங்கைச்செடியில் தோன்றும் தளிரைப் போன்ற மேனியினைக் கொண்டவரும், ஆராய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்தவரும், மார்பில் முத்து மாலை சூடியவருமாகிய மகளிரின் விரிந்த மார்பகத்தை ஆசையோடு தனது மாலை கசங்கும்படி தழுவி இன்புறுகின்றான். முழவு முழங்கிக் கொண்டிருக்கும் விழாக்களைக் கொண்ட இவ்வூரில் அவன் தினமும் பரத்தையரோடு மகிழ்பவனாய் இருக்கிறான். இதைக் கேள்வியுற்ற எனக்குச் சினமும் துயரமும் உண்டாகின்றன. வெற்றி வாய்ந்த போரினைச் செய்யும் வேளிர்க்கு உரிமையான 'வீரை' நகரில், கடற்கரையின் முன்பகுதியில் உப்புக்களங்கள் உள்ளன. அவற்றில் வந்து படியும் நீர், காய்ந்த பின் உப்புக்குவியல் களாய் நீண்ட வரிசையில் குவிந்திருக்கும். அக்குவியல்கள் பெருமழையில் கரைவதுபோல என் தோள்கள் மெலிவுற வளையல்கள் கழலப்பெற்றன. நிலைமை இவ்வாறிருக்கத் தலைவன் இங்கு வருவதற்காக விறலியைத் தூது அனுப்பி யுள்ளான். அதற்கு என்ன பொருள்?" என்று தோழியிடம் கூறுவதுபோலத் தலைவி விறலியிடம் வாயில் மறுப்பதைத் தெரிவிக்கிறாள்.

கருத்து

'விறலியே! தலைவன் நாளுக்கொரு பரத்தையிடம் சென்று இன்புறுகிறான். நீயோ அவனை நல்லவன் என்கிறாய். எது உண்மை?'

விளக்கம்

பரத்தையர் வீட்டிலுள்ள தலைவன் தன் வீடு திரும்ப விரும்பு கிறான்; ஊடியிருக்கும் தலைவியைச் சமாதானப்படுத்த விறலியைத் தூதாய் அனுப்பினான். அவ்விறலி கேட்குமாறு தலைவி தன் தோழியிடம், 'தோழியே! தலைவன் ஆராய்ந்

தெடுத்த அணிகலன்களை அணிந்துள்ள பரத்தையை ஆராக் காதலுடன் தன் மாலை குழையும்படி தழுவியிருக்கிறான். நாள்தோறும் புதுப் புதுப் பரத்தையரோடு மகிழ்ந்திருக்கிறான். ஆனால், அவன் அனுப்பியுள்ள விறலியோ, அவனை, 'நல்லவன்; இனியன்' என்று கூறிச் சமாதானம் பேச வந்திருக்கிறாள். இதற்கு என்ன பொருள்?' என்று கூறி வாயில் மறுக்கிறாள்.

சொற்பொருள்

1. நல்மகிழ் - மிகுந்த கள் போதை.
2. பேடிப் பெண் கொண்டு - பேடியாகிய பெண் உருவம் பூண்டு; ஆடுகை - ஆடுகின்றவனது பின்சென்று மேல் வளைந்த கை; கடுப்ப - ஒப்ப.
3. நகுவர - விளங்குதலுற; பணைத்த - பெருத்த; திரி - முறுக்குண்ட; மருப்பு - கொம்பு.
4. மாத்தோல் - கரிய தோல்; இரும்புறம் - முதுகு.
5. சிறுதொழில் - குறுந்தொழில்களைச் செய்யும்; மகாஅர் - சிறுவர்கள்; சேணோர்க்கு - சேய்மையிலுள்ளவர்க்கு.
6. துறுகல் - உருண்டைக்கல்; மந்தி - பெண்குரங்கு.
7. ஈங்கை - ஈங்கைச்செடி.
8. ஆயிழை மகளிர் - ஆய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்த மகளிர் (பரத்தையர்).
9. ஆரம் தாங்கிய - முத்துமாலை சூடிய; அலர்முலை - விரிந்த முலைகளை; ஆகம் - மார்பு.
10. ஆரா - அமையாத; குழைய - கசங்க.
11. முழவு முகம் புலரா - முழவின் ஒலி ஓய்தலில்லாத; விழவு - விழா; வியல் நகர் - அகன்ற நகர்.
12. வதுவை மேவலன் - மணந்து மகிழ்ந்திருக்கிறான்; புலந்து - வெறுத்து.
13. வீரை - வேளிர்க்கு உரிமையான நகர்.
14. நிரம்பா - அளவற்ற; குப்பை - குவியல்.
15. பெயல் - மழை; உருகியாஅங்கு - கரைந்து போதலைப் போல.
16. பெரிய மெல்லிய தோள்கள் மெலிந்து, திருந்திய வளைகள் நெகிழப் பெற்றன.

பரத்தையர் கூற்று

பரத்தை கூற்று

குறுந்தொகை 370 **வில்லக விரலினார்**

திணை : மருதம்

கூற்று

கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள் என்பது கேட்டுப் பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

‘தலைவனைப் பரத்தை தன்பால் மடக்கிக்கொண்டாள்’ எனத் தலைவி புறங்கூறுவதாய்க் கேள்வியுற்ற பரத்தை, தலைவிக்கு மிகவும் வேண்டிய வர்க்குக் கேட்கும்படியாய், ‘தலைவி தன்னைக் குறை கூறுதல் தவறு’ என்று கூறியது.

பொய்கை ஆம்பல் அணிநிறக் கொழுமுகை
வண்டுவாய் திறக்கும் தண்துறை ஊரனொடு
இருப்பின், இருமருங் கினமே; கிடப்பின்
வில்லக விரலின் பொருந்தி;அவன்
நல்அகம் சேரின், ஒருமருங் கினமே.

தெளிவுரை

குளத்திலுள்ள அழகிய நிறமுள்ள வளமையான ஆம்பல் மொட்டினை வண்டு, அதன் வாய் திறந்து மலரச்செய்யும் குளிர்ச்சி பொருந்திய ஊரினைக் கொண்ட மருத நிலத்திற்கு உரியவன், தலைவன். அத்தலைவன் அருகிலிருந்தால் இரு உடல்களைக் கொண்டவர்களாயிருப்போம். அவருடன் கூடித் துயிலும்போது வில்லை இறுகப் பிடித்த விரல்கள் ஒன்றுசேர்ந்து பற்றுதல்போல அவரது நல்ல மார்பினைச் சேர்ந்து ஓர் உடலை உடையவராயிருப்போம்.

கருத்து

‘தலைவன் விருப்பப்படியே நாம் நடக்கிறோம்; தலைவி எம்மைக் குறை கூறுதல் தவறு.’

விளக்கம்

தலைவன் அருகிருந்தால் தனித்தனியே இரு உடலினராயும், அவருடன் கூடித் துயிலும்போது ஒருடல்போல ஒன்றியும், அவன் பிரிந்து தன் இல்லம் செல்லும்போது யாம் தனித்து ஒருடலாகியும் இருப்போம். இங்ஙனம் இருத்தல் தலைவனது ஒழுகலாற்றினையொட்டி அமைகிறதேயன்றி, நாமாக வலிந்து மேற்கொள்வது அன்று. தலைவனை எம்மிடம் இருத்திக் கொள்ளும் இயல்பு எம்மிடம் இல்லை.

குறிப்பு

தலைவன் பரத்தையருடன் செறிந்து கிடக்கும் நிலைக்கு வில்லைப் பிடித்த விரல்களை உவமையாய்க் கூறியமையால், இச்செய்யுளை இயற்றிய புலவர், 'வில்லக விரலினார்' என்ற சிறப்புப் பெயர் பெற்றார். இவரது இயற்பெயரை அறியோம்.

சொற்பொருள்

1. பொய்கை - குளம்; ஆம்பல் - ஆம்பல் மலர்; அணி நிற - அழகிய நிறம் கொண்ட; கொழுமுகை - கொழுவிய மொட்டு.
2. வண்டுவாய் திறக்கும் - வண்டு ஊதி மலரச்செய்யும்; ஊரன் - மருதநிலத் தலைவன்.
3. இருப்பின் - அருகில் இருந்தால்; இருமருங்கு - இரு பக்கம்; கிடப்பின் - அணைத்துத் துயிலும்போது.
4. வில்லக விரலின் - வில்லை இறுகப் பிடித்த விரல்கள் ஒன்றுசேர்ந்து பற்றுதல்போல்; பொருந்தி - சேர்ந்து.
5. நல்அகம் - நல்ல மார்பை; சேரின் - சேர்ந்தால்; ஒருமருங்கினம் - ஓர் உடலாயிருப்போம்.

பரத்தை கூற்று

குறுந்தொகை 80 **ஔவையார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகட்குப் பாங்காயினார் கேட்பப் பரத்தை சொல்லியது. (பாங்காயினார் - உடனிருக்கும் தோழியர்.)

கூற்று விளக்கம்

தலைவி தன்னைப் புறங்கூறினாள் என்று கேட்ட பரத்தை, அத் தலைவியுடனிருப்போர் கேட்கும்படியாக, "நானும் தலைவனும் புனல் விளையாட்டு விளையாடப்போகிறோம்; இயலுமானால் தலைவி அவன் வாராதவாறு காத்துக்கொள்ளட்டும்" என்று தன் பெருமை தோன்றக் கூறியது.

கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சி,
பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி,
யாம்அஃது அயர்கம் சேறும், தான்அஃது;
அஞ்சுவது உடையள் ஆயின் வெம்போர்,
நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி
முனைஆன் பெருநிரை போல,
கிளையொடும் காக்கதன் கொழுநன் மார்பே.

தெளிவுரை

எம் கூந்தலில் ஆம்பலின் புறவிதழை ஒடித்து முழுப் பூவைச் சூடி, வெள்ளம் பெருகிவரும் பெரிய நீர்த்துறையில் தலைவனுடன் சேர்ந்து புனல் விளையாட விரும்பி அங்குப் போகவிருக்கிறோம்! இதனை அறிந்து தலைவி அஞ்சினளாயின், கடுமைமிக்க போரில் நடுவில் நின்று பகையை அழித்து வெல்லும் வேற்படை பல கொண்ட எழினி என்பான், போர்முனையில் தன் பசுக்கூட்டத்தைக் காத்ததுபோல, தன் கணவன் மார்பைத் தன் சுற்றத்தினருடன் வந்து காத்துக்கொள்ளட்டும். (இயலுமானால் எம்முடன் வாராமல் தடுத்து நிறுத்திக்கொள்ளட்டும்.)

கருத்து

நானும் தலைவனும் புனலாடச் செல்லவிருக்கிறோம். இயலுமாயின், தலைவி தன் கணவன் என்னுடன் வாராமல் காத்துக்கொள்ளட்டும்.

(தலைவன், 'என் விருப்பப்படி ஒழுகுவானேயன்றித் தலைவியின் விருப்பப்படி நடக்க மாட்டான்' என்று பரத்தை உறுதியாய்க் கூறுகிறாள்.)

விளக்கம்

"எழினி தனக்குரிய ஆநிரையைக் கைக்கொண்ட பகைவரிடத்திலிருந்து அதனை மீட்டுக் காத்ததுபோல, தலைவி இயலுமானால் தனக்குரிய தலைவன் மார்பைக் கைக்கொண்ட எம்மிடத்திலிருந்து மீட்டுப் பாதுகாத்துக்கொள்ளட்டும்" என்கிறாள், பரத்தை.

குறிப்பு

எழினி (அதியமான் நெடுமானஞ்சி) தன் ஆநிரைகளைப் பகைவர்கள் கவர முயன்றபோது, அவன் நேர் நின்று போர் செய்து வென்று, ஆநிரைகளைக் காத்தான் எனச் சங்க இலக்கியங்கள் அறிவிக்கின்றன.

சொற்பொருள்

1. ஆம்பல் - ஆம்பல் மலர்; முழு நெறி - புறவிதழ் ஒடித்த முழுப்பூ; அடைச்சி - சூடி.
2. பெரும் புனல் - வெள்ளம்; இருந்துறை - பெரிய நீர்த்துறை.
3. அயர்தல் - புனலில் விளையாடுதல்; சேறும் - செல்கிறோம்.
4. வெம்போர் - கடுமையான போர்.
5. நுகம்பட - நடுவே நின்று; கடக்கும் - வெற்றி கொள்ளும்; எழினி - அதியமான் நெடுமான் அஞ்சி.
6. முனை - போர்முனை; ஆன் - பசு; பெருநிரை - பெருங்கூட்டம்.
7. கிளை - சுற்றம்; கொழுநன் - கணவன்.

பரத்தை கூற்று

அகநானூறு 76 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகனை நயப்பித்துக்கொண்டாளென்று கழறக் கேட்ட பரத்தை தலைமகட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

(நயப்பித்தல் - உடன்படுத்தல்.)

கூற்று விளக்கம்

பரத்தையிடம் நீண்ட காலம் தங்கியிருந்து திரும்ப வந்த தலைவன்மீது வருத்தத்துடனிருந்த தலைவி, 'பரத்தை, தலைவனைத் தன் பக்கம் சேர்த்துக் கொண்டாள்' எனப் பரத்தையை இடித்துரைத்தாள். அதுகேட்ட பரத்தை, தலைவிக்குத் துணையானவர்கள் கேட்கும்படியாகச் சொல்லியது.

மண்கனை முழவொடு மகிழ்மிகத் தூங்க
தண்துறை ஊரன் எம்சேரி வந்தென
இன்கடுங் கள்ளின் அஃதை களிற்றொடு
நன்கலன் ஈயும் நாள்மகிழ் இருக்கை
அவைபுகு பொருநர் பறையின், ஆனாது,
கழறுப என்ப,அவன் பெண்டிர், அந்தில்,
கச்சினன், கழலினன், தேம்தார் மார்பினன்,
வகைஅமைப் பொலிந்த, வனப்புஅமை, தெரியல்,
சுரியல்அம் பொருநனைக் காண்டி ரோ?என,
ஆதி மந்தி பேதுற்று இனைய,
சிறைபறைந்து உறைஇச் செங்குணக்கு ஒழுகும்
அம்தண் காவிரி போலக்
கொண்டுகை வலித்தல் சூழ்ந்திசின், யானே.

தெளிவுரை

"மார்ச்சனை செறிந்த மத்தளத்தோடு காண்பவர் மகிழ்ச்சி பெறுமாறு நாங்கள் கூத்தாடினோம். குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறையையுடைய தலைவன் இயல்பாக எங்கள் கூத்துக் காணவே வந்தான். நான் அழைத்துத்தான் அவன் வந்தான் என்று அவன் மனைவி என்னைப் பழி தூற்றுகின்றனள். அவள்

தூற்றுவது, அஃதை என்னும் மன்னன் பரிசிலர்க்குக் களிறும், நல்ல அணிகலன்களும் வாரி வழங்கும் அரண்மனைக்குள் செல்லும் பொருநர் கையிலுள்ள பறை இடைவிடாது ஒலித்தல் போல இருந்தது என்று கூறுகின்றனர்.

"இடுப்பிலே கச்சையினைக் கட்டியவனும், கால்களில் கழல்களை அணிந்தவனும், தேனொழுகும் மாலைகளை மார்பிலே அணிந்தவனுமாகிய அழகிய கூத்தினன், ஆட்டனத்தி. 'அவனைக் கண்டீரோ' என்று வினாவி, அவன் மனைவியாகிய ஆதிமந்தி மயக்கமுற்று வருந்துமாறு, கரையினை மோதி நேர் கிழக்காக ஓடும் குளிர்ச்சி பொருந்திய காவிரி தன் அலைக் கைகளால் அவனை அள்ளிக்கொண்டு சென்றது. அதுபோல, நானும் தலைவி கணவனைக் கைப்பற்றிக் கொள்ளக் கருதியிருக் கிறேன் என்பதனை அவள் அறியட்டும்" என்று தலைவிக்குப் பாங்காயினார் கேட்பப் பரத்தை கூறினாள்.

கருத்து

'ஆட்டனத்தியை அவன் மனைவி ஆதிமந்தியிடமிருந்து காவிரி அள்ளிச் சென்றதுபோல, நானும் தலைவனை அவன் மனைவியிடமிருந்து கைப்பற்றி வர உறுதிகொண்டுவிட்டேன்.'

விளக்கம்

'எங்கள் ஆட்டத்தைக் காண வந்த தன் கணவனை நாங்கள் கைப்பற்றி வைத்துக்கொண்டோம் என்று தலைவன் மனைவி இடைவிடாது சொல்லிக்கொண்டிருக்கிறாளாம். தம்முள் காதல் கொண்ட சேர இளவரசன் ஆட்டனத்தியும் சோழ இளவரசி ஆதிமந்தியும் காவிரியில் நீர் விளையாட்டு விளையாடுகையில், காவிரி ஆட்டனத்தியை இழுத்துக் கொண்டு சென்றுவிட்டது. அதனால், ஆதிமந்தி, 'என் கணவனைத் தாரீரோ' என்று அலைமோதி அரற்றினாள். தலைவன் மனைவி அநியாயமாய் எம்மேல் பழி கூறுவதால், நாங்களும் ஆட்டனத்தியைக் காவிரி இழுத்துக்கொண்டு சென்றதுபோலத் தலைவி வருந்த, அவள் கணவனைக் கைப்பற்ற உறுதிகூறித் துணிந்துவிட்டோம்" எனத் தலைவிக்கு வேண்டியவர் கேட்கும்படியாகச் சொல்லுகிறாள்.

குறிப்பு

"நாங்கள் தலைவனைக் கைக்கொள்ளாதிருக்கும்போதே அவன் மனைவி எங்கள்மீது பழி கூறுகிறாள். செய்யாது பழியை ஏற்பதைவிட அதைச் செய்தே பழி ஏற்போம்.

"காவிரி வெள்ளத்தில் தன் கணவனை இழந்து ஆதிமந்தி அலறித் துடித்ததைப் போல, தலைவி என்னிடத்திலே தன் கணவனைப் பறி கொடுத்து அலறித் துடிதுடிக்கச் செய்வேன். இதனை அவளுக்கு வேண்டி யவர்களிடம் சொல்லுங்கள்" என்கிறாள், பரத்தை.

சொற்பொருள்

1. மண்கனை - மார்ச்சனை (மத்தளத்தோலில் நடுவில் பதிக்கும் கருஞ்சாந்து) செறிந்த; மகிழ்மிகத் தூங்க - காண்பார்க்கு மகிழ்ச்சி மிக நாங்கள் ஆட.
2. சேரி வந்தென - எம் சேரிக்கு அதனைக் காண வந்தவனாக (அவ்வள விற்கே).
3. அஃதை - அஃதை என்பானது.
4. ஈயும் - வழங்கும்; நாள் மகிழ் இருக்கை - மகிழ்ச்சி பொருந்திய நாளோலக்கத்தையுடைய.
5. அவைபுகு - அவையில் புகும்; ஆனாது - ஒழியாது.
6. கழறுப என்ப - என்னை இகழ்வர் என்று கூறுவர்; அவன் பெண்டிர் - அவன் மனைவி; அந்தில் - ஓர் அசைச்சொல்.
7. தேம் தார் - தேனொழுகும் மாலை.
8. வகை அமைப் பொலிந்த - கூறுபாட்டின் அமைதியோடு விளங்கிய; வனப்பு - அழகு; தெரியல் - மாலை.
9. சுரியல் - சுருண்ட முடியினைக் கொண்ட; அம்பொருநனை - அழகிய கூத்தனாகிய ஆட்டனத்தியை.
10. பேதுற்று இனைய - மயக்கமுற்று வருந்திட.
11. சிறைபறைந்து உரைஇ - கரையினை மோதிப் பரவி; செங்குணக்கு ஒழுகும் - நேர் கிழக்கே ஓடும்.
13. கொண்டு கை வலித்தல் - சூளினை மேற்கொண்டு கையால் பற்றிக் கொள்ளுதலை; யான் சூழ்ந்திசின் - யான் எண்ணியுள்ளேன்.

பரத்தை கூற்று

அகநானூறு 216 **ஐயூர் முடவனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகட்குப் பாங்காயினார் கேட்பத் தனக்குப் பாங்காயினார்க்குப் பரத்தை சொல்லியது.

கூற்று விளக்கம்

தன்மீது தலைவி பழி கூறினாள் என்பதைக் கேட்ட பரத்தை, சினமுற்றுத் தலைவிக்குத் தோழியர் கேட்குமாறு தன் தோழியரிடம் கூறியது.

'நாண்கொள்நுண் கோலின் மீன்கொள் பாண்மகள்
தான்புனல் அடைகரைப் படுத்த வராஅல்,
நார்அரி நறவுஉண்டு இருந்த தந்தைக்கு,
வஞ்சி விறகின் சுட்டு,வாய் உறுக்கும்
தண்துறை ஊரன் பெண்டிர் எம்மைப்
பெட்டாங்கு மொழிப' என்ப; அவ்அலர்ப்
பட்டனம் ஆயின், இனிஎவன் ஆகியர்;
கடல்ஆடு மகளிர் கொய்த ஞாழலும்,
கழனி உழவர் குற்ற குவளையும்,
கடிமிளைப் புறவின் பூத்த முல்லையொடு,
பல்இளங் கோசர் கண்ணி அயரும்,
மல்லல் யாணர்ச் செல்லிக் கோமான்
எறிவிடத்து உலையாச் செறிசுரை வெள்வேல்
ஆதன் எழினி அருநிறத்து அழுத்திய
பெருங்களிற்று எவ்வம் போல,
வருந்துப மாதுஅவர் சேரியாம் செலினே.

தெளிவுரை

தூண்டில்கோலினால் மீனைப் பிடித்து விற்கும் பாணரினப் பெண், தன் தூண்டிலில் அகப்பட்ட வரால்மீனை, வஞ்சி மர விறகுத்தீயில் சுட்டு, பன்னாடையால் வடித்தெடுக்கப்பட்ட கள்ளையுண்டு களித்திருந்த தந்தைக்கு ஊட்டுவாள். அத்தகைய குளிர்ச்சி பொருந்திய துறையினையுடைய ஊரனைச் சார்ந்த

பெண்கள் எல்லாம் தம் மனம் போன போக்கில் பழித்துரைத் தனர் என்று என்னிடம் வந்து சொல்கின்றனர். அத்தகைய பழிக்கு நாம் ஆளாகிவிட்டோம். இனி எது நிகழ்ந்தாலும் நிகழட்டும். இதைக் கேட்பதற்கு அவர்கள் வாழும் இடத்திற்கு நான் சென்றால் அவர்கள் வருத்தப்படுவார்கள். (அந்த வருத்தம் எத்தகையதாய் இருக்கும் என அறிவாயா?)

கடலில் குளிக்கும் பெண்கள் கொய்துவந்த ஞாழல் பூக்களையும், வயலில் உழுவோர் பறித்து வந்த குவளைப் பூக்களையும், காவற்காட்டினைக் கொண்ட முல்லை நிலத்தில் பூத்திருக்கும் முல்லைப் பூக்களையும் சேர்த்துக் கோசர்களின் இளஞ்சிறுவர்கள் தலைமாலையாய்த் தொடுத்துச் சூடிக் கொண்டு விளையாடுவர். அத்தகைய வளத்தினையும் புது வருவாயினையும் கொண்டது, செல்லூர் என்னும் ஊர். அவ்வூருக்குத் தலைவனாகிய ஆதன் எழினி என்பான் பகைவர் மீது எறியும் வேல் தப்பாது சென்று தைக்கும். அவன் தன் வேலினை ஒரு யானையின்மீது பாய்ச்சினால் அந்த யானை எவ்வாறு துன்பமடையுமோ, அதுபோலத்தான் தலைவியும் அவளைச் சேர்ந்தாரும் நான் அவர்கள் வாழும் தெருவிற்குச் சென்றால் வருந்துவர். (ஆதலால், அவர்கள் தெருவிற்கு நான் செல்லப்போவதில்லை.)

கருத்து

'தலைவன் மனைப்பக்கம் நான் சென்றால் அவன் என் பின்னரேயே வந்துவிடுவான். அதனால் தலைவி பெருந்துன்பம் அடைவாளே என்று தான் நான் அங்குச் செல்லாதிருக்கிறேன்' எனப் பரத்தை தன் பெருமை கூறுகிறாள்.

விளக்கம்

குளிர்ச்சி பொருந்திய துறையினையுடைய தலைவனைச் சார்ந்த பெண்டிர் என்னைத் தம் மனம்போன போக்கிலெல்லாம் பழித்துக் கூறுகின்றனர் என்று என்னிடம் சொல்கிறார்கள். அவர்கள் என்ன வேண்டுமானாலும் பேசிக்கொள்ளட்டும். ஏன் இவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்க நான் அவர்கள் இருக்கு

மிடம் சென்றால் பெருந்துன்பம் அடைவார்கள்! பாவம்! கணவனிடம் இன்பம் பெற இயலாதவர்கள் என்னைப் பழித்துப் பேசுவதன் மூலமாவது இன்பம் கொள்ளட்டும்.

சொற்பொருள்

1. நாண்கொள் - கயிற்றுநாண் கொண்ட; மீன்கொள் - மீனைப் பிடிக்கும்; பாண் மகள் - பாணர் மகள்.
2. படுத்த - பிடித்த; வராஅல் - வரால் மீன்.
3. நார் அரி - பன்னாடையால் அரிக்கப்பட்ட; நறவு - கள்.
4. வஞ்சி - வஞ்சி மரம்; வாய் உறுக்கும் - வாயில் உண்பிக்கும்.
5. பெண்டிர் - தலைவியும் அவளைச் சேர்ந்தோரும்.
6. பெட்டாங்கு - தன் மனம் விரும்பியபடியெல்லாம்; மொழிப - இகழ்ந்துரைக்கின்றனர்.
7. பட்டனம் - அந்தப் பழிச்சொல்லுக்கு நாம் ஆளாகிவிட்டோம்; இனி எவன் ஆகியர்? - இனி நிகழ்வது எதுவாயினும் நிகழட்டும்.
8. ஞாழல் - ஞாழல் மலர்.
9. குற்ற - பறித்த; குவளை - குவளை மலர்.
10. கடி மிளை - காவற்காடு; புறவு - முல்லை நிலம்; முல்லை - முல்லை மலர்.
11. பல் இளம் கோசர் - இளைய கோசர் பலர்; கண்ணி - தலைமாலை (கட்டி); அயரும் - விளையாடும்.
12. மல்லல் - வளப்பம்; யாணர் - புது வருவாய்; செல்லி - செல்லூர் என்னும் ஊர்; கோமான் - மன்னன் (ஆதன் எழினி).
13. எறிவிடத்து - மாற்றார்மீது எறியுமிடத்து; உலையா - சிதையாத; செறிசுரை - சுரை செறிந்த.
14. அருநிறத்து - அரிய மார்பில்; அழுத்திய - பாய்ச்சப்பெற்ற.
15. எவ்வம் - துன்பம்.
16. வருந்துவர் - வருத்தமுறுவர்; மாது - பெண்ணாகிய நான்; அவர் சேரி - அவர்கள் தெரு; செலின் - சென்றால்.

பரத்தை கூற்று

அகநானூறு 106 **ஆலங்குடி வங்கனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் தன்னைப் புறங்கூறினாள் எனக் கேட்ட பரத்தை அவளுக்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையுடன் தலைவன் மகிழ்ந்திருந்தான். அச்செய்தி கேட்ட தலைவி பரத்தையைப் பழித்துரைத்தாள். பரத்தைக்குத் தோழி இதனைப் பரத்தையிடம் சொன்னாள். அதைக் கேட்டுப் பொறாத பரத்தை, தலைவிக்குத் தோழிகள் கேட்குமாறு தலைவியை இகழ்ந்து சொல்லியது.

எரிஅகைந் தன்ன தாமரைப் பழனத்து,
பொரிஅகைந் தன்ன பொங்குபல சிறுமீன்,
வெறிகொள் பாசடை உணீஇயர், பைப்பயப்
பறைதபு முதுசிரல் அசைபுவந்து இருக்கும்
துறைகேழ் ஊரன் பெண்டுதன் கொழுநனை
நம்மொடு புலக்கும் என்ப— நாம்அது
செய்யாம் ஆயினும், உய்யா மையின்,
செறிதொடி தெளிர்ப்ப வீசி, சிறிதுஅவண்,
உலமந்து வருகம் சென்மோ— தோழி!—
ஒளிறுவாள் தானைக் கொற்றச் செழியன்
வெளிறுஇல் கற்பின் மண்டுஅமர் அடுதொறும்
களிறுபெறு வல்சிப் பாணன் எறியும்
தண்ணுமைக் கண்ணின் அலைஇயர், தன்வயிறே.

தெளிவுரை

"தோழி! தீ கிளைவிட்டு எரிவதுபோல இதழ் விரிந்து மலருகின்ற தாமரைப்பூக்களைக் கொண்ட வயலில், நெற்பொரி தெறித்துக் கிடப்பனபோல் சிறிய மீன்கள் பலபல விளங்கும். அவற்றை உண்ணும்பொருட்டுப் பறக்கும் வலிமையினை இழந்த முதிய சிச்சிலிப் பறவை மணங்கொண்ட பசிய இலையின்மேல்

மெல்ல மெல்ல அசைந்தபடி அமர்ந்திருக்கும் நீர்த்துறை பொருந்திய ஊருக்குத் தலைவன் மனைவி, தன் கணவனை நம்மோடு சேர்த்து வெறுத்துப் பேசுகிறாள் என்பர்.

"அவ்வாறு அவள் பேசுவதற்குக் காரணமாய் நாம் யாதொன்றும் செய்யவில்லை; ஆயினும், அவள் கூறும் பழியினின்று நீங்க இயலவில்லை. ஆதலால், வெற்றி பொருந்திய பாண்டியன், ஒளி பொருந்திய வாட்படையினையும் குற்றமற்ற போர்ப்பயிற்சியினையும் கொண்டு பெரும் போர்க்களங்களில் வெல்லுந் தோறும், களிற்றினைப் பரிசாய்ப் பெறும்பொருட்டுப் பாணன் மத்தளத்தை அடித்துக்கொண்டு செல்வான். அவன் தன் மத்தளத்தின் கண் போன்ற பகுதியில் அடிப்பதைப்போல, இவளும் தன் வயிற்றில், அறைந்துகொள்ளுமாறு, செறிந்த வளைகள் ஒலிக்கக் கைகளை வீசி, சிறிது நேரம் அவள் வாழும் இருப்பிடத்திற்கு அருகில் உலாவி விட்டு வருவோம், வா!" எனப் பரத்தை தன் தோழியை அழைக்கிறாள்.

கருத்து

'தலைவியின் வீட்டருகே வளையொலிக்க உலாவி வரலாம். அது கண்டு, தலைவனை நாம் கவர்ந்து சென்றுவிடுவோமா என்று அவன் மனைவி கலங்குவாள். அதைக் கண்டு நாம் மகிழலாம், வா.'

விளக்கம்

ஊரனை நாம் கைப்பற்றிக்கொண்டதாய் அவன் மனைவி நம்மைப் பழித்துப் பேசுகிறாளாம்! நாம் அவனை அடையாதிருக் கும்போதே நம்மைப் பழித்துப் பேசுகிறாள்! அவள் பழித் துரைத்துவிட்டதால் இனி அவள் வருந்த நாம் ஏதாவது செய்தாக வேண்டும். வா! நம் வளையொலிக்க அவள் வீட்டருகே சிறிது நேரம் உலாவி வருவோம்! அதைக் கண்டு அவள் தன் வயிற்றில் அடித்துக்கொள்ளட்டும்!

உள்ளுறை

சிறகுகளின் வலிமை குன்றியமையால் பறந்திட இயலாத முதிய சிச்சிலிப் பறவை, தான் கவரக் கருதிய மீனுக்கு அருகே உள்ள பசிய இலைமீது இருந்தும் அதனைக் கவர்ந்து உண்ண

இயலாதும், ஏனைய இளம் பறவைகள் அதனைப்பற்றி நுகர்வதைக் கண்டு பொறுக்க இயலாதும் இருக்கும். அதுபோல, முதுமையால் ஊக்கம் ஒழிந்து, எழுச்சி குன்றிய தலைவி, தன் இல்லத்திலேயே கணவன் இருந்தும் அவனைத் தன் வசம் கொள்ள இயலாமலும், ஏனைய இளம்பருவப் பரத்தையர் தன் தலைவனைத் தழுவுவதைப் பொறுக்க இயலாமலும் இருக்கின்றாள்.

சொற்பொருள்

1. அகைதல் - கிளைத்து எரிதல்.
2. பொரி அகைந்தன்ன - நெற்பொரி சிதறினாற்போல.
3. வெறி - மணம்; பாசடை - பசிய இலை; உணீஇயர் - உண்பதற்காக.
4. பறைதபு - பறத்தல் ஒழிந்த; முது - முதுமையுற்ற; சிரல் - சிச்சிலிப் பறவை; அசைபு - அசைந்து.
5. கொழுநன் - கணவன்.
6. நம்மொடு - நம்மொடு சேர்த்து; புலக்கும் - வெறுத்துப் பேசும்.
7. உய்யாமையின் - (அவள் கூறும்) பழியினின்று நீங்க மாட்டாமையால்.
8. தெளிர்ப்ப - ஒலிக்க; அவண் - அங்கே.
9. உலமந்து - உலாவி; வருகம் - வருவோம்.
10. வாள்தானை - வாள் படை; கொற்றம் - வெற்றி; செழியன் - பாண்டிய மன்னன்.
11. வெளிறு இல் - குற்றமில்லாத; கற்பின் - படைப்பயிற்சியோடு; மண்டு அமர் - நெருங்கிய போர்.
12. வல்சி - உணவு (களிற்றினை உணவாய்ப் பெறும் என்பது களிற்றினைப் பரிசாய்ப் பெறும் என்பதைக் குறிக்கிறது); எறியும் - அடிக்கும்.
13. தண்ணுமை - மத்தளம்; அலைஇயர் - (அவள் தன் வயிற்றினை) அலைக்கும்படி.

பரத்தை கூற்று

அகநானூறு 276 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகட்குப் பாங்காயினார் கேட்பப் பரத்தை சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தன்னைப் பழித்தாள் என்று கேள்விப்பட்டாள், பரத்தை. அவள், தலைவிக்குத் தோழிமார் கேட்ப, அத்தலைவியின் செருக்கு அடங்கும்படி இன்னது செய்வேன் என்று சூள் உரைத்துச் சொன்னது.

நீள்இரும் பொய்கை இரைவேட்டு எழுந்த
வாளை வெண்போத்து உணீஇய, நாரைதன்,
அடிஅறிவு உறுதல் அஞ்சி, பைப்பயக்
கடிஇலம் புகூஉம் கள்வன் போல,
சாஅய் ஒதுங்கும் துறைகேழ் ஊரனொடு
ஆவது ஆக! இனிநாண் உண்டோ?
வருகதில் அம்ம,எம் சேரி சேர!
அரிவேய் உண்கண் அவன்பெண்டிர் காண,
தாரும் தானையும் பற்றி, ஆரியர்
பிடிபயின்று தரூஉம் பெருங்களிறு போல,
தோள்கந்து ஆகக் கூந்தலின் பிணித்து,அவன்
மார்புகடி கொள்ளேன் ஆயின், ஆர்வுற்று
இரந்தோர்க்கு ஈயாது ஈட்டியோன் பொருள்போல்,
பரந்து வெளிப்படாது ஆகி,
வருந்துக தில்ல,யாய் ஓம்பிய நலனே!

தெளிவுரை

நீண்ட பெரிய நீர்நிலையில் இரை தேடப் புறப்பட்ட நாரை, வெண்ணிற வாளை மீனை உண்ணும்பொருட்டுத் தான் அடி யிட்டுச் செல்லும் ஓசையை அம்மீன் அறிந்துகொள்ளும் என அஞ்சியது; ஆதலின், காவலைக் கொண்ட வீட்டுக்குள் புகும் கள்வனைப்போலத் தளர்ந்த நடையினதாய் மெல்ல மெல்ல

நடந்து சென்றது; இத்தகைய துறையினையுடைய ஊரனால் நமக்குப் பழி ஏற்படுவதாயின் ஏற்படட்டும்; இனி நாம் நாணி இருப்பதால் பயனில்லை.

அவ்வூரன் நம் சேரிக்கு வரட்டும். வந்தால், செவ்வரி படர்ந்த மையுண்ட கண்களைக் கொண்ட அவன் பெண்டிர் காணுமாறு அவன் சூடியுள்ள மாலையைப் பற்றுவேன்; அவன் தப்பிப் போகாதபடி தாழ்ந்து கிடக்கும் அவன் ஆடையைப் பற்றிக் கொள்வேன். ஆரியர், தாம் பழக்கம் அளித்துள்ள பெண் யானையினைக்கொண்டு புதிய ஆண்யானையைப் பிடிப்பது போல, அவனைக் கைப்பற்றி என் தோளாகிய கட்டுத்தறியில் என் கூந்தலாகிய கயிற்றினால் கட்டி அவன் மார்பினைச் சிறைப் படுத்துவேன்.

அங்ஙனம் நான் செய்யேனாயின், செல்வத்தை ஈட்டி, அதன்மேல் மிகுந்த விருப்பங்கொண்டு, இல்லையென்று இரந்தவர்க்குக் கொடுக்காது பூட்டி வைப்பவனுடைய செல்வம் மதிப்புப் பெறாது அழிவதுபோல, என் அன்னை பாதுகாத்த என் அழகும் பிறர் அறியாதவாறு அழிந்து படட்டும்.

கருத்து

‘யானையை அடக்கிக் கொண்டுவந்து கட்டுத்தறியில் கட்டுவது போலத் தலைவனை என் வயப்படுத்தி என் இல்லம் கொண்டுவந்து சேர்ப்பேன்.’

விளக்கம்

“ஊரனாகிய தலைவனால் நமக்குப் பழி ஏற்படட்டும்; இனி நான் நாணி இருந்திட மாட்டேன். அவன் நம் சேரிக்கு வரட்டும். அவன் மாலையையும் ஆடையையும் பற்றி இழுத்து வந்து, புதிதாய்ப் பிடித்துக்கொண்டு வந்த யானையைப் பழக்கி அடக்குவது போல, என் தோளாகிய கட்டுத்தறியில் என் கூந்தலாகிய கயிறு கொண்டு அவன் மார்பைக் கட்டி, நான் வசப் படுத்தி அடக்குவேன். அவ்வாறு செய்யாவிடில், இரந்தார்க்கு ஈயாது ஈட்டி வைத்தவன் செல்வம் ஒன்றுக்கும் பயன்படாது அழிவதுபோல, என் தாய் பாதுகாத்த என் மேனியழகும் அழியட்டும்” என்று பரத்தை வஞ்சினம் கூறினாள்.

உள்ளுறை

நாரை தான் வருவதை வாளைமீன் அறியாதவாறு மெல்ல அடியெடுத்து வைத்து நடந்து கவர்ந்துண்ணும் என்னும் தொடர்மூலம், பரத்தை, தலைவன் உணராதவாறு தான் திடுமெனத் தோன்றி, அவனை மயக்கி அடிமை கொள்ளும் வலிமை தனக்கு உண்டு எனச் செருக்குக் கொள்கிறாள் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

குறிப்பு

பழக்கம் அளிக்கப்பட்டுள்ள பெண்யானை, தானே காட்டுக்குள் சென்று, அங்குள்ள ஆண்யானையுடன் பழகி, அதனைப் பற்றிக்கொண்டுவந்து தரும்.

சொற்பொருள்

1. நீள் இரும் - நீண்ட பெரிய; வேட்டு - விரும்பி.
2. வாளை - வாளை மீன்; போத்து - ஆண் வாளை.
3. அடிஅறிவு உறுதல் - அடி எடுத்து வைத்தலை அறிதல்.
4. கடிஇலம் - காவல் மிக்க வீடு (இலம் - இல்லம்); புகூஉம் - நுழையும்.
5. சாஅய் ஒதுங்கும் - தளர்ந்து நடக்கும்.
6. ஆவது ஆக - ஏற்படவிருக்கும் பழி ஏற்படட்டும்; இனி நாண் உண்டோ? - இனி நாணி இருப்பதால் பயனில்லை.
7. எம் சேரி சேர வருக - எம் சேரிக்குத் தலைவன் வரட்டும்.
8. அரிவேய் - செவ்வரி பொருந்திய.
9. தார் - மாலை; தானை - ஆடை.
10. பிடி பயின்று தரூஉம் - பழக்கம் அளிக்கப்பட்ட பெண்யானை கொண்டுவந்து தரும்.
11. கந்து - கட்டுத்தறி; பிணித்து - கட்டி.
12. கடி கொள்ளேன் ஆயின் - சிறைப்படுத்தாது விடுவேனாயின்; ஆர்வுற்று - விருப்பமுற்று.
13. ஈயாது - கொடுக்காது; ஈட்டியோன் - சேர்த்து வைத்தவன்.
14. பரந்து - வெளிப்பட்டு; ஆகி - பரவாது ஆகி.
15. வருந்துக - வருந்தட்டும்; ஓம்பிய - பாதுகாத்த; நலன் - அழகு.

பரத்தை கூற்று

நற்றிணை 40 **கோண்மா நெடுங்கோட்டனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகட்குப் பாங்காயினார் கேட்பப் பரத்தை சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையின் இல்லத்தில் தங்கியிருந்தபோது, தனக்குப் புதல்வன் பிறந்துள்ளான் எனக் கேட்டதும் அவன் தன் இல்லம் சென்றான். அதனையறிந்த பரத்தை சினங்கொண்டு தலைவிக்குத் தோழியர் செவியில் படுமாறு தலைவனை எள்ளிக் கூறியது.

நெடுநா ஒள்மணி கடிமனை இரட்டக்
குரைஇலைப் போகிய விரவுமணல் பந்தர்,
பெரும்பாண் காவல் பூண்டென ஒருசார்,
திருந்துஇழை மகளிர் விரிச்சி நிற்ப,
வெறிஉற விரிந்த அறுவை மெல்அணைப்
புனிறுநாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச,
ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணிப்
பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை ஈர்இமை பொருந்த,
நள்ளென் கங்குல், கள்வன் போல,
அகன்துறை ஊரனும் வந்தனன்
சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே.

தெளிவுரை

காவல் மிக்க மனையில் நீண்ட நாவினைக் கொண்ட மணி ஒலிக்கத் தொடங்கியது. ஒலி எழும் தென்னங்கீற்றால் வேயப்பட்டு மணல் பரப்பப்பெற்ற பந்தலில் பெரும் பாணர்கள் சூழ நின்று காவல் காத்துக்கொண்டிருந்தனர். திருந்திய அணிகலன்களை அணிந்த மங்கல மகளிர், தலைவன் பெற்ற மகனைக் காத்தபடி நற்சொல் கூறிச் சூழ்ந்து நின்றனர். மணம் கமழும் துகில் விரிக்கப்பட்ட மென்மையான படுக்கையில், அண்மையில் பிறந்த மணம் வீசப் புதல்வன் செவிலித்தாயோடு

படுத்து உறங்கினான். வெண்சிறுகடுகு அரைக்கப்பட்டு அப்பப்பட்டு, எண்ணெய் தேய்த்து நீராட்டப்பட்டதால் தலைவி தளர்ச்சியுற்றிருந்தாள். மென்மையான அழகினை நிரம்பக் கொண்டிருந்த அவள் உடலில் நெய் பூசப்பட்டிருந்தது. கண்ணிமைகள் ஒன்றோடொன்று பொருந்த அவள் உறங்கிக் கொண்டிருந்தாள். இந்நிலையில், நள்ளென்னும் ஒலியைக் கொண்ட இரவின் இடையாமப்பொழுதில், அகன்ற நீர்த்துறை யையுடைய தலைவனும் தன் தந்தையின் பெயர் கொண்டு தனக்குப் புதல்வன் பிறந்திருக்கிறான் என்னும் மகிழ்ச்சியோடு கள்வன் போலத் தன் இல்லத்திற்கு வந்து சேர்ந்தான்.

கருத்து

'மகன் பிறந்தான் என்னும் மகிழ்ச்சியால் தலைவன் தன் இல்லத்திற்குச் சென்றுள்ளான். இல்லையேல் அவன் என்னை நீங்கியிருக்க மாட்டான்' என்கிறாள், பரத்தை.

விளக்கம்

"தன் இல்லத்தினுள்ளேயே இரவு நேரத்தில் கள்வன்போலத் தலைவன் நுழைந்தான் என்று பரத்தை பழித்துக் கூறுகிறாள். தலைவன் பகலில் சென்றால் அவனோடு தொடர்பு கொண்டிருக்கும் மற்ற பரத்தையர் பற்றிக்கொள்வர் என்று அஞ்சியும், தன் மனைவியும் பிறரும் தன் செயல் குறித்துச் சினங்கொள்வர் என்று அஞ்சியும், அனைவரும் உறங்கியிருக்கும் நேரத்தில், காலடியோசையும் மணியோசையும் கேளாதிருக்கும் நேரம் பார்த்துக் கள்வனைப்போல வீட்டினுள் நுழைகின்றான்" எனப் பரத்தை பழித்துக் கூறுகிறாள்.

குறிப்பு

மகன் ஒருவனுக்கு அவன் தந்தைக்குத் தந்தை பெயரைச் சூட்டுதல் மரபு. பெயரைக் கொண்டவன் பெயரன்.

சொற்பொருள்

1. கடிமனை - காவல் மிக்க வீடு; இரட்ட - ஒலிக்க.
2. குரைஇலை - ஒலிக்கின்ற ஓலை; போகிய - வேயப்பட்ட; விரவு மணல் - புதுமணல் பரப்பிய.

3. பெரும்பாண் - பெரும்பாணர்; ஒரு சார் - ஒரு பக்கம்.
4. விரிச்சி - நற்சொல்.
5. வெறி - மணம்; அறுவை - துகில்; மெல்அணை - மென்மையான படுக்கை.
6. புனிறு நாறு - குழந்தை அண்மையில் பிறந்தமையால் எழும் மணம்; துஞ்ச - தூங்க.
7. ஐயவி - வெண் சிறுகடுகு; நெய்யாட்டு ஈரணி - நெய் முழுக்கு.
8. கூர்ந்த - பொருந்திய; யாக்கை - உடம்பு.
9. ஈர் இமை - இரு இமைகள்.
10. நள்ளென் கங்குல் - நள்ளிரவு.
11. அகன்துறை - அகன்ற துறை; ஊரன் - தலைவன்.
12. சிறந்தோன் - தலைவனுக்குத் தந்தை; பெயரன் - (தந்தைக்குத் தந்தை) பெயரைக் கொண்டவன்.

பரத்தை கூற்று

நற்றிணை 176 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

பரத்தை தலைமகளின் பாங்கிக்குப் பாங்காயினோர் கேட்ப விறலிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையின் மனையிலிருந்தபோது தலைவி பூப்பு நீராடிய செய்தி அறிவிக்கப்பட்டது. அதுகேட்ட பரத்தை உலகியல் நோக்கித் தலைவனை விடுவிக்கிறாள்; எனினும், தலைவிக்கு அஞ்சியே தான் தலைவனைச் செல்ல விடுத்ததாய் ஊரார் ஐயப்படுவரோ என்று கருதினாள். அதனால் தலைவிக்குத் தோழியர் செவியில் படுமாறு பரத்தை தன் தோழியாகிய விறலியிடம் கூறியது.

எம்நயந்து உறைவி ஆயின், யாம்நயந்து
நல்கினம் விட்டதுஎன்? நலத்தோன் அவ்வயின்
சால்பின் அளித்தல் அறியாது அவட்குஅவள்,
காதலள் என்னுமோ? உரைத்திசின் தோழி!
நிரைத்த யானை முகத்துவரி கடுப்பப்

போதுபொதி உடைந்த ஒண்செங் காந்தள்
வாழையம் சிலம்பின் வம்புபடக் குவைஇ
யாழ்ஓர்த் தன்ன இன்குரல் இனவண்டு
அருவி முழவின் பாடொடு ஓராங்கு
மென்மெல இசைக்கும் சாரல்
குன்ற வேலித்தம் உறைவின் ஊரே!

தெளிவுரை

விறலியே! தலைவி நம்மை விரும்பியவளாய் இருப்பதால் நாமும் தலைவனை அவளிடம் செல்லுமாறு அனுப்பி வைத்தோம். இதில் தவறு என்ன இருக்கிறது? நம் நலத்தில் கருத்தாயிருக்கும் அவனை நம் பெருந்தன்மையால் அத் தலைவியிடத்து அனுப்பினேன். இதை அறியாது ஊரார், 'தலைவியிடம் அப்பரத்தை மிக அன்பு கொண்டவள். ஆதலால் அத்தலைவி விரும்பியவண்ணம் தலைவனை அனுப்பினள்' என்றும் சொல்லுவார்களோ? வரிசைப்பட நிற்கும் யானையின் முகத்தில் தோன்றும் செங்கோடுகளைப் போல வாழை மரங்கள் நிறைந்த சோலைப்பகுதியில் அரும்புகள் மலர்ந்த செங்காந்தள் செறிந்திருக்கும். யாழொலியைப் போன்று இனிய ஒலியை எழுப்பும் வண்டினம் அருவியின் முழவொலி போன்ற முழக்கத் தோடு ஒருசேர ஒலித்தனவாய் மெல்ல மெல்ல ஆரவாரித் திருக்கும். அத்தகைய மலைச்சாரலில் உள்ள ஊரில் இருப் பவர்கள் யாது கூறுகின்றனரோ? அதனை எனக்கு உரைத்திடு!

கருத்து

'நம் பெருந்தன்மை காரணமாய்த் தலைவனைத் தலைவியிடம் அனுப்பி வைத்தோம். தலைவன் மீளவும் நம்மை நாடி வந்துவிடுவான்.'

விளக்கம்

விறலியே! தலைவி பூப்பு நீராடியமை அறிந்த நிலையில் என் பெருந்தன்மை காரணமாய்த் தலைவனைத் தலைவியிடம் அனுப்பினேன். இரக்கத்தால் செய்த இதனைத் தலைவிமீது கொண்டுள்ள அன்பு காரணமாய்ச் செய்ததாய் இவ்வூர் கூறினால் தலைவனைக் கைப்பற்றி வர நேரிடும்" என்று பரத்தை

கூறினாள். பரத்தை, தோழி என விளித்தலால் 'விறலி' அவளுக்குத் தோழி என்பதை அறியலாம்.

குறிப்பு

தலைவன் காமத்தில் எளியவன்; வண்டுபோல மலருக்கு மலர் தாவும் இயல்பு வாய்ந்தவன் என்பதைப் பரத்தை உணர்த்தினாள். தலைவனை அடைந்ததாலே தலைவி பெரிதும் மகிழ்ச்சி கொண்டிட வேண்டா; அவன் பரத்தமையிலே நாட்டம் கொண்டவனாதலின் தலைவியோடு அவன் நெடுநாள் தங்கியிரான் என்று பரத்தை குறிப்பிடுகிறாள்.

சொற்பொருள்

1. எம்நயந்து - (தலைவி) என்னிடம் அன்பு கொண்டு; உறைவி ஆயின் - உறைபவள் ஆதலால்; யாம் நயந்து - நாமும் தலைவிபால் நட்பினை விரும்பி.
2. நல்கினம் விட்டது என்? - (தலைவனைத் தலைவியிடம்) சென்றுவர விட்டதனால் என்ன தவறு?; அவ்வயின் - அவள் மனைக்கு (அவனை விட்டது).
3. சால்பின் அளித்தல் அறியாது - உலகியல்பிற்குரிய சால்பினைக் கருதி என அறியாமல்; அவட்கு அவள் - அத்தலைவியிடம் அப்பரத்தை.
4. காதலள் என்னுமோ? - அன்பு கொண்டுள்ளாள் என்று சொல்லுவரோ?; தோழி உரைத்திசின் - தோழி உரைத்திடு.
5. நிரைத்த யானை - வரிசைப்பட நிற்கிற யானை; முகத்துவரி - முகத்தில் தோன்றும் செங்கோடுகள்; கடுப்ப - போல.
6. போது - அரும்புகள்; பொதி உடைந்த - பொதியவிழ்ந்து மலர்ந்த.
7. வாழைஅம் சிலம்பில் - வாழை மரங்களைக் கொண்ட மலைச் சாரலில்; வம்புடக் - புதுமைக்காட்சி உண்டாகும்படி; குவைஇ - செறிந்திருக்கும்.
8. யாழ்ஓர்த்தன்ன - யாழினை மீட்டி ஒலியெழச் செய்ததை ஒத்த.
9. பாடொடு - முழக்கத்தோடு; ஓராங்கு - ஒருசேர.
10. மென்மெல இசைக்கும் - மெல்ல மெல்ல ஆரவாரித்தபடியிருக்கும்.
11. குன்றவேலி - குன்றங்கள் வேலியாய் நிற்கும்; தம் உறைவு இன் ஊர் - உறைவதற்கு இனிய இவ்வூரவர்.

பரத்தை கூற்று

நற்றிணை 100 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

பரத்தை தலைமகளுக்குப் பாங்காயினார் கேட்ப விறலிக்கு உடம்படச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தை வீடு சென்ற தலைவன் அவளைவிட்டு நீங்கித் தலைவியிடம் சென்றான். அதனால் பரத்தையின் ஆத்திரம் மிகுதியாயிற்று. தலைவிக்குத் தோழியர் கேட்குமாறு தன் தோழி விறலியிடம் தலைவனைப் பழித் துரைத்தது.

உள்ளுதொறும் நகுவேன் தோழி! வள்உகிர்
மாரிக் கொக்கின் கூர்அலகு அன்ன
குண்டுநீர் ஆம்பல் தண்துறை ஊரன்
தேம்கமழ் ஐம்பால் பற்றி, என்வயின்
வான்கோல் எல்வளை வெளவிய பூசல்
சினவிய முகத்து, சினவாது சென்று,நின்
'மனையோட்கு உரைப்பல்' என்றலின், முனைஊர்ப்
பல்லா நெடுநிரை வில்லின் ஒய்யும்
தேர்வண் மலையன் முந்தைப் பேர்இசைப்
புலம்புரி வயிரியர் நலம்புரி முழவின்
மண்ஆர் கண்ணின் அதிரும்,
நன்ன ராளன் நடுங்குஅஞர் நிலையே.

தெளிவுரை

தோழி! மாரிக்காலத்திலே நீரில் உலவும் நீண்ட நகங்களைக் கொண்ட கொக்கின் கூர்மையான மூக்கைப் போன்று ஆழ்ந்த நீரிடத்தில் ஆம்பல் பூத்துத் தோன்றும் நீர்த்துறைகளை யுடையவன், தலைவன். அவன் ஒரு நாள் நெய் மணம் கமழும் என் கூந்தலைப் பற்றி இழுத்தான். என் கையில் உள்ள வெண்மையான ஒளிமிக்க வளையல்களைக் கழற்றவும் தொடங்கினான். அதனால் சினங்கொண்ட நான், என் முகத்தில் சினக்குறிப்பைக் காட்டாது, 'நீ செய்வதை உன் மனைவியிடம்

உரைப்பேன்' என்று கூறினேன். நான் சொன்னதைக் கேட்டதும், பகைவரின் ஆநிரைகளைக் கவர்ந்து தன் வில்லாற்றலால் வெற்றி கொள்ளும் வள்ளலான மலையமான் முன்பாகப் பாடும் கூத்தர்கள் முழக்கும் மத்தளத்தில் மார்ச்சனை (கருஞ்சாந்து) இடப்பட்ட பக்கம் அதிர்வதுபோலத் தலைவன் அதிர்ச்சியுற்று நடுங்கினான். அதனைக் கண்டு நான் நகைத்தேன். (அதனை நினைக்கும் போதெல்லாம் எனக்குச் சிரிப்பு எழும்.)

கருத்து

"ஊரன் என் கூந்தலைப் பற்றி இழுத்தான்; என் வளையலைப் பறித்தான். 'இதனை நான் உன் மனைவியிடம் சொல்வேன்' என்றதும் அவன் நடுங்கினான். அதனை நினைக்குந்தோறும் எனக்குச் சிரிப்பு எழும்."

விளக்கம்

தலைவன் தன் மனைக்குச் சென்றது தலைவிபால் கொண்ட அன்பால் அன்று; அவள்பால் கொண்ட அச்சத்தால் எனப் பரத்தை விறலியிடம் உரைக்கிறாள்.

தான் உரைத்ததைத் தோழியர்வழி கேட்கும் தலைவி, தலைவனோடு ஊடி அவனை ஒதுக்குவாள் எனவும், அதன்பின் அவன் தன்னிடம் வருவான் எனவும் பரத்தை கருதுகிறாள்.

சொற்பொருள்

1. உள்ளுதொறும் - நினைக்கும் போதெல்லாம்; நகுவேன் - சிரிப்பேன்; வள்உகிர் - கூர்மையான நகம்.
2. மாரிக்கொக்கு - மழைநீரில் உலவும் கொக்கு; கூர் - கூரிய; அலகு - மூக்கு.
3. குண்டு - ஆழம்.
4. ஐம்பால் - கூந்தல்.
5. வான் - வெண்மை; எல் வளை - ஒளி பொருந்திய வளையல்; வெளவிய - கழற்றிய, கைக்கொண்ட; பூசல் - ஒலி.
6. சினவிய -சினங்கொண்ட; சினவாது - சினக்குறிப்பைக் காட்டாது.
7. மனையோள் - மனைவி; முனை - பகை.
8. பல்ஆ - பல பசுக்கள்; நெடுநிரை - நெடுங்கூட்டம்; ஒய்யும் - கவர்ந்து செல்லும்.
9. மலையன் - மலையமான், வள்ளல் ஒருவன்; பேர்இசை - மிகுந்த இசை.

10. புலம்புரி வயிரியர் - புலமையையே விரும்பும் கூத்தர்; நலம்புரி - நன்கு அமைக்கப்பட்ட.
11. மண்ஆர் கண் - மார்ச்சனை அமைந்துள்ள இடம் அமைந்த கருஞ்சாந்து.
12. நன்னராளன் - நற்பண்பினைக் கொண்ட தலைவன்; அளுர் - துன்பம்.

பரத்தை கூற்று

நற்றிணை 216 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகட்குப் பாங்காயினார் கேட்பத் தலைமகன் தலைநின்று ஒழுகப்படாநின்ற பரத்தை, பாணர்க்காயினும் விறலிக்காயினும் சொல்லு வாளாய் நெருங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனின் காதற்பரத்தை தான் தலைவனிடம் கொண்டுள்ள காதலின் மிகுதியைத் தலைவிக்குப் பாங்காயினோர் கேட்பக் கூறியது.

துனிதீர் கூட்டமொடு துன்னார் ஆயினும்
இனிதே காணுநர்க் காண்புழி வாழ்தல்!
கண்ணுறு விழுமம் கைபோல் உதவி
நம்முறு துயரம் களையார் ஆயினும்
இன்னா தன்றே அவர்இல் ஊரே!
எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
குருகுஆர் கழனியின் இதணத்து ஆங்கண்
ஏதி லாளன் கவலை கவற்ற,
ஒருமுலை அறுத்த திருமா வுண்ணிக்
கேட்டோர் அனையர் ஆயினும்,
வேட்டோர் அல்லது பிறர்இன் னாரே.

தெளிவுரை

“என் ஊடலைத் தணித்துக் கூடும் தன்மையில்லாதவர் என்றாலும் காண்பதற்கினியராகிய என் தலைவன், நான் காணுகின்ற எல்லையிலேனும் வாழ்ந்திருந்தால் அதுவே எனக்கு

இனியதாகும். கண்ணில் விழும் சிறு துகளை அப்போதே சென்று அகற்றும் கைபோல, எனக்கு ஏற்படும் காமநோயை அவர் உடனே வந்து நீக்கமாட்டாராயினும், அவர் இல்லாத ஊரில் நான் வாழ்ந்திருப்பது துன்பம் தருவதாகும். குருகுகள் ஆரவாரிக்கின்ற வயற்கரையில் கடவுள் இருப்பதும், அதனால் காக்கப்படுவதும், நெருப்பினை ஒத்த பூக்களைக் கொண்டதுமான வேங்கை மரத்தில் நிறுவப்பட்ட பரணுக்கு அருகில், தன்னைக் காதலித்துக் கைவிட்ட அயலான் ஒருவன் உண்டாக்கிய கவலை உள்ளத்தை வருத்தினமையால் தன் ஒரு முலையையே அறுத்துக் கொண்டவள், திருமாவுண்ணி. அக்கதையினைக் கேட்டறிந்த தலைவரும் அத்தன்மையராய் ஆகும்படி நம்மைக் கைவிட்டாரா யினும், நாம் விரும்பும் அவரை யன்றிப் பிறர் யாவராயினும் அவர் நமக்கு வேண்டாதவரே!" என்று பரத்தை, தான் தலைவனிடம் கொண்டுள்ள அன்பினைப் பற்றிக் கூறுகிறாள்.

கருத்து

'தலைவன் என்னை மறப்பினும் நான் திருமாவுண்ணிபோல எங்கள் உறவை மெய்ப்பித்து அவனைக் கைப்பற்றி வர மனவுறுதி கொண் டுள்ளேன்' என்கிறாள், பரத்தை.

விளக்கம்

திருமாவுண்ணி தன் காதலன் தன்னைக் கைவிட்டபோது சான்றோர்பால் வழக்குரைத்தாள். அவள் சான்று என்று கருதி யிருந்த தெய்வம் தனக்குச் சான்று கூறாமையால் அவள் தன் ஒரு முலையை அறுத்தெறிந்து கற்பை நிலைநாட்டியபோது, அத் தெய்வமும் தோன்றிச் சான்று கூறிற்று. திருமாவுண்ணி காதலன் மனந்திருந்தி அவளை மணந்து வாழ்ந்தான் என்பது பழங்கதை.

சொற்பொருள்

1. துனி - ஊடல் துன்பம்; தீர் - நீக்கி; கூட்டம் - கூடுதல்; துன்னல் - நெருங்கிக் கூடுதல்.
2. காணுநர் - காண்பதற்கு இனியவராகிய தலைவர்; காண்புழி - காணுதற்கு ஏற்ற ஓர் இடம்.
3. கண் உறு விழுமம் - கண்ணிற்கு ஏற்படும் துன்பம்; கைபோல் - கை சென்று தீர்ப்பது போல.
4. களையார் - நீக்கார்.
5. இன்னாது - துன்பம் தருவது; அவர்இல் - அவர் இல்லாத.

6. எரிமருள் - நெருப்பைப் போன்ற (பூக்களைக் கொண்ட); வேங்கை - வேங்கை மரத்தில்; கடவுள் காக்கும் - கடவுள் இருந்து காத்துக்கொண்டிருக்கும்.
7. குருகு ஆர் - நாரைகள் வாழும்; கழனி - வயற்கரையில் (நிறுவிய); இதணம் - பரண்.
8. ஏதிலாளன் - அயலான் ஒருவன் (காதலித்துக் கைவிட்டவன்); கவலை - (உண்டாக்கிய) கவலை; கவற்ற - (உள்ளத்தை) வருத்தியதால்.
9. திருமாவுண்ணி - பெண் ஒருத்தி.
10. கேட்டோர் - (திருமாவுண்ணிக்கு நிகழ்ந்ததைக்) கேட்ட தலைவர்; அனையர் ஆயினும் - (கதையில் வருபவனைப் போல) நம்மைக் கைவிட்டார் ஆயினும்.
11. வேட்டோர் அல்லது - நான் விரும்பும் அவரையல்லாது; பிறர் இன்னாரே - மற்றவர் நமக்கு வேண்டாதவரே!

காதற்பரத்தை கூற்று

குறுந்தொகை 164 **மாங்குடி மருதனார்**

திணை : மருதம்

கூற்று

காதற்பரத்தை தலைமகட்குப் பாங்காயினார் கேட்பக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவி தன்னைப் புறங்கூறினாள் எனக் கேட்ட பரத்தை, தலைவிக்கு வேண்டியவர்கள் தனக்கு அருகிலிருக்கும்போது அவர்கள் கேட்டறியுமாறு, 'நான் தலைவனுக்குத் தீது புரிந்திலேன்' எனக் கூறியது.

கணைக்கோட்டு வாளைக் கமஞ்சூல் மடநாகு
துணர்த்தேக் கொக்கின் தீம்பழம் கதூஉம்
தொன்றுமுதிர் வேளிர் குன்றூர்க் குணாது
தண்பெரும் பவ்வம் அணங்குக தோழி!
மனையோள் மடமையின் புலக்கும்
அனையேம் மகிழ்நற்குயாம் ஆயினம் எனினே!

தெளிவுரை

தோழி! தலைவன் மனைவி தன் அறியாமையால் எம்மை வெறுக்கிறாள். அவள் கருதுவதுபோல நாம் தலைவனுக்குத் தீங்கு ஏதும் செய்யவில்லை. திரண்ட கொம்பினைக் கொண்டது, வாளை மீன். நிறைந்த கருப்பம் பெற்றுள்ள அதன் பெண்மீன், கொத்தாய் உள்ள தேமாவின் இனிய கனிகளைக் கௌவி உண்ணும் வளத்தினைக் கொண்டது, பழமை வாய்ந்த குடியினராய வேளிருடைய குன்றூர். அவ்வூருக்குக் கிழக்கே குளிர்ச்சி பொருந்திய பெரிய கடல் உள்ளது. தலைவி கருதுவது போல் தலைவனுக்கு நான் தீமை செய்திருப்பேனாயின் அக்கடல் என்னை வருத்தட்டும். (அழிக்கட்டும்.)

கருத்து

'நாம் தலைவனுக்குத் தீமை எதுவும் செய்திலேம்; அறியாமையால் தலைவி எம்மைப் புறங்கூறுகின்றாள்.'

விளக்கம்

மாம்பழம், தானே மரத்திலிருந்து நீர்நிலையில் விழ, வாளை மீன் அதனைக் கௌவி உண்ணுகிறது. இது வாளை மீனின் குற்றமன்று. தலைவன், தானாக நம்மிடம் வந்தானேயன்றி நாம் அவனை மடக்கிக் கைக்கொள்ளவில்லை. தலைவி இதனை யறியாமல் நம்மைக் குற்றம் சாட்டுகிறாள்.

சொற்பொருள்

1. கணை - திரண்ட; கோடு - கொம்பு; வாளை - வாளை மீன்; கமம் - நிறைந்த; சூல் - கருப்பம்; மடம் - மடப்பம், இளமை; நாகு - பெண் மீன்.
2. துணர் - கொத்து; தேக்கொக்கு - தேமா (ஒரு வகை மாம்பழம்); கதூஉம் - கதுவும், கௌவும்.
3. தொன்று முதிர் - பழமை வாய்ந்த; வேளிர் - ஒருவகைக் குடியினர்; குன்றூர் - வேளிரின் முக்கிய நகரம்; குணாது - கிழக்கே.
4. தண்பெரும் - குளிர்ச்சி பொருந்திய பெரிய; பவ்வம் - கடல்; அணங்குக - துன்புறுத்துக.
5. மனையோள் - மனைக்கு உரியவளாகிய தலைவி; மடமை - அறியாமை; புலக்கும் - வெறுக்கும், வெறுத்துப் பேசுகிறாள்.

6. அனையேம் - அத்தலைவி கூறுவதுபோல; மகிழ்நன் - தலைவன்; ஆயினம் - இருக்கின்றோம்; எனின் - என்றால்.

காதற்பரத்தை கூற்று

குறுந்தொகை 8 **ஆலங்குடி வங்கனார்**

திணை : மருதம்

கூற்று

கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள் எனக் கேட்ட காதற்பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்ப உரைத்தது. (கிழத்தி - தலைவி; புறன் உரைத்தல் - புறங்கூறுதல்.)

கூற்று விளக்கம்

தலைவி தன்னை இகழ்ந்து கூறினாள் என்றறிந்த காதற்பரத்தை, தலைவிக்கு வேண்டிய தோழிமார் முதலியோர் கேட்கும்படியாகத் தலைவனை இகழ்ந்து பேசியது.

கழனி மாஅத்து விளைந்துஉகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்
எம்இல் பெருமொழி கூறி, தம்இல்,
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல,
மேவன செய்யும்தன் புதல்வன் தாய்க்கே.

தெளிவுரை

வயலில் நிற்கும் மாமரத்திலிருந்து முற்றிப் பழுத்து விழுந்த சுவையான கனிகளை, பக்கத்திலுள்ள நீர்நிலைகளில் உள்ள வாளை மீன்கள் கௌவித் தின்னும் மருத நில ஊர்களை உடையவன், தலைவன். அவன் எம்முடைய இல்லத்தில் இருக்கும்போது மிகப் பெருமையான வார்த்தைகளைப் பேசுவான். தன்னுடைய வீட்டில் அவன் புதல்வனுக்குத் தாயாகிய தன் மனைவியிடம், அவள் கூறுவதைக் கேட்டு, முன்நிற்பார் தம் கையையும் காலையும் தூக்கத் தானும் அதுபோலவே தூக்கும் கண்ணாடியின் நிழற்பாவைபோல, அவள் சொல்லுகிறபடியெல்லாம் செய்துகொண்டிருக்கிறான்.

கருத்து

'தலைவன் தன் மனைவிக்கு அஞ்சி அவள் சொல்லுகிறபடியெல்லாம் ஆடுகிறான்.'

விளக்கம்

மரத்திலிருந்து தானே விழுந்த பழத்தை வாளை மீன் கௌவியது அதன் குற்றமன்று. அதுபோல் தானே நாடி வந்த தலைவனை நான் ஏற்றது என் குற்றமன்று என்கிறாள், பரத்தை.

கண்ணாடி, தன் முன் நிற்போர் செய்வதைச் செய்யுமன்றித் தானே எதுவும் செய்யாது. தலைவனும் தலைவி சொல்வதைச் செய்வதன்றித் தானாய் எதையும் செய்ய இயலாது அடங்கிக் கிடக்கின்றான்.

குறிப்பு

'புதல்வன் தாய்' எனத் தலைவியைப் பரத்தை குறிப்பிட்டது, 'அவள் மகப்பெற்று முதுமையினளாயினள்; தன்னைப் போல் இன்பம் தருவதற்குரிய இளமையினள் அல்லள்' என்பதைக் குறிப்பதற்காம்.

சொற்பொருள்

1. கழனி - வயல்; மா - மா மரம்; உகு - விழுந்த; தீம் - இனிய.
2. பழனம் - நீர்நிலை; வாளை - வாளை மீன்; கதூஉம் - கௌவும்.
3. பெருமொழி - பெருமையான சொற்கள்; இல் - வீடு.
5. ஆடி - கண்ணாடி.
6. மேவன - விரும்புவன; புதல்வன்தாய் - மகனுக்குத் தாய், தலைவன் மனைவி.

பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 81 — **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தன்னைக் கொடுமை கூறினாள் தலைமகள் என்பது கேட்ட பரத்தை, தலைமகன் வந்து தன்மேல் அன்புடைமை கூறினானாக, அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தன்னைக் கொடியவள் என்று கூறியதாய்க் கேள்விப்பட்டாள், பரத்தை. அப்போது தலைவன் வந்து, தான் பரத்தைமீது மிகவும் அன்பு கொண்டிருப்பதாய்க் கூறினான். உடனே தலைவிக்கு வேண்டியவர்கள் காதில் விழுமாறு பரத்தை கூறியது.

குருகுஉடைத்து உண்ட வெள்அகட்டு யாமை
அரிப்பறை வினைஞர் அல்குமிசைக் கூட்டும்,
மலர்அணி வாயில் பொய்கை, ஊரநீ
என்னை 'நயந்தனென்' என்றிநின்
மனையோள் கேட்கின், வருந்துவள் பெரிதே.

தெளிவுரை

குருகுகள், ஓடுகளை உடைத்து உண்டு மிஞ்சிய ஆமையின் வெண்மையான வயிற்று இறைச்சியை, கதிர் அறுக்கப் பறையை முழக்கும் உழவர், தாம் கொண்டுவந்த உணவோடு சேர்த்து உண்பர். அத்தகைய காட்சியையும், பூக்கள் நிறைந்த அழகான நீர்த்துறைகளையும் உடைய ஊரனே! நீ இங்கே வந்து என்னை நோக்கி, 'நான் உன்னை விரும்பினேன்' என்று கூறுவதைத் தலைவியாகிய உன் மனைவி கேட்டால் மிகவும் வருந்துவாள்.

கருத்து

'என்னை விரும்புவதாய் நீ சொன்னதை உன் மனைவி கேட்டால் மிகவும் வருந்துவாள்.'

விளக்கம்

'உன்னையே நான் விரும்பியுள்ளேன்' என்று பரத்தையிடம் தலைவன் கூறியதைக் கேட்டு, தலைவிக்கு வேண்டிய பாங்கியர் அதனைத் தலைவியிடம் கூறினர்.

(தன்னால் தலைவனைக் கட்டுப்படுத்த இயலாமைக்கு வருந்தித் தலைவி மேலும் நலிய வேண்டும் என்பதே பரத்தையின் நோக்கம்.)

உள்ளுறை

'குருகு உடைத்து உண்ட வெள் அகட்டு யாமை அரிப்பறை வினைஞர் அல்குமிசைக் கூட்டும்' எனும் தொடர்மூலம் குருகுகள் உண்டு கழித்த யாமையின் இறைச்சியை உழவர்கள் தம் சோற்றோடு சேர்த்து உண்பர் என்பதாம். இத்தொடர்மூலம், பரத்தை நுகர்ந்து கழித்த தலைவனின் மார்பைத்தான் தலைவி நுகர்வாள் எனும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. குருகு - நீர்ப்பறவை (கொக்கு, நாரை); வெள் அகடு - வெண்மையான வயிறு (தசை); யாமை - ஆமை.
2. அரிப்பறை - கதிர் அறுக்குமுன் உழவர் முழக்கும் பறை; வினைஞர் - உழவர்; அல்குமிசை - இட்டு வைத்து உண்ணும் உணவு; கூட்டும் - சேர்த்து உண்ணும்.
3. மலர் அணி - மலரால் அழகு பெற்ற; வாயில் - துறை; பொய்கை - குளம்.
4. என்னை - பரத்தையாகிய என்னை; நயந்தனென் - விரும்பினேன்; என்றி - என்று சொல்கிறாய்.

பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 38 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் மனைவயிற்போகக் கருதினான் என்பது சொல்லிய தன் தோழிக்குப் பரத்தை சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையின் மனையிலிருந்து தன் வீட்டிற்குச் செல்லத் தலைவன் விரும்புகிறான் எனப் பரத்தைக்குத் தோழி கூறியதைக் கேட்டு அத்தோழி யிடம் பரத்தை சொல்லியது.

அம்ம வாழி, தோழி! மகிழ்நன்
தன்சொல் உணர்ந்தோர் அறியலன் என்றும்
தண்தளிர் வெளவும் மேனி,
ஒண்தொடி முன்கை, யாம்அழப் பிரிந்தே.

தெளிவுரை

தோழி! நீ வாழ்க! நான் சொல்வதைக் கேள்! குளிர்ச்சி பொருந்திய மாந்தளிரின் அழகினைக் கவர்ந்துகொண்ட மேனி யினையும், ஒளி வீசும் தொடியணிந்த முன்கையையும் கொண்ட நாம் அழும்படி தலைவன் நம்மைப் பிரிந்து செல்ல விரும்புகிறான் என்கிறாய். அவ்வாறு பிரிவானாயின் அவன் தன் சொல்லை நம்பியவரின் நிலையை அறியும் அறிவும் அன்பும் இல்லாதவனே!

கருத்து

'தலைவன் நம்மைப் பிரிவானாயின் அவனை நம்பி ஏற்றது நம் மடமையே!'

விளக்கம்

நாம் அழுதலையும் பொருட்படுத்தாமல் தன் மனைக்குத் திரும்புவது அவன் கருத்தாயின், அவன் அன்பற்றவன் ஆவான்; தன் சொல்லை நம்பியோரது துன்பத்தை உணரும் அறிவில்லாத வனும் ஆவான்.

சொற்பொருள்

2. தன்சொல் உணர்ந்தோர் - தன் சொல்லைக் கேட்டு மனம் தெளிவடையும் பெண்டிர்; அறியலன் - (யார் என்பதை உணரும்) அறிவில்லாதவன்.
3. தண்தளிர் - குளிர்ச்சி பொருந்திய தளிர் (அழகை); வௌவும் - கவர்ந்துகொள்ளும்; யாம் - நாம் (பரத்தையர்).

பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 39 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

ஒரு ஞான்று தலைமகன் தன் மனைக்கண் சென்றதுகொண்டு, அவன் பெண்மை நலமெல்லாம் துய்த்துக் காதல் நீங்கிப் பிரிந்தான் என்பது தலைமகள் கூறினாள் எனக் கேட்ட பரத்தை, அவட்குப் பாங்காயினார் கேட்பத் தன் தோழியிடம் சொல்லியது.

கூற்று விளக்கம்

ஒருபொழுது மட்டுமே தலைவன் தன் மனைக்குச் சென்றான்; அதற்கே தலைவி, 'தலைவன் பரத்தையின் பெண்மை நலத்தையெல்லாம் துய்த்துக் காதலும் தீர்ந்து பிரிந்துவிட்டான்' என்று பரத்தையைக் குறை கூறினாள். அதனைக் கேட்ட பரத்தை, தலைவிக்கு நெருக்கமானவர்கள் காதில் விழுமாறு தன் தோழியிடம் கூறியது.

அம்ம வாழி, தோழி! ஊரன்
வெம்முலை அடைய முயங்கி, நம்வயின்
திருந்துஇழைப் பணைத்தோள் ஞெகிழ,
பிரிந்தனன் ஆயினும், பிரியலன் மன்னே.

தெளிவுரை

தோழி! நான் சொல்வதைக் கேள்! ஊரன், விருப்பத்தை விளைவிக்கும் நம் மார்பகங்கள் அழுந்துமாறு முற்றத் தழுவி இன்புற்றனன்; பிறகு, அணிகலன் அணிந்த நம் பெரிய தோள்கள் நெகிழ்ந்து மெலியுமாறு நம்மைவிட்டுப் பிரிந்தான். என்றாலும்,

விரைவில் நம்மிடம் வருவான்; அவன் நம்மை விட்டுப் பிரியா தவனே!

கருத்து

'தலைவன் பிரிந்தானாயினும் மீண்டும் நம்மிடம் விரைவில் வருவான். அவன் நம்மை விட்டுப் பிரியாதவன்' என்று, தலைவி அறியுமாறு பரத்தை கூறினாள்.

விளக்கம்

'தலைவன் தன் உடலால் பிரிந்தாலும் நெஞ்சத்தால் பிரியாமல் உள்ளான். அவன் எப்பொழுதும் நம்முடன்தான் உள்ளான். தலைவன் தலைவியோடு இருந்தாலும் அவன் நினைவெல்லாம் நம் பக்கமே' என்று பரத்தை கூறினாள். அதைக் கேட்டுத் தலைவி நாணமடைய வேண்டுமென்பதே பரத்தையின் நோக்கம்.

சொற்பொருள்

2. வெம்முலை - விருப்பத்தைத் தரும் முலை; அடைய முயங்கி - முற்றக் கலந்து; நம்வயின் - நம்மிடத்திலிருந்து.
3. திருந்து இழை - திருத்தமான அணிகலன்; பணை - பருத்த; ஞெகிழ - நெகிழ.

பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 86 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

'புதல்வன் கூறிய மாற்றம் தலைமகட்குப் பாங்காயினார் கூறக் கேட்டனன்' என்பதறிந்த பரத்தை அதற்குப் புலந்து தலைமகற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியின் தோழியர், தன்னிடம் வந்து தன் மகன் சொல்லிய சொற்களைச் சொல்லக் கேட்டுத் தலைவன் மகிழ்ந்தான். அதனைக் கேள்வியுற்ற பரத்தை அவனோடு ஊடல் கொண்டு கூறியது.

வெண்தலைக் குருகின் மென்பறை விளிக்குரல்
நீள்வயல் நண்ணி இமிழும் ஊர!
எம்இவண் நல்குதல் அரிது;
நும்மனை மடந்தையொடு தலைப்பெய் தீமே.

தெளிவுரை

வெண்மையான தலையினைக் கொண்ட நாரையின் மென்மையான சிறகுகளைக் கொண்ட குஞ்சுகள் (தம் தாயை) அழைக்கும் குரல் நீளமான வயல்வெளி எங்கும் ஒலித்தற் கிடமான ஊரினை உடையவனே! நீ, இனி இங்கிருந்து எங்களுக்கு அருள இயலாது. எனவே, உன் வீட்டை அடைந்து மனைவியோடு கூடி மகிழ்க!

கருத்து

'தலைவ! உன் நினைவெல்லாம் மகனிடமே! ஆதலின், உன் வீடு செல்க.'

விளக்கம்

நாரையின் குஞ்சுகள் தம் கூட்டிலிருந்தபடி தம் தாயைக் கூவி அழைக்கும் குரல் வயலிடமெல்லாம் சென்று ஒலிக்கும். அவ்வாறே உன் மகன் உன்னை அழைக்கும் செய்தியானது பரத்தையர் சேரி முழுவதும் பரவிவிட்டது. அவனை நீ மறக்க இயலாதவன்; ஆதலால், உடனே உன் வீட்டுக்குச் செல்.

மகன் குறுகுறுவென நடை பயிலும் காட்சி தரும் இன்பமும், செவிக்கு அமுதமென மழலை மொழி பொழிந்திடும் நல்லின்பமும் தலைவனை அவன் வீட்டிலேயே நிறுத்திவிடும்; இனி அவன் இங்கே வரமாட்டான் என்கிறாள், பரத்தை.

சொற்பொருள்

1. வெண்தலை - வெண்மையான தலை; மென்பறை - மெல்லிய சிறகு; விளிக்குரல் - அழைக்கும் குரல்.
2. நண்ணி - சென்றடைந்து; இமிழும் - ஒலிக்கும்.
3. எம் இவண் - எமக்கு இங்கே; நல்குதல் - அருளுதல்.
4. நும் மனை - உன் வீடு; மடந்தை - மனைவி; தலைப்பெய்தீம் - கூடி மகிழ்க.

காதற்பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 87 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் தன்னைப் புறங்கூறினாள் எனக் கேட்ட காதல் பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பத் தலைமகனோடு புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தன்னைப்பற்றிக் குறை கூறினாள் என்று கேள்விப்பட்ட காதற் பரத்தை, தலைவிக்குத் தோழியர் கேட்குமாறு தலைவனிடம் ஊடல் கொண்டு சொல்லியது.

பகன்றைக் கண்ணிப் பல்ஆன் கோவலர்
கரும்பு குணிலா மாங்கனி உதிர்க்கும்
யாணர் ஊரநின் மனையோள்
யாரையும் புலக்கும்; எம்மைமற்று எவனோ?

தெளிவுரை

ஆயர்கள் பகன்றைப்பூக்களால் தொடுக்கப்பட்ட கண்ணியை அணிந்தவர்; ஆநிரை பல கொண்டவர்; கரும்பைக் குறுந்தடியாய்க் கொண்டு மாங்கனிகளை உதிர்ப்பவர். இத்தன்மை கொண்ட ஆயர்களால் புதுவருவாயினை உடைய ஊர்த் தலைவனே! எல்லோரையும் வெறுத்துக் கூறும் இயல்பு கொண்ட உன் மனைவி என்னை இகழ்ந்து பேசுவதில் வியப்பேது மில்லை.

கருத்து

'தலைவ! உன் மனைவி என்னை வெறுத்துப் பேசுவது இயல்பே!'

உள்ளுறை

கரும்பைக் கைக்கொண்ட கோவலர் அதனைச் சுவைத்து இன்புற்றதோடு அமையாது அதனையே குறுந்தடியாய்க் கொண்டு மாங்கனிகளையும் உதிர்ப்பர். இத்தொடர்வழி, தலைவனும் பரத்தையரை நுகர்ந்து இன்புற்ற பின், அவரையே இகழ்ந்து கூறி, தலைவியைத் தெளிவித்து அவளையும் அடையும் இயல்பினன் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

இவ்வாறு சொல்லிப் பரத்தை தலைவனிடம் வெறுப்புக் கொள்கிறாள்.

சொற்பொருள்

1. பகன்றை - பகன்றை மலர்; கண்ணி - தலைமாலை; பல் ஆன் - மிகுந்த பசுக்கள்; கோவலர் - இடையர்.
2. குணில் - குறுந்தடி.
3. யாணர் - புது வருவாய்.
4. புலக்கும் - பிணங்கும், வெறுத்துப் பேசும்.

பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 88 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகனை நயப்பித்துக்கொள்கையில் விருப்பு இல்லாதாள்போல, அவ்வாறு கோடலையே விரும்புவாள், 'அது தனக்கு முடியாது' எனத் தலைமகள் புறனுரைத்தாள் எனக் கேட்ட பரத்தை அவட்குப் பாங்காயினார்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'பரத்தை, தலைவனை மயக்கித் தன்னிடமே அவனை இருத்திக்கொள்ள விரும்பி அதன்படியே செய்தாள்; ஆனால், விருப்பமில்லாதவள்போல் வெளியில் காட்டிக்கொள்கிறாள். 'பரத்தையால் தலைவனைக் கவர முடியாது' எனத் தலைவி தன்னைப் பழித்துக் கூறியதாய்க் கேள்விப்பட்ட பரத்தை தலைவிக்கு வேண்டியவர் கேட்கும் வகையில் கூறியது.

வண்டுறை நயவரும் வளமலர்ப் பொய்கைத்
தண்துறை ஊரனை, எவ்வை எம்வயின்
வருதல் வேண்டுதும் என்பது
ஒல்லேம் போல்யாம் அதுவேண் டுதுமே.

தெளிவுரை

"வண்டுகள் தங்குதற்கு விரும்பும் வளமான மலர்கள் பூத்து அழகு செய்யும் குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறைகளையுடைய

ஊர்த்தலைவனை எப்பொழுதும் எம்மில்லத்திற்கே வருமாறு செய்தலை நாங்கள் விரும்புகிறோம்" என எம் தமக்கையாகிய தலைவி புறம் கூறுகின்றாளாம். இதுவரை அவள் பேசுவதை விரும்பாததுபோல இருந்தோம். இன்றுதொட்டு அச்செயலைச் செய்து முடிப்பதனையே பெரிதும் விரும்பியிருக்கிறோம்.

கருத்து

'தலைவன் எம்மிடமிருந்து பிரியாதிருத்தலையே நாங்களும் விரும்பு கின்றோம்.'

குறிப்பு

வளமான துறைகளிலே எல்லோரும் விரும்பிக் கைக்கொள்ளும் வண்ணம் மலர்கள் பூத்திருக்கும் ஊரன் என்றது, தலைவன் மகளிர் எல்லார்க்கும் பொதுவானவனாய்த் திகழ்கிறான் என்பதாகும்.

சொற்பொருள்

1. வண்டுறை - வண்டுகள் தங்கும்; நயவரும் - விரும்புகின்ற.
2. எவ்வை - எம் தமக்கை (தலைவி); எம்வயின் - எம்மிடத்திற்கே.
4. ஒல்லேம்போல் - விரும்பாததுபோல; யாம் - பரத்தையராகிய நாங்கள்; அது வேண்டுதும் - அதனையே வேண்டுகிறோம்.

காதற்பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 89 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

'தலைமகன் தலைமகளைப் போற்றி ஒழுகா நின்றான்' என்பது கேட்ட காதற்பரத்தை, அவன் பாணனுக்குச் சொல்லுவாளாய் அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் மனைவியை மிகவும் விரும்பி அவளிடம் அன்பு காட்டுகிறான் என்பதைப் பொறுத்துக்கொள்ள இயலாத காதற்பரத்தை, தலைவிக்கு வேண்டியவர்களுக்குக் கேட்குமாறு பாணனிடம் சொல்லியது.

அம்ம வாழி, பாண! எவ்வைக்கு
எவன்பெரிது அளிக்கும் என்ப பழனத்து
வண்டுதாது ஊதும் ஊரன்
பெண்டுஎன விரும்பின்று அவள்தன் பண்பே.

தெளிவுரை

பாணனே! நீ வாழ்க! தலைவன் என் அக்கையாகிய தலைவி மீது மிகுந்த அன்பு காட்டுகிறான் என்று ஊரார் கூறுவர். பழன மலர்களில் வண்டு தேனுண்ணும் காட்சி கொண்டுள்ள ஊருக்குத் தலைவன், அவளைத் தனக்குரிய பெண்டாய்க் கருதி விருப்பத்தோடு பழகுவது அவளது பண்புச் சிறப்பினாலேதான், அவளுடைய பெண்மை நலத்தால் அன்று என்று அறிக.

கருத்து

'தலைவன் தலைவியிடம் அன்பு காட்டுவதுபோல நடந்துகொண்டாலும் அவன் என்னையே விரும்பியிருக்கிறான்.'

விளக்கம்

தலைவியிடம் அவன் அன்பு காட்டுவது, அவள் தனக்கு மனைவி என்பதைக் கருதியும், குடும்ப உறவினைக் கருதியுமே ஆம். அழகும் இளமையும் கொண்டு காதலின்பம் தருவதில் எனக்கு அவள் ஈடாகாள்.

தலைவியை 'என் அக்கை' என்று பரத்தை சுட்டியது, அவளிடம் கொண்ட அன்பினால் அன்று; அவள் தன்னினும் மூத்தாள் என்பதையும், தன் முதுமையால் அவள், தலைவன் விரும்பியவாறு காதலின்பத்தைத் தர இயலாதவளாய் இருக்கிறாள் என்பதையும் மறைமுகமாய்ச் சுட்டிக்காட்டி, இழித்துரைக்கும் நோக்கத்தில் ஆகும்.

உள்ளுறை

பழன மலர்களில் வண்டு தேனுண்ணும் ஊரன் என்னும் தொடர்மூலம், தலைவன் பொதுமகளிரிடம் இன்பம் துய்ப்பவன் எனும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. எவ்வை - எம் தமக்கை (தலைவி).
2. பெரிது அளிக்கும் - (தலைவன்) மிகவும் அன்பு காட்டுகிறான்; என்ப - என்று கூறுவர்.
3. தாது - மகரந்தத்தூள்.
4. பெண்டு என - தனக்குரிய பெண்டு என; விரும்பின்று - விரும்பியது; அவள் தன் பண்பே - அவளது பண்புச் சிறப்பினாலே தான்.

காதற்பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 90 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் தன் மனைக்கண் செல்லாமல் தான் விலக்குகின்றாளாகத் தலைமகள் கூறினாள் என்பது கேட்ட காதற்பரத்தை தலைமகன் கேட்குமாற்றால் அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனைத் தன் வீட்டுக்கு வரவிடாமல் காதற்பரத்தை தடுக்கின்றாள் என்று தலைவி கூறினாள். அதனை அறிந்த காதற்பரத்தை தலைவன் காதில் விழுமாறு தன் அருகிலிருந்தோரிடம் கூறியது.

மகிழ்நன் மாண்குணம் வண்டுகொண் டனகொல்?
வண்டின் மாண்குணம் மகிழ்நன்கொண் டான்கொல்?
அன்னது ஆகலும் அறியாள்,
எம்மொடு புலக்கும்அவன் புதல்வன் தாயே.

தெளிவுரை

தலைவனிடமுள்ள உயர்பண்புகளை வண்டுகள் வாங்கிக் கொண்டனவா, வண்டுகளின் உயர்பண்புகளைத் தலைவன் கற்றுக்கொண்டானா என அறிய இயலவில்லை. (வண்டின் குணம் அவனிடம் அமைந்திருப்பதைத் தலைவி அறியாள்.)

அவ்வாறிருக்கப் புதல்வனைப் பெற்ற தாயாகிய தலைவி புரியாமல் எம்மோடு சண்டையிட முயல்கிறாள்.

கருத்து

'தலைவன் மலருக்கு மலர் தாவும் வண்டு போன்றவன். இதனைத் தலைவி அறியவில்லை.'

விளக்கம்

'வண்டின் உயர்குணம்' என்று பரத்தை கூறியது இகழ்ச்சிக் குறிப்பு; அஃதாவது, 'வண்டின் இழிந்த குணம்' ஆம்.

'வண்டு தேனுள்ள மலரை நாடிச் சென்று தேனை உறிஞ்சும். அம்மலரிலுள்ள தேன் தீர்ந்ததும் வேறு மலரை நோக்கிப் பறக்கும். அவ்வண்டு போலவே தலைவனும் மகளிர் பலரிடமும் காமம் நுகரும் இயல்பினன் என்பதை உணராமல் தலைவி என்னைக் குறை கூறுகிறாள்' எனத் தலைவியின் அறியாமையைப் பரத்தை சுட்டினாள்.

'புதல்வன் தாய்' என்று குறிப்பிடுவதன்மூலம் வயதில் அவள் தன்னைவிட மூத்தவள் என்பதையும், தன் காதலனைத் தன்பால் இருத்திக்கொள்ளும் அழகும் இளமையும் அற்றவள் என்பதையும் பரத்தை வெளிப்படுத்துகிறாள். 'தன் கணவனைத் தன்னிடம் தக்க வைத்துக்கொள்ளும் தகுதியில்லாத தலைவி பிறரை இகழ்வதேன்?' என்றும் கேட்கிறாள்.

சொற்பொருள்

1. மாண்குணம் - மாட்சிமைப்பட்ட பண்பு.
2. மகிழ்நன் - தலைவன்.
3. அன்னது ஆகலும் - வண்டின் குணம் அவனிடம் அமைந்திருப்பதை.
4. புலக்கும் - வெறுக்கும்; தாய் - தலைவி.

பரத்தை கூற்று

அகநானூறு 166 **இடையன் நெடுங்கீரனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையொடு புனலாடிய தலைமகன் தலைமகளிடைப் புக்கு, 'யான் ஆடிற்றிலேன்' என்று சூளுற்றான் என்பது கேட்ட பரத்தை, தன் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

முதல் நாள் காவிரியில் பரத்தையுடன் தலைவன் புதுப்புனலில் ஆடினான். ஆனால், அவன் தன் மனைவியிடம் தான் அவ்வாறு செய்ய வில்லை எனப் பொய் கூறி, அவள் ஊடலை ஆற்றினான். அதை அறிந்த அப்பரத்தை, தன் தோழியிடம் கூறியது.

நல்மரம் குழீஇய நனைமுதிர் சாடி
பல்நாள் அரித்த கோஒய் உடைப்பின்,
மயங்குமழைத் துவலையின் மறுகுஉடன் பனிக்கும்
பழம்பல் நெல்லின் வேளூர் வாயில்,
நறுவிரை தெளித்த நாறுஇணர் மாலை,
பொறிவரி இனவண்டு ஊதல கழியும்
உயர்பலி பெறூஉம் உருகெழு தெய்வம்,
புனைஇருங் கதுப்பின் நீகடுத் தோள்வயின்
அனையேன் ஆயின், அணங்குக, என்!என
மனையோள் தேற்றும் மகிழ்நன் ஆயின்,
யார்கொல், வாழி– தோழி! நெருநல்
தார்பூண் களிற்றின் தலைப்புணை தழீஇ,
வதுவை ஈர்அணிப் பொலிந்து, நம்மொடு,
புதுவது வந்த காவிரிக்
கோடுதோய் மலிர்நிறை, ஆடி யோரே?

தெளிவுரை

தோழி! வேளூர் என்னும் ஊரில் கள்ளுக்கடையில் பல நாளும் வடிக்கப்பெற்ற கள் நிறைந்த சாடியில் இட்டு முகக்கும் பாத்திரம் உடைந்திடின் தெருவெல்லாம் கள் துளிகள் மழைத்

துளிபோல் தெறிக்கும். பல வகையான பழைய நெல்லும் அங்குச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும். அவ்வூரின் வாயிலில் உறையும் தெய்வத்திற்கு நறுமண நீர் தெளித்து, மலர்மாலைகள் சாத்திப் படையல் வைத்து வழிபடுவர். அம்மாலைகளில் வண்டுகள் மொய்ப்பதில்லை.

'நீ ஐயப்படும் பெண்ணுடன் நேற்று நான் நீராடியது உண்மையாயின், அத்தெய்வம் என்னைத் துன்புறுத்தட்டும்' என்று தலைவன் சத்தியம் செய்து தலைவியின் ஊடலைத் தெளியச்செய்தான் என்கிறார்கள்.

அப்படியானால் காவிரியில், கரையை மறைத்துக்கொண்டு புது வெள்ளத்தில், மாலையணிந்த யானையைப் போலத் தெப்பத்தின் முதற்பகுதியில் அணிகலன்களால் பொலிவு பெற்றிருந்த நம்மோடு சேர்ந்து நீராடியவர் யாரோ?

கருத்து

'நேற்று என்னோடு நீராடிய தலைவன் இன்று தலைவியிடம் தெய்வத்தின் மீது சூளுரைத்து நான் அப்படிச் செய்யவில்லை என்றானாம். தலைவியின் ஊடலைத் தீர்க்க இப்படி ஒரு பொய்யா?' எனப் பரத்தை எள்ளி நகையாடினாள்.

விளக்கம்

"தோழி! மகிழ்நன் தன் மனைவியிடம் சென்று, அவள் சொன்னவாறு, முதல் நாள் பரத்தையுடன் நீராடியிருந்தால் வேளூரில் உள்ள அச்சம் தரும் தெய்வம் தன்னைத் தண்டிக் கட்டும் என்று கூறித் தன் மனைவியின் ஊடலைத் தீர்த்தான் என்று அறிந்தேன். அப்படியானால் அணிகலன்களை அணிந்த நம்மோடு காவிரியில் நேற்றுப் புதிதாய் வந்த வெள்ளநீரில் தெப்பத்தில் ஆடியவன் அம்மகிழ்நன் அல்லனோ?" என்று இகழ்ச்சி தோன்றப் பரத்தை கூறினாள்.

சொற்பொருள்

1. நனை - கள்.
2. அரித்த - வடிக்கப்பெற்ற; கோஒய் - முகக்கும் கலம்.
3. துவலை - துளி; மறுகு - தெரு; பனிக்கும் - தெறிக்கும்.

4. வேளூர் - ஓர் ஊர்.
5. நறுவிரை - நறுமணம்; நாறுஇணர் - மணமுள்ள பூங்கொத்து.
6. ஊதல - ஊதாது; கழியும் - நீங்கும்.
7. உரு - அச்சம்; கெழு - பொருந்திய.
8. கடுத்தோள் - ஐயுறப்பெற்றவள்.
9. அணங்குக - வருத்துக.
10. மனையோள் - மனைவி; மகிழ்நன் - தலைவன்.
11. நெருநல் - நேற்று.
12. தலைப்புணை - தெப்பத்தின் தலைப்பகுதி.
13. வதுவை ஈர் அணி - கூட்டத்திற்குரிய பெரிய அணி.
14. புதுவது வந்த - புதிதாய் வந்த.
15. கோடு - கரையின் உச்சி; மலிர் நிறை - மிகுந்த வெள்ளம்.

காதற்பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 37 ஓரம்போகியார்

திணை : மருதம்

கூற்று

தலைமகளைத் தலைமகன் சூளினால் தெளித்தான் என்பது கேட்ட காதற்பரத்தை, தலைமகட்குப் பாங்காயினார் கேட்பத் தன் தோழியிடம் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியிடம் தலைவன், அவளைப் பிரிய மாட்டேன் என்று சூளுரைத்த செய்தியைக் கேள்விப்பட்ட காதற்பரத்தை, தலைவிக்கு நெருக்கமானவர்கள் காதில் விழுமாறு தன் தோழியிடம் கூறியது.

அம்ம வாழி, தோழி! மகிழ்நன்
நயந்தோர் உண்கண் பயந்து,பனி மல்க
வல்லன் வல்லன் பொய்த்தல்;
தேற்றான், உற்ற சூள்வாய்த் தல்லே.

தெளிவுரை

"தோழியே! நீ வாழ்க! தலைவன் தான் செய்த சூள் தவறாதிருக்கும் வகையில் நடந்துகொள்ள ஒருபோதும் அறியான். தன்னைக் காதலித்தவரது மை உண்ட கண்கள் பசலை எய்தி, கண்ணீர்த் துளி சொரியும்வண்ணம் தான் செய்த சூளுறவினைப் பொய் யாக்கி அவரை வருந்தச்செய்தலில் மிகவும் வல்லவன்" எனக் காதற்பரத்தை கூறினள்.

கருத்து

'தலைவன் தான் செய்த சூளினைப் பேணாது ஒழுகும் வாய்மை யற்றவன்.'

விளக்கம்

"தலைவன், 'பிரிய மாட்டேன்; பிரிய மாட்டேன்!' என்று ஒவ்வொரு பரத்தையிடமும் சூள் உரைத்துவிட்டு, அவ்வனைவரிடமிருந்தும் பிரிந்து செல்பவன். அவன் பொய் உரைத்தலில் வல்லவன்" என்று காதற்பரத்தை கூறினாள். இவ்வாறு தான் கூறுவதைக் கேட்டுத் தலைவிக்கு நெருக்கமானவர் தலைவியிடம் சொல்வர். அதனால் தலைவி தலைவனை ஏற்க மறுப்பாள். இவ்வாறு நிகழ வேண்டும் என்பதே பரத்தை கூற்றின் உள் நோக்கம் ஆகும்.

சொற்பொருள்

1. மகிழ்நன் - தலைவன்.
2. நயந்தோர் - தன்னை விரும்பியவர்; பயந்து - பசந்து - பசலை எய்தி; பனி மல்க - கண்ணீர்த்துளி சிந்த.
3. பொய்த்தல் வல்லன் - பொய் பேசுவதில் மிகவும் வல்லவன்.
4. தேற்றான் - அறியான்; சூள் வாய்த்தல் - சூளின்படி நடத்தல்.

பரத்தை கூற்று

நற்றிணை 390 **ஔவையார்**

திணை : மருதம்

கூற்று

பாங்காயின வாயில் கேட்ப நெருங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் மனம் விழாக்களத்தில் ஆடும் புதிய பரத்தையிடம் சென்று விடுமோ என்று அஞ்சுகிறாள், அவன் உறவு கொண்டுள்ள பரத்தை. ஆகவே, தன்னை நன்கு புனைந்துகொண்டு எழிலோடு வந்து, தானே கைப்பற்றிச் செல்வதாய், அந்தப் புதியவளின் ஏவற்பெண்டுகள் கேட்குமாறு அவள் வெகுண்டு கூறியது.

வாளை வாளின் பிறழ, நாளும்
பொய்கை நீர்நாய் வைகுதுயில் ஏற்கும்
கைவண் கிள்ளி வெண்ணி சூழ்ந்த
வயல்வெள் ஆம்பல் உருவ நெறித்தழை
ஐதுஅகல் அல்குல் அணிபெறத் தைஇ,
விழவின் செலீஇயர் வேண்டும் மன்னோ;
யாணர் ஊரன் காணுநன் ஆயின்,
வரையா மையோ அரிதே, வரையின்,
வரைபோல் யானை, வாய்மொழி முடியன்
வரைவேய் புரையும் நல்தோள்
அளிய தோழி! தொலையுந பலவே.

தெளிவுரை

"தோழி! வாளை மீன்கள் பொய்கையில் வாளைப்போல ஒளி வீசியபடியே பிறழும். ஆயினும், நீர்நாய் அவற்றை நோக்காது உறங்கியவாறு இருக்கும். கொடையிற்சிறந்த கிள்ளிவளவனுடைய கோயில் வெண்ணியைச் சூழ்ந்துள்ள வயலிடத்தேயுள்ள வெள்ளை ஆம்பலின் தழையை அழகிய அல்குலில் அழகுபெற உடுத்து, நானும் விழா இடத்திற்குச் சென்றுதான் ஆக வேண்டும். அப்போது தலைவன் என்னைக் காண்பானானால் என்னை மணந்துகொள்ளாமல் தவிர்ப்பது அவனுக்கு

அரிதாகுமே! அவன் என்னையே மணப்பானாயின், மலை போன்ற யானைகளையும் வாய்மை பொருந்திய மொழியினை யும் கொண்ட முடியன் என்பானது மலையில் உள்ள மூங்கில் போன்று விளங்கும் பிற பெண்டிரின் நல்ல தோள்கள் பலவும் அழகினை இழக்குமே! அத்தன்மை மிகவும் இரங்கத்தக்கது" என்று பரத்தை, விழாக்களம் சென்று, தலைவனை வேறு யாரும் கவர இடந்தரப்போவதில்லை என்று கூறுகிறாள்.

கருத்து

தலைவன் என்னையன்றி வேறு யாரையும் விரும்பிக் கூடான்.

விளக்கம்

"தோழி! ஆம்பல் பூவால் தொடுக்கப்பட்ட தழையாடையை இடையில் உடுத்து நான் விழாவுக்குப் போக வேண்டும். அங்கே, தலைவன் என்னைக் காண்பானானால் என்னை அவன் மணந்து கொள்ளாது செல்லான். அவன் என்னை மணந்துகொள்வதால் மூங்கில் போன்று விளங்கும் பிற பெண்டிரின் தோள்கள் பலவும் அழகை இழக்கும். அஃது இரங்கத்தக்கது" எனத் தலைவன் தன் ஒருத்தியை மட்டுமே விரும்புவான் எனப் பெருமை பொங்கக் கூறுகிறாள்.

உள்ளுறை

"வாளை வாளின் பிறழ, நாளும் பொய்கை நீர்நாய் வைகுதுயில் ஏற்கும்." அஃதாவது, பொய்கையில் வாளை மீன் பிறழவும் அதன்மீது மனஞ்செலுத்தாது நீர்நாய் துயிலும் என்பதாம். இத்தொடர்மூலம் விழாக்களத்திலே ஆடுகின்ற மகளிர் எத்துணைத்தான் தலைவனை மயக்கி, அவன் தம்மைக் கொள்ளுமாறு தூண்டினாலும், அவன் அவர் செயலை நோக்காது பரத்தையையே நாடி வந்து சேர்வான்" என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. வாளை - வாளை மீன்; வாளின் - வாளினைப் போல; பிறழ - துள்ளிக் குதிக்கும் (எனினும், அதனைக் கவனியாது நீர்நாய்).
2. வைகு துயில் ஏற்கும் - உறங்கியவாறு இருக்கும்.

3. கைவண் கிள்ளி - வள்ளல் தன்மை கொண்ட கிள்ளி வளவன் (சோழ மன்னருள் ஒருவன்); வெண்ணி - வெண்ணி என்னும் ஊர்.
4. உருவ - நிறமுள்ள, அழகிய; நெறி - நெறிப்பமைந்த; தழை - தழையாடை.
5. ஐது அகல் - மென்மையான அகன்ற; தைஇ - உடுத்து.
6. விழவின் - விழாவிற்கு; செலீஇயர் - செல்ல.
7. ஊரன் - தலைவன்; காணுநன் - காண்பான்.
8. வரையாமை - மணந்துகொள்ளாமை.
9. வரைபோல் - மலை போன்ற; வாய்மொழி - வாய்மை பொருந்திய பேச்சு; முடியன் - வீரருள் ஒருவன்.
10. வரை வேய் - மலையில் வளர்ந்த மூங்கில்; புரையும் - போன்ற; நல்தோள் - (பிற மாதர்தம்) நல்ல தோள்கள்.
11. தொலையுந - அழகை இழக்கும்; அளிய - (அத்தன்மை மிகவும்) இரங்கத்தக்கது.

பரத்தை கூற்று

நற்றிணை 150 **கடுவன் இளமள்ளனார்**

திணை : மருதம்

கூற்று

தலைநின்று ஒழுகப்படாநின்ற பரத்தை தலைமகனை நெருங்கிப் பாணற்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

பரத்தை ஒருத்தியோடு பழகிக்கொண்டிருந்த தலைவன் அவளைத் துறந்து மற்றொருத்தியை நாடிச் சென்றான். அதனால் முதல் பரத்தை சினமுற்றாள். அவள் சினத்தைத் தணிப்பதற்கு விரும்பிய தலைவன், தன் பாணனை ஏவ, அப்பரத்தை அவனை நோக்கிக் கூறியது.

நகைநன்கு உடையன் பாணநும் பெருமகன்;
மிளைவலி சிதையக் களிறுபல பரப்பி,
அரண்பல கடந்த முரண்கொள் தானை
வழுதி, வாழிய பலஎனத் தொழுது,ஈண்டு
மன்எயில் உடையோர் போல, அஃதுயாம்

என்னதும் பரியலோ இலம்எனத் தண்நடைக்
கலிமா கடைஇ வந்து எம்சேரித்
தாரும் கண்ணியும் காட்டி, ஒருமைய
நெஞ்சம் கொண்டமை விடுமோ? அஞ்சாது,
கண்ணுடைச் சிறுகோல் பற்றிக்
கதம்பெரிது உடையள்யாய்; அழுங்கலோ இலளே.

தெளிவுரை

பாணனே! நீ பலரும் கண்டு நகைப்பதற்குரியவன். பகைவர்களின் யானைப்படைகளைச் செலுத்தி, காவல் மதில்களைச் சிதைத்து, அரண்கள் பல வென்ற வலிமை மிக்க படையையுடையவன், பாண்டியன். அப்பாண்டியனை, 'இன்னும் பல காலம் வாழ்க' என்று குறுநில மன்னர் தொழுது நிற்றலால், அவர்தம் மதில்கள் அழியாமல் எஞ்சி நிற்கும்; இனிப் பாண்டியரின் படையால் யாம் சிறிதும் வருந்தோம் என்றும் அவர் கூறுவர். அம்மன்னர்போல, 'நான் சிறிதும் வருந்தேன்' என்று கூறி, மென்மையான நடையினையும் கனைப்பினையும் கொண்ட குதிரையைச் செலுத்தி எம் சேரிக்கு உன் தலைவன் வந்தான். அவன் தன் மாலையையும் கண்ணியையும் காட்டி என்னோடு ஒன்றுபட்டிருந்த என் நெஞ்சத்தைத் தான் கவர்ந்து கொண்டான். இனி அவ்வுறவு எப்போதும் நீங்காது. இங்கு வந்து நீங்கியது போல் நீ கூறுவாயானால், நெருங்கிய கணுக்களைக் கொண்ட மூங்கில்கோலைக் கையில் கொண்டு பெருஞ்சினத்துடன் உள்ள என் தாய் உன்னைத் தண்டித்தல் உறுதி. ஆதலால், நீ இனி இங்கு வாராதே!

கருத்து

'தலைவன் என்னோடு கொண்டுள்ள உறவு மாறாதது; எனினும், அவன் பிரிந்து சென்றதால் ஏற்பட்ட சினம் அன்னையிடம் உள்ளது.'

விளக்கம்

"பாணனே! நீ பலரும் கண்டு நகைப்பதற்குரியவன். பாண்டி வேந்தன் முன்றிலில் அடைக்கலம் பெற்றுத் தொழுது நிற்கும் குறுநில மன்னர் போல, உன் தலைவன் என் வீட்டிற்கு வந்து பின்னின்றான். நான் சற்றும் இசையவில்லை. அப்போது அவன்

குதிரையின்மீது வந்து, தன் தாரையும் கண்ணியையும் காட்டி, ஒருமை நெறியில் இருந்த என் நெஞ்சைக் கவர்ந்துகொண்டான். அதனை நீ உணராது, நான் அவனை நெஞ்சில் கொள்ளாதது போல, இங்கு வந்து அவனை ஏற்குமாறு வேண்டுகிறாய். ஒருமுறை அவனோடு கொண்ட என் உறவு எப்போதும் நீங்காது. ஆதலின், நீ உடனே திரும்பு. இல்லையேல், என் தாய் சற்றும் அஞ்சாதவளாய்ச் சிறியதொரு மூங்கில்கோலைக் கொண்டு உன்னைத் தண்டித்தல் உறுதி.

உள்ளுறை

'மிளைவலி சிதையக் களிறுபல பரப்பி, அரண் பல கடந்த முரண்கொள் தானை வழுதி' அஃதாவது யானைப்படைகளைச் செலுத்திக் காவல் அரண்களை அழித்து, கோட்டைகள் பல வென்ற பாண்டியன் என்பதாம். இதன்மூலம் பொருள் பல கொணர்ந்து, பரத்தையைப் பெற்ற அன்னையின் காவலைக் கடந்து பரத்தையை இனித் தலைவன் அடைதற்கு உரியன் என்னும் பொருள் புலப்படுகிறது.

சொற்பொருள்

1. நகை நன்கு உடையன் - நகைப்பிற்குரியவன்.
2. மிளை - காவல் அரண்; பல பரப்பி - நாற்புறமும் பரப்பி வைத்து.
3. முரண் கொள் தானை - வலிமை கொண்ட பகைவர் படை.
4. வழுதி - பாண்டிய மன்னன்.
5. மன் எயில் - நிலை பெற்ற கோட்டை.
6. என்னதும் - சிறிதும்; பரியல் - வருந்துதல்; இலம் - இலராவோம்.
7. கலிமா - கனைக்கும் குதிரை; கடைஇ - செலுத்தி.
8. தார் - மாலை; கண்ணி - தலைமாலை; காட்டி - கொடுத்து; ஒருமைய - ஒருமை நெறியினைக் கொண்ட, ஒருமனப்பட்ட.
9. நெஞ்சம் - (என்) நெஞ்சத்தை; விடுமோ - இனி அது விடுமோ?
10. கண்ணுடை - கணுக்களைக் கொண்ட; சிறுகோல் - மூங்கில் சிறுகோல்.
11. கதம் - சினம்; அழுங்கல் - இரங்குதல், அஞ்சாமை.

பரத்தை கூற்று

நற்றிணை 320 **கபிலர்**

திணை : மருதம்

கூற்று

பரத்தை தனக்குப் பாங்காயினாள் கேட்ப நெருங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் ஒருவன் பரத்தமை இயல்பினனாய் ஒருத்தியோடு உறவு கொண்டு, பின் அவளைக் கைவிட்டு, வேறொருத்தியை நாடினான். அதனை யறிந்த முதற்பரத்தை சினம் கொண்டு தலைவன் செவியுறுமாறு தன் தோழி ஒருத்தியிடம் சொல்லியது.

'விழவும் உழந்தன்று, முழவும் தூங்கின்று;
எவன்குறித் தனள்கொல்?' என்றி ஆயின்
தழைஅணிந்து அலமரும் அல்குல், தெருவின்,
இளையோள் இறந்த அனைத்தற்கு, பழவிறல்
ஓரிக் கொன்ற ஒருபெருந் தெருவில்
காரி புக்க நேரார் புலம்போல்,
கல்லென் றன்றால், ஊரே; அதற்கொண்டு,
காவல் செறிய மாட்டி, ஆய்தொடி
எழில்மா மேனி மகளிர்
விழுமாந் தனர்,தம் கொழுநரைக் காத்தே.

தெளிவுரை

"தோழி! ஊரில் நிகழ்ந்த திருவிழா முடிந்து முழவுகளும் ஓய்ந்தன. இந்தக் காலத்தில் இவள் என்ன கருதினாளோ என்று கேட்பாயாயின் நான் கூறுகிறேன், கேள்! ஒருநாள் தழை ஆடை அசைகின்ற அல்குலைக் கொண்டவளாய்த் தெரு வழியே இந்த இளம்பெண் சென்றது கண்டு ஊரே ஒன்றுதிரண்டு கொல் லென்று சிரித்தது. அந்த ஆரவாரம், பல வெற்றிகளைக் கொண்ட கொல்லிமலைத் தலைவன் வல்வில் ஓரியைப் போரில் கொன்ற மலையமான் திருமுடிக்காரி அவ் ஓரியின் ஒப்பற்ற தெருவிலே புகுந்தபோது காரிக்குப் பகைவராகிய ஓரியைச் சேர்ந்த அனைவரும் ஒன்றுகூடிப் பேரிரைச்சல் இட்டதைப்

போல இருந்தது. அந்த நகைப்பொலியினைக் கேட்டதும் ஆராய்ந்து அணிந்த வளையல்களை அணிந்தவர்களும் மாந் தளிர் ஒத்த அழகிய மேனியைக் கொண்டவர்களுமாகிய மகளிர் அனைவரும் தங்கள் கணவன்மாரைக் கைப்பிடித்துச் சென்று காவலில் வைத்துப் பரத்தையிடமிருந்து பாதுகாத்து நன்மை யுற்றனர். அவ்வாறு பாதுகாத்ததால் இவள் செயல்கள் பயனற்றன. ஆதலால், காவலின்றியிருந்த இவனைக் கைக் கொண்டாள். இஃது ஒன்றும் அரிய செயலன்று" என்று, தலைவன் பிரிந்து சென்றதால் பரத்தை, தன் பாங்கியிடம் கூறுகிறாள்.

கருத்து

தன்னைக் கைவிட்டு, வேறு பரத்தை ஒருத்தியை நாடிய தலைவனைக் குறித்து, 'இவன் ஒருவனே அவள் கைப்பற்றுவதற்கு எளியவன் ஆனான்' என்று அவனது பரத்தமை குறித்து எள்ளி நகையாடினள், முதற்பரத்தை.

விளக்கம்

பரத்தை ஒருத்தி தெருவில் வந்ததைக் கண்ட மகளிர் பலரும் தத்தம் கொழுநரை வீட்டில் அடைத்துக் காத்துக்கொண்டனர். தெருவிலே வந்த பரத்தைக்கு எந்த ஆண் மகனும் கிட்டவில்லை. 'காவலின்றி இருந்ததால் தலைவனை அவள் கைப்பற்றிச் சென்றுவிட்டாள்' என முதற்பரத்தை பழிக்கிறாள்.

அவள் முயக்கிலே மயங்கிக் கிடக்கும் தலைவன், மயக்கம் தீர்ந்ததும் தன்பால் மீள்வான் என்கிறாள், முதற்பரத்தை.

குறிப்பு

தலைவி இத்தலைவனைப் பேணிக் காத்திலள்.

சொற்பொருள்

1. விழவு - திருவிழா; உழந்தன்று - அடங்கி ஓய்ந்தது; தூங்கின்று - ஒலி அடங்கியது.
2. எவன் குறித்தனள்? - என்ன கருதினாள்; என்றி ஆயின் - என்று கேட்பாயாயின்.
3. தழை - தழையுடை; அலமரும் - அசையும்.

4. இளையோள் - இந்த இளம் பெண்; இறந்த - நடந்த; அனைத்தற்கு - அதற்கு; பழவிறல் - பழமையான வெற்றிச்சிறப்பு.
5. ஓரி - கொல்லிமலைத் தலைவன், வள்ளல்.
6. காரி - மலையமான் திருமுடிக்காரி, வள்ளல், சிற்றரசன்; நேரார் - பகைவர்; புலம் - தெரு.
7. கல் என்றால் - ‘கல்’ என்னும் ஒலியுடன் எழுந்த பேரிரைச்சல்.
8. செறிய மாட்டி - (கதவுகளைச்) செறியத் தாழிட்டு.
10. விழுமாந்தனர் - சிறப்புப் பெற்றனர்.

சிலம்பொலி...

செந்தமிழர் செவிகளுக்குத் தேனொலி;
செம்மாந்த சிந்தனையின் பேரொளி;
நன்னெறியாளர்; நுண்ணறிவாளர்;
தன்னலம் கருதாத் தமிழ்ப்பேரறிஞர்.
சங்கத்தமிழின் ஆழம்கண்ட வேழம் இவர்.

சங்க இலக்கியங்கள், பழந்தமிழர் வாழ்வியலின்
பண்பாட்டுக் களஞ்சியங்கள்;

சாதாரண வரிக்குக் கூட மெருகூட்டி மிளிரச் செய்யும்
மேதை சிலம்பொலியின் முத்தான உரைகளோடு
தமிழுக்கு ஓர் அருங்கொடையாய்த்
தன் வாழ்நாளின் ஒப்பற்ற சாதனையாய்ப்

பதினான்கு தொகுதிகளாக வெளிவருகின்றன.
சிலம்பொலி செதுக்கியுள்ள உரைச்சிற்பங்கள் இவை
வெறும் பொழிப்புரைகள் அன்று, பொன்னுரைகள்.

தமிழ் கூறு நல்லுலகம்
சிலம்பொலியின் சீர்மிகு படைப்புக்குச்
சிவப்புக் கம்பள வரவேற்பு நல்கிப்
பெரிதும் பயன்பெறும்; அவரைப்
போற்றிப் பாராட்டும்.

இலக்கியவீதி இனியவன்

ஆறாயிரம் பக்கங்களில் பதினான்கு தொகுப்புகளாகச் சிலம்பொலி செல்லப்பனார் வடித்திருக்கும் "செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்", தமிழின் அக இலக்கிய உலகிற்கு அருளப்பட்டிருக்கின்ற அரும்பெரும் கொடை. ஐம்பதாண்டுக் காலத்திற்குமேல் தமிழின் அக இலக்கியங்களில் ஆழ்ந்து தவமிருந்து, சிலம்பொலியார் அயராமல் உழைத்ததன் காரணமாக, நமது இளம்தலைமுறையினருக்கு இப்படியோர் வரம் கிடைத்திருக்கிறது. தவமிருந்தவர் சிலம்பொலியார்; வரம் பெற்றவர்களோ தமிழர்கள்.

தமிழைத் திரட்டித் திரட்டி நிகழ்காலத்தின் கரங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இந்நூல் வரிசை, என்றென்றைக்கும் நமது அகநூல் களுக்கான களஞ்சியமாகவும், அவற்றுக்கான அரணாகவும், அவற்றை நோக்கிப் பயணிக்க உதவுகின்ற பண்பட்ட பாதையாகவும் திகழும். இப்படைப்பு வரிசை உலகெங்கும் விரிந்து பரவுகின்ற உயிர்த்தன்மை மிக்க, உண்மைத்தன்மை மிக்க, படிப்போரை உயர்த்தும் தன்மை மிக்கவை. வணங்குவதற்கு மட்டுமன்று; நன்றி கூறவும் கைகூப்புவோம், சிலம்பொலியாரை நோக்கி.

கவிஞர் ஜெயபாஸ்கரன்

Set of 14 Books
ISBN: 978-81-8379-767-2
9 788183 797672

Vol-13
ISBN: 978-81-8379-780-1
9 788183 797801

விலை ரூ. 7200/-